# என்பிலதனை வெயில் காயும்



நாஞ்சில் நாடன்

http://www.pustaka.co.in

# என்பிலதனை வெயில் காயும்

# Enbilathanai Veil Kayum

Author:

நாஞ்சில் நாடன்

**Nanjil Nadan**

For more books

http://www.pustaka.co.in/home/author/nanjil-nadan

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்


ஒன்று

இரண்டு

மூன்று

நான்கு

ஐந்து

ஆறு

ஏழு

எட்டு

ஒன்பது

பத்து

பதினொன்று

பன்னிரண்டு

பதின்மூன்று

பதினான்கு

பதினைந்து

பதினாறு

பதினேழு

பதினெட்டு

பத்தொன்பது

இருபது

இருபத்தொன்று

இருபத்திரண்டு

இருபத்துமூன்று

இருபத்துநான்கு

இருபத்தைந்து

இருபத்தாறு

***

# ஒன்று

கல்லூரி விட்டு வீட்டுக்கு வந்ததும் முகத்தைக் கழுவித் துடைத்து விட்டு அடுக்களையினுள் எட்டிப் பார்த்தான், சுடலையாண்டி. பப்படம் வறுக்கும் வாசனை. ஆத்தாவுக்கு என்ன ஆயிற்று?

“யாத்தா, இண்ணைக்கு என்ன அலுசுவம் ? ஒரே மணமாட்டுல்லா இருக்கு?”

“சும்மாரு மூதி... மூலைக்கு வைக்கது வரைக்கும் மணம்கிணம்னு பேசாதே. போயிக் குளிச்சிட்டு வா. தாத்தா அங்கிண இங்கிண வாய் பாத்துக்கிட்டு நிக்காருண்ணா சீக்கிரமே வரச் சொல்லு.”

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இன்று வைத்துக் கொடுக்கிறார்கள் என்று தெரிந்தது சுடலையாண்டிக்கு. ஆண்டுக்கு ஒரு முறை இது வழக்கம் செத்துப்போனவர்களின் நினைவாக -

இன்று தனக்குக்கூட விரதம் என்பது அவனுக்கு நினைவு வந்தது. நேற்று தோசைக்குப் போட்டு சாயங்காலம் ஆத்தா அரைப்பதைக் கண்டு நாளை ஓடுக்கத்திய வெள்ளிக் கிழமை என்றுதான் நினைத்தான். சாதாரணமாகவே அமாவாசை, கடைசி வெள்ளிகளில் தாத்தாவுக்கு விரதம். விரதம் என்றால் காலையில் தோசை அல்லது இட்லி. மத்தியானம் குளித்து முழுகிய பிறகு சாப்பாடு. சமையல் அன்றைய பொருளாதார நிலவரம் போல் இருக்கும். பருப்பு, பப்படம், சாம்பார், பச்சடி என்று மணப்பதும் உண்டு. ரசமும் சுட்ட பப்படமுமாகக் குறைவதும் உண்டு. ஆனால் விரதம் மட்டும் முடக்கம் கிடையாது. காலையில் சுட்டு மிச்சம் வைத்திருந்த தோசை. மாவில் ராத்திரிக்கு புளித்த தோசை. கொஞ்சம் வளமாக இருந்தால் தேங்காய் வைத்துச் சுட்ட இல்லையென்றால் வெறும் தோசை. தொட்டுக் கொள்ள நுணுக்கிய உப்பு மிளகு, மூன்று சொட்டு எண்ணெய்.

நாளை ஓடுக்கத்திய வெள்ளியாக்கும் என்று நினைத்துத்தான் மாவாட்டிய ஆத்தாளுக்கு உதவி செய்தான். ஆத்தாவை ஒதுக்கச் சொல்லிவிட்டு சுடலையாண்டி குழவியை ஆட்டினான். உளுந்த மாவு பூராவையும் அவன்தான் அரைத்தான். பொங்கப் பொங்க. ‘கடக் கடக்’ கென்று குழவி ஒலி எழுப்ப. ஆனால் நேற்றுத் தெரியாது, மூலைக்கு வைத்துக் கொடுக்கப் போகிறாள் என்று.

ஆட்டுக்கு நிறையக் குழை இருந்தது. இன்று தாத்தா வேலையிலிருந்து சீக்கிரம் வந்துவிட்டாரோ? ஆடு ஆலங்குழையத் தின்று கழித்துக் கொண்டிருந்தது. கூரை மேல் ஒரு கட்டு கிடந்தது. இன்று அந்த வேலை மிச்சம்.

காலையில் குளித்து விட்டுத்தான் கல்லூரிக்குப் போவதென்றாலும் இரவு சாப்பிடு முன் குளிப்பது பதிவாகப் போய்விட்டது. தலைமுண்டை அரையில் கட்டிக் கொண்டு குளித்தான். வேட்டியையும் நனைத்துப் பிழிந்தான். சாதாரணமாக வேட்டியை நனைப்பது வழக்கமில்லை. ஆண்டு தோறும் மூலைக்குப் படைக்கையில் அப்பாவுக்கு ஒரு வேட்டி முண்டும் அம்மாவுக்கு ஒரு கண்டாங்கியும் வைப்பது பதிவு. அதை டிரெங்குப் பெட்டியினுள் வைத்திருந்து மறு ஆண்டுக்குப் படையலுக்கு வேட்டி முண்டும் கண்டாங்கியும் வாங்கிய பிறகே வெளியே எடுத்து உடுப்பது. முன்பெல்லாம் வேட்டி, முண்டு தாத்தாவுக்கு. கண்டாங்கி ஆத்தாவுக்கு. சுடலையாண்டி வளர்ந்த பிறகு வேட்டி முண்டு அவனுக்குத்தான். எனவே இன்று வேட்டியை நனைத்தாலும் பாதகமில்லை.

வேட்டியைக் குத்திப் பிழிந்து அலசிவிட்டு, ஆலமர இருட்டாதலால் அரையிலிருந்த துவர்த்தையும் உரிந்து கல்லில் இரண்டடி அடித்துத் துவைத்துப் பிழிந்து தலை துவட்டிக் கொண்டு கரையேறினான்.

வீட்டில் மேற்குப் படிப்புரையில் தாத்தா உட்காந்திருந்தார். வெளுத்த ஒற்றை வேட்டி. தோளில் துவர்த்து, நெற்றியில் விபூதி மெழுகல், வாராத தலையின் முன் சிலுப்பல். ஆத்தா அடுக்களைக்கும் திண்ணைக்குமாக நடந்தவாறிருந்தாள்.

அது கூரை வீடுமல்ல. ஒட்டு வீடுமல்ல. இரண்டின் சமப்பிரிவு. கிழக்குப் பக்கம் ஒட்டுக் கூரை. தென் வடலாக இருந்த அந்தக் கீழ்பாதியில் அடுக்களை முறி. மேற்குப் பக்கம் திறந்த ஒரு படிப்புரை, தெற்கு ஓரத்தில் சிறிய ஒரு புரை. மேற்குப் பாதியில் ஓலைக் கூரை. வடக்குப் பக்கம் அரங்கு. நடுவில் திண்ணை. தெற்கோரத்தில் இடைவழி, ஓலைக்கூரைக்கும் ஒட்டுக் கூரைக்கும் நடுவில் முற்றவெளி. இரண்டு கூரைகளின் வாரி வெள்ளம் விழ, முழு வீட்டுக்கும் வெளிச்சம் வர, தைப் பொங்கலுக்குப் பொங்கல் விட என்பதான உபயோகம். இடை வழியிருந்து வெளியே தெருவுக்குப் போகும் வாசல்படி. வீட்டின் வடபாகத்தில் காலியாக ஒரு சென்று மனை. வீட்டின் சுவரோரம் ஆடுகட்ட ஒரு சின்னத் தொழுவம். காலி மனையையும் மனைக்குக்

கிழக்கே வீட்டைச் சுற்றி ஓடும் ரோட்டையும் பிரிக்கப் பிள்ளைமண் சுவர்.

வேட்டியை மாற்றிக் கொண்டு வந்த சுடலையாண்டி பெரிய படிப்புரையில் கால்களை முற்றத்தில் ஊன்றி அமர்ந்தான். மேற்குப்புறம் ஓடும் படிப்புரையில் தாத்தா. கூரைக்கு மேலிருந்த வானத்தில் எதையோ வெறித்தவாறு இருந்தார்.

வழக்கமில்லாத மௌனம். காற்றில் ஒரு கனம்.

அடுக்களையிலிருந்து பாத்திரங்களில் எதையோ எடுத்துக் கொண்டு போவதும் வருவதுமாக இருந்தாள் ஆத்தா. பக்கத்து வீட்டுப் புளிய மரத்தில் காகங்கள் காரணமற்று இரைந்தன. பத்ம நாபபிள்ளை பாட்டா வீட்டிலிருந்து ஏதோ பேச்சொலி. தொழுவில் அளியிலிருந்து வைக்கோலை வெட்டி இழுத்துப் பிடுங்கும் காளைகளின் கழுத்து மணி.

“சரி….வந்து கும்பிடுங்கோ...”

தாத்தாவும் தொடர்ந்து சுடலையாண்டியும் திண்ணையில் நுழைந்தனர்.

தென்மேற்கு மூலை. வெண்கலக் குத்து விளக்கு. தேங்காய் எண்ணையில் தோய்த்த மூன்று திரிகள். திரிகளில் அமர்ந்திருந்த மஞ்சள் மணிகள். விளக்கின் கீழே முன்று இலைகள். ஒன்று அம்மாவுக்கு. ஒன்று அப்பாவுக்கு மூன்றாவது யாருக்கு என்று தெரியவில்லை. இலை நிறையச் சோறு. சோற்றின் மீது ஊற்றிருந்த பருப்பு, சாம்பார், தயிர், இலை விளிம்புகளில் அவியல், பச்சடி, வாழைக்காய் துவட்டல், இரண்டிரண்டு பப்படங்கள். ஒரு பாத்திரத்தில் அரிசிப் பாயசம். விளக்கின் முன் ஒரு இலை மீது அரளிப் பூ உதிரிகள். கிடேரிப் பசுஞ் சாணத்தால் பிள்ளையார். பிள்ளையார் உச்சி மீது அறுகு. இலையில் ஒரு சீப்பு பாளையங்கோட்டன் பழம். மூன்று வெற்றிலை. இரண்டு துண்டு வறட்டுப் பாக்கு. இலையோரத்தில் பித்தளைத் தம்ளரில் தண்ணீர். தண்ணீரில் மிதந்த அரளிகள், அறுகம் புற்கள். பக்கத்தில் ஒரு தாம்பாளத்தில் வேட்டி அதன் மேல் தலைமுண்டு. ஒரு அரக்குச் சிவப்புக் கண்டாங்கி.

தாத்தா கண்மூடிக் கைகூப்பி நின்றார். முகத்தில் தேங்கிய ஒரு இழந்த பாவம்.

காய்ந்த தென்னம் பாளையைச் சிறாவாக வகிர்ந்து, நுனியில் வெள்ளைப் பழந்துணி சுற்றி, தேங்காய் எண்ணையில் நனைத்துக் கொளுத்தி, சோற்றுப் படையலின் மீது மும்மூன்று திரிகளை நாட்டினாள் ஆத்தா. வாழைப்பழச் சீப்பின் மீது மூன்று புகையும் சாம்பிராணித் திரிகள் நின்றன. அடுப்பிலிருந்து இரும்புக் கண் அகப்பையில் வாரிக் கொண்டு வந்த தீக் கங்கின் மேல் பொடித்து வைத்திருந்த சாம்பிராணியைப் போட்டாள். படையலையும் விளக்கையும் மூன்று முறை சுற்றிக் காட்டினாள். அதைக் கீழே வைத்து, ஒரு வெற்றிலையில் திருநீற்றைப் பரத்தி, அதன் மேலொரு சூடக் கட்டைப் பிரித்து வைத்து, விளக்கில் ஏற்றித் தீபாராதனை காட்டினாள். தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு, தாத்தாவிடம் நீட்டி, சுடலையாண்டியிடம் காட்டி - விளக்கின் முன் மூன்று முறை விழுந்து கும்பிட்டாள்.

கோடாலி முடிச்சுப் போட்டிருந்த நரைத்த கூந்தல் முதுகில் அசைந்தது. ஆத்தா ஜம்பர் போட்டு சுடலையாண்டி பார்த்த தில்லை. கறுகறுவென்று சுருக்கம் விழுந்த தோலின் வறட்சி. ஆத்தா கும்பிட்டு எழுந்த பிறகு தாத்தா. பிறகு அவன். கும்பிட்டு எழுந்து கண் திறக்கையில் - தாத்தாவின் கண்களில் சிவப்பு கலங்கியது.

தம்ளரில் இருந்த தண்ணீரைப் படையலின் நான்கு புறமும் சுற்றி சுற்றித் தெளிந்து, மீதியைக் கூரை மீது விசிறி

“ஆளுக்கொரு எலையை இளுத்து வச்சுச் சாப்பிடுங்கோ” ஆத்தாவின் குரல் பிரிந்து ஒலித்தது. மெல்லிய மூக்குறிஞ்சல்.

தாத்தாவுடன் இருந்து சாப்பிடுகையில், வயிற்றில் அடிப்பாரம் போட்டிருந்த துக்கம். ஒன்றும் ருசிக்கவில்லை; உறைக்கவில்லை. குனிந்த தலையுடன் தாத்தா. அடுக்கையிலிருந்து மெல்லிய புலம்பல். சத்தமில்லாத ஒரு ஒப்பாரி...

தின்று பாதி தின்னாமல் பாதி இலையை எடுத்துப் புறவாசலில் எறிந்து விட்டு, கை கழுவி, படிப்புரையில் வந்து அமர்ந்தான் சுடலையாண்டி.

எப்போதும் இப்படியே அப்பாவின் திவசத்தன்று இந்த ஊமைக் கூத்து. அவரவர் மனங்களில் அவரவர் சுமைகள். ஒப்பாரியாகக் கரைக்க முயன்ற ஆத்தா. விழுங்கிச் சீரணிக்க முயன்ற தாத்தா. என்னவென்று அறியாத ஒரு மனப் பிசையல். வீட்டில் இருக்க முடியாமல் எழுந்து

வெளியே நடந்தான் சுடலையாண்டி.

***

# இரண்டு

புறவாசலில் கட்டியிருந்த ஆடு காதுயர்த்திப் பார்த்தது. மேற்கு நோக்கி ரோட்டில் நடந்தான். வீட்டின் மேற்கே சூரங்குளத்தின் ஆரம்பப் பள்ளி. ஆரம்பப் பள்ளியோடு ஊரின் மேற்கெல்லையும் வடக்கு எல்லையும் முடிந்து ரோடு மாத்திரம் இறச்சகுளத்துக்கு நீளும். வலப் புறம் ஆறு. ஆற்றைத் தாண்டி வயல் வெளிகள் - வடக்குப் பத்து. பள்ளிக்கு மேற்கே ஒரு பர்லாங் தூரத்தில் பழையாற்றில் இருந்து கிளையாறு பாகம் கொள்ளும் சந்தி. சந்தியின் மேல் ரோட்டை இணைக்க ஒரு பாலம். கிளை ஆற்றுக்குத் தண்ணீர் பிரிக்க ஒரு சீப்பு. அதன் மேல் பாலக் கலுங்கு.

பாலக் கலுங்கில் போய் உட்கார்ந்தான் சுடலையாண்டி. சிமெண்ட் சுவர் மீது ஒராள் தாராளமாகப் படுத்துப் புரளலாம். துண்டை உதறிப் பாலத்துச் சுவரின் தூசியைப் போக்கி விட்டு விரித்துப் படுத்தான்.

இரவின் கண்கள் விழித்துப் பார்த்தன. பளிச் பளிச் என்று கண்ணுள் தெறித்தன. பூங்காற்று இதமாக வீசியது. நிலவு உதிக்க இன்னும் நேரமிருந்ததால் நட்சத்திரங்களின் அமர்ந்த ஒளி. ஆற்றங்கரையின் புன்னை மரங்கள் இருளைச் சிறைப்பிடித்து வைத்திருந்தன. நீரலையின் சிற்றரவம். மணி எட்டரை இருக்கும். தூரத்தில் கேட்ட பேச் சொலி கிட்ட வர வர ஒலிகள் பொருள் கொண்டன.

“வெள்ளக் காளையைக் குடுத்திட்டம்லா? செறுக்கி மவன் காளை கள்ள மூதிங்கேன்... கறி கொளுத்து இருந்ததுதான் மிச்சம். சவம் வண்டிக்கும் வரமாட்டம்ங்கு, உழவுக்கும் வரமாட்டம்ங்கு... சனியனைப் போட்டு கெட்டி அளுவானேன்னு தொலைச்சுத் தலை முளுகீட்டேன். செக்குத் தள்ளி எண்ணெயாட்ட நம்மக் கொண்டு முடியுமா?...” பேச்சு தேய்ந்து மறைந்தது. பேச்சின் சுகத்தில் நடை தெரியாது. இந்த லயத்திலேயே தாழக்குடி போய்ச் சேர்ந்து விடுவார்கள்.

ஒருக்களித்துப் படுத்திருந்த சுடலையாண்டி, இரண்டு கைகளையும் கோர்த்துத் தலைக்கு அண்டை வைத்து மல்லாந்து கால்களை நீட்டினான்.

வீட்டில் இன்று பூராவும் ஆத்தாவின் புலம்பல் இருக்கும். காலங் காலமான கர்ப்ப சோகம் -

அப்பா பற்றியதான முதல் ஞாபகம் தனக்கு எப்போது தொடங்கியது?

சுடலையாண்டி மூளையைத் தூர் வாங்கினான். எங்கிருந்து தொடங்கினாலும் அந்த நிகழ்ச்சியில் தான் சென்று எண்ணம் நின்றது.அதுதான் முதலில்.அதற்கு முன்பு? ஒன்றும் புலப்படாத மங்கல். பழையாற்றின் கயத்தில் ஆழங்கண்டு மண் எடுக்க முக்குளிக்கையில், கொஞ்ச ஆழம் இறங்கியதும், மூச்சு முட்ட லோடு கூடி நீரின் கூரையைப் பார்க்கையில் ஒரே நீலமாகத் தோன்றுமே, அதுபோல் எங்கும் நீலம். அடர்வான நீலம். சிந்தனைக் கத்தி துளைக்க முடியாத கட்டி நீலம்…

சன்னஞ் சன்னமாக அந்த முதல் நிகழ்ச்சி சுடலையாண்டியின் மனதில் ஆழமாகச் செலுத்தப்பட்டு விட்டது. அப்போது எத்தனை வயதிருக்கும்? ஆறு அல்லது ஏழு. வார் நிக்கர் போட்டிருந்தாக ஞாபகம். ஏழு வயதே ஆனாலும் பத்து வயதுவரை தாங்க வேண்டும் என்ற முன்யோசனையோடு தைக்கப்பட்ட நிக்கர். வாரின் மேல் பகுதியில், தோள்பட்டையில், முடிச்சுப் போட்டால்தான் நிக்கர் இடுப்பில் சரியாக இருக்கும். அந்த முடிச்சு இல்லாவிட்டால் கீழே இறங்கித் தொங்கும். ஒன்றுக்குப் போக பட்டனைத் திறக்க அவசியம் இருக்காது.

அப்படியொரு வார் நிக்கரைப் போட்டுக்கொண்டு குளிக்கப்போனது நினைவிருக்கிறது. மேலே சட்டையில்லை. கைவிரல்கள், கை முட்டு, கால் முட்டு, தொடை எங்கும் சிரங்கு, பல நிறங்களில், பல தரங்களில். குளிப்பு ஒரு தண்டனையாகி விட்டது. மாடு குளிப்பாட்டபோகையில் அப்பா கையோடு இழுத்துக்கொண்டு போனார். மறுத்துச் சொல்ல முடியாமல் அப்பாவிடம் பயம். தாத்தா என்றால் ஏய்த்து விடலாம். ஆத்தா சாமர்த்தியம் ஒன்றும் சுடலையாண்டியிடம் செல்லாது. மனமின்றி அப்பா வோடு போனான். எருமையைத் தண்ணீரில் படி போட்டு, தேய்த்துத் தேய்த்துப் பசிந்திருந்த வைக்கோல் சுருணையால் கழுவி, இரண்டு காதுகளிலும் கைவிட்டு அலசி. காதுகளைக் கழுவியதும் எண்ணெய் போல் தண்ணீர் மீது ஏதோ படர்ந்தது. மீன்கள் துள்ளித் துள்ளி விழுந்தன.

மீன்களைக் கண்டதும் சுடலையாண்டியின் நெஞ்சில் திகில் மண்டியது. எல்லாம் பெரிய பெரிய மீன்கள். சிரங்கு தின்னிகள். தண்ணீரில் இறங்கி விட்டால் போதும். எப்படித்தான் தெரியுமோ? ஒரே பாய்ச்சல். ‘அவுக்’ கென்று வாய் நிறைய அள்ளிக் கொண்டு ஓடும். துடையைத் தட்டுகையில் குண்டியில் பிடுங்கும். ஆவ் ஒவ்’ என்று நிருத்தியம்

பயின்று கொண்டே குளிக்க வேண்டும். சிரங்கு வந்த பிறகு தாத்தாவோடு குளிக்கப் போவதில்லை. "செத்த இருலே மக்கா", என்று கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தேய்த்துக் கழுவி விடுவார். தானாகக் குளிக்கப் போனால் இந்த மீன்கள் - துள்ளிச் சாடுகின்ற மீன்களைக் கையறு நிலையில் பார்த்துக் கொண்டு படிக்கல் மீது உட்காந்திருந்தான். விரல்களை மடக்க முடியாதபடி விரல்களின் இடுக்கில் எல்லாம் நொந்து அழிந்த புண். ஏது காரணம் பற்றியேனும் மூக்கினருகில் கை போகையில் குமட்டும் நாற்றம். கை மூட்டில் புண் உராய்ந்து பள்ளிக்கூடம் போகும் சட்டையில் எல்லாம் கறைகள். ஒரு சட்டையில் கறைப்பட்ட இடத்தை எலி கடித்துத் தின்றதால் ஏற்பட்ட பொத்தல்.

அம்மை குத்திக் கொள்ள, பள்ளிக்கூடத்தில் வரிசையில் நிற்கையில் ஏற்படப் போகும் வலியை நினைத்து அஞ்சி இந்த வரிசை நீண்டு கொண்டே போகாதா என்று தோன்றுமே, அதுபோல் இன்னும் கொஞ்ச நேரம் அப்பா எருமையைக் குளிப்பாட்ட மாட்டாரா என்று சுடலையாண்டிக்குத் தோன்றியது.

மாட்டை எழுப்பி நிறுத்திவிட்டு அதன் அடி வயிற்றைத் தேய்த்துக் கொண்டிருந்தார் அப்பா. முற்பகல் வெயில் பழுக்கத் தொடங்கியது. புன்னை மரத்திலிருந்த ஒரு மீன்கொத்தி தண்ணீரில் பாய்ந்து உயர்ந்தது. மீனுடன் கூடிய அதன் அலகு கூட்டல் குறி போல். பழையாற்றுப் பாலத்தின் கீழிருந்த சப்பாறு மறிந்து தண்ணீர் பாறை மீது ஒழுகியது. பச்சைப் பாசி பிடித்து 'மழுமழு' வென்றிருந்த பாறையில் மாடு மேய்க்கும் பையன்கள் சறுக்கிக் கொண்டிருந்தனர்.

தண்ணீர் ஒழுகும் பாறை இருபது டிகிரிகோணத்தில் சரிவாக. எத்தனையோ ஆண்டு காலம் தண்ணீர் பாய்ந்து பாய்ந்து, பாறைகள் எல்லாம் மழுங்கச் சிரைக்கப்பட்டிருந்தன. குத்தி குத்தியாகக் கற்கள் இல்லை. ஜியாமெட்ரிகலான ஒழுங்கு இல்லாவிடினும், எங்கும் ஒரு குழைவு. நீர் யானையின் முதுகு போல் வழவழப்பு. ஓடுகின்ற வேகத்தில், பள்ள மேடுகளுக்கு ஏற்ப தண்ணீர் கிளை பிரிந்தது. கிளை பிரிந்து பாய்ந்த இடங்களில் எல்லாம் பாசிப் பச்சை நிக்கர்களை அவிழ்த்துப் போட்டுவிட்டு - "டர்ர்... ...பூவாய்ங்... ப் பூவாய்ங்... பெருஞ்சாணி, கீரிப்பாறை..." என்ற சத்தத்தோடு வேகமாகச் சறுக்கும் சிறுவர்கள். கால்களைத் தாக்கிழவி போல் நீட்டி உட்கார்ந்து, கைகளை வாகாக வளைத்து ஊன்றிக் கொண்டு... "சர் சர்" என்று ஒருவன் பின்

ஒருவனாக...

எருமையின் வாலைப் பிடித்து முறுக்கி, கையினால் புட்டியில் அறைந்து எழுப்பி, கரையேத்தி விட்டு, சுடலையாண்டியைப் பார்த்தார் அப்பா.

“மக்கா வாடா”

“வேண்டாம்பா. நா பொறவு குளிக்கேன்”.

“பொறவு என்ன பொறவு ? வா வா...”

மனமன்றி, கொலை மேடைக்குப் போவது போல் சுடலையாண்டி எழுந்து போனான்.

“நிக்கரை அவுத்துப் போட்டுக்கிட்டு எறங்கு...”

வார்களைத் தோளிலிருந்து கழற்றி, கீழே விழுந்த நிக்கரில் இருந்து ஒவ்வொரு காலாக வெளியே எடுத்து வைத்தான். நிக்கரை எடுத்துத் தண்ணீரில் நனைத்துக் கல்லின் மேல் வைத்த அப்பா, அவன் கையைப் பிடித்தார். முற்பகல் வெயிலானாலும் தண்ணீர் சில்லென்றிருந்து. முதல் மீனின் தாக்குதல் எப்போது துவங்குமோ என்று யோசிக்கையில் - ஒரு கையை இடது கையால் பலமாகப் பற்றிக்கொண்டு, சுடலையாண்டியைத் தேய்த்துக் கழுவ ஆரம்பித்தார் அப்பா.

“சவம். குளிக்கக் கூப்பிட்டா வாறல்லே. மேலேல்லாம் வங்கு புடிச்சுக் கெடக்கு. ஏம் மூதி நெளிய...? பேசாம நில்லு?”

என்ன நினைத்துக் கொண்டாரோ? திடீரென ஞாபகம் வந்தது போன்று, ஆற்று மணலில் விசிறிப் போட்டிருந்த வைக்கோல் கத்தையை எடுத்து, சுடலையாண்டியின் உடம்பைக் ‘கரகர’ வென்று தேய்த்தார். பழுத்த, பழுக்க இருந்த, பழுத்து உடைந்து சிவந்த புண்களில் பட்டதும் அனலாகக் காந்தியது. கையையும் காலையும் உதறிக் கொண்டு, சுடலையாண்டி கதற ஆரம்பித்தான்.

“ஏ விடு... ஏ என்னை விடு...

”சும்மா நில்லுலே பேசாம...”

“ஏ வலிக்கு... ஏ காந்துகு...”

“காந்தட்டு காந்தட்டு...”

நெரிபட்ட புண்களிலிருந்து இரத்தம் கசிந்தது.

இரத்தமும் வலியும் கோபமும் –

“விடுலே என்னை தாயோளி...”

இரத்தம் கசிய, மேலெல்லாம் காந்தி எரிய, கையைத் தட்டிவிட்டுக் கரையேறி நின்று அப்பாவைப் பார்த்த போது, சுடலையாண்டிக்குக் கட்டில் அடங்காத கோபமும் அழுகையும். ஆத்திரம் மீதுறக் குனிந்தான். ரோட்டில் கிடந்த வெட்டாங்கல் ஒன்றை எடுத்தான். சுழற்றி எறிந்தான்.

புள்ளாகப் பறந்து சென்ற கல் அப்பாவின் கால் முட்டுச் சில் மீது பட்டுத் தெறித்தது. ‘அம்மா’ என்று காலைப் பிடித்துக் கொண்டு அவர் குனியவும், சுடலையாண்டி ஓட்டமெடுத்தான்.

ஓடி, இரைக்க இரைக்க வீட்டை அடைந்தது அவனுக்கு நினைவிருந்தது. அழுது கொண்டே வந்த அவனை அம்மணமாக, உட்கார வைத்து, கிண்ணத்தில் வைப்பெண்ணெய் கொண்டு கோழித்தூவலால் தொட்டுத் தடவி. காந்தல் மாறிக் கிட்டிய இதமான சுகத்தை அனுபவித்துக் கொண்டு நின்றான். குளித்து விட்டுச் சுடலையாண்டியின் நிக்கரைப் பிழிந்து கையில் எடுத்துக் கொண்டு அப்பா வந்தார். அவர் கண்களைப் பார்க்க அவனுக்கு அச்சமாக இருந்தது. கடைக் கண்ணால் காலைப் பார்த்தான் முட்டில் சிவப்புத் தெரிந்தது.

இந்தப் பாலக் கலுங்கில் படுத்துக் கொண்டு ஆகாயத்தைத் துளைக்கையில் - இனம் புரியாத அந்த வயதில் அப்பாவுக்கு உண்டாக்கிய காயம்.

மேகங்கள் மெதுவாக அசைந்தன. கிழக்கு நோக்கி. காற்றில் பறக்கும் எருக்கலை விதைபோல்... கோழிக் குஞ்சின் அடி வயிற்றுத் தூவி போல். தட்டுத் தடுமாறிய அலைச்சலாக இல்லாமல் - சீராக. மெதுவாக. அப்பாவின் உருவமும் முகமும் மங்கலாக நினைவில் நின்றது. ஆனால் அம்மா -

சுடலையாண்டியின் ஞாபகங்கள் பின்னோக்கி நகர்ந்தன. துண்டு துண்டாக அகப்பட்ட செய்திகளைச் சேர்த்து ஒட்டவைத்து ஒரு உருவம்

கொடுக்க முயல்கையில் - தையல்காரனின் பை போல், பல நிறங்களில், பல ஆழ அகலங்களில் நினைவுகள் ஒதுங்கலாயின. தலை முடியை மட்டும் வைத்துக் கொண்டு பெண்ணுக்குப் பருஉருக் கொடுக்க முயலும் ஓவியன் போல் - அகப்பட்ட துண்டுச் செய்திகளைக் கொண்டு அம்மாவை, அவள் குண, மன இயல்புகளை அவள் போராட்டத்தின் பொருண்மை களைத் தீர்மானிக்க முயன்றான் சுடலையாண்டி,

என்னதான் மனத்தைத் துருவினாலும் அம்மா முகம் கவனத்தில் வர மாட்டேன் என்றது. அடையாளம் கண்டுகொள்ள ஒரு புகைப்படம் கூட இல்லை. அறிந்ததெல்லாம் செவி வழிச் செய்திகள். துண்டு துண்டான சம்பவங்கள், உரையாடல்களின் துணுக்குகள். குண விமர்சனங்கள்.

எல்லாவற்றையும் அந்தாதியாக்கிப் பார்க்கும் போது ஒரு முழுமை கிட்டாமல் அவன் திகைத்தான். அப்பாவின் புகைப்படம் கூடத்தான் இல்லை. ஆனால் ஆறு வயது முதல் கோடுபடத் துவங்கிய ஞாபகம். பதினான்கு வயதில் இது அறுந்தாலும் அந்த இடைப்பட்ட ஆண்டின் நினைவுகளைத் தீட்டித் தீட்டி அவன் கூர்போட்டு வைத்திருந்தான். ஆனால் அம்மா செய்தி - பால் பற்கள் குருத்தாக முளைத்த போது பால் நினைவு மறந்தது.

அவள் எப்படித்தான் இருந்திருப்பாள்?

அவர்கள் வம்சத்திலேயே யாரும் சிவப்புக் கிடையாது. அம்மா சிவப்பாக இருந்தாளாம். இருந்தால் அந்தச் சிவப்பில் தனக்கு ஏன் கொஞ்சமும் ஒட்டவில்லை? ஊரிலேயே நாலைந்து பெண்கள் தான் சிவப்பு.

ஆவுடையம்மாளின் அம்மா சங்கர வடிவு. மேலத்தெரு சுந்தரம் பிள்ளை பாட்டாவின் பெண்டாட்டி கனகம்மை ஆத்தா. பாம்படம் போட்டிருக்கும் அந்த நெய்யூர் பெரியம்மை. மண வாளக் குறிச்சியிலிருந்து கல்யாணமாகி வந்திருக்கும் கோலப்ப அண்ணன் பெண்டாட்டி.

அம்மா சிவப்பாகவும் வாட்ட சாட்டமாகவும் இருந்ததாகச் சொல்கிறார்கள்.

“ஒரு சாக்கு நெல்லை ஒத்தையிலே தூக்கீருவா...”

“நாலு கொடந் தண்ணீ பிடிக்க வென்னிப் பானையைச் சடக்குண்ணு தூக்கிப் பொறவாசல்லே கொண்டு வச்சிருவா...”

ஆத்தா வெவ்வேறு சமயங்களில் சொல்லிய செய்திகள் எல்லாம் நினைவில் வந்தன. முகம் மட்டும் நெஞ்சில் கூடவே இல்லை.

***

# மூன்று

ஐப்பசி மாதத்துப் பிற்பகல். பனிவெயில் மஞ்சள் அடித்தது. திறந்த சன்னல்கள் வழியாகக் கொல்லா மாமரங்களில் கிலுங்கும் காற்று பரந்து வகுப்பறையினுள் சிதறியது. அறுபத்தெட்டுப் பேர் கொண்ட வகுப்பு அது. பட்டப் படிப்பின் மூன்றாமாண்டு கணிதப் பிரிவு. மேற்கு முகமாக அமர்ந்திருந்த மாணவர்கள். வடபாகம் முப்பது பெண்கள். தென் பாகம் முப்பத்தெட்டு ஆண்கள். மத்தியில் ஒரு பாகம் இடைவெளி. முன்னால் பேராசிரியர்கள் பாடம் நடத்தும் மேடை. மேடை மேல் மேஜை, நாற்காலி. சினிமாஸ்கோப் கரும்பலகை.

துணைப் பேராசியர் மதுசூதனப்பெருமாள் இன்டக்ரல் ஈக்வேஷன் ஒன்றைப் பகுத்துக் கொண்டிருந்தார். மதுசூதனப்பெருமாள் வகுப்பு நடத்தும் போது எப்போதும் ஒரு தோரணை உண்டு. ஆப்பிரிக்கக் காடுகளின் குறுக்கே நூல் பிடித்து ஓடும் பூமத்தியரேகை, நாகர்கோயிலிலிருந்து அதிக மைல் தூரத்தில் இல்லை என்றாலும், டைகட்டி, கோட்டு போட்டுக் கொண்டுதான் வகுப்புக்கு வருவது.

முப்பத்தைந்து வயதின் முறுக்கு கொண்ட மீசை, சிறப்பான கவனம் எடுத்துக் கொண்டு சீவப்பட்ட தலை. இடது கையால் கோட்டின் முன் பிளவை ஒதுக்கிக் கொண்டு, ஒரு கதாநாயகனின் கண்ணியத்தோடு பாடங்கள் வாயிலிருந்து புறப் படும். கரும்பலகையோரம் சாய்ந்து கொண்டு, இடது கையால் அலட்சியமாகக் கரும்பலகையில் கிறுக்குவதும் உண்டு. அழகான சில மாணவிகளை அடிக்கடி பார்த்துக் கொண்டு, அவர்கள் சிரிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு அடிக்கும் வறட்டு ஜோக்குகள் வேறு. புகுமுக வகுப்பு தொட்டே நான்கு ஆண்டுகள் சேர்ந்தாற்போல் படிக்கும் ஒரு மாணவன் இதை எப்படி ரசித்துச் சிரிப்பான் என்ற யோசனையே கிடையாது. அன்று கடைசி மணி வகுப்பு தூங்கி விழுந்தது. ஜீரோ டு இன்ஃபினிட்டி இன்டக்ரல் ஈக்வேஷனைப் பற்றிய கவலை இல்லாமல் சிவசங்கரன் சாமியாடி விழுந்து கொண்டிருந்தான். வகுப்பைச் சிரிப்பு மூட்ட இது சரியான நேரம் என்று துணைப் பேராசிரியர் மதுசூதனப்பெருமாள் நினைத்தாரோ என்னவோ?

“சிவசங்கரன்...... சிவசங்கரன்...”

தலையை உலுக்கிவிட்டு சிவசங்கரன் நிமிர்ந்து பார்த்தான்.

“என்னவே? என்ன எளவு கடுத்த உறக்கமால்லா இருக்கு?”

சிவசங்கரன் பேசாமல் நின்றான்.

“என்னவே மரம் கெணக்க நிக்கீரு?”

“இல்ல சார்...”

“என்ன இல்ல சார்? மத்தியானம் ஊருப்பட்ட சோறு திண்ணுட்டீரோவ்? உறக்கம் கிறுக்கீட்டுல்லா வருவு....”

“................................”

“சொள்ளமாடன் கெணக்க வளந்திருக்கான். போயம்பிலே கடுக்க மட்டையும் முருக்குத் தடியும் எடுத்துக்கிட்டு. வந்திருக்காம் படிக்கதுக்கு...”

யாருக்கும் சிரிப்பு வரவில்லை. சிரிக்கவில்லை. மதுசூதனப் பெருமாளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. இன்று இவர்களை விடுவதில்லை என்று தீர்மானித்து விட்டார் போலிருக்கிறது.

“சரி. பாடத்தைப் பாருங்க. இதுவரை செய்திருக்கேன். இதுக்கு மேலே யார் செய்து முடிச்சாலும் ரெண்டு ரூவா பிரைஸ்...”

வகுப்பில் இலேசாக ஒரு சலசலப்பு.

“என்னா யாரும் இல்லையா?... அஞ்சு ரூவா...

நல்லா யோசிச்சுப் பாருங்க. பத்து ரூவா...”

மூன்றாவது டெஸ்க்கிலிருந்த ராமசாமி எழுந்து நின்றான்.

“வா வா... செய்யி பாப்போம்”

கரும்பலகையின் அருகே போய், ஒரு கையில் டஸ்டரையும் மறு கையில் சாக்குக் கட்டியையும் வைத்துக் கொண்டு, ராமசாமி "கிறுகிறு’ என்று கணக்கைப் போட ஆரம்பித்தான். பத்து ரூபாயின் சாயம் மதுசூதனப்பெருமாள் முகத்தில் வெளிறியது. கணக்கைச் செய்து முடித்த அலட்சிய பாவத்துடன் டஸ்டரை மேஜை மேல் போட்டு விட்டு,

ராமசாமி கையை நீட்டினான்.

“ குருநாதர் கிட்டே பணம் வாங்கின சிஷ்யன் உருப்பட மாட்டான்.”

“அதெல்லாம் ஒண்ணுமில்லே சார். சும்மா குடுங்க...”

“இப்பம் பணம் இல்லை... சம்பளம் வாங்கித் தந்தா போராதா?”

“போரும். ஆனா இப்பம் ஒரு பிராமிசரி நோட்டாவது எழுதித் தரணும்.”

வகுப்பெங்கும் சிரிப்பு புரண்டது. பெண்கள் கூடச் சிரித்து மறிந்தனர்.

ஆவுடையம்மாள் வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.

ஐந்து மணிக்கு பெல் அடித்தது. மதுசூதனப்பெருமாள் நோட்டுகளைப் பொறுக்கிக் கொண்டு போனார். அதற்காகவே காத்திருந்தது போல் மாணவர்களின் வெளிவாங்கல். காது கொள்ளாத சத்தம். புத்தகங்களையும், டிஃபன் பாக்ஸையும் தூக்கிக் கொண்டு வெளிவந்தார்கள். கல்லூரி மைதானத்தில் சாலைகளில், பல நிறத்தில் மாணவ மாணவிகள். மைதானத்தில் விளையாட ஆயத்தங்கள். வழிபாட்டு மண்டபம் பக்கத்திலிருக்கும் சைக்கிள் ஸ்டாண்டை நோக்கி ஊர்ந்த சிலர். கலையரங்கம் பக்கத்தில் நின்ற சில கார்கள் உறுமலாயின. என். சி.சி. திடலில் அவிழ்த்துப் போட்டிருந்த நாலைந்து வில்வண்டிகள்.

சுடலையாண்டி நடக்க ஆரம்பித்தான். கல்லூரி இருக்கும் நாகர்கோயிலில் இருந்து சூரங்குளம் ஐந்து மைல் - குறுக்குப் பாதையில். பஸ்சிலும் போகலாம். தேரூர் - தாழக்குடி பஸ் சூரங்குளம் வழியாகவே போகிறது. ஆனால் முக்கால் மணி நேரம் காத்து நிற்க வேண்டும். கூட்டமோ எண்ணி முடியாது. மாதா மாதம் சலுகையில் மாதாந்திரப் பயணச்சீட்டு பெற்றுக் கொள்ளவும் பணம் வேண்டும். எனவே சுடலையாண்டி நடந்தேதான் கல்லூரிக்குப் போய் வந்தான்.

ஒழுகினசேரிப் பாலம் கடந்து, வயல் வரப்பில் இறங்கி, கடுக்கா மரம் வளர்ந்து உட்கவிந்து நிற்கும் குளத்தங்கரை வழி யாகப் பொதேரி ஊரைக் குறுக்கு வெட்டி, மீண்டும் வயல் வரப்பு வழியாகத் திருப்பதிசாரம் தெற்கு மூலையில் ஏறுவான். தெற்குத் தெருவைக் கடந்து, சித்திரைத் திருநாள் மகாராஜாவின் கொட்டாரம் பக்கம் ரோட்டில் ஏறி, மேலும் வடக்கு நோக்கி நடப்பான் சுடலையாண்டி.

தனியாக, ஏதேனும் எண்ணிக் கொண்டே நடப்பது புகுமுக வகுப்பு தொட்டே பழக்கம். பாடங்கள் பற்றி, மாணவர்கள் பற்றி, பேராசிரியர்கள் பற்றி, யோசிப்பதற்கு ஏதேனும் செய்தி இருந்தது அவனுக்கு, கால்கள் கொஞ்சம் தாளம் போட, அவன் ஓரமாக நடப்பான். தார் ரோடுகள்தான். குண்டு குழிகள் உண்டு. வண்டிகள் உருண்டு உருண்டு இணையான இரண்டு தடங்கள் பதிந்து போய் இருக்கும். ஆனால் தார் ரோட்டில் இரண்டு ஓரங்களிலும் ஆட்கள் நடமாடி ஏற்பட்ட வழித்தடம். ஒற்றையடித் தடம். புல்லின் நடுவில் பிரிந்த வகிடு. மண் உறைந்து, தேய்ந்து, மிருதுபட்டு. எப்போதாவது குறுக்கிடும் நெருஞ்சிக்காய். சாணிக் குப்பம். இவை தவிர இடையூறு இல்லாத தடம்.

கிருஷிப் பாலத்தின் மீது தம்பையாக் கோனார் உட்காந்திருந்தார். அவருடைய இரண்டு எருமைகளும் ஒரு கிடேரியும் கால்வாயில் இறங்கி நின்று வரப்போரப் புற்களை மேய்ந்து கொண்டிருந்தன. தலைப்பாகை கட்டிக் கொண்டு, தார்பாய்ச்சிய வேட்டியோடு அழிசன் கம்பைத் துடை மீது வைத்து உருட்டிய வாறு போக்கு வெயில் உடல் மீது படாமல் வாகை மர நிழலில் அமர்ந்திருந்தார்.

“என்னா சொள்ளையாண்டி... காலேஜ் விட்டாச்சா? மணி என்ன இருக்கும்?”

“ஆறு இருக்கும்”.

“சரி, மாட்டைப் பத்த வேண்டியதுதான்.”

கோனாருக்கு மாடு மேய்க்க இதுதான் நேரம். வயல்கள் பயிரேறிய பிறகு, வாய்க்காலிலோ வரப்பிலோ மாடு மேய்க்க யாரையும் அனுமதிப்பதில்லை. எட்டி இரண்டு வாய் கடித்து விடும். ஒரு வரை அனுமதித்தால் பிறகு ஆளுக்கு ஆள் மாடு மேய்க்கப் புறப்பட்டு விடுவார்கள். ஆனால் கோனார் தந்திரக்காரர். எங்கெங்கு, எந்தெந்த நேரத்தில் ஒதுக்கு மேய்ச்சல் மேய்ப்பது என்பது அவருக்கு தெரியும். இல்லா விட்டால் அவர் எருமைகள் இந்த மினுக்கம் கொள்ளாது. வெயில் தாழ்ந்த பின்பு, எருமை களைக் குளிப்பாட்டக் கொண்டு போவது போல் பத்திக் கொண்டு போய், எங்காவது கால்வாய் ஓரத்தில் இறக்கி விட்டு விடுவார். வயிறு முட்ட மேய்ந்த பிறகு ஆற்றில் இறக்கி அலசிக் கழுவி வீடு கொண்டு சேர்ப்பார். எத்துக் குத்தாக, இவர் ஒதுக்கு மேய்ச்சல் மேய்ப்பதை யாராவது கண்டுவிட்டால், அவர்களை இதமாகப் பேசிச் சமாளித்து அனுப்ப அவருக்குத் தெரியும்.

பாலத்தைத் தாண்டிச் சுடலையாண்டி நடக்கையில் பின்னால் வில் வண்டிச் சத்தம் கேட்டது. நான்கு ஆண்டுகளாகக் கேட்டுப் பழகிப் போன சத்தம். வண்டியின் குடம் அச்சில் மோது கையில் உண்டாகும் 'கடங் கணங் கடங்' என்ற ஓசை, ஆவுடை யம்மாள் இப்போதுதான் வருகிறாள். பட்டப் படிப்பு முதலாண்டு படிக்கும் அவள் தம்பி பாவநாசத்தையும் கூட்டிக் கொண்டு வருவாள். சுடலையாண்டி பத்துப் பாதைக்கு நடந்து வந்து விடுவதால், ரோட்டு வழியாக ஒட்டாபீஸ் சுற்றிக் கொண்டு வண்டி வர இவ்வளவு நேரம் ஆகும். சில சமயம் இவன் திருப்பதிசார விலக்கில் ஏறுகையில் வண்டி முன்னால் போவது தெரியும்.

காளையின் கழுத்து மணிகள் குலுங்கின. சுடலையாண்டி ஒரமாக நடந்தான். வண்டி அவனைத் தாண்டிச் சென்றது. தென் வடலான அந்த ரோட்டில், வடக்கு நோக்கிப் போகும் வண்டியினுள் மேற்குப் பக்கம் அவள் சாய்ந்திருந்தாள். கோசுப் பெட்டியில் கிழக்குப் பார்த்துப் பாவநாசம் இருந்தான்.

அழகான சிறிய வண்டி. சமீபத்தில் வார்னிஷ் அடித்த பளபளப்பு. மேலே பிரம்புக் கூண்டும் முறுக்கிய மணிக் கொச்ச வரிசைகளும். உள்ளே வர்ணத் தட்டி வளைவு விதானம். வண்டியின் முன்பின் திறப்புகளில் குஞ்சமும் சலங்கைமணியும் வைத்த திரைச் சீலைகள். இரு புறமும் திரைச் சீலைகளை ஒதுக்கிச் செருகியிருந்தது. வண்டியினுள் சவுரிமெத்தை. மெத்தை மேல் பவானி சமுக்காள விரிப்பு. வெள்ளை உறை போட்ட இரண்டு இலவம் பஞ்சுத் தலையணைகள். ஆவுடையம்மாளின் இடது கைப்பக்கம் புத்தகக்கட்டு. சாப்பாட்டுச் சம்புடம். வண்டி விரைவாக உருண்டு ஓடியது.

ரோட்டோர வீடாகையால் ஊருக்குள் நுழைந்து சுடலையாண்டி போவதில்லை. சூரங்குளத்தின் தெற்கெல்லையில் ஒரு சப்பாறு. அதிலிருந்து மேற்காகப் பாயும் பெரிய தெரு. அதில் இறங்காமல், நேரே நடந்து, வீட்டின் பின்புறம், புறவாசல் வழியாகவே போவான். வீட்டின் வெளிச் சுவருக்கும் ரோட்டுக்கும் இடையில் ஒரு கட்டை மண் சுவர். நடுவில் முடுக்கு. முடுக்கின் தெற்கு மூலையில் ஒரு முருங்கை மரம். நடுவிலும் வடக்கிலுமாக இரண்டு தென்னை மரங்கள். தென்னை மர மடல்கள் விழுந்து சேதப்பட்டு பழுதுபார்த்த ஒட்டுக் கூரை.

புற வாசலில் தொழுவில் கட்டியிருந்த ஆடு சுகமாக வாகைக் குழை கடித்துக் கொண்டிருந்தது. தாத்தா வந்து விட்டார் போலிருக்கிறது என்று நினைக்கும் முன்பே வீட்டிலிருந்து கேட்ட சத்தம்.

ஆத்தாவுக்கும் தாத்தாவுக்கும் காரமான சண்டை. ஆத்தாவின் சத்தம் உரத்துக்கேட்டது.

“நீரு பாட்டுக்கு ஒளிஞ்சு போயிட்டீரு, எவ அரிசி தருவா? சுத்திச் சூளக் கடம். கௌங்காவது கேட்டதுக்கு இல்லேன்னு சொல்லாமத் தந்தான்... அந்தப் பயலுக்காச் சுட்டி பாத்தேன். இல்லேண்ணா எம்பாட்டுக்கு தீ கூடப்பெருக்காம இருந்திருப்பேன்.”

“இருப்ப இருப்ப. ஏன் இருக்க மாட்டே? போன இடத்திலே ஒங்க அம்மைக்கு ஆமக்கனா இருக்கான்? பணத்தை அவுத்துத் தர. கொஞ்சம் மின்னப் பின்ன ஆகும்.”

“ஆமா... மின்னப்பின்னே ஆகும். எவன் வாயையாம் பாத்துக்கிட்டு நிண்ணுருப்பேரு.”

“செறுக்கி என்னா நாக்கு நீளுகு? வந்தம்னா அலவைக் கிளிச்சிருவேன்.”

வீட்டுக்குள் நுழைந்த சுடலையாண்டி பெரிய படிப்புரையில் இருந்த டிரங்குப் பெட்டி மீது புத்தகக் கட்டை வைத்தான். சட்டையைக் கழற்றி ஆணியில் தொங்கப் போட்டான். பனியன் கிடையாது. கொடியில் கிடந்த சாரத்தை உருவி இடுப்பில் சுற்றிக் கொண்டு வேட்டியைக்களைந்தான். வேட்டியின் இரு முனை களையும் பிடித்துக்கொண்டு, இரண்டாக, நான்காக, எட்டாக மடித்தான். குறுக்குவாட்டில் கொடியில் பதனமாக தொங்கப் போட்டான். திண்ணையிலிருந்து முற்றத்துக்கு வத்து அடுக் களையுள் எட்டிப் பார்த்தான். அடுப்பின் மேலிருந்த மண்பானையில் சிரட்டை அகப்பையைப் போட்டு ஆத்தா எதையோ கிளறி, அகப்பையை மேலே தூக்கிச் சூடு படாமல் பொத்தினாற் போல் வெந்து விட்டதா என்று நசுக்கிப் பார்த்தாள். மரச்சீனிக் கிழங்கு. இன்றைய இரவு உணவு என்ன என்பது அவனுக்குப் புரிந்தது.

மடியிலிருந்து மூன்று ரூபாயை அவிழ்த்துச் சுடலையாண்டியிடம் தந்தார் தாத்தா.

“இன்னாடே... இதை அந்த மூளிகிட்டே குடு. இதுக்குத்தாலா இந்த நெலை... என்ன பேச்சு பேசுகாப்பா...”

சுடலையாண்டி ரூபாயைக் கொண்டு ஆத்தாவிடம் நீட்டினான்.

ரூபாயை வாங்கிக் கொண்டு தாத்தா இருந்த திசையைப் பார்த்து முகத்தை வலித்துவிட்டு, அவனைப் பார்த்துச் சிரித்தாள் ஆத்தா. இது என்ன குண விசேடமோ என்று மனத்துக்குள் சிரித்துக் கொண்டான்.

***

# நான்கு

சுடலையாண்டிக்கு அறிவு வந்த நாள் முதல் வீட்டில் இந்தத் திருவிழாதான். எப்போது பார்த்தாலும் தாத்தாவுக்கும் ஆத்தாவுக்கும் சண்டை. எதற்கெடுத்தாலும் சண்டை. அடுத்த நாழிகையில் சண்டை போட்ட உணர்வு இருவருக்கும் மறந்து போய்விடும். பிறகு மீண்டும் சண்டை.

இரண்டு வாரங்களுக்கு முன்பு. ஒரு ஞாயிற்றுக் கிழமை. மத்தியானம் கஞ்சி குடித்து விட்டு எதையோ படித்துக் கொண்டிருந்தான் சுடலையாண்டி. மூன்று மணி இருக்கும். புற வாசல் கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. “ம்மே” என்று ஆடு இனங் கண்டு கொடுத்த குரல். தாத்தா தான்.

முற்றத்துக்கு வந்து தலையில் இருந்த கடவப்பெட்டியை இறக்கிவிட்டுப் படிப்புரையில் அமர்ந்தார். துண்டை அவிழ்த்து முகம், மார்பு எங்கும் சுரந்திருந்த வியர்வையைத் துடைத்தார்.

“ஸ்... அப்பாடா. ஏவுள்ளா கொஞ்சம் தண்ணீ கொண்டா...”

பித்தளைப் போணியில் 'பழஞ்சித் தண்ணீ கொண்டு வைத்தாள் ஆத்தா.

“தண்ணீயைப் போட்டு அடைக்கது கஞ்சியைக் குடிக்காலா... நேரம் பத்தாதுண்ணா?”

ஒன்றும் பேசாமல் தாத்தா தண்ணீரைக் குடித்தார். கடவத்தினுள் நோட்டமிட்டாள் ஆத்தா.

ஏதோ வேலையாக நாகர்கோயிலுக்குப் போனவர், வேலை முடிந்து வடசேரி வழியாக வந்திருந்தார். கையில் கொஞ்சம் காசு இருந்திருக்கிறது. வீட்டிற்குக் காய்கறி வாங்கிக் கொண்டு போனால் என்ன என்று தோன்றியது. சந்தைக்குள் நுழைந்திருக்கிறார். காய்கறி வாங்க அவரிடம் குட்டிச் சாக்குக்கூட இல்லை. அதனாலென்ன, பனை யோலைக் கடவம் ஒன்றை வாங்கிக் காய்கறிகளாக நிறைத்து வந்துவிட்டார்.

ஒரு பெரிய பூசணிக்காய், நீளமான தடியன் காய், கறிச்சக்கைத் துண்டு, கீரைத்தண்டு, சீனி அவரைக்காய்கூறு, வெள்ளரிக்காய் இரண்டு...

“அட இது என்ன அலுசுவம்? சும்மா காய்கறி வாங்கீட்டு வந்தாப் போருமா? உப்பு மொளகு வேண்டாமாக்கும்... மனுசன் இப்படியும் உண்டா?”

கிழக்குப் படிப்புரையின் கிழக்கோரத்தில் உட்காந்திருந்த சுடலையாண்டி தலையைத் தூக்கிக் கடவத்தினுள் பார்த்தான். தாத்தா முகத்தில் எரிச்சல் தெரிந்தது. ஆத்தாவிடம் ஒரு இளக்காரச் சிரிப்பு. “பேரனுக்கு நிச்சயாம்பலத்துக்குக் காணும்...”

“நீ சலம்பாக உள்ள எடுத்து வையி செறுக்கி...”

“உள்ள வச்சு என்ன செய்ய? சும்மா உப்புப் போட்டு அவிச்சுத் திங்கவா?’ ஆத்தா டேசி முடிக்கு முன் பித்தளை போணி கனார்’ என்று எதிர் சுவரில் மோதி விழுந்தது. கடவத்தைச் செந்தூக்காகத் தோளில் எடுத்துக் கொண்டு ‘விருட் டென்று பாய்ந்தார் தாத்தா.

ஐப்பசி மாதத்து மழை வடக்கு மலையில் பெய்து ஆற்றில் நிறைய வெள்ளம். இரு கரையும் தொட்டுக் கொண்டு செம்மண் நிறத்தில் தண்ணீர் பாய்ந்தது. தண்ணீர் அடித்துக் கொண்டு வந்த பதவல்கள் மிதந்தன. தாழை மரங்கள், தென்னை மடல்கள், புன்னைக் கிளைகள், வாழைத் தடிகள், தேங்காய்க் கதம்பைகள், மரச்சீனிச் செடிகள். நுரைத்துச் சுழித்து தண்ணீர் ஓடியது.

தோளில் கடவத்தோடு பாய்ந்த தாத்தா, புறவாசல் வழியாகப் படலைக் கதவைத் திறந்து கொண்டு, ரோட்டில் இறங்கினார். ரோட்டைத் தாண்டினார். ஆற்றங்கரை ஓரம் போய் நின்றார். வாய்கறி நிறைந்திருந்த கடவத்தை தோளுக்கு மேல் தூக்கினார். “டமார்” என்று ஒரு சத்தம். காய்கறியோடு கடவம் நாட்டாற்றில் பொய் கவிழ்ந்தது.

கோபம் தணியாமல் ‘மூசுமூ’ சென்று இரைத்துக் கொண்டு, மறுபடியும் படிப்புரையில் போய் அமர்ந்த தாத்தாவை ஆத்தா விசித்திரமாகப் பார்த்தாள். முகத்தில் பழையபடி அந்தக் குறுஞ் சிரிப்பு.

“சரி வந்து கஞ்சி குடியும்...”

“தேவ்டியா வெளையாடாவா செய்யே...

மூலையில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த நீண்ட கம்பு ஒன்றை எடுத்துக்

கொண்டு பாய்ந்தார். தந்திரமாக ஆத்தா அடுக்களையில் போய்க் கதவை உள்ளே தாழிட்டுக் கொண்டாள். கோபத்தில் கதவு மீது “படார் படார்” என்று அறைந்ததும், ஜன்னல் கம்பி இடுக்கு வழியாகக் கம்பை விட்டுக் கலக்கியதும்

இன்று நடந்த சண்டைக்குப் பிறகு, சுடலையாண்டிக்கு இதுதான் ஞாபகத்துக்கு வந்தது. நாற்பது ஆண்டுகள் இவர்கள் எப்படித் தாம்பத்தியம் நடத்தினார்கள் என்று அவனுக்குப் புரியவில்லை. இந்தச் சண்டை என்று நிற்கும்? நிற்காது போலிருக்கிறது. இல்லை, நின்று விடும். எப்போது? யாராவது ஒருவர் இறக்கும்போவது.

யாராவது ஒருவர் இறந்தால் -

என்ன ஆகும் என்று சுடலையாண்டியின் மனம் அவசர அவசரமாகச் சிந்திக்க ஆரம்பித்தது. ஆத்தா இறந்து போனால் - சாப்பாட்டுக்குக் பணம் தேடுகின்ற பிரச்சினையோடு சாப்பாடே பிரச்சினையாகும். எந்த வறுமையானாலும் காலையில் முற்றம் தெளித்து, வீடு பெருக்கி, பாத்திரம் கழுவி இருப்பதைப் பகிர்ந்து, இல்லா விட்டால் எங்காவது கடன் வாங்கி.

இந்த வேலைகளைத் தாத்தாவோடு பகிர்ந்து கொள்ள வேண்டியது வரும். கல்லூரி விட்டு வந்து தீ மூட்டி உலை போட வேண்டியதிருக்கும். காய் நறுக்கிக் குழம்பு வைக்க வேண்டிய திருக்கும். ஒரு வயது ஆகு முன் செத்துப் போன அம்மா இடத்தை இத்தனை ஆண்டுகளாக நிரப்பி வந்திருக்கிறாள். அவளுக்கு இல்லையென்றாலும், தனக்குத் தங்கரியம் பண்ணி வைத்துத் தந்திருக்கிறாள்.

தாய் மார்பென்று தடவித் தோல் பாய்ந்த கிழட்டு முலை சுவைத்த காலத்தில் சுரந்த கண்ணிரின் மிச்ச சொச்சங்கள் இன்னும் இருக்கின்றன.

தாத்தா செத்துப் போனால் –

இருள்…

தோலுரிக்க முடியாத இருள்…

உளி போட்டுச் செதுக்க முடியாத இருள்…

எந்தச் சூரியனாலும் இளக்க முடியாத இருள்.

தாத்தாவும் ஆத்தாவும் தனக்கு இல்லாதிருந்தால் –

பதினான்கு வயதில் அப்பா பட்டு விழுந்த பிறகு,

என்னவாக ஆகியிருப்பேன் ?

ஏதாவது ஒட்டலில் மேஜை துடைக்க -

தையல் கடையில் காஜா போட –

கொத்த வேலைக்குக் கையாளாக –

நெய்யும் இடத்தில் ஒடம் பொறுக்கிப் போட –

சந்தையில் சுமடு தூக்க –

சினிமா தியேட்டரில் சோடா, கலர் விற்க –

எதுவாகவும் ஆகியிருக்கலாம் என்று எண்ணுகையில் நெஞ்சு கனத்தது.

"நீ கௌங்கு திண்ணாம்லே...”

“தாத்தாவும் வந்திரட்டேன்.”

“அவுரு எங்கின நிக்காரோ? மணி எட்டு இருக்குமே. நீ திண்ணு.”

“சரி! ரெண்டு உப்பு மொளகு நுணுக்கு.”

தானாகவே பேசிக் கொண்டு உப்பு மிளகை அம்மியில் வைத்து நுணுக்கினாள்.

"எளவு மனுசன் ஒரு எடத்துக்குப் போனா சட்டுப்புட்டுணு வர மாட்டாரு. வடிக்க ஒரு பொடி அரிசி இல்லே... அடுத்த விட்டுக்காரிகிட்டேயும் எதுத்த வீட்டுக்காரிகிட்டேயும் எத்தினி நாளூ கடங்கேக்கது? ஒரு நா செத்தா ஒரு நா அளலாம். தெனமும் செத்தா? இந்த மூணு ரூவாயை நேரத்தக் கொண்டாந்து தந்தா என்னா? நெஞ்சிலே சூடு வேணும். பய பள்ளிக்கூடம் விட்டு வருவானே... வயிறு பசிக்குமே. மனுசனுக்கு

எப்பந்தான் தெரியுமோ? நல்ல காலம் மூக்காண்டியாவது ரெண்டு ராத்தல் கௌங்கு தந்தான் ...”

கை கழுவுதற்காகச் சுடலையாண்டி புறவாசலுக்குப் போனான். புற வாசலில் கூரையின் சாய்ப்பைச் சற்று நீட்டி, இரண்டு கால் நாட்டி, குறுக்காக ஒரு தென்னை ஓலைக் கிடுகைப் போட்டு, அவன் வளர்க்கும் ஆட்டின் தொழுவு. ஆடு திரும்பிப் பார்த்தது. அதன் முன்னால் குழை தின்று மீந்த குச்சிகள். அங்குமிங்குமாகப் புழுக்கைக் கட்டிகள். ஆட்டை அவிழ்த்துத் தண்ணீர் காட்டிவிட்டுச் சுடலையாண்டி வீட்டினுள் போனான்.

***

# ஐந்து

சுடலையாண்டி கல்லூரி தொடங்கும் நேரம் காலை பத்து மணி. எட்டரை மணிக்கு வீட்டிலிருந்து புறப்படுவான். சூரங்குளத்திலிருந்து புறப்பட்டு, திருப்பதிசாரம், பொதேரி வழியாக ஒழுகினசேரி பாலம் சேர்ந்த பிறகு, டவுனுக்குள் புகுந்து மீனாட்சிபுரம், கோட்டாறு, செட்டிகுளம் ஜங்ஷன் கடந்து, கல்லூரிக்குப் போக வேண்டும். காகம் பறக்கும் நேர்கோடு மாதிரி இல்லா விட்டாலும், அதிகபட்சக் குறுக்கு வழியை உபயோகத்தால் ஐந்து கல் நடந்து கடக்க வேண்டும்.

ஏதாவது காரணம் பற்றிக் கொஞ்சம் தாமதமாகிப் போனால் - அதை வழியில் நேர் செய்ய வேண்டியது வரும். விரைந்து நடந்து நிரவல் செய்ய முடியாமற் போகும் போது, ஆள் நடமாட்டம் அதிகமில்லாத திருப்பதிசாரம் ரோட்டை ஓடிக்கடப்பான்.

காலை நாலரை மணிக்கு விழித்து, எங்கெங்கோ மன வெளியில் அலைந்து திரிந்து, மனத் தேரை நிலைக்கு நிறுத்திப் படிக்க ஆரம்பித்தவன் ஏழு மணிக்குத்தான் நிறுத்தினான். இனிமேல் பரபரவென்று புறப்பட வேண்டும். மற்றப்படி வேலைகள் ஏதும் கிடையாது. ஆனால் ஆட்டுக்கு ஒரு தூக்கு புல்லறுத்துக் கொண்டு போட வேண்டும். அது ஒரு பெரிய வேலை இல்லை.

ஏழு மணிக்குப் படித்து முடித்தவன் படுக்கும் கோரம்பாயைச் சுருட்டி, தலையணையைப் பொதிந்து ஒரு மூலையில் வைத்தான். அன்று கொண்டு போக வேண்டிய "நோட்டு, புத்தகங்களைச் சேர்த்து ரப்பர் வாரின. ல கட்டி வைத்தான். பேனாவில் இங்கு ஊற்றினான்.

குளிக்கப் போவதற்கான ஆயத்தங்கள். கொடியிலிருந்த துண்டை உருவித் தோளில் போட்டான். எண்ணெயும் அழுக்கும் சேர்ந்து கஞ்சி போட்டது போல் மொடமொடத்தது துண்டு. மாடக்குழியில் இருந்த எண்ணெய் கிண்ணத்தைக் கையில் எடுத்தான். எண்ணெய் இல்லை.

“யாத்தா... யாத்தோவ்... எண்ணெய் இருக்கா ?”

“இல்லியே மக்கா... வேங்கணும்...”

“கொஞ்சம் கக்கமாவது இருந்தாக் குடு, குளிக்காண்டாமா?”

தேங்காய் எண்ணெய் காய்ச்சுகையில் போடும் ஈருள்ளி, கறிவேப்பிலை, சீரகம், கையாந்தரை, கொடுப்பை ஆகியவற்றின் அடி வண்டலான எண்ணெய்க் கடுகைக் கொண்டு வந்து கொடுத்தாள். வெறும் ஈருள்ளி, கறிவேப்பிலை, சீரகம் மாத்திரமாக இருந்தால், எண்ணெய் காய்ச்சிச் சூடு ஆறிய உடனேயே தின்பதற்கு எடுத்துத் தருவாள். ‘மொர மொர’ என்று தேங்காய் எண்ணெய் மணக்கும் அந்தக் கடுகு சுடலையாண்டிக்குப் பிரியம். வேறு பல கீரைகளும் போட்டுக் காய்ச்சி இருப்பதால், அதைத் தின்றால் கசக்கும். சோறு வடித்த கஞ்சித் தண்ணீரில் இந்த எண்ணெய் கடுகை மிதக்கப் போட்டு ஒரு போணியில் எடுத்துக் கொண்டுபோய்த் தலையில் வைத்து அரக்கித் தேய்த்துக் குளிப்பாள் ஆத்தா.

அந்தக் கடுகைக் கொஞ்சம் எடுத்து, கையில் வைத்துப் கற்ற பொடித்து, தலையில் வைத்து அரக்கினான் சுடலையாண்டி. கையகப்பையில் ஆத்தா வடியவைத்தகடுகு, அதிலும் எண்ணெய் பசை அவ்வளவு வளமாக இல்லை.

தலையில் தேய்த்த பின்பு, தோளில் உதிர்ந்து கிடந்த துணுக்குகளைத் தட்டிவிட்டான். சோப்புப் போட்டுக் குளிப்ப தில்லை. பிடிக்காது என்று இல்லை. சோப்பு வாங்குவது கிடையாது. - சோப்புப் பெட்டியும் கிடையாது. வாரம் ஒரு முறை வேட்டி சட்டைக்கு சோப்பு போடுகையில் மிஞ்சும் புழுக்கைத் துண்டைப் பதைத்து மேலுக்குத் தேய்த்துக் கொள்வதுதான். எனவே சோப்பைப் பற்றிய யோசனை அற்று, முற்றமும் அரங்கின் ஒலைவாரியும் சந்திக்கும் வடமேற்கு மூலையில் கயிற்றில் தொங்கிய பனையோலைப் பட்டையினுள் கை விட்டான். உமிக் கரி ஆழத்தில் கிடந்தது.

“யாத்தா . உமிக்கரி தீந்தாச்சு...”

“தீந்தாச்சா..? பங்கசத்திட்ட உமி வாங்கியாந்து நீத்தணும்.”

இடது கையில் உமிக்கரியை அள்ளி, பேப்பர் துண்டில் மடித்து எடுத்துக்கொண்டு, ஆற்றை நோக்கிப் போனான். படித் துறையில் போய் பல் தேய்த்துக் குளித்துக் கரையேறி வீட்டுக்குச் சுடலையாண்டி வரும் போது மணி எட்டு. கண்ணாடிச் சில்லில் முகம் பார்த்துக் கோண வகுப்பு எடுத்துத் தலை சீவினான்.

அடுக்களையில் எட்டிப் பார்த்தான். தின்பதற்கு ஏதாவது இருக்குமா என்பது சந்தேகம். இரண்டு நாளாகத் தாத்தாவுக்கு வேலையே இல்லை. அன்றாடப் பாடு தள்ளாடியது. இன்று காலையில் எழுந்து எங்கோ போயிருக்கிறார். இன்றாவது ஏதாவது வேலை கிடைக்குமோ இல்லையோ தெரியாது.

ஆத்தா அடுப்பில் எதையோ கிளறிக் கொண்டிருந்தாள்.

"யாத்தா, எட்டு மணி...

"இன்னா இரிலே மக்கா... ஆச்சு..."

கொடியிலிருந்து வேட்டியை உருவி, உதறிக் கட்டினான். சட்டையைப் போட்டான். கீழ் ஓரத்தை இழுத்து இழுத்து விட்டுக் கசங்கல் நீக்க முயன்றான். திண்ணையின் மூலையில், குத்து விளக்குப் பக்கம், கூரையின் கழிக் கோலில் இருந்து தொங்கிய திருநீற்றுச் சிரட்டையில் கைவிட்டு, விரலில் எடுத்து நவிட்டி, கீற்றாகவும் இல்லாமல் பொட்டாகவும் இல்லாமல் நெற்றியில் இழுத்தான்.

படிப்புரையில், அலுமினியத் தட்டில் சுடுகஞ்சி பகிர்ந்து வைக்கப் பட்டிருந்தது. குருணைக் கஞ்சி. கஞ்சியின் நீளம் தருணையின் அளவைச் சொல்லியது. அலசிக் குடித்து விட்டுக் கை கழுவினான். சூடான கஞ்சியானதால் வியர்வை பொடித்தது. இன்று மத்தியானம் பைப்புத் தண்ணீர் தான். இது ஒன்றும் புதிதில்லை.

"யாத்தா, போயிட்டு வாரேன்..."

"சரி மக்கா... ஏதுவா போய்யா... மத்தியானத்துக்கு ஒண்ணுமில்லே... சாயங்காலம் சீக்கிரம் வந்திரு..."

கல்லூரிக்குப் போகும்போதே யோசனை. காலையில் ஆழாக்கோ உழக்கோ குருணை கொண்டு கஞ்சி வைத்திருப்பாள் ஆத்தா. தான் குடித்தது போக என்ன அதில் மீதி இருக்கும்? ஒரு வேளை இன்றும் தாத்தாவுக்கு வேலையே கிடைக்காவிட்டால்...

திருப்பதிசாரம் ரோட்டில் அடித்து வைத்திருந்த வண்டல் மண்ணைப் பத்துக்கு நடுவில் இருந்த தென்னந்தோப்புக்கு சுமந்து கொண்டிருந்தார்கள். குடையைப் பிடித்தபடி ஒருவர் கண் காணித்தார்.

மண் சுமப்பதற்கான ஆட்களின் குழு. வெட்டி வைத்துத் தூக்கிவிட இரண்டு ஆண்கள். சுமக்க மூன்று பெண்கள். ஒரு பையன். மேற்பார்வை செய்து கொண்டிருந்த அந்த திருப்பதி சாரத்துக்காரரை நெருங்கும்போது மனதுள் ஒரு எண்ணம்.

புன்னை மர நிழலுக்கு ஒதுங்கிய அவரிடம் போய்க் கேட்டான்.

“நானும் மண்ணு செமக்க வரட்டா?”

அவனை மேலும் கீழும் பார்த்தார்.

“படிக்க பிள்ள மண்ணு செமந்தா என்னத்துக்காகும்.”

சுடலையாண்டி நிலைமையைச் சொன்னான்.

“சரி வா... பின்னே என்னைக் குத்தம் சொல்லப்பிடாது யாரும்... அது மட்டும் பாத்துக்கோ...”

பாடப் புத்தகங்கள், சட்டை இவற்றை மரத்தடியில் வைத்து ஒரு கல்லைத் தூக்கிப் பாரமாக வைத்தான். வேட்டியை மடித்துக் கட்டி இறுக்கினான். வைக்கோற்பிரி சும்மாட்டைத் தலையில் வைத்துக் கொண்டு மண்வெட்டி தூக்கி விடுபவனிடம் போனான்.

முதல் இரண்டு நடைகள் மண் நிறைந்த கடவம் தலையில் கல்லாய் அழுத்தியது. கழுத்து கிடுகிடுவென்று ஆடியது. சுமையைக் கொண்டு வரப்பில் நடக்கையில் கால்கள் வழுக்கின. உச்சியில் விண்ணென்று ஒரு தெறிப்பு. கழுத்து நரம்புகள் விம்மிப் புடைத்தன. வியர்வை வழிந்தது.

தோப்பினுள் நுழைந்து கடவத்தை ஏந்திப் பிடித்துக் கொண்டு மண்ணைத் தட்டுகையில் காற்றுப் போல் தலை சிலுப்பியது ஒரு இதம். ஒரு இன்பம். ஆற்றங்கரைக்குத் திரும்பி நடந்து –

மூன்று நடைகள் போட்டு விட்டு வந்து நான்காவது நடைக்கு ரோட்டில் ஏறுகையில் வில் வண்டிச் சத்தம்.

“கண கண கண கண…”

ஆவுடையம்மாள் தான் வந்தாள். சுடலையாண்டியினுள் ஒரு கூச்சம் கிளர்ந்தது. முகத்தைத் திருப்பிக் கொண்டு மண்வெட்டுபவனைப்

பார்த்தான். மண் வெட்டி முங்க வெட்டி, கடவத்தில் போட்டு - ஒன்று இரண்டு. மூன்று. கடவம் நிறைந்தது. சும்மாட்டைச் சீராக்கிக் கொண்டு, கடவத்தின் பக்க வார்களைப் பிடித்துத் தூக்கி, நெஞ்சுக்குமேல் வெட்டி உயர்த்தி - ஆற்றங்கரை ஓரமாகத் தடத்தில் இறங்கும் போது வண்டி சுடலையாண்டியைக் கடந்து போயிற்று. சுடலையாண்டியைக் காட்டி வண்டியிலிருந்த பாவநாசம் ஏதோ சொன்னான். ஆவுடையம்மாள் திரும்பிப் பார்த்தாள், வண்டி ஓடி மறைந்தது. சுடலையாண்டி வரப்பில் இறங்கினான்.

ஒரு வேளை வகுப்பில் போய் அவள் அந்தரங்கத் தோழிகளுக்குச் சொல்லுவாள். சிவகாமிக்குச் சொல்லுவாள். அவளுடன்தான் எப்போதும் இவள் சீண்டிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் திரிவது.இரண்டு பேரும் சேர்ந்தே எங்கும் போவார்கள். தண்ணீர் குடிக்க, நூலகத்துக்கு, சோதனைச் சாலைக்கு, கலையரங்குக்கு...

கொஞ்சிக் கொண்டு, ஒருவர் தோளில் மற்றவர் இடித்துக் கொண்டு, கைவிரலால் வாயைப் பொத்திச் சிரித்துக் கொண்டு... இயல்பிலேயே ஆவுடையம்மாளுக்குக் களையான முகம். சிவப்பில்லை. ஆனால் புது நிறம். ஒரு மினுக்கம். முகத்தில் கலங்கல் இல்லாத தெளிவு. கீழ் நாடியில் வகிடு எடுத்தாற்போலொரு பிளவு. பூரித்தெழுந்த உடல். இடுப்பில் சதைப்பிதுக்கம். உன்னித் தெழுந்த முலைகள்... ஏக்கம் பொதிந்த ஒரு மூச்சுப் பிரிந்தது. வளுக்கென்ன? கல்லூரிக்குப் போக்கும் வரத்தும் வில் வண்டியில். சாப்பாட்டுக் கவலை பரம்பரைக்கே கிடையாது. செழுமை ஆதிக்கம் கொண்ட இளமை. கனவுகள் காண உரிமை கொண்ட கண்கள்...

நாம் படிப்பதும் கல்லூரியில் தான். வயிற்றில் தாளம் அடிக்கடி கேட்கிறது. புத்தகக் கட்டை ஒதுக்கி வைத்துவிட்டு இரவு சோற்றுக்கு மண் சுமக்க வேண்டியதிருக்கிறது. அதைத் தவிர ஜீவித்திருக்க இங்கே வேறென்ன வழி? மனம் கணக்குப் பார்த்த தார தம்யத்தில் அலைகள் துள்ளி விழுந்தன.

அன்றும் மறுநாளும் மண் சுமை. மறுநாள் சுமந்து முடித்துப் பணத்தைப் பெற்றுக் கொண்டு, வேட்டியைத் துவைத்துக் குளித்து, ஆற்றிக் காயப்போட்டு உடுத்தி வீட்டுக்குப் போனபோது தாத்தா இருந்தார். சுடலையாண்டியைப் பார்த்த பார்வையில் ஒரு வேகம் இருந்தது.

“வாரும்... மண்ணு செமை முடிஞ்சா...”

சுடலையாண்டி இதை எதிர்பார்க்கவில்லை.

“வாயிலே என்ன நனஞ்ச மண்ணா கெடக்கு? ரத்தத்தைச் சிந்தி நான் காலேஜுக்கு அனுப்புகேன்...நீ என்னண்ணா மண்ணு செமக்கத்தான் போவேங்க...”

“இல்லே”

“இல்லே என்ன இல்லே. அப்பிடி என்ன மொடை ஒனக்கு...? பிள்ளைக்கு மருந்து வாங்கவா?”

“உனக்கும் ரெண்டு நாளா வேலை இல்லே”

“வேலை இல்லன்னா... அதெல்லாம் ஒனக்கு என்ன ஆலோசனை? நான் செத்தா போயிட்டேன்? இல்லே செத்துப் போயிட்டனாண்ணு கேக்கேன்”

“சரி சரி... அந்தால விடும்... சின்னப் பயலைப் போட்டு வாயில வந்ததைப் பேசாதையும்...”

“நீ சும்ம கெட மூளி... படிப்புக்குள்ள மதிப்பு ஒனக்கு மயிரா தெரியும்? அப்பன் பாட்டன் காலத்திலேயும் பள்ளிக்கொடத்திலே மளைக்கின்னாலும் ஒதுங்கினால்லா தெரியும்? கருமருது ஒலக்கையைக் கீறி அடுப்பெரிச்ச கூட்டம்லா...”

“ஆமாமா.நீங்க பெரிய சர்சீப்பி வம்சம். கஞ்சிக்கு லாட்டரி கையிலே பேட்டரி...”

இதற்கொரு சமாதானம் சொல்வது சாத்திய மில்லை யாததால், இது தானாகத் தீரட்டும் என்று சற்றுநேரம் வெளியே போய்வர எண்ணி இறங்கி நடந்தான் சுடலையாண்டி.

***

# ஆறு

சில சமயங்களில் பாடத்தில் ஒன்ற முடியாமல் சுடலையாண்டி அலைக்கழிந்தான். இது அவனிடம் ஒரு கிறுக்காகத் தோன்ற ஆரம்பித் திருந்தது. பாடம் நடந்து கொண்டிருக்கையில் அவன் எங்கோ போய் விடுவான். அப்பா பற்றிய ஞாபகக் குவியல்களில் தேடல்கள். அம்மாவின் முகத்தைத் துலக்கி எடுத்து மனதில் பதித்து விட முடியுமா என்ற தீவிரம் இப்படி இந்த அகப் பார்வைகள் சமயங்களில் அவனைக் குழப்பிப் போட்டு விடுகின்றன.

ஆரோக்கியத்துடன் இருந்த அம்மா ஏன் செத்துப் போனாள்? அவளை எந்த நோய் தாக்கியிருக்கக் கூடும்? இந்தக் கேள்விகள், விபரம் புரியாத சின்ன வயதிலிருந்தே அவனைச் சீர்குலைத்து வந்திருக்கின்றன. அதுவும், பதினாலாவது வயதில், இரண்டாவது முறையாக டைபாய்ட் வந்து, குடல் பழுத்து அப்பாவும் இறந்த பிறகு -

உலகத்தோடு அவன் சந்திப்பு நேரடியான பிறகு, சொற்களும், தொனிகளும் துலங்க ஆரம்பித்த பின்னர், இப்படியான சிந்தனையின் மூட்டங்கள் பெரிதாகக் குவியலாயின. பத்துப் பாதையில் பொதேரியை நோக்கி நடக்கும் போது குறுக்கிட்ட அந்தச் சிறியகுளம். கரையில் கொஞ்ச நேரம் உட்காரலாமா என்று தோன்றியது. குளம் நீலமாகப் பூத்திருந்தது. கண்கண்ணான நீலம். எண்ணெய் தடவிய பச்சை இலைகள் போக்கு வெயிலில் பளபளத்தன. ஊடே ஊடே ஆம்பல் கொடிகள். ஆம்பலின் வட்டமான இலைகள். ஓரங்கள் பல் பல்லாக, மரமறுக்கும் வாள் போல. கூட்டம் கூட்டமாய் நுள்ளிக்காய் கொடிகள். நிமிர்ந்திருந்த இலைகளில் பச்சை, காற்றில் புரண்டிருந்த இலைகளில் தவிடு. குளத்தின் ஓரத்தில் ஓங்கி உயர்ந்திருந்த கொங்காணிக் கோரைப் புற்கள். ஊடே உகளும் கெண்டைகள்.

கூட்டங் கூட்டமாக விறால்கள் கரையோரம் ஆய்ந்தன. நாலைந்து பெரியவை. சுற்றிச் சூழ இளஞ்சிவப்புக் குஞ்சுகள். அவை ஆயும் ஓரங்களில் கண்களை ஒட்டிக் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தான். நீலத் திட்டுகளாகத் தண்ணீர் தெரிந்தது. கரையில் கிடந்த சிறுசிறு வெள்ளிக் கற்களைப் பொறுக்கித் தண்ணீரில் எறிந்தான், ‘டுமுக் கென்று கற்கள் மூழ்கிய இடத்தில் மீன்கள் துள்ளின. வெயில் இளஞ்சூட்டில் பிடரியில் ஊர்ந்தது. சூரியன் சாயும் நேரம். இனியும் இருந்தால் இருட்டிப் போகும் என்ற நினைப்பில் எழுந்தான்.

சப்பாறு வழியாகக் குளத்தில் இறங்கினான். தண்ணீர் பதநீர் போல் - சுண்ணாம்பு கலக்காத தனிப் பதநீர் போல் தெளிந்து நின்றது. பனம் பூக்கள் மிதப்பது போல் கடுக்கா மரப் பூக்கள் மிதந்தன. கரண்டையளவு தண்ணீரில் இறங்கினான். தண்ணீர் சிலீரிட்டது. கால் வழியாகக் குளிர்ச்சி உடல் முச்சூடும் பரவியது. இரண்டு கை அள்ளி முகத்தைக் கழுவினான். கோரி, வாய் கொப் பளித்தான். குளத்துத் தண்ணீருக்கே உரிய ஒரு பச்சை வாடையை நாசி நுகர்ந்தது. வேட்டி நுனியைத் தூக்கி முகத்தைத் துடைத்துக் கொண்டு வீட்டுக்கு நடந்தான்.

ஊரை நெருங்குகையில் இரவு நன்றாக விழுந்து விட்டிருந்தது. பகல் பொழுது குறுகிய கார்த்திகை மாதம். நூல் நிலைய வானொலி உயிருடன் இருந்தது. மணி ஏழு ஆகிவிடவில்லை. ஊரை நெருங்கும் போதே சப்பாற்றின் பக்கம் ஏழெட்டுப் பேர் கூடி நின்றார்கள். இரண்டு மூன்று பேர் கலுங்கில் உட்கார்ந்து இருந்தனர். அது அந்த ஊரின் மூன்றாவது படித்துறை. தெற்கு எல்லை படித்துறையின் தெற்குப் பக்கம் படர்ந்திருந்த ஆலமரம். இடது பக்கம், புறம்போக்கில் டீக்கடை.

எப்போதும் இந்த ஈட்டானில் நாலைந்து பேர் இருப்பார்கள். காலையிலும் மாலையிலும் கூட்டம் கொஞ்சம் அதிமாகஇருக்கும். பல் தேய்க்க வந்தவர்கள். தேநீர் அல்லது சுக்குக்காபி குடிக்க வந்தவர்கள். மண்வெட்டியோடு வயலுக்குப் போகிறவர்கள். வயலைச் சுற்றிப் பார்த்து வெள்ளம் அடைத்து விட்டு வருபவர்கள் என்று சிறு கும்பல்.

தன் வீதத்துக்கு ஏழு மரக்கால் விதைப்பாடு வரும் என்று தெரிந்தால் அங்கு எவனும் பண்ணையார் அல்லது தானமானக் காரன். விடலையின் கதை கேட்கவே வேண்டாம். தலையில் சுற்றிக் கட்டிய வட்டக் கட்டு. அண்டர்வேர் நுனி தெரியும்படி மடித்துத் தூக்கிக் கட்டிய வேட்டி. காசிருந்தால் சார்மினார் சிகரெட் அல்லாவிட்டால் சொக்கலால் பீடி.

'சொக்களிப் பேச்சு அந்த மண்ணில் செழிப்பாக வளர்ந்தது. கறிக்கு முருங்கைக் கீரை பறித்துக் கொண்டு எவராவது போனால், முதுக்குப் பின் இங்கே பேச்சுத் துவங்கும்.

“ஏ சிதம்பரம் கச்சிக்காரன் முருங்கக் கொள நொறிச் சுக்கிட்டு போறான் பாத்தியா?”

“சவத்துக்குப் பொறந்த பய ரெண்டு உப்புப் போட்டு அவிச்சுத் திம்பான், அடுக்காளையிலேயிருந்து சாப்பிடுக பயதாலா…”

“ஆமா. நீ சொல்லிக்கிட்டே கெட. அவன் பூவுக்கு அஞ்சு மரக்கா வெதப்பாடு வாங்குகான்...

“சவம் என்ன எளவுக்குங்வேன்? அறுதலிகிட்டேயும் ஆயிரம் ரூவா இருக்குவே... போட்டுப் பேசுகேரே... இவன் கொளையும் கிளையும் அவிச்சுத் திங்கான். இவன் மகன் அசோகா பவன்லே அல்வாவாத்திங்கான். சாகச்சிலே கொண்டா போப்போறான்?”

“ஏ பிலிப்பு! தூரமாலே போறே?”

“இல்ல பண்ணையாரே... மடத்தாம் பத்து வரை போனும்.”

“சரி! நம்ம கீளங்காணியிலே வெள்ளம் நிக்காண்ணு பாத்துக்கிட்டு வந்திரு. இல்லன்னா லேசா வெலவிப் போட்டிரு... நாலு நாளாப் போனும் போணும்னு பாக்கேன். நேரமே கெடக்கல்லே... கொஞ்சம் வெலவிப் போட்டிரு, என்னலே.”

இந்த ரீதியில் வரும் போகும் மனிதர்களை விமர்சித்துக் கொண்டு, வேலை ஏவிக்கொண்டு, மாநாடு நீளும்.

குழல் விளக்கின் வெளிச்சத்தில், தூரத்தில் இருந்து பார்க்கையில் ஒருவனை நடுவில் விட்டுச் சுற்றி நின்று வாட்டி எடுப்பது தெரிந்தது. கிட்டத்தில் போன போது ஆட்களும் பேச்சும் தெளிந்தன.

“ஈசாக்கு... இல்லேன்னா பிச்சைக்கு மக மாடத்தியைக் கெட்டிக்கியாண்டே... குட்டிக்கு முலையும் கிலையும் தேங்கா தண்டியிலே இருக்கு. ஒனக்கு நல்ல கருவாட்டுக் கறிவச்சுத் தருவா....”

“சும்மாரும் பண்ணையாரே...

தொடர்ந்து சிரிப்பு கொப்பளித்து. இன்றைக்கு இந்த அப்பாவி, நாற்பத்தெட்டு வயதான ஈசாக்கு அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். இவர்கள் வாயில் சிக்காதவர்களே இருக்க மாட்டார்களோ? சுடலையாண்டி தாண்டிப் போனான்.

ஆறாவது படிக்கும்போது இப்படியானதொரு கூட்டம் தன்னையும் பிடித்துக் கொண்டது ஞாபகத்தில் வந்தது.

அரையாண்டுத் தேர்வு முடிந்து பாடசாலை திறந்து விட்டது.

மதிப்பெண்கள் கொண்ட விடைத்தாள்களை வாங்கிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிய ஒரு மாலை.

சூரங்குளத்தின் கிழக்கே இருந்த தாழக்குடி பாலத்தின் கல்வரிகள் மீது ஒரு கும்பல். அந்த வழி போகின்றவர்களைக் கூப்பிட்டு என்ன ஏது என்று கேட்டு, மார்க் வாங்கிப் பார்த்து வழியனுப்பும் தோரணை, ஒதுங்கிப் போகும் உயர்நிலைப் பள்ளி மாணவிகள் இவர்களின் கேலிப் பேச்சுக்குச் சிரிக்கமாட்டார்களா என்ற எச்சித்தனமான ஏக்கம்.

மற்ற மாணவர்களோடு சுடலையாண்டியும் வந்தான். பாலத்தின் மீதிருந்தவர்களை அவன் அறிந்திருந்தான். அரும்பு மீசையின் நுனிகளை முறுக்கிக் கொண்டு, பீடி பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அவர்களைக் கண்டாலேயே இவன் மனதுள் காரணமற்ற பயம்.

எல்லாப் பையன்களோடு அவனையும் வழி மறித்து, நிற்க வைத்துக் கொண்டார்கள். பலவேசம் பிள்ளையின் தங்கை மகன் சுந்தரம் சுடலையாண்டியின் தேர்வுத் தாள்களைப் பார்த்தான். இவனுக்குப் பயமாக இருந்தது. சுந்தரம் ஊரில் ஒரு சட்டம்பி. வீட்டுக்கு செல்லப்பிள்ளை. அதன் காரணமாக எவரையும் எடுத்தெறிந்து பேசும் வழக்கம். சுடலையாண்டியின் மார்க்கைப் பார்த்துவிட்டு, பக்கத்தில் நின்ற தெற்குத் தெரு திரவியத்திடம் கேட்டான் சுந்தரம்.

“தெரவியம் ஒனக்கு கணக்கிலே எத்தனைடே?”

“நாப்பத்தெட்டு.”

“அதெப்படி சொள்ளையாண்டிப் பயலுக்கு தொண்ணத்தாறு?”

“அவன் நல்லாப் படிக்கான்.”

“நீ ஏன் படிக்கல்லே... ?”

திரவியம் சிரித்தான். சுந்தரத்தை அடுத்திருந்த தங்கப்பன் சொன்னான் –

“சோத்தைக் கொறச்சுத் திங்கணும்... நல்ல சாளைப் புளிமுளம் வச்சு மூக்கு முட்ட சண்ணுனா போராது. மொகம் பாத்துக் கஞ்சி குடிக்கணும். பத்துந் தண்ணீயுமா... தெரிஞ்சா?”

தாள்களை வாங்கிக் கொண்டு நகர்ந்த பிறகு, தங்கப்பனிடம் சுந்தரம்

சொல்வது கேட்டது.

“அதில்லடா தங்கப்பா... உனக்கு விசயந் தெரியாதா? பயகிராசுல்லா. படிக்கதுக்குக் கேக்கவா வேணும்.”

பல நாட்கள் அதன் பொருள் புரியவில்லை. சுடலையாண்டிக்குப் புரிந்தபோது –

நெஞ்சு சுட்டது. இது சுடச்சுட, வேறு மாணவர்களிடமிருந்து விலகத் தொடங்கினான்.

அண்டை அசல் பையன்களோடு அவன் சண்டை போட்டால், சண்டை முடிந்ததும் பையன்களின் பெற்றோர் அவனை மட்டும் குறிப்பாக்கித் திட்டிய போது...

எல்லாம் சின்னச் சின்னக் காயங்கள்.

ஆனால் எல்லாவற்றை விடவும் அகலமான, ஆழமான, அழுத்தமான காயம் எப்போது பட்டது? பலவேசம் பிள்ளையிடம் அடி வாங்கிய அன்று.

***

# ஏலு

சுடலையாண்டியின் அப்பா செத்து நாலைந்து மாதங்கள் தான் ஆகியிருந்தன. அவன் ஒன்பதாவதில் படித்துக் கொண்டிருந்தான். மொட்டை போட்ட தடம் தலையில் மாறி, முடி மண்டியிருந்தது. அன்று சனிக்கிழமை. மாலை நான்கு மணி இருக்கும். எரிக்க விறகில்லை என்று ஆத்தா சொல்லிக் கொண்டிருந்தாள். கடவத்தையும் ஒரு முனை மழுங்கிய வெட்டுக்கத்தியையும் எடுத்துக் கொண்டு சுடலையாண்டி புறப்பட்டான். பழையாற்றுப் பாலத்தை அடைந்து, புன்னை மரத் துறையும் தாண்டி வடக்கு நோக்கி நடந்தான்.

பழையாற்றின் மேற்குக் கரையில் ஒரு செங்கல் பாலம் உண்டு. பழையாற்றில் இருந்து புத்தேரி நெடுங்குளம், பெரிய குளத்துக்குத் தண்ணீர் கொண்டு போகும் குண்டாற்றின் உற்பத்தி இடம். அந்தப் பாலத்திலிருந்து குண்டாற்றுக் கரையோரம் நெடுகிலும் தென்னந் தோப்புகள்.

மாலைப் பொழுதாகையால் ஆள் நடமாட்டமில்லை. ஓடிந்து கிடக்கும் புன்னைச் சுள்ளி களைப் பொறுக்கிக் கொண்டு, கைக்கு எட்டு பவற்றை ஓடித்துக்கொண்டு, ஆற்றங் கரையில் கிடந்த குண்டி மட்டையைக் கடவத்தில் போட்டுக் கொண்டு சுடலையாண்டி நடந்தான். குண்டாற்றைப் பாதி தூரம் கடந்தால் பழையாற்றையும் குண்டாற்றையும் சேர்க்கும் சிறிய கால்வாய் உண்டு. அதன் வழியாக வீட்டுக்குத் திரும்பி விடலாம் என்ற எண்ணத்தில் நடந்தான். கடவம் முக்கால் பாகம் நிறைந்து விட்டது. குண்டாற்றின் மறுகரையில் வெட்ட வெளியாக ஒரு தோப்பு. வெறும் புன்னை மரங்கள், புங்கு, வாகை மரங்கள். நாலைந்து நெடு நீளமான தென்னைமரங்கள். மானிப்பாரின்றிக் கிடந்தது அந்தத் தோப்பு. அதன் இடமும் வலமும் இருந்த தோப்புகள் எல்லாம் வேலி அடைக்கப்பட்டு, பாதுகாப்புடன் இருந்த போது, இது மட்டும் ஒரு அலட்சியத்துடன் விடப்பட்டிருந்தது. காய்ந்த பாளையோ, கோஞ்சாட்டையோ, ஓலை மடல்களோ கிடக்கலாம் என்ற எண்ணத்தில் சுடலையாண்டி அங்கே போனான். ஒன்றிரண்டு கள்ளிகள் கிடந்தன.

பக்கத்துத் தோப்பு பலவேசம் பிள்ளைக்குச் சொந்தம். தோப்பு வேலி மீது ஒரு தென்னம் பாளை. அதை இழுத்து எடுத்தான். வேலி அடைப்பினுள் எட்டிப் பார்த்தான். வேலியிருந்து இரண்டு பாகம் உள்ளே ஒரு தேங்காய்

நெற்று கிடந்தது.

வெட்டுக்கு ஐந்நூறு தேங்காய் பலனுள்ள தோப்பு. ஆகையால் கவனிப்பும் கண்காணிப்பும் அதிகம். வெட்டுக்கு நாள் ஆகிவிட்டது போலிருக்கிறது. வரிப் பழுத்த தேங்காய் அடர்ந்து விழுந்திருக்கிறது. பழுப்பில் அந்த நிறம். உருண்டு திரண்ட பொலிவு. பழுப்பு மஞ்சளில் செம்புள்ளிகள். பிடிப்பு கழன்ற இடத்தில் ஒரு வெண்மை.

சுடலையாண்டியின் மனம் கலைந்தது. கைக்கெட்டும் தூரத்தில் கிடக்கும் தேங்காய். இது மட்டும் கிடைத்தால்? வேலியில் எந்தப் பகுதி பிரிந்திருக்கிறது என்று பார்த்தான். அடர்த்தியான திருகு கள்ளி வேலி. மார்பு உயரத்தில் அதன் மேல் சீமை உடை மரத்தின் முட்கொடிகளை வெட்டி நெடுகிலும் போட்டிருந்தது. இதைத் தாண்டிப் போய் எப்படி எடுப்பது? அயர்ச்சியாக இருந்தது. ஆனால் எடுத்து விட வேண்டும் என்ற ஆர்வமும் கட்டில் இல்லை. இரண்டு பக்கமும் நீளமாகப் பார்வையை ஒட்டினான். மேற்குப் கேம் ஒரு கள்ளி பட்டு, யாரோ பிடுங்கிய தொண்டு இருந்தது. தொண்டு தெரியாதபடி மேலே இருந்த சீமை உடை முட்கள் அடைக்க முயன்றன. தலையிலிருந்த கடவத்தைக் கீழே இறக்கி வைத்துவிட்டு, முட்களை உருவி நீக்கினான். ஒருச் சாய்ந்து போனால் தோப்பினுள் போய்விடலாம் என்று தோன்றியது. படலைக் குறுக்கிக் கொண்டு உள்ளே புகுந்தான்.

நெஞ்சு படபடவென்று அடித்தது. உடலெல்லாம் ஒரு சூடும் பரபரப்பும். விரைந்து சென்று தேங்காயை எடுத்தான். எடுத்த வேகத்தில் திரும்பி நடந்தான். தொடையில் ஒரு முள் கீறியது. வேலியுள் நெளிந்து வெட்டவெளித் தோப்புக்குள் வந்தான்.

குண்டாற்றின் கிழக்குக் கரையிலிருந்து பாவநாசம் இறங்கிக் கொண்டிருந்தான். சுடலையாண்டிக்கு மெய் விதிர்த்தது. எல்லையிலா வேகத்துடன் மனம் அடித்தது.

ஒன்றும் செய்ய மனமின்றி, காய்ந்து போன உதடுகளை ஈரப்படுத்தக்கூட நினைவின்றி, சுடலையாண்டி நின்றான். பாவ நாசம் பக்கத்தில் வந்தான். இவன் கை தானாகத் தேங்காயை நீட்டியது. வாங்கிக் கீழே வைத்துவிட்டுச் சீமை உடை முள்ளால் வேலியை நிரவினான் பாவநாசம்.

“வீட்டிலே சொல்லாதே டேய்...”

மிகச் சிரமப்பட்டுச் சொன்னான் சுடலையாண்டி. பாவநாசம் இவனை ஏறிட்டுப் பார்த்து விட்டுத் தோப்பின் முன் வாசல் பக்கம் போனான்.

கடவத்தைத் தூக்கித் தலை மீது வைத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான் சுடலையாண்டி.

பாவநாசம் வீட்டில் போய்ச் சொல்லி விடுவானோ? என்ன ஆகும்?

பலவேசம் பிள்ளையின் கோபத்தைப் பற்றி இதற்கு முன் சுடலையாண்டி கேள்விப் பட்டிருக்கிறான். வீட்டுக்குப் போகும் போதே பலதரச் சிந்தனைகள். நெஞ்சுப் படபடப்பு இன்னும் நீங்கவில்லை. வெளியே தெரிந்தால். ஒரு வகை பீதி படர்ந்தது.

புறவாசல் வழியாக வீட்டில் நுழைந்தான். மண்தரை மீது கடவத்தைக் கவிழ்த்தான் உடனே எரிக்க உதவும் காய்ந்த சுள்ளிகளை ஒரு புறமும், காய வேண்டிய ஊரைகளை மறுபுறமும் பிரித்தான். மனதில் நிச்சயமில்லை. இரண்டையும் கை மாற்றி மாற்றிப் போட்டது. ஒரு நிலைப் படாத உள்ளம் அலைந்தது. படிப்புரையில் உட்கார்ந்து எதையாவது படிக்கலாம் என்று புத்தகத்தை விரித்தான். மனம் ஒன்றவில்லை. மறுபடி மறுபடி அந்தக் காட்சி. கையில் தேங்காயுடன் பலவேசம் பிள்ளையின் மகன் பாவநாசம் முன் நிற்பது போல் –

காய்ச்சல் அடிப்பது போல் உணர்ந்தான். உதடுகள் காய்ந்து விட்டிருந்தன. அடிக்கடி நாக்கினால் நக்கிக் கொண்டான். பாவ நாசம் வீட்டில் போய்ச் சொல்லி யாராவது தேடி வருவார்களோ? தெரிந்தால் ஆத்தா என்ன சொல்வாள்? தாத்தா என்ன நினைப்பார்?

வாசற்படியில் நிழலாடியது.

எழுந்து போய் யாரென்று பார்த்தான் சுடலையாண்டி. பாவநாசம். துணைக்கு எதிர்வீட்டுப் பையன் பரமசிவம்.

“உன்னை அப்பா கூட்டியாரச் சொன்னா…”

சுடலையாண்டி அவர்கள் பின்னால் நடந்தான். பாவநாசமும் பரமசிவமும் இவன் பின்னால் வருகிறானா என்று பார்த்துக் கொண்டே நடத்தார்கள். சுடலையாண்டி இரு பக்கங்களிலும் பார்த்துக் கொண்டு, தன்னை யாரும் கவனிக்கிறார்களா என்று கவனித்துக் கொண்டு, ஒரு

திருட்டு விழி விழித்தவாறு -

“ஒற்ற ஓட்டத்தில் ஓடி விடலாமா” என்று சுடலையாண்டிக்குத் தோன்றியது. ஆனால் எதுவரை ஓடுவது? எங்கு ஓடினாலும் வீட்டுக்குத்தானே வர வேண்டும்? வீடு இவர்களுக்குத் தெரியாதா என்ன? வெளிப்படையாகவே பிடித்து இழுத்துக் கொண்டு போக எவ்வளவு நேரம் பிடிக்கும்?

தனக்கு ஒன்றுமே தெரியாது என்று சாதித்தால் –

“இவன் செய்திருப்பான். செய்யக்கூடிய ஆளுதான்.”

“முளிக்க முளியைப் பார்த்தா தெரியலையா?”

“இதாலா அடக்கத்திலே வெறகு பொறக்கப் போறது ?” ஏளனங்கள் ஒலிக்கும்.

இப்போதானால் எதற்கோ போகிறான் என்றுதான் நினைபார்கள்.

“பாட்டா, தெரியாமச் செய்திட்டேன்... இனிமே செய்யலே!” என்று சொல்லி விட்டால் –

அம்மன் கோவிலுக்கு நான்கு வீடுகள் தாண்டிப் பலவேசம் பிள்ளையின் வீடு. வடக்குப் பார்த்த வீடு. பெரிய கொட்டாரம் போல். காரணம் பற்றியே அதற்குப் பெரிய வீடு என்று பெயர். தெரு வாசல் படியின் இரண்டு புறமும் பெரிய படிப்புரைகள். தெருவிலிருந்து ஐந்தடி உயரம் வீட்டுக்கு ஏறித்தான் போகவேண்டும்.

சுடலையாண்டி பலவேசம் பிள்ளையின் வீட்டில் வடக்குப் படிப்புரையில் நின்றிருந்தான். அவன் மனம் கலவரப்பட்டுக் கிடந்தது.

மிகக் குறைவான தடவைகள் மட்டுமே அவன் இந்த வீட்டுக்கு வந்திருக்கிறான் -

பலவேசம் பிள்ளையின் அம்மா செத்த பின்பு நடந்த அடியந்திரத்தில் சாப்பிட.

அவர் மூத்த மகன் மறுவீட்டுக்கு.

படிப்புரையில் நின்று பார்க்கையில் - கடல் போல் கிடந்த வீட்டில் மற்ற படிப்புரைகள். நான்கு புறமும் படிப்புரைகளும் பெரிய பெரிய பனந் தூண்களும். நடுவில் முற்றம். நான்கு படிப்புரைகளிலும் பக்கத்துக்கு இருபது பேர் உட்கார்ந்து தாராளமாகச் சாப்பிடலாம். வடக்குப் படிப்புரையில் அமர்ந்துதான் பலவேசம் பிள்ளை அரசாட்சி செய்வார். எப்போதும் இளைக்காத வெற்றிலைச் செல்லம். கட்டுக் கட்டாக வெற்றிலைகள், கோறைப் பாக்கு, யாழ்ப்பாணப் புகையிலை, இடித்துப் போடுவோருக்குத் தட்டுக்கல், குழவி, தினமலர் நாளிதழ். தரை ஓடு பாவியதளம், படிப்புரை விளிம்பில் வரிக்கல் பாளங்கள், கிழக்குப் படிப்புரையில் வித்துப் போட்டு வைக்கும் பென்னம் பெரிய பத்தயங்கள். ஒவ்வொன்றும் பதினைந்து கோட்டை வித்து பிடிக்கும். சம்பா வித்துக்கு ஒரு பத்தயம். வாசறுமிண்டான் வித்துக்கு ஒரு பத்தயம். இள நெல் வித்துக்கான உயரமான குலுக்கைகள்.

மேற்குப் படிப்புரை இரண்டாகப் பிளந்திருந்தது. மாட்டுத் தொழுவத்திலிருந்து கறவை மாறாப் பசுவின் கன்றுகளை ஒட்டிக் கொண்டு வந்து கட்டுவதற்கும், வண்டி மாடுகளுக்கு கருப்பட்டிக் கவளமோ, பருத்திக் கொட்டையோ கொடுப்பதற்கான பாதை நடுவில் இருந்தது. மேற்குப் படிப்புரையின் வடக்குப் பக்கம். மண்வெட்டிகள். மூலையில் தொங்கிய வெட்டுக் கத்திகள். தெற்குப் பாதியில் ஒரு ஆட்டு உரல், தெற்குப் படிப்புரையில் பாத்திர பண்டங்கள். வெண்கல உருளி, செம்பு, அண்டா. எல்லாப் படிப்புரைக்கும் நடுவில் முற்றம். பெரிய மணமேடை போட்டுக் கல்யாணம் நடத்தலாம். இருபது பெண்கள் சுற்றி நின்று “அம்மாடி, தாயரை... வைகுண்டம், கைலாசம்... சேந்தேளா... சேர்ந்தாச்சு” என்று ‘அம்மாடி அடிக்கலாம். ஐம்பது கோட்டை நெல்லைத் தட்டிப் போட்டு அளக்கலாம்.

சுடலையாண்டியைக் கூட்டிக் கொண்டு வந்து படிப்புரையில் விட்டு விட்டுப் பாவநாசம் வீட்டுக்குள் போனான்.

“யம்மா... யம்மோவ்...”

‘ஏம் லே?”

"அப்பா எங்க ?”

“ஏன்? தொளுத்துக்குப் போயிருக்கா.”

“அன்னா சொள்ளையாண்டியைக் கூட்டீட்டு வந்திருக்கேன்.”

வீட்டுத் திண்ணையிலிருந்து சங்கரவடிவும் ஆவுடையம் மாளுக்கு எட்டிப் பார்த்தார்கள்.

சுடலையாண்டியின் உடல் கூசியது. ஆவுடையம்மாளைப் பார்த்துக் கண்களைத் தாழ்த்திக் கொண்டான். உடல் மீது கரையான் சேனைகள் அடையடையாக விழுந்து பிடுங்குவது போல் ஒரு வேதனை. மனதை அரித்த வெட்கப் பூச்சிகள்.

ஒரு திருடனாக, பல வேசம் பிள்ளையின் வருகையை நோக்கி சுடலையாண்டி நின்றிருந்தான். இன்னும் இருள் நன்றாக விழவில்லை. ஒளி மங்கியிருந்தது. முற்றத்து நடையைத் தொளித்துக் கோலப் பொடி மாவால் கோலம் போட்டாள் ஆவுடையம்மாள். அம்மன் கோவிலிலிருந்து சேண்டைச் சத்தம். தீபாராதனை நேரம். ‘டங் டங் டங்’ என்று சேண்டையொலி. தீபாராதனை முடிந்ததும், படிப்பக வானொலியின் வர்த்தக ஒலிபரப்பு -

தொழுவிலிருந்து பலவேசம் பிள்ளை வந்தார். அவ்வளவு உயரமில்லை. பூவரச மர வைரத்தில் வடித்தது போல் உடம்பு. மார்பெங்கும் நரைத்த முடி. முகத்தில் சேமித்து வைக்கப் பட்டிருந்த சீறறம், கண்ணில் நிரந்தரமான சிவப்பு.

சுடலையாண்டியின் கைகால்கள் உதறலாயின. அவனைக் கவனிக்காமலேயே செம்பிலிருந்த தண்ணீரால் கை கழுவினார். வாய் கொப்பளித்தார். துண்டால் முகத்தைத் துடைத்தார். வடக்குப் படிப்புரையில் ஏறிச் சாய்வு நாற்காலியில் அமர்ந்தார்.

சுடலையாண்டியைப் பார்த்து இலேசாகச் சிரித்தார். அவனுக்குக் கண்ணீர் சுரக்க ஆரம்பித்தது.

“எத்தனைலே படிக்கே... ?”

“ஒம்பது...”

“ஒம்பது படிக்கவனா ஊரான் தோட்டத்திலே களவாங்கப் போனே? வாத்தியான் இப்பிடித்தான் படிப்பிக்கானா?”

“…”

“வாயைத் தொறந்து சொல்லாம்லே… ஏன் தோப்புக்குள்ள போனே?”

“பாட்டா. தெரியாம…”

“தெரியாம என்னலே தெரியாம… ஊரான் மொதலுண்ணா உப்புப் போடாமத் திங்கலாம்… பாட்டன் படிப்பிச்சானா ?”

சொற்கள் தொண்டைக் குழியில் தடுக்கி உள்ளேயே விழுந்தன சுடலையாண்டிக்கு.

வாழை இலை அறுத்துக் கட்டிக் கொண்டு வந்த வாழைத் தடை ஒன்று படிப்புரையில், பல வேசம் பிள்ளையின் பக்கத்தில் கிடந்தது. குனிந்து நீளமான அந்தத் தடையை எடுத்தார் பலவேசம் பிள்ளை. இரண்டாக மடக்கிக் கையில் பிடித்தார். இடக்கையால் சுடலையாண்டியைப் பற்றினார்.

சுடலையாண்டியின் கண்கள் பொங்கின. எதிர்ப் படிப் புரையில் பாவநாசமும் ஆவுடையம்மாளும் சங்கரவடிவும் நிற்பது மங்கித் தெரிந்தது. அவன் முகம் ஒரு விதமாகக் கோணியது.

“களவாங்கப் போவியாலே இனி?” என்று உறுமிக் கொண்டு கையிலிருந்த வாழைத்தடையால் -

சுடலையாண்டி சத்தமின்றி அழுதான்.

அழுகைக்குக் குரல் இல்லை.

ஆனால் மொழி இருந்தது.

ஏழெட்டு முறை வீசி வீசி அடித்து ஓய்ந்து தடையை முற்றத்தில் வீசினார். பலவேசம் பிள்ளையின் கண்களைப் பார்க்கப் பயமாக இருந்தது. உக்கிரமான ஆராசனைக்காரன் முகம் போல்…

“ஓடுலே செறுக்கி மவனே… தோப்புக்குள்ளே இனி காலை வச்சே, முட்டுக்குக் கீழே மொறிச்சிருவேன். அப்பன் பேரு தெரியாத பயலுக்கு ஆசை. ஓடுலே இங்கேருந்து…”

***

# எட்டு

பலவேசம் பிள்ளை பேசிய பேச்சின் பொருளெல்லாம் கொஞ்ச நாட்கள் கழிந்த பின்னர் தான் சுடலையாண்டிக்குப் புரிய ஆரம்பித்தது.

ஒரு சண்டையின் இறுதியில் ஏவும் கடைசிக் கணையாக - இந்த ஏச்சு இல்லாமல் எந்தச் சண்டையும் முடிவடைந்ததில்லை.

கீழ் வகுப்பில் படிப்பவன் தொடங்கிப் பலவேசம் பிள்ளைவரை...

ஒரு தேங்காய்க்கு ஆசைப்பட்டுத் திருடிய தனக்கு அந்தத் தண்டனை வேண்டியதுதான். ஆனால் அதன் தொடர்ச்சியாகப் பட்ட புண்கள் -

வேதனையோடு சுடலையாண்டி வானத்தைப் பார்த்தான். சந்திரனைச் சுற்றி, கிட்டத்தில் வெள்ளைவட்டம். மழை அண்மையில் இருக்கிறதோ வட்டத்துக்கு வெளியே ரோகிணியின் கண் சிமிட்டல்.

இந்த அம்மா ஏன் இப்படிச் செய்தாள்? எந்த அவசியம் அவளை நிர்ப்பந்தித்தது? சொந்த மொழிக்காரனாக ஒருவனைக் கல்யாணம் செய்து கொண்டு போகாமல் -

எல்லாம் இந்த அப்பா செய்த வேலை. பெரியபுரட்சி செய்துகாட்டி விட்டார் புரட்சி...

அம்மாவின் நிலை என்னவாக இருந்திருக்கும்? இந்த அப்பாவின் பின் எல்லாவற்றையும் துறந்து, ஊர் உறவைப் பகைத்து, எந்த தைரியத்தில் இறங்கி வந்தாள்? அப்போது அம்மாவுக்கு என்ன வயது? அப்பாவுக்கே இருபத்து நான்குதானாம்! இவளுக்கென்ன பத்தொன்பது வயதிருக்கும். இப்போது தனக்கு இருக்கும் வயது? அந்த வயதில் அப்படி ஒரு துணிச்சல் அம்மாவுக்கு எப்படி வந்தது?

யாருக்கும் தெரியாமல், குமார கோயிலில் தாலி கட்டிய பிறகு, அம்மாவைக் கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு, மாலை ஏழரை மணிக்கு வீட்டுமுன் அப்பா வந்து நின்ற போது –

எப்படி ஆத்தாவையும், தாத்தாவையும், அண்டை அயலா ரையும், இரக்கமே இல்லாத இந்த ஊரையும் அவள் சமாளித்தாள்?

தான் அப்பன் பேர் தெரியாதவனானால் - அவள் யாருக்கோ பெண்டிருந்து, அப்பாவை வளைத்துப் போட்டு ஓடி வந்தாளா? அன்று சொன்னாரே பலவேசம் பிள்ளை உடன் படிக்கிறவன் எல்லாம் சொன்னானே!

அவர்களுக்கென்ன? பெற்று விட்டுச் செத்துப் போய்விட்டார்கள்.

பாவம்! தனக்கே இவ்வளவு ஆழமான கொழுப் பாய்ச்சல்கள் என்றால், அவள் என்ன செய்திருப்பாள்? அம்மாவின் தற்கொலை பற்றிய விவரங்களை ஊர் வாய்கள் மூலம் சுடலையாண்டி அறிந்து கொண்டான். ஓர் அவல சினிமாவின் இறுதிக்காட்சிகள் போல் அந்தச் சம்பவம் அவன் நினைவில்படர்ந்தது.

தாணம்மை ஒரு பெருந் தொண்டைக்காரி. அடங்குளத்துப் பெருநீலி. அவளோடு அம்மாவுக்கு ஒரு சண்டை.

சுடலையாண்டி பிறந்து பத்து மாதம் ஆகியிருக்கும். பால் கொடுத்து, தொட்டிலில் உறங்கப் போட்டு விட்டு, அவன் அம்மா தங்கம் மை குளிக்கப் போனாள். உச்சி வெயிலில் தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கும் முன் குளித்துவிட்டு வந்துவிட எண்ணினாள். ஆற்றில் ஏழெட்டுப் பேர் குளித்துக் கொண்டிருந்தனர்.

அணைவடைத் துணிகளைக் கசக்கிப் பிழிந்து வைத்து விட்டு, ஒரு முந்தியை நெஞ்சு கட்டி, மறு முந்தியைத் தண்ணீரில் நனைத்து, ஓங்கி யோங்கி வரிக் கல்லில் அடித்துத் துவைத்தாள். பின்னால் தாணம்மை குளித்து விட்டு வந்ததைக் கவனிக்கவில்லை. ஓங்கி அறைந்த கண்டாங்கியை எடுத்து மீண்டும் ஒங்குகையில் சில துளித் தண்ணீர் தாணம்மை மீது தெளித்தது.

ஆங்காரத்தோடு தாணம்மையின் குரல் ஒலித்தது.

“சீல தொவைக்க லெச்சணமா? தீண்டச்சீல தண்ணீயை மொகத்திலே அடிக்கதைப் பாரேன்...”

“அக்கா...நான் காணல்லே...”

“நீ எப்படிக் காணுவே... ரோட்டிலே எவன் போறான் சின்ன மாப்பிள்ளைன்னு பாத்துக்கிட்டு சீலை தொவச்சா ஆளுவாறது எங்க

தெரியும்...”

“அக்கா வேண்டாத் தனம் பேசாண்டாம். நான் வேணும்னு செய்யல்லே...”

“பலவட்ற தேவ்டியாளுக்கு வாயைப் பாரேன்... நானா வேண்டாத்தனம் பேசினேன். ஆட்டுக் கொம்பை எடுத்து அலவைக் கிளிச்சிருவேன் பாத்துக்கோ... வேண்டாத்தனம் பேசுகனாமே வேண்டாத்தனம்...”

“நான் இப்பம் என்ன சொல்லீட்டேன்னு...”

“என்ன சொன்னியா? மூளி எங்கிட்டயா கேக்கே? நான் நல்ல வெள்ளாடிச்சியாக்கும்... வெள்ளாளனுக்குத்தான் பொண்டிருக்கேன். உன்னைப் போல கண்டவங் கூடப் போயி பிள்ளை வாங்கீட்டு ஒரு பொண்ணையனை வளைச்சுப் போட்டுக்கிடல்லே... நீ வாயா பேசுகே வா... ஈளவத்திக்கு இவ்வளவு கொளுப்பா? வந்திட்டா... செறுக்கி... தீயை வச்சுக் கொளுத்தீருவேன் பாத்துக்கோ... எங்கிட்டயா வாற நீ...”

வீடு போய்ச் சேரும் வரை வழியில் கண்ட பெண்ணிடமெல்லாம் நீட்டி முழுக்கிக் கொண்டு தாணம்மை போனாள். விக்கித்துப் போய், சுற்றி நின்ற எந்தப் பெண் பிள்ளையும் தாணம்மையை எதிர்த்துச் சிறுகுரல்கூட எழுப்பாததைக் கண்டு தன் அந்நியம் உணர்ந்தாள். தங்கம்மை துணிகளை எல்லாம் துவைத்துப் பிழிந்து குளித்து விட்டு வீட்டுக்குப் போனபோது ஆற்றில் நடந்த சண்டை வீடுவரை எட்டியதை அறிந்தாள்.

“ஆத்திலே என்னட்டீ சண்டை?”

“ஐயோ நான் ஒண்ணுமே சொல்லல்லே... அந்த தாணம்மை அக்காதான்.”

“நான் உனக்கு எத்தினி மட்டம் சொல்லிருக்கேன். ஆத்துக்குப் போனா அந்த மூளிகளுக்குக்கூட வாக்கு குடுக்காதேண்ணு...”

“நான் ஒருத்தர்கிட்டேயும் பேசல்லியே...”

ஆவேசம் வந்ததுபோல், சோணாசலம் படிப்புரையில் இருந்து துள்ளி எழுந்து, தங்கம்மையின் கொண்டையைப் பிடித்து வளைத்து, குறுக்கில்

அறைந்தான்.

“அட காலனாப் போவான். இந்தப் பிள்ளையைப் போட்டு அடிச்சிக் கொல்லுகானே.”

ஆத்தா இடையே விழுந்து செறுத்தாள்.

அரளி விதையை அரைத்துக் குடித்து மறுநாள் காலையில் தங்கம்மை கட்டையாகிப் போனாள்.

உலகத்தில் ஏதும் ஆதரவற்றுப் போய் இறந்து போன அவள் மீது கோபப்படுவது என்ன நியாயம் என்று நினைத்தான் சுடலையாண்டி. பலரும் குத்திய புண்ணின் வலி தாங்காமல் செத்துப் போன அம்மா மீது ஒரு பரிதாபம் சுரந்தது.

குளித்து விட்டு வீட்டுக்குப் போகலாம் என்று சுடலையாண்டிக்குத் தோன்றியது. பாலத்திலிலுந்து இறங்கிப் படிக்கட்டு வழியாகத் தண்ணீரில் இறங்கினான். சாரத்தை உரித்து “டபார் டபார்” என்று உதறி, மடித்து வைத்து விட்டுக் கவனமாக ஆற்றில் இறங்கினான்.

தண்ணீர் ‘சல சல’ என்று சதிராடி விழுந்தது. மாலையில் அந்தக் கும்பலைக் கண்டபோது கலங்கிய மனக்குளம் இன்னும் அமைதி பெறவில்லை.

காலில் பாசி வழுக்கியது.

கல் தளத்தை விட்டுக் கீழிறங்கி, சீப்பு மடுவில் அரை அளவு ஆழத்தில் நின்றான். தண்ணீரில் முங்கி முங்கிக் குளித்தான்.

நடந்ததை நினைக்கையில் அந்த இருட்டில் அப்படியொரு தனிமையில் அழுகைதான் வந்தது.

தலையைத் தண்ணீருக்குள் நுழைத்துக் கொண்டு சத்த மெழுப்பிக் கொண்டு அழுதான்.

ஒரு மலையாள ஈழவப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு ஓடி வந்த அப்பாவுக்காக,

அப்பாவை நம்பி வந்து அல்லல் தாங்காமல் தன்னையே அழித்துக்

கொண்ட முகம் தெரியாத தன் அம்மாவுக்காக,

அந்த அம்மா வயிற்றில் பிறந்து விட்டதால் அங்கீகாரம் இழந்து நிற்கும் தனக்காக.

***

# ஒன்பது

மாணவர்களின் குளியல் சூரங்குளத்தில் ஒரு படலம். ஊருக்கே மேற்கே இருந்த தென்னங் குழி மடையின் கலுங்கில் அவனவன் உட்கார்ந்து கொண்டு, இடது கையில் உமிக்கரி அல்லது பல்பொடி வைத்துக் கொண்டு, வலது கை ஆள் காட்டி விரலில் தொட்டுத் தொட்டுப் பல் தேய்ப் பார்கள். முன்னால் படிக்கட்டிலோ அல்லது பக்கவாட்டிலோ திரும்பித் தண்ணீரிலேயே துப்புவார்கள்.

ஆற்றங்கரை மேட்டு ரோட்டிலிருந்து முப்பது டிகிரி கோணத்தில் சாய்ந்த துறை. கல்வரிகளால் படிக்கட்டுகள். பக்கவாட்டிலும் ரோட்டின் மேலேயும் கலுங்குச் சுவர். ஆள் இறங்குவதற்குக் கைப்பிடிச்சுவரில் இரண்டு தொண்டுகள். படித்துறையின் கிழக்குப் பக்கம் ஒரு பெரிய ஆலமரம் - ஆற்றையும் ரோட்டையும் கவித்துக் கொண்டு நீரைத் தொட முயன்று கீழிறங்கும் விழுதுகள். விழுதுகளைப் பிடித்துத் தொங்கி ஆடுவது ஒரு பொழுதுபோக்கு. ரோட்டிலும் விழுதுகள் இறங்க முயன்றன. போகும் வரும் பஸ்களின், லாரிகளின் முகட்டில் அடிப்பட்டுச் சிறுத்து நிறத்திக் கொண்டன. ஆலமரத்தின் அடி மரத்தில் வைசூரித் தழும்புகள் - பசை எடுக்கச் சிறுவர்கள் வெட்டாங்கல் கொண்டு கொத்திய வடுக்கள். உடம்பெல்லாம் பெண்குறியாய் சாபம் ஏற்ற புரந்திரன் போல்...

ஆற்றின் ஓரத்துமரமாகையால் அசாத்தியச் செழுமை, கண்ணாடி போல் பளபளக்கும் பச்சை இலைகள். பெண்களின் கூந்தல் போல் தண்ணீரில் சடை சடையாய் மிதக்கும் வேர்க் கூட்டம். மண்புழு போல் வேர்த்துளிகள். இந்த நிழலும் தண்ணீரும் உட்காரத் தோதான இடமும் பல நிமிடங்களைப் பறித்துவிடும்.

இந்தப் படித்துறையின் கீழே ஊரின் முகப்பில், ஆரம்பப்பள்ளிக்கு முன்னால் பெண்கள் படித்துறை. அந்தப் படித்துறையிலும் ஒரு படர்ந்த ஆலமரம். அதுபோலவே அதற்கும் கீழே ஊரின் தெற்குப்புறம். மாடு குளிப்பாட்ட வரிக்கல் படிகள் இல்லாத, ஆனால் படலைக் கற்கள் பாவப்பட்ட ஒரு சாய்வான படித்துறை. கல்யாணம் நிச்சயமாகும்போது, ஆலங்கம்பு ஒன்றில் வெற்றிலையும் பிச்சிப் பூவும் சுற்றி, மஞ்சள் குங்குமம் அப்பி, சந்தனம் தெளித்து, ‘கால் நாட்டி’ வைத்து, கல்யாணம் முடிந்து முளை கரைத்த பிறகு ஆற்றங்கரையிலோ குளத்தங்கரையிலோ நடுவது என்பது அந்தப் பக்கத்தில் பழக்கமாக இருந்ததால், ஒவ்வொரு

துறையிலும் ஆலமரத்துக்குப் பஞ்சமில்லை

நேரங்கெட்ட நேரங்களில், ஆண்கள், பெண்கள், மாடுகள் குளிக்கும் துறை என்ற பேதத்தை நீக்கி, ஒரு வேளை பேத உணர்வின்றி, துறை மாறிக் குளிப்பதும் உண்டு. துறை என்று பெயருக்கு இருந்தாலும், துணிகளை உரித்துச் சுருட்டி வைத்துக் கொள்ள, சோப்புப் போட, துவைக்க, மஞ்சள் உரச, குடம் வைக்க, கழுவக்கொண்டு வந்த பாத்திரங்கள் வைக்க உழவுச் சாமான்கள் - துடைக்கயிறு, உழவு கம்பு, மண் வெட்டி, வெட்டுக் கத்தி வைக்க என்று பல உபயோகங்கள்.

பெரும்பாலும் ஆற்றில் முட்டளவு தண்ணீர் ஓடும். நன்றாக அமிழ்ந்து குளிக்க நட்டாற்றில் பெரிதாகப் பள்ளம் தோண்டி இடுப்பளவு ஆழம் இருக்கும். ஒரு முந்தியைத் தண்ணீரில் நீளமாக அசைய விட்டுப் பெண்கள் குளிப்பார்கள். பருவம் வந்த குமரிகள் குளிப்பார்கள். பருவம் வராவிட்டாலும் முழு முற்றும் போந்திராத முலை மறைத்துச் சிறுமிகள் குளிப்பார்கள். குழந்தைகள் குளிக்கும்.

அகிற் புகை, நிலாக் கற்றை இவற்றிற்கு எடுத்துக் காட்டுச் சொல்லும் மென்துகில் உடுத்துச் சூரங்குளத்துப் பெண்கள் குளிப்பதில்லை. பருக்கனான கைத்தறிக் கண்டாங்கி அல்லது பச்சை, நீல நிறச் சீட்டிப் பாவாடை கொண்டு நெஞ்சு கட்டித்தான் குளிப்பார்கள். ஆனாலும் நீரில் நனைந்த துணி உடம்பில் ஒட்டிக் கொள்ள, பருவ மேடுகள் கண்ணுக்குத் தென்படாதா என்ற அலவலாதித் தனத்தோடு விடலைகளும், திருமணமாகியவர்களும் உடல் வரிப்பழுத்து மனம் திரும்பிய கிழடுகளும் உயரே இருக்கும் ஆண்கள் துறையில் கிழக்குப் பார்த்து அமர்ந்திருப்பார்கள்.

காலையில் குளிக்கப் போனால், ஆற அமரக் கதைபேச சுடலையாண்டிக்கு நேரமிருந்ததில்லை. விரைவான ஒரு பல் தேய்ப்பும் இரண்டு முங்கும். முங்கி எழுந்து வெறுங்கையால் உடம்பு தேய்க்கையில், கரையில் இருந்து இரண்டு பேர் காரமான அரசியல் சண்டை போடுவது கேட்டது.

“நீ என்ன மயிரைக் கண்டே.போன வாரம் கரண்டிலே கரஞ்சியா எளுதீருக்கான்….”

இங்கு உண்மைகளை விட பயமுறுத்தல்கள் முக்கியம். இதை யொன்றும் கண்டு கொள்ளாமல் குளித்துத் தலை துவட்டி சுடலையாண்டி

வீட்டுக்குப் போனான்.

பெரிய படிப்புரையில் தாழக்குடி குப்பான் பிள்ளை இருந்தார். அவரைப் பார்த்துக் கொண்டு, கன்னத்து மயிரைத் தேய்த்தவாறு தாத்தா ஒட்டுப் படிப்புரையில் இருந்தார். குப்பான் பிள்ளையைப் பார்க்கும்போதே மனம் வேறு கதியில் பேசியது. தாத்தா கூறிய பதிலைக் கேட்டுக் கொண்டே அடுக்களையில் உட்கார்ந்து கஞ்சி குடித்தான்.

“அண்ணன் சொல்லுகது சரிதான். வருசம் மூணு தாண்டி யாச்சு. ஒரு நோட்டுகூட வேண்டாம்னு சொல்லி, கேட்டதும் ரூவாயை எடுத்து தந்தேரு. நான் மறந்திரல்லே... வேலையும் முன்னைப் போல ஒண்ணும் இல்லே. எப்படியும் பய பாசாகி ஒரு வேலைக்குப் போயிட்டா முதக் காரியமா ஒம்ம கடத்தை தீத்திருகேன்…”

“அதுக்கில்லே சுப்பையா... உம் பேரிலே எனக்கு நம்பிக்கை இல்லாம இல்லே. மூணு வருசமா கேட்டனா? இப்பம் எனக்கும் பெரிய முடை வந்து சேந்திட்டு... நிண்ண நெலையில் ரெண்டு எருமையும் செத்துப் போச்சு... அந்த நாறத் தேவ்டியா மவன் கோலப்ப ஆசாரி கேசுக்கு சின்னப் பணமா செலவாகுங்கே. இல்லேன்னா ஒன்னை வந்து கேப்பனா?”

“சரிண்ணேன்.நீரு இப்பிடிச் சொல்லச்சிலே நான் வேற என்னத்தைச் சொல்ல? தை மாசத்துக்குள்ளே எப்பிடியும் தந்திருகேன்... ஒரு மாசம் பொறுத்துக்கிடும்...”

கஞ்சியைக் குடித்து, சுடலையாண்டி சட்டை போட்ட பிறகு, ஆத்தா மத்தியானச் சாப்பாட்டுக்கான ஈயச் சம்புடத்தைக் தந்தாள். மூடியைத் திறந்து பார்த்தான். முக்கால் பாகம் பழையது. அரை அகப்பை மரச்சீனிக் கிழங்குக் கறி.

புத்தங்கங்களை தூக்கிக் கோண்டு கல்லூரி நோக்கி நடந்தான் சுடலையாண்டி நடக்கும் போதே, இந்தக் கடனை ஒரு மாத காலத்திற்குள் தாத்தா எப்படித் தீர்ப்பார் என்ற யோசனை. வாக்குக் கொடுத்துவிட்டு அவரால் சும்மா இருக்க முடியாது. வாக்கு சுத்தம் காரணமாகவே அவர் கேட்டால் யாரும் இல்லை என்று சொல்வதில்லை. ஆனால் கடனை வாங்கிப் போட்டு விட்டால் எப்படித் தீர்ப்பது? குப்பான் பிள்ளை அப்போது பணம் கொடுக்காமல் இருந்தால் - பதினோராவது தேர்வு எழுதிய பிறகு தொட்டுப் பிடித்த கவலை.

இனிமேல் பயலை என்ன வழியில் அனுப்புவது? விடுமுறை துவங்கிய மறுநாள், மேலால் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த போது, சும்மா இருப்பானேன் என்று சுடலையாண்டி கொத்து வேலைக்கு கையாளாகப் போனான். தெற்குத் தெரு ராமலிங்கப் பணிக்கரின் பழையவீட்டை இடித்துப் புதிதாக மட்டுப்பா வீடுகட்ட ஆரம்பித் திருந்தார்கள். நொண்டிக் கொத்தனாரிடம் தாத்தா கொண்டு போய்விட்டார்.

“என்னவே சுப்பையா பிள்ளை? பொற கண்டால இருக்கே?”

“உம்மைத்தான் பாக்க வந்தேன்?”

“பொளந்து போச்சு, நீரு என்னைப் பாக்க வந்ததேராக்கும்?”

“பரியாசமாட்டா இருக்கு... நெசமாத்தான்...”

“பயலைத் தெரியுமா?”

“அட…”

“யாரு? சோணாசலத்துக்க மகனா? பய கிறுகிறுண்ணு வளந்திட்டான் வேய்.”

“இந்த வருசம் பதினொண்ணு எளுதீருக்கான்... பள்ளிக் குடம் அடச்சாச்சு.ஓம்ம கைக்குள்ளே விட்டுக்கிடும்…”

“எங்கைக்குள்ளயா? என்ன வெளையாடுகேரா? ஒரு டைப்பு, புக் கீப்புண்ணு அனுப்பும். படிச்ச பிள்ளையை கையாளா அனுப்புகங்கீரே…”

“அட அனுப்பத்தாம்யா... காலேஜிலே சேக்கலாம்ணுதான் யோசனை... ஒம்மகிட்டே ரெண்டு மாசம் வேலை செய்தாம்னா நோட்டு பொஸ்தகச் செலவுக்கு ஆகாதா?”

“பய பொடியனாட்டுல்லா இருக்கான்...”

“கொஞ்சம் முன்னா தான் பய வளலந்துட்டாம்னீரு...”

“ஒரு சட்டி சாந்து வெட்டி வச்சா தூக்குவானா?”

“தூக்குவான் தூக்குவான்... மொத ரெண்டு நாளு கொஞ்சம் கெவுனுச்சுகிடும்.”

“சரி சரி... பேரப்புள்ள அப்பம் நாளைக்குக் காலம்பற எட்டரை மணிக்கு வந்திரு என்னா? வயத்துக்கு என்னமாங் குடிச்சிட்டு வா... மத்தியானம் இங்கிண பாத்துக்கிடலாம்...”

இரண்டு மாத காலம் உச்சிச் சுமை. இரண்டு மண்வெட்டி சிமென்ட் சாந்து வெட்டி வைத்த சட்டி இரும்பாகக் கனத்தது. தோளுக்கு மேல் வெட்டித் தூக்க முடியவில்லை. என்னதான் உச்சியில் தலை முண்டால் தலைப்பாகை கட்டினாலும் சாந்துச் சட்டி தோளுக்கு உயர்ந்ததும் தலைப்பாகை கழரும். மீண்டும் இறக்க முடியாது. வெறும் மண்டையில் நிரப்பு இல்லாத குழிச்சட்டி, உச்சி உறுத்தியது. சாந்து கொண்டு கொடுத்ததும் - ‘அந்த செங்கலை எடு.’, ‘அந்தால செம்புத் தண்ணீயைத் தூக்கு, ‘என்னத்தைப் பாக்கே? மொளக்கோலை எடுத்தா...' என்று சில்லறை வேலைகள் செய்து கொண்டு இருக்கும்போதே மறுபடியும் சாந்து கொண்டு வா என்று ஏவல்.

சட்டை ஏதும் போடாத உடம்பில், சிமெண்ட் தண்ணீர் தெறித்துச் சாம்பல் பூக்க ஆரம்பித்தது. உள்ளங்கை தோல் மரத்தது. கைவிரல் மேடுகள் காய்த்தன. தலை செம்பட்டை படர்ந்தது. புருவக் கோடுகளில், கை இடுக்குகளில் உப்புப் பொரிந்தது. தண்ணீர் பட்ட மேலில் புள்ளிகள் நின்றன. கண்கள் எரியலுற்றன.

சில நாட்களுக்குப் பிறகு வேலை பழகிப் போனது. வேலையின் ஒழுங்கு பிடிபட்டுப் போயிற்று. சாந்து கொண்டு கொடுத்த பின்பு வரிசை வரிசையாகச் சுவர் மீது செங்கல்கள் பொறுக்கி வைத்தான். சுட்ட செங்கல்களைத் தண்ணீரில் நனைத்துக் கொடுத்தான். கீழே சிதறும் சிமண்ட் சாந்தை வள்ளிசாகக் கூட்டிச் சேர்த்துச் சட்டியில் போட்டு, இரண்டு கை சிமெண்ட் அள்ளிப் போட்டுத் தண்ணீர் விட்டுக் குழைத்துக் கொடுத்தான்.

காலை ஒன்பது மணி முதல் உளைந்து வேலை செய்த பிறகு ஒரு மணிக்குக் கை கால்களை கழுவிக் கஞ்சி குடிக்க அமர்கையில் - செம்புப் பானை நிறையச் சுடு கஞ்சி. தொட்டுக் கொள்ளப் புளித்துகையல். வட்டமாகக் கொத்தனார்களும் கையாள்களும் இருந்து, தலைக்கு ஒரு தேங்காய்ச் சிரட்டையைக் கையில் வைத்துக் கொண்டு, பறித்துக் கழுவிய பூவரச இலையில் புளித் துகையலை வைத்துக் கொண்டு

சூடான கஞ்சியை அலசி அலசிக் குடித்து, துகையலை விரலில் தொட்டு நாக்கில் தீற்றி...

சூடு பொறுக்கப் பொறுக்கக் குடிக்கையில், அது ஒரு சுவை. சில சமயம் நாக்கு வெந்து விடுவதும் உண்டு. கைவிரல்கள் சிவந்து தெரிவதும் உண்டு. நொண்டிக் கொத்தனார் சமயங்களில் பலா இலையில் தொன்னை செய்து தருவார். சிரட்டையைப் பார்த்துப் பார்த்து ஊற்றித்தருவார். கஞ்சி குடித்து முடிந்ததும் உடம்பு சளசளவென்று வியர்க்கும். வீட்டின் பக்கத்தில் இருந்த களத்தில், வேப்ப மர நிழலில் கொஞ்ச நேரம் இளைப் பாறுகையில், மனம் காற்றில் அலையும். காய்ந்த சருகுபோல ஏறும், இறங்கும், ஒல்கும், ஒசியும், அசையும், மிதக்கும்.

சாயங்காலம் வேலை முடிந்து, சாந்துச் சட்டி, கரண்டி, கைப்பணிப்பலகை, முழக்கோல், மண்வெட்டி, ரசமட்டம், குண்டு நூல், மூலைமட்டம் எல்லாம் கழுவிப் புரையில் சேர்த்து வைத்து, தலைப்பாகையை அவிழ்த்துத் தோளில் கண்டமாலையாகத் தொங்கப் போட்டு, சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்ததும்

“மக்கா வந்திட்டியா?” என்று கேட்கையில் ஆத்தாவின் குரலில் ஒரு குழைவு.

“பாவி மட்டை... ஒன்ன இப்படி வேலை செய்ய விட்டுக்கிட்டு போயிட்டானே... எரக்கமத்த நீசப்பாவி... கருகப் பிலைக்கண்ணுபோல ஒரு பிள்ளையைப் பெத்து விட்டுக்கிட்டு அதைக் காப்பாத்தி ஆளாக்காம செத்தொளிஞ்சு போயிட்டானே...”

புலம்பிக் கொண்டே கிண்ணம் நிறைய நல்லெண்ணெய் கொண்டு வந்து வைப்பாள். நல்லெண்ணையை உடம்பெல்லாம் தொட்டுத் தேய்த்து, தலையில் வைத்து அரக்கி, புறவாசலில் வெந்நீர்ப் பானையைத் தூக்கிக் கொண்டு வைத்து, போணியால் சூடு பொறுக்கப் பொறுக்கக் கோரித் தலையில் விட்டு... உடம்பை உருவி விட்டது போல் இருக்கும். குளியல் முடிந்ததும் சருமக் கண்கள் திறந்து ‘குப் பென்று வியர்க்கும். கிடைத்ததைத் தின்றுவிட்டுப் படுத்தால் விழிக்கையில் காகம் கரையும்.

வீட்டு வேலை முடியுமுன்பே தேர்வு முடிவுகள் வந்துவிட்டன. நாற்பத்தெட்டு நாட்கள் செய்த வேலைக்கு எழுபத் திரண்டு ரூபாய் சேர்ந்திருந்தது. கல்லூரியில் சேர்வதற்கு விண்ணப்பம் வாங்கி வந்து நிறைவு செய்து கொண்டு கொடுத்தான். பீஸ் கட்டச் சொல்லி கார்டு

வந்தது. யாரிடம் கேட்பது என்று தாத்தா அலைய ஆரம்பித்தார். நாட்கள் நெருங்க நெருங்க, கல்லூரியில் சேர்வோமா என்பதே சுடலையாண்டிக்குச் சந்தேகமாயிற்று. அவனுடன் படித்த பிற பையன்கள் பணம் கட்டி விட்டார்கள்.

மாட சாமி வழியில் கண்டு கேட்டான்.

“எப்பண்டே பணம் கெட்டப் போறே?”

“கெட்டணும். இன்னும் பணம் கெடக்கல்லே...”

“சீக்கிரம் கெட்டீரு... பொறகு எடம் தீந்திரும்.”

சுடலையாண்டிக்கு மனம் "கெதங் கெதங்’ என்றிருந்தது. அன்று இரவு சாப்பிடும் போது தாத்தாவிடம் கேட்டான்.

“தாத்தா பணம் கெடச்சா?”

“இல்லியே மக்கா... ரெண்டு மூணு பேருகிட்டே சொல்லியிருக்கேன்... பணம் பெரள மாட்டங்கு...”

“சீக்கிரம் கெட்டாட்டா எடம் போயிருமாம்!”

“போனாப் போட்டு. அடுத்த வருசம் பாத்துக்கிடலாம்.”

சொல்லும் போதே தாத்தாவின் தொண்டை கமறியது.

“என்ன செய்யச் சொல்லுகே மக்கா... ரெண்டு நாள் பொறு. தாழக்குடியிலே ஒரு ஆளுகிட்டே கேட்டிருக்கேன். நாளைக்கு வரச்சொல்லியிருக்காரு...”

சுடலையாண்டிக்கு ஆற்றவில்லை. தாத்தா இது போல கண்கலங்கிப் பார்த்தது கிடையாது. ‘சவத்து மயிரு காலேஜி இல்லேன்னா போகு" என்று மனத்தைத் தேற்ற ஆரம்பித்தான்.

மறுநாள் காலையில், குளிக்கப் போகையில், எதிரே வந்த சரித்திர ஆசிரியர் ஐசக் செல்வராஜ் சுடலையாண்டியிடம் விசாரித்த போது, மனம் மறுபடியும் சலித்தது. காலையிலேயே எழுந்து தாத்தா தாழக்குடிக்குப் போயிருந்தார். எப்படியாவது கிடைத்து விட்டால் “

கடவுளே முருகா... கொஞ்சம் கண்ணைத் தொறந்து பாருப்பா” என்று மனதுள் பிரார்த்திக்கையில், மனம் கலங்கியது.

குளித்து விட்டு வீட்டுக்கு வந்தபோது, படிப்புரையில் தாத்தா உட்கார்ந்திருந்தார்.

“சீக்கிரம் உடுப்பு போட்டுக்கிட்டு பொறப்படு...”

“பணம் கெடச்சிற்றா?”

“தாளாக்குடி குப்பான் பிள்ளை அண்ணன்கிட்டே முன்னூறு ரூவா வாங்கீருக்கேன்...”

முன்னெச்சரிக்கையுடன் துவைத்து மடித்து வைத்திருந்த சட்டையையும் நிக்கரையும் போட்டுக் கொண்டு சுடலையாண்டி புறப்பட்டான். தாத்தாவுடன் போய் பீஸ் கட்டிவிட்டு மீதிப் பணத்தில் இரண்டு ஒற்றை வேட்டியும் இரண்டு சட்டைத் துணியும் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்ததும் அவன் உள்ளம் குதூகலித்து.

பணம் அன்று கிடைத்தபோது ஏற்பட்ட ஆறுதல். இன்று எப்படித் திருப்பி ஒரு மாதத்திற்குள் கொடுப்பது என்ற திகைப்பு. வழியொன்றும் புலப்படாமல் ஏறு வெயிலில் ‘விடு விடு’ என்று நடந்தான் சுடலையாண்டி.

***

# பத்து

கல்லூரி முடிந்து திரும்பி நடக்கையில் சுடலையாண்டிக்குக் களைப்பாக இருந்தது.

ஒரு சைக்கிள் இருந்தால் - சுடலையாண்டி அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு. ஒரு பழைய சைக்கிள் இருக்கு மானால்? வீட்டிலிருந்து ஒன்பது மணிக்குப் புறப்பட்டால் போதும். சாயங்காலம் ஆறு மணிக்குள் வீடு போய்ச் சேர்ந்து விடலாம். இப்போதாவது பராவாயில்லை. முன்பெல்லாம், புதுமுக வகுப்பு, முதலாமாண்டு, இரண்டாமாண்டு படிக்கையில், வாரத்தில் மூன்று நாட்கள் என்.சி.சி. பயிற்சி முடிந்து இருட்டில் தனியாக வர வேண்டும். சைக்கிள் இருக்குமானால், ஏறி இருந்து ஒரு அழுத்து-

ஏழரை மணிக்கு என்.சி.சி பயிற்சி முடிந்து, சிற்றுண்டிப் பொட்டலம் பிரித்துத் தின்று தண்ணீர் குடித்து நடக்க ஆரம்பிக்கும் போதே மணி எட்டு அடித்து விடும். முதலிலெல்லாம் தனியாக நடக் கையில் நெஞ்சில் பயம். ஒழகினசேரி பாலம் வரைக்கும் நகர்ப்புறம். கடைகளும் கண்ணிகளும் விளக்கும் அரவமும், பாலத்தைத் தாண்டியதும் இருட்டு. பாலத்தின் வடபுறம் பழையாற்றின் மேற்குக் கரையில் சுடுகாடும் சுடலைமாடன் கோயிலும். நாகர்கோயிலின் பிணமெல்லாம் அங்குதான் எரியும். ஏழெட்டுக் குழிகள். சாதி வாரியாகப் பிரித்து. எப்போதும் காலையிலும் மாலையிலும் ரோட்டில் நடக்கையில் ஏதாவது ஒன்றோ, இரண்டோ அதற்கும் மேலோ எரிந்து கொண்டிருக்கும். சில சமயம் புகைக் கூட்டம் மட்டும். பல சமயம் திரளான தீச்சுடர்கள், சிகையும் தசையும் கருகும் நாற்றம்.

பிணம் எரியும் வாசனை ஏற்று ஏற்று அந்தச் சுடுகாட்டில் சுடலைமாடன் சாமிக்குப் பழகிப் போயிற்றாம். ஒரு நாள் கூட அந்த வாசனை இல்லாமல் இருக்க முடியாதாம். எனவே என்றாவது நகரில் பிணம் விழாமற்போனால், சாமிக்கு முன்னால் சிறிய குழிதோண்டி, அயிலைக் கருவாட்டைப் போட்டுக் கொளுத்துவார்களாம். ஒரு நாள் ஆத்தா சொன்னாள். முன்பெல்லாம் அந்த வழி நடக்கையில் 'திக்' கென்றிருந்தது. அது நாகர்கோயில்- திருநெல்வேலி நெடுஞ்சாலை. பஸ்கள், கார்கள், டிரக்குகள், வண்டிகள் பறக்கும் என்றாலும் இரவில் நடக்கையில்

மனம் படபடக்கும். அந்தப் பக்கம் பார்க்காதே என்று கண்ணுக்குக் கட்டளையிட்டாலும் கேட்பதில்லை. எப்போதாவது முன்னால் ஒரு பார வண்டியோ காலி சக்கடா வண்டியோ போகும். வண்டியின் சட்டத்தைப் பிடித்துக் கொண்டே நடக்கலாம். காலி வண்டியானாலும் பின்னால் நடப்பதைக் கண்டாலும் சிலர் திரும்பிப் பார்க்காமலேயே வண்டி அடிப் பார்கள். சிலர் திரும்பிப் பார்ப்பார்கள்.

'அண்ணாச்சி... வண்டி எங்க போகு?"

"தோவாளைக்கு..."

"ஏறிக்கிடட்டா... ஒட்டாபிஸில் எறங்கீருவேன்..."

"ஆங். ஏறிக்கோ."

வண்டியின் ஒட்டத்திலேயே ஓடி, சட்டத்தைப் பிடித்து உன்னி, தட்டிக் கம்பைப் பிடித்துக் காலை மேலே தூக்கி ஏறுவது ஒரு சாமர்த்தியம்.

சில வண்டிக்காரர்கள் - " ஏறாதே... காளைக்கு காலிலேலாடமில்லே' என்று வெகு தயவோடு மறுப்பார்கள். ஏதாவது வண்டி கிடைத்தால் ஒட்டாபீஸில் இறங்கி, பொதேரிக்குப் போகாமல் நேரே திருப்பதிசாரம் ரோட்டில் நடக்க வேண்டும்.

என்.சி.சி. இருக்கும் நாட்களில்தான் பிரச்சினை. எட்டரை மணிக்கு மேல், இரவில் கிழக்கு நோக்கி நடக்க வேண்டும். சாலையில் ஓடும் வாகனங்களின் இரைச்சல்தான் துணை. சில சமயம் நெசவு முடிந்து, திருப்பதிசாரம், வீமநேரி, தேரேகால்புதூர், புளியடிக்குப் போகிறவர்கள் கும்பலாக நடப்பார்கள். சந்தை நாட்களில் தலையில் சுமட்டோடு சிலர் நடப்பார்கள். ஆனால் சுடலையாண்டிக்குத் துணை என்று எதுவும் கிடையாது.

இரவில் பத்துக்காட்டில் இறங்கிப் பொதேரி வழியாக வரக்கூடாது என்று ஆத்தாவின் கண்டிப்பான கட்டளை. வரப்பில் பூச்சிகட்டை கிடக்கும். பொதேரி குளத்தங்கரையில் மூன்றாண்டுகளுக்கு முந்தி ஒருவன் நான்று கொண்டு செத்தான் எனும் காரணங்கள். இரவில் வரப்பின் மீது வேகமாக நடக்கவும் முடியாது. எனவே சாலை வழிதான்.

ஓட்டாபீஸ் இருக்கும் திருப்பதிசாரம் விலக்கு வரையில் நெடுஞ்சாலை.

அதன் பிறகு ஆளற்றுக் கிடக்கும் குறுக்குச் சாலை. எப்போதாவது தோளில் மண்வெட்டி சாத்திக் கொண்டு யாராவது போனால் உண்டு. இந்த ரோட்டில் ஒட்டாபீஸ் சந்தியில் இருந்து இரண்டாவது ஃபர்லங்கில் ஒரு இசக்கியம்மன் கோயில். மேலாங் கோட்டு இசக்கி. திருப்பதிசாரம் ஊர், மேலும் இரண்டு ஃபர்லாங் வடக்கே.

சுடுகாட்டு இலக்கைத் தாண்டினால் வயிற்றில் பயம் பாய்ச்சும் இரண்டாவது முனை இது. சுடலையாண்டியின் மனம் ‘படக்’ கடிக்கும் இடம்.

சிறிய கோயில்தான். கற்கோயில். கோயிலின் பின் புறம், கோயிலைச் சார்ந்த தென்னந் தோப்பு. பகலிலேயே இருள் செறிந்து நிற்கும். இரவில் தோப்பின் இருட்டு படுதாவாக

கோயிலினுள் சிறிதாக ஒரு புன்னைக்கெண்ணெய் அகல் விளக்கு. மாடக்குழியினுள்ளே - அதன் மங்கிய ஒளி. இசக்கியம்மனின் எண்ணெய் பிசுக்கு நிறைந்த, கறுத்த கற்சிலை, இடையில் சிவப்பில் பட்டு, முலை மேல் கிடக்கும் செவ்வரளி ஆரம். நாக்கைத் துருத்தி, வீரப் பற்களைக் காட்டி, கண்களை ஈட்டி போல் நாட்டி, கையில் சூல் தாங்கி. மறுகையில் பிடித்த அறுத்த தலை. காலடியில் உடல்...

கோயிலின் உள்ளே நேர்ச்சைக்காகச் சில தொட்டில்கள். வளையல் குலைகள். கோயிலின் முகப்பில், கதவோரத்தில் மஞ்சணை பூசிய உண்டியல். பகலில் பார்த்தாலே நெஞ்சு அஞ்சும். இரவிலானால் ஈரக்குலை துடி துடிக்கும். வெள்ளிக் கிழமைகளில் இந்த அச்சம் பல்கிப் பெருகித் தொண்டையை அடைக்கும். என்ன முயன்றாலும் மனதை நிலை நிறுத்த முடிவதில்லை. சுடலையாண்டிக்கு வழிப்பறிப் பயம் இல்லை. ஆனால் பேய்க்கு? மந்திரவாதிக்கு? சின்ன வயதிலேயே ஏற்பட்டு விட்ட அச்சம்.

தலைப் பிள்ளை... கன்னி கழியாத... ஆண்பிள்ளை.

தலைப் பிள்ளையின் மண்டையோட்டைக் கருக்கி, மை எடுத்து - திகில் மண்ட, கால்கள் பதைக்க நடப்பான்.

இசக்கியம்மன் கோயிலைத் தாண்டி விட்டால் திருப்பதி சாரம் ஊர். மேற்கு எல்லையாக ஓடும் ரோடு. சித்திரைத் திருநாள் மகாராஜாவின் கொட்டாரச் சுற்றுச் சுவர். அடுத்தாற்போல் திருவாழி மார்பன் கோயில்

தெப்பக் குளத்தின் சுவர். ஊரைத் தாண்டிவிட்டால்- இரவு ஒன்பது மணிக்கும் ஒன்றிரண்டு பேராயினும் ரோட்டோரத்தில் பீடி குடித்தவாறு குந்தி இருப்பார்கள். அங்கு கொஞ்சம் பயம் தெளியும்.

அதைத் தாண்டி வடக்கே வந்தால் கிருஷிப் பாலம். வீமநேரிக்குப் போகும் கிளைப் பாதை கிழக்கே விரியும். சல்லிக்கல் ரோடு. அங்கே சுடுகாடோ, இசக்கி அம்மன் கோயிலோ இல்லாவிட்டாலும் ஒரு பயம். காரணமற்ற பயம். மரங்களில் அடர்ந்த இருளும் தனிமையும்

இரும்புக்குப் பேய் கிட்டேவராதாம், ஆத்தா சொல்வாள். என்.சி.சி பூட்ஸில் ஆணிகள் இருப்பதால் மனதுக்கு ஒரு தெளிவு. அது தவிரவும், ரோட்டில் லாடம் எதுவும் தென்பட்டால் கையில் எடுத்து வைத்துக் கொள்வான். அந்தப் பயங்களை இன்று நினைத்துப் பார்த்தால் - பழகிப் போனதன் காரணமாகச் சில பயங்கள் நீர்த்துப் போயிருந்தன. சில இன்னமும் நெஞ்சில் இருக்கவே செய்கின்றன.

மாலை மஞ்சளில் குளித்தது போல் - பழுத்துக் கிடக்கும் வயல் வெளிகள். தெப்பக்குளச் சுவரைத் தாண்டிச் சுடலையாண்டி நடந்தான்.

முதுகில் காளைமணிக் கிலுங்கல். அனிச்சையாகத் திரும்பிப் பார்த்தான். வில் வண்டியின் கோசுப் பெட்டியில் பாவநாசம். பாவநாசத்தைக் காணும் போதெல்லாம் சுடலையாண்டி மனதுள் ஒரு துணுக்கம். குற்ற நெஞ்சில் குத்திய ஊசி. ஒரு மனத்தாழ்வு...

வண்டி அவனை மிஞ்சி ஓடியது. வண்டியினுள் பாவநாசத்துக்குப் பின்னால்- வழக்கம் போல் ஆவுடையம்மாள். கூண்டில் சாய்ந்து, எதிர்ப்புறம் கால்களை ஊன்றி, முகடு கூடியிருந்த காலின் தொடைச் சரிவில் ஒரு புத்தகம் விரிந்திருந்தது.

என்ன படிக்கிறாள்?

புத்தகத்தின் தடிமனைப் பார்த்தால் ''அஸ்ட்ரானமி' என்று தோன்றியது. அரையாண்டுத் தேர்வு நெருங்கி வருவதால் திருப்பிப் பார்க்கிறாள் போலிருக்கிறது.

பாராதது போல், தற்செயலாய்த் திரும்பினவள் போல், இலக்கின்றி நோக்குபவள் போல், ஆவுடையம்மாள் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

எந்தப் பொருளும் சொல்லாத அந்தப் பெரிய விழிகள்...

புன்னகை காட்டாத முகம்...

ஆனால், அவள் முகத்தை ஏறிட்டுக் காணும் போதெல்லாம் சுடலையாண்டியின் மனதுள் ஒரு கலக்கம். இவள் நம்மைப் பற்றி என்ன நினைப்பாள்?

ஒரு தேங்காய்க் களவாணியாக -

அப்பன் பெயர் தெரியாதவனாக

இன்னும் இவளுக்கு என்னைக் காணும்போது அதுவேதான் ஞாபகத்துக்கு வருமோ?

அன்று பல வேசம் பிள்ளையிடம் அடிபட்ட மறுநாள்பள்ளிக்குச் செல்லும் போதே மனதில் சஞ்சலப்பாசி...

தூர் வாங்கத் தூர் வாங்கச் சேறு அழுகி நாறும் குளம்... வழியில் நின்ற கடுக்கா மரம், பூவத்தான் கோயில் சிலைகள், நம்பியான் குளச் சுமைதாங்கி யாவும் தன்னை இகழ்வோடு பார்ப்பதுபோல் -

முதலில் எந்த மாற்றமும் இல்லை வகுப்பில். ஆனால் சுடலையாண்டியால் எதையும் சீராகச் செய்ய முடியவில்லை. எப்போதும் குழறாத வாய் அன்று குழறியது. சோதனையை விஞ்ஞான ஆசிரியர் விளக்குகையில் மனம் கைவசம் இல்லை. கணக்குகள் தப்புத் தப்பாய் விழுந்தன.

நெஞ்சில் கர்ப்ப சுமை.

மூன்றாம் நாள் நமச்சிவாயம் கேட்டான். அந்தோனி முத்து விசாரித்தான். விநாயகம் அப்படியா என்றான். முதுகுக்குப் பின் கேட்ட சில கிசுகிசுப்புக்கள். அன்று பலவேசம் பிள்ளை வீட்டை விட்டு வெளிவருகையில், எதிர் வீட்டுச் சன்னலில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த பரமசிவன் மூலம்... ஆவுடையம்மாள் மூலம்... பள்ளி முழுதுமே தெரிந்து போயிற்று. கண்கள் ஏளனத்தோடு பார்த்தன. சில பச்சாதாபப்பட்டன. ஆசிரியர்கள் நீதி சொன்னார்கள். குறும்புக்காரர்கள் முதுகிலும் முத்திரை பதித்தார்கள்.

“களவாணி போறான் டோய்...”

“தேங்காய்க் களவாணி போறான் டோய்...”

“தேங்காய் களவாண்டு அடிபட்டான் டோய் ...”

ஏற்கனவே சுடலையாண்டி மீது பலருக்கும் எரிச்சல் உண்டு. அதிக மார்க்குகள். பணிந்த நடத்தை. ஒழுங்கான வீட்டுப் பாடங்கள். நேரத்தில் பள்ளிக்கு வருகை.

அவை யாயும் வஞ்சம் தீர்க்கப்பட்டன.

தையல் டீச்சரையும் ட்ரில் மாஸ்டரையும் சேர்த்து மூத்திரப் புரையில் எழுதிப் போட்டபோது இருந்த ‘கசமுச போல், கண்கள் கூட்டங் கூட்டமாய் இவன் மேல் மொய்த்தன. சுடலையாண்டி சிறுத்துக் கொண்டே போனான். மூத்திரப் புரையில் தன்னையே படம் போட்டது போலான ஒரு அருவருப்பு உணர்ச்சி.

அவர்களுக்கெல்லாம் தானொரு வெறும் தேங்காய்கள்ளன். ஆனால் தனக்கோ - பிறப்பு சந்தேகிக்கப்பட்ட ஒரு இழிவு.

இரண்டொரு நாளில் மாணவர்களின் கவனம் திசை திரும்பி விட்டாலும், அவனுக்கு மட்டும் அதுவே நினைவாகியது.

அது முதல் ஆவுடையம்மாளுடன் இருந்த சுமுகம் திசை திரும்பி மறைந்து விட்டது. அன்று அடிபட்டு, அழுகையைக் கட்டி இறுக்கும் போது, நாக்கு எரித்தாற்போல் ‘உஸ்’ இழுத்து எழுந்து தாழ்ந்த அவன் கண்கள் ஆவுடையம்மாளைக் காணும் போதெல்லாம் மறுபடி கூசாலாயின.

மதியச் சூரியனைச் சற்று நேரம் கூர்ந்து பார்த்தது போல் -

வெட்டுப் பட்ட புதுப் புண்ணை விரித்தாற்போல்

நுனிவிரலில் பிரம்படி கொண்டது போல்-

ஒரு சுறீல்.

ஆலகாலமாகத் திரண்ட வெறுப்பு தொண்டையில் தங்கி நீலம்

காட்டியது. சொற்கள் வெளிவர அஞ்சின.

முன்பெல்லாம் அவனிடம் ஆவுடையம்மாள் அடிக்கடி கணக்கு நோட்டு கேட்பாள். விஞ்ஞானப் பாடத்தின் செய்முறை களைப் பார்ப்பாள். பள்ளிக்கு வராத நாள் நோட்டுகளைக் கேட்டுவிடுவாள்.

இவனுள் ஒரு பகை வளர்ந்தது.

வகுப்பில் சுடலையாண்டிக்கு அடுத்தபடி, சமமாக, சமயங் களில் மிஞ்சியும் வருபவள் ஆவுடையம்மாள் ஒருத்திதான். இவன் கொண்ட வஞ்சம் - இவனுக்கு அவளுக்குமான மதிப்பெண்களின் இடைவெளியில் இருந்தது. ஒவ்வொரு முறையும் அவளைக் கீழே தள்ளி நசுக்க வேண்டும் என்று ஒரு வேகம். கொலை வெறி. மார்க்குகள் வரும்போதெல்லாம் இவன் மனதில், கண்களில் பளபளக்கும் பேய்ப் பசி.

பள்ளி ஆண்டுவிழாக்களின் போது, சான்றிதழும் பரிசும் பெற்றுக் கீழிறங்குகையில் இரண்டாவது பரிசு வாங்க அவள் மேலேறுகையில், கண்கள் அவளை அடித்து நொறுக்க முயன்றன.

இதை அவள் புரிந்து கொண்டிருப்பாள்.

இவனுள் உறங்கும் சண்டாளனைத் தெரிந்து கொண்டிருப்பாள்.

இன்று வண்டியில் இருந்து பார்க்காதது போல் பார்த்தபோது என்ன நினைத்திருப்பாள்?

அன்றைய அந்த நிகழ்ச்சிதான் திரும்பவும் வருமா?

பலவேசம் பிள்ளையின் வசவின் மொழி பெயர்ப்பு காதில் ஒலிக்குமா?

என்னதான் வேகமாக நடந்தாலும் வண்டியோடு ஈடு கட்ட முடியவில்லை. மூலைத் திருப்பில் ஓடி மறைந்தது. மௌனம் தின்று கொண்டு பின்னால் நடந்தான் சுடலையாண்டி.

ஒரு சைக்கிள் இருந்தால்.

***

# பதினொன்று

ஆவுடையம்மாள் முன்பெல்லாம் நட்போடுதான் இருந்தாள். ஐந்தாவது வகுப்புவரை உள்ளூரில் படித்தார்கள். பிறகு உயர்நிலைப் பள்ளிக்குத் தாழக்குடி செல்ல வேண்டியதாயிற்று. அப்போதெல்லாம் அவள் மற்ற மாணவிகளுடன் நடந்து வருவாள். வளவள வென்று வழி நெடுகப் பேசிக் கொண்டு. கால்வாயில் கிடக்கும் சுடக்குகளைப் பறித்து, கசக்கி, சோற்றையும் நீரையும் வெளி யேற்றி அது நைந்து எண்ணெய் பூசியது போல் மினுங்கும் போது வாயில் வைத்து ஊதி, ‘டொப், டொப்’ என்று கையில் தட்டி ஒலி எழுப்பி. கோரைச் சுடக்கு இல்லா விட்டால் கோவைக் காய், அல்லது வீட்டிலிருந்து எடுத்து வந்த கத்தரிக்காய்...

அப்போது சுடலையாண்டி குட்டையாக இருந்தான். வகுப்பில் மாணவர்களைவிட மாணவிகள் குறைவு. ஒரு பக்கம் முழுவதும் பையன்கள். மறுபக்கம் முதல் டெஸ்க்கில் பையன்களும் பிறகு பெண்களும். ஆறாவது வகுப்பு தொட்டே சுடலையாண்டிக்குப் பெண்களுக்கு முன்னால் இருக்கும் முதல் டெஸ்க், ஆனால் உட்கார்ந்து எழுத டெஸ்க் எட்டாது. நின்று கொண்டே எழுதுவான். நின்றால் பின்னால் இருக்கும் பெண் பிள்ளைகளுக்குத் தலை மறைக்கும். பின்னால் இருந்து ஆட்சேபங்கள்.

“சார், சொடலையாண்டி மறைக்கான்...”

“இருந்து எழுதாம்லே.”

“எட்ட மாட்டங்கு சார்.”

“அப்பம் அன்னா அந்த அருவிலே போய் நிண்ணுக்கோ.”

இப்படி அவனுக்கு ஓரத்து இருக்கை பதிவாகிப் போயிற்று. அவன் பின்னால் இருந்த டெஸ்க்கில் ஆவுடையம்மாள்.

கணக்கு செய்கையில் சில சமயம் வழி தப்பாகிப்போகும். இவனிடம் எப்போதும் ரப்பர் இருந்ததில்லை. ஆள்காட்டி விரலில் துப்பினி தொட்டு அழிப்பான். அந்த இடம் கறுப்பாகும். ஒரு நாள் இப்படி அழிக்க முயல்கையில், மெதுவாகச் சுடலையாண்டி என்று கூப்பிட்டு

ஆவுடையம்மாள் ரப்பரை நீட்டினாள்.

அதை வாங்கி அழித்து, திரும்ப அவள் டெஸ்க்கில் வைத்துபிறகு தேவைப்படும் போதெல்லாம் அவளிடமிருந்து ரப்பர் எடுத்துக் கொள்வான். சில சமயங்களில் பென்சில் வெட்டும் பிளேடு, கடனாகப் பத்துச் சொட்டு மை, சில்லறை வரைபட உபகரணங்கள்...

வகுப்பில் இருவருக்கும்தான் போட்டி. கள்ளம் இல்லாத, வன்மம் இல்லாத போட்டி. ஒருவரையொருவர் மிஞ்சுகையில் ஒரு பூரித்த சிரிப்பு.

சுடலையாண்டிக்குக் கணக்கு நன்றாக வரும். வகுப்பில் பன்னிரண்டாவது பயிற்சி நடந்தால் பதினைந்துவரை செய்து முடித்திருப்பான்.

‘சுடலையாண்டி, எப்படிச் செய்திருக்காம்னு பாப்பம்,’ என்று ஆசிரியர் அவன் நோட்டை வாங்கிப் பார்ப்பார். எல்லோரும் கணக்கு செய்கையில், சுடலையாண்டி ஆவுடையம் மாளின் கணக்குப்புத்தகத்தை வாங்கி பயிற்சிகளை எழுதி எடுத்துக் கொண்டிருப்பான். சில சமயம் - இடத்தில் அவன் இல்லாமல் இருந்தாலும் - இவன் நோட்டை எடுத்து அவள் பார்ப்பாள்.

தாத்தா மலையிலிருந்து கொண்டு வந்து தரும் பெரணி இலைகள், முளைக்கும் இலைகள் எல்லாம் சுடலையாண்டியின் நோட்டுப் புத்தகத்தினுள் இருக்கும்.

“சுடலையாண்டி, எனக்கொண்ணு தாயேன்!” என்று ஆவுடையம்மாள் கேட்பாள். ஏது காரணம் பற்றியும்- மதனிக்குச் சீமந்தம், பெரியப்பா மகளுக்குச் சட்டிபானை தொடுதல், அண்ணன் மகனுக்குப் பிறந்தநாள் என்று அவள் ஒரு நாள் வகுப்புக்கு வராவிட்டால், விட்டுப்போன பாடங்களை எழுத சுடலையாண்டியின் நோட்டையே வாங்கிக் கொண்டு போவாள்.

சுடலையாண்டி எட்டாவது படிக்கையில் –

ஆவுடையம்மாள் அன்று பள்ளிக்கு வரவில்லை.

மாலை ஆறரை மணி இருக்கும். பெரிய படிப்புரையில் உட்கார்ந்து தமிழ் பாடத்தை வாய்விட்டுப் படித்துக் கொண்டி ருந்தான், சுடலையாண்டி.

தாத்தா ஒட்டுப் படிப்புரையில் இருந்து பன்னரிவாளை அரத்தால் ராவிக் கொண்டிருந்தார். வீட்டினுள் ‘தட தட’ வென்று நாலைந்து பேர் ஏறி வந்தார்கள். பல வேசம் பிள்ளையின் மனைவியின் தம்பி, தோவாளைக்காரர். ஆவுடையம் மாளின் அண்ணன். இரண்டு மூன்று பெண்கள். சிறுமியர் பட்டாளம்.

“பாட்டா, தலைக்குத் தண்ணீ விட வீட்டுக்கு வாருங்கோ...”

“ஆங்..இன்னா வந்துட்டேன்...”

“யாச்சி, நீயும் வா...”

“யாரு? சொர்ணத்துக்க மகளா? ஏட்டி, பிள்ளை சும்மையிருக்கா...?”

“ஆமாத்தா.. சட்டுண்ணு வா என்னா?”

“இன்னா வாறேன்...”

சுடலையாண்டி தாத்தாவிடம் கேட்டான்.

“ஏந் தாத்தா தலைக்குத் தண்ணீ விடணும்”

ம்... பெரிய மனுசி ஆயிட்டா விடணும். ?”

“பெரிய மனுசியா எப்படி ஆவா?”

அது…

ஆத்தாளுக்குப் பொறுக்கவில்லை.

“பய என்னமெல்லாந்தான் போட்டுக் கொடையான்... பேசாம போலே... போயி பளமும் பஞ்சாரையும் வாங்கீட்டு வா...”

பக்கத்து வீட்டுப் பையனுடன் தலைக்குத் தண்ணீர் விடுகிற வீட்டுக்குப் போனான் சுடலையாண்டி.

கடல் போல் கிடந்த அந்தப் பெரிய வீட்டில் ஏகபோகம் பலவேசம் பிள்ளைக்கு. பலவேசம் பிள்ளையும் மனைவி சங்கர வடியும் மூத்த மகன் மனகாவலப் பெருமாளும் மருமகள் தாயம்மாளும் தவிர, மேலும்

இரண்டே பேர் தான். பலவேசம் பிள்ளையின் ஒரே மகள் ஆவுடையம்மாள். கடைக்குட்டி மகன் பாவநாசம்.

பல வேசம் பிள்ளை வீட்டுக்குச் சுடலையாண்டி போய்ச் சேர்ந்தபோது- தெருவெல்லாம் கலகலப்பு. பெஞ்சுகளில் ஆரோகணித்திருந்த வெளியூர் உறவாளிகள். உள்ளூர் தானமானக்காரர்கள். பண்ணையார்மார்கள் பெரிய பித்தளைத் தாம்பாளம். தாம்பாளம் மூன்று குமிழ்களில் பெஞ்சு மேல் நின்றது. தாம்பாளம் பொங்கப் பொங்க வெற்றிலைக் கட்டு பிரித்தபடி, பழுக்காப் பாக்குகள். யாழ்ப்பாணப் புகையிலை, தடைப் புகையிலை, கறண்ட வத்தில் சுண்ணாம்பு. வாய் சிவக்கப் போட்டுத் தெருவெல்லாம் துப்பினர். வீட்டின் மேற்கு, கிழக்குத் தெருப் படிப்புரைகளில் வாலிபர்கள். தெருவில் ஓடிப்பிடித்து விளையாடும் சிறுவர்கள். வேலை இருப்பது போல் போய் வரும் சிறுமிகள். காலில் வெள்ளிக் கொலுசும் இடுப்பில் தங்க ஒட்டியாணமும் விரலில் நெளிவும் பச்சை, நீல, சிவப்புப் பட்டுகளும் தலையில் கொழுந்து, பிச்சிப் பூவு மாகப் பெண்கள் ஒரே இரைச்சல்.

யாராரோ புதிது புதிதாக வீட்டினுள் போயினர். கையில் பெரிய பெரிய பாளையங்கோட்டன் குலைகள். வில் வண்டிகள் சில மேற்கே சாத்தாங் கோயில் திடலில் அவிழ்க்கப் பட்டிருந்தன. புதிதாக ஒரு டாக்ஸி வந்தது. ஒரு பேரிளம் பெண். பேருடம்பு ஆண். பன்னிரண்டு வயதுச் சிறுமி. ஏழு வயதுப் பையன். டிக்கியிலிருந்த பெரிய சிங்கன் வாழைக் குலை.

“அத்தான், வாருங்கோ... உங்களைப் பாத்துக்கிட்டுத் தான் தலைக்கு தண்ணீவிடலாம்னு இருக்கோம்.” பலவேசம் பிள்ளையின் உபசரிப்பு.

உள்ளே குரவைச் சத்தம்.

சிறு குரலெடுத்து ஒன்று. பெருங்குரலெடுத்து கும்பல்.

“ஏசத்தம் போட்டுக் கொலவிடுங்கோ பொண்டுகளா... மூணு முறை விடுங்கோ...” குரவை யொலி முடிந்ததும், மீண்டும் ஆரவாரம் கொண்ட பேச்சொலி. ஒரு பெரிய நார்ப் பெட்டி நிறைய இணுங்கிய பாளையங்கோட்டன் பழம். ஒரு தாம்பாளம் நிறைய வெற்றிலை. பித்தளை வாளி நிறையச் சீனி. சிறியதொரு கரண்டி. மூன்று பேர் விளம்புவதற்கு வந்து நின்றனர்.

“சின்னப் பிள்ளைகளுக்கு ஒண்ணு குடுக்கவா? ரெண்டு குடுக்கவா?”

விளம்ப வந்தவன் கேட்டான்.

சுடலையாண்டிக்கு ஒரு சந்தேகம். தான் சின்னப் பிள்ளையா? பெரிய பிள்ளையா? பெரிய ஆளாக ஆவது என்றால் எப்படி? மீசை முளைப்பதா? கைக்கிடையிலும் முகத்திலும் முடி முளைப்பதா? பீடி குடிப்பதா? ஆவுடையம்மாள் பெரிய மனுவி ஆனால் நான் சின்னப் பிள்ளையா?

"சின்னப் பிள்ளைகளுக்கு ரெண்டும் பெரிய ஆளுகளுக்கு மூணும் குடு. பளந்தான் நெறைய இருக்கே.”

பழமும் பஞ்சாரையும் வாங்கச் சிறுவர்கள் அடிபிடி. வீட்டின் உள்ளே பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் ஒரு புறம் விளம்பல் ஆகிக் கொண்டிருந்தது. வாங்கிக் கொண்டு வெளிப் போகும் சந்தடி.

கைக்குழந்தைகளுக்கு ஒரு பங்கு உண்டு என்பதால் குழந்தையோடு வந்த சிலர்.

குழந்தை வீட்டில் உறங்குவதால் எடுத்து வர முடியவில்லையே என்று மனதுள் அங்கலாய்க்கும் சிலர்.

“சவம் எங்கிண போய் வெளையாடீட்டு நிக்கோவ்...” என்று பெற முடியாத ஒரு பங்குக்காகப் பறக்கும் சிலர்.

பிறக்காத பிள்ளைக்காக ஏங்கும் சிலர்.

பறந்து பறந்து வாங்குவது சுடலையாண்டிக்கு வழக்கமில்லை. ஒன்றிரண்டு முறை பேச்சு நெஞ்சின் வர்மங்களில் பட்டு வலிக்கத் தொடங்கின.

“சவம் இப்பிடி ஏந்தான் பறக்கப்பா?”

“கெடைக்குமோ கெடைக்காதோண்ணு தான் பறக்கு...”

“அலவாதித்தனம் அப்பனுக்கே உண்டுமே.”

- என்ற தார் பாய்ச்சல்கள் தசையில் குத்தின.

எல்லோரும் பழம் வாங்கிக் கொண்டு ஒயத்தலைப்படுகையில்

சுடலையாண்டி போய் வாங்க எத்தனித்தான்.

“இன்னும் யாருலே வாங்கணும்? சீக்கிரம் வா....” என்று முடுக்குகையில், சென்று, கையேந்தி நின்று- அப்போதும் காரமாகப் பார்த்த விழிகள். சொந்த அப்பன் வீட்டுப் பொருள் பாழாகிப் போனதுபோல்.

அந்தரங்கத்தில் ஒரு சிரிப்பு. இன்று பெரிய மனுஷியாக ஆகிஇருப்பவள் தன்னுடன் படிப்பவள். சேக்காளி. தனக்கு இங்கோர் உரிமை இருப்பதாக...

“என்னத்தைப் பாத்துகிட்டு நிக்கே. வாங்கியாச்சுண்ணா போறாலா...?” கையில் வெற்றிலையும் படிகப் பொடியாகப் பரந்திருந்த சீனியும் அதன் மேல் பருத்துத் திரண்ட பழங்களும்...

மறுநாள் காலை வகுப்புக்குப் போனதும், வகுப்பறையில் மாணவர்களிடையில் ஒரு கிசு கிசுப்பு. அந்தோணி முத்துவுக்கு ஒரு முக்கியத்துவமும் கௌரவமும் வந்துவிடும். ஒன்பதாவதில் மூன்றாவது உள்ளிருப்பு. அவனுக்கென்றே வகுப்பில் சில வேலைகள் உண்டு. மர நடு விழாவுக்குக் கன்று பிடுங்கி வர, காடு மண்டிக்கிடக்கும் பள்ளிச் சுற்றைப் பறண்டிப்போட, சுதந்திர தினம், குடியரசுத் தினங்களில் பள்ளியை அலங்கரிக்க என்று புறப்படும் குழுவில் அந்தோணிமுத்துக்கு இடம் உண்டு.

மற்ற நாட்களில் -

“ஏ சம்முகம்... கணக்கு நோட்டைத் தாடே... வீட்டுக் கணக்கு எழுதீட்டுத் தந்திருகேன்...”

“சொடலை... இந்தப் படம் வரஞ்சிரேன் என் நோட்டிலே.” எனற கெஞ்சல்கள், திருவிழா நாட்களில் அதிகாரமாக மாறும்.

“சின்னப் பயக்க அந்தப் பக்கம் போங்கலே. சார் ஆளம் போருமா பாருங்கோ.என்ற ‘கர்வார்’ மிகுதியாகும்.

இன்றும் அதுபோல் ஒரு வாய்ப்பு அந்தோணிக்குக் கிட்டியிருக்கிறது என்ற நினைப்பில் சுடலையாண்டி பக்கத்தில் போய் நின்றான்.

சுடலையாண்டியைக் கவனித்து விட்டு அந்தோணி முத்து கேட்டான்.

“சொடலை என்னா? ஒனக்க சேக்காளி சமைஞ்சாச்சு கோளுதான்...”

“போடே ..

“என்ன போடே... பத்து நாளு களிச்சு வருவா பாரேன்...”

இவனைப் பொருட்படுத்தாமல் அவர்கள் பேசியதை எல்லாம் கேட்டுக் கொண்டு நின்றான். “ச்சீ ” என்றொரு அருவருப்பும் என்னவென்று புரிந்து கொள்ள முடியாததொரு ஆர்வமும். நம்ப முடியவில்லை. அவர்கள் பொய் சொல்லு கிறார்கள் என்றொரு எண்ணம். ஆனால் அந்தோணிமுத்தை நம்பாமலும் இருக்க முடியவில்லை.

இரண்டு மூன்று நாட்கள் வரை வகுப்பில் கிசுகிசுப்பு. "ஆவுடையம்மாள் சமஞ்சிட்டாளாம்...”

சுடலையாண்டியின் முதுகுக்குப் பின் இடம் காலியாகக் கிடந்தது. பழைய ஓர்மையில் ரப்பர் எடுக்க, பென்சில் எடுக்க என்று திரும்பித் துழாவி ஏமாந்து- அவன் அடுத்த சீட்டுக்காரி பாலாம்பாள் சிரித்தாள். சுடலையாண்டிக்கு என்னவோ போல் இருந்தது. ஒரு வாரம் சென்ற பின், தெற்குத் தெரு பாக்கியம் கேட்டாள். “சொடலையாண்டி, உங்கிட்ட நோட்டு கேட்டா ஆவுடை...”

“என்ன நோட்டு?”

“ முதல்லே இங்கிலீசும் சயின்ஸும் தருவியாம்... பொறகு எழுதிக்கிட்டு வேற வாங்கிக்கிடுவாளாம்...”

இவர்களிடம் எல்லாம் கேட்காமல் தன்னிடம் நோட்டு கேட்டு அனுப்பியதில் சுடலையாண்டிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. சமைந்து பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு ஆவுடையம்மாள் வகுப்பிற்கு வந்தாள். நீல நிறத்தில், நிறைய சுருக்கு வைத்து தைக்கப்பட்டுப் பாவாடை. அரக்குச் சிவப்பில் ஜெம்பர். நீலப் பட்டுத் தாவணி. முகமெங்கும் பூத்திருந்த மஞ்சள். கால்விரல்களில் கூட மஞ்சள். கைவிரல் நகங்களில், உள்ளங்கைகளில் மருதாணி கண்களில் ஒரு மருட்சி. சுடலையாண்டிக்கு ஆவுடையம்மாளை மறுபடி மறுபடி பார்க்க வேண்டும் போலிருந்தது. பார்க்கையில் கூச்சமாகவும் இருந்தது.

முன்னைப் போல் அவ்வளவு இணக்கமாக இல்லை ஆவுடையம்மாள்.

ஒரு தோரணை. ஒரு விலகல். பெஞ்சில் உட்காரும் போது பின்புறம் காலை மடக்கி வைத்துக் கொள்வது சுடலையாண்டிக்கு வழக்கம். முன்பு, திடீரென்று நினைத்துக்கொண்டு, காலைப் பின்புறம் மடிக்கையில், பின் வரிசையிலிருக்கும் ஆவுடையம்மாளின் நீட்டிய கால்கள் மெத்துப்படும். அவன் கால்களை அவள் அழுத்தி மிதிப்பதும், அவன் பதிலுக்கு மிதிப்பதும் எப்போதாவது நடக்கும் விளையாட்டு.

ஆவுடையம்மாள் பூப்பெய்தி வந்த பிறகு, சுடலையாண்டி யின் கால்களில் எப்போதாவது தட்டுப்பட்டால், அவள் கால்கள் காணாமற் போகத் துவங்கின. வெடுக்கென்று சொல்வதும் நடப்பதும் மாறிவிட்டது. குரலில் ஒரு பதம். நடையில் ஒரு மிதம்...

நோட்டுகள் தேவையென்றால் கூட அவனிடம் நேரில் கேட்பதில்லை. பக்கத்து இருக்கைக்காரியிடம் தூது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, பலவேசம் பிள்ளையிடம் பட்ட அடி மனதில் காய்க்கக் காய்க்க, சுடலையாண்டி அவளுடன் பேசுவது நின்று போயிற்று. ஒரு பகைப் பார்வை. நோட்டு, புஸ்தகம், பென்சில், ரப்பர் என்கிற பரிமாற்றங்கள் பங்கப்பட்டன.

ஒரு நாள் தாழக்குடி பள்ளத் தெருவிலிருந்து வரும் பார்வதி சுடலையாண்டியின் நோட்டைக் கேட்டாள். ஹைட்ரஜன் தயாரிக்கும் செய்முறையை அவன் நோட்டில் எழுதியிருப்பதைப் பார்க்க விரும்பினாள். பதினொன்றரை மணி இடைவேளையில் கொடுத் தான். மத்தியானம் சாப்பிட்ட பிறகு ‘ஏ’ பிரிவு பையன் ஒருவனின் ஆங்கில நோட்டை வாங்கிச் சுடலையாண்டி படித்துக் கொண்டிருந்தான். பேனா தேவையாக இருந்தது. வகுப்புக்குள் நுழைந்தான்.

ஆவுடையம்மாளைத் தவிர யாருமில்லை. இவனைக் கண்டு அவள் மிரண்டாள். சந்தேகத்துடன் என்ன படிக்கிறாள் என்று பார்த்தான். இவனுடைய நோட்டு. கையெழுத்தின் கோணல். இவன் கண்டு கொண்டான் என்பதை அவளும் கண்டு கொண்டாள். அலட்சியமாகப் பார்த்து விட்டுச் சுடலையாண்டி வெளியே நடந்தான்.

ஆக அவளால் ஆவலை அடக்க முடியவில்லை. மறுபடியும் தனது மகோன்னதம் நிருபிக்கப்பட்டது போல் சுடலையாண்டிக்கு ஒரு பெருமிதம். பெருமிதத்தின் அடியோட்டமாய் ஒரு வேதனை.

அன்றைய அந்தப் பெருமிதமும் வேதனையும் இன்றளவும் பாதிப்பை மாற்றிவிடவில்லை என்று எண்ணுகையில் சுடலையாண்டிக்குக் குழப்பமாக இருந்தது.

***

# பன்னிரண்டு

காலை நான்கு மணிக்கெல்லாம் சுடலையாண்டிக்கு விழிப்பு வந்து விடும். கீழ் வகுப்பு களில் படிக்கும் போதே காலாண்டு, அரையாண்டுத் தேர்வு சமயங்களில் காலையில் எழுந்து படிப்பான். பிறகு அதுவே பழகிப்போயிற்று. அலாரம் போன்ற சங்கதி எல்லாம் தெரியாது. காலையில் நான்கு மணிக்குப் பால் பண்ணைக்குப் பால் கறக்கும் கோனார் பத்மநாப பிள்ளை பாட்டா வீட்டில் மாட்டை அதட்டும் ஓசை கேட்கும். கறவை வாளியும் பித்தளைக் கேனும் மோதும் உலோகச் சத்தம். முதல் சத்தத்தில் சுடலையாண்டி விழிப்பான். விழித்து, படுக்கையின் சுகத்தில் சில நேரம் கண் மூடிக் கிடப்பான். "ரிங், ரிங்" " என்று வெற்று வாளியில் பால் பீய்ச்சும் ஓசை உறக்கத்தை விலக்கும்.

வழக்கமான நேரத்தில் இன்றும் விழிப்பு வந்தது. மார்கழி மாதத்துக் காலை. காற்று, சில் லென்று, பூவரச இலைகளில் நடக்கும் ஓசை, ஆற்றங் கரையில் வாகை மரம் ஒன்று காய்ந்து நெற்றுப் பட்டிருக்கிறது என்று தோன்றியது. 'கிலு கிலு' என்ற கிலுக்கம். அதிகாலையில் உள்ளமும் உடலும் கிளர்ந்தது. எழுந்து போய்ச் சுவரில், ஆணியில் தொங்கிய சுவரொட்டியின் ஒளியைப் பெரிதாக்கினான். மங்கலான வெளிச்சம். அடுக் களைக்கு எதிரே, அரங்குச் சுவரோரம் படிப்புரையி லிருந்த செம்புப் பானையிலிருந்து தண்ணீர் கோரி முகத்தைக் கழுவினான். கொடியில் கிடந்த துண்டால் துடைத்தான். தூக்கம் தெளிந்து விட்டிருந்தது. படிப்புரையில் ஏறி, விளக்கை எடுத்து, கள்ளிப் பெட்டி மீது வைத்துக் கொண்டு படிக்கலானான்.பொழுது நன்றாக விடிந்த பிறகு, வெளியே போய் வந்த தாத்தா சொன்னார்.

"மக்கா, இன்னைக்கு ஒரு நா காலேஜுக்குப் போகாண்டாம்.

"கண்களை உயர்த்திப் பார்த்தான் சுடலையாண்டி.

"ரெயிஸ்தர் கச்சேரிக்குப் போகணும். ரெண்டு சென்று மனையை விக்கதுக்கு அச்சாரம் வாங்கியிருக்கேன்..."

கொஞ்ச நாட்களாகவே வீட்டில் வறுமை ஆழமாகக் கடிக்கத் தொடங்கியிருந்தது. பல்லால் சதை பிடுங்கும் கடி. குப்பான் பிள்ளையின் கடன் நெருக்கடி.

ஆத்தாவிடம் இருந்து ஆட்சேபம் ஏதும் காணோம். அவர்களுக்குள், இது பற்றிய ஒரு ஒத்து தீர்ப்பு வந்து விட்டது போலும். குளித்து விட்டுச் சுடலையாண்டி தாத்தாவுடன் போனான். அரையாண்டுத் தேர்வுக்குச் சில நாட்களே இருந்தன. இன்று ஒரு நாள் சேதம்.

நாகர்கோயில் மணிக்கூண்டு சந்தியைத் தாண்டி, வேப்ப மூடு பஸ் ஸ்டான்ட் அருகில் பதிவாளர் அலுவலகம். பெரிய சுற்றுச் சுவர். உள்ளே வேப்ப மரங்கள் நிழலில் கும்பல் கும்பலாக மக்கள், தரகர்கள், சாட்சிகள், ஆதார எழுத்துக்காரர்கள். பதிவாளர் அலுவலகத்தின் எதிரே ஆதார எழுத்துக்காரர்களின் சிறிய அலுவலகங்கள். வெற்றிலை பாக்குக் கடைகள். போற்றி ஒட்டல். எப்போது பார்த்தாலும் ‘சாப்பாடு ரெடி' என்று தொங்கும் போர்டு.

அந்தச் சூழ்நிலையே வித்தியாசமாக இருந்தது. பரபரப்பாக ஓடுவோரும் நிதானமாக நடப்போரும் வெற்றிலை போட்டு உமிழ்வோரும் சட்ட நுணுக்கங்களை அலசுவோரும்.

சிலர் வந்ததும் சில நிமிடங்களில் புறப்பட்டுப் போயினர். சிலர் மணிக் கணக்காக காத்துக் கிடந்தனர். வீடும் வீடு சார்ந்த காலிப் புரையிடமுமான நாலு சென்று தாத்தாவே சம்பாதித்து வாங்கியது. தாத்தா பெயரில், சுய சம்பாத்தியமாக இருந்தது. காலி மனை இரண்டு சென்றுக்கு ஆயிரம் ரூபாய் கிரயம்.

பதிவாளர் முன்னால் தாத்தாவும் சுடலையாண்டியும் ஆதார எழுத்துப் பாப்பா ஐயரும், மனையை வாங்கும் பத்மநாப பிள்ளை பாட்டாவின் மகனுமாக நின்ற போதே மூன்று மணி தாண்டி விட்டது.

பயமூட்டும் அலுவலகச் சூழல். எடுப்பதும் கிடத்துவதுமாக அலைந்து கொண்டிருந்தவர்கள். பதிவாளர் தாத்தாவிடம் கேட்டார்.

“பணம் வாங்கீட்டேரா ஒய்?”

“ஆமாய்யா...

“பத்திரம் பதிஞ்சிரலாமா?”

“பதிஞ்சிரலாம்...

“இதிலே ஒரு ஒப்புப் போடும்...”

பணத்தை வாங்கி முந்தியில் முடிந்து கொண்டு, தாத்தாவுடன் நடக்கையில் - பழைய கடன் முந்நூறு, சில்லறைக் கைமாற்றுகளாக நூறு. எல்லோருக்கும் புதுத் துணி வாங்குவதாக ஒரு ஒப்பந்தம். என்ன மிஞ்சம்? ஐந்நூறு ரூபாய். இதில் இன்னும் நாலைந்து மாதக் கல்லூரிச் செலவுகள்...

துணிகளை வடசேரி மேட்டிலிருந்த ஒரு கடையில் வாங்கிக் கொண்டு, காப்பிக் கடையில் காப்பி குடித்து, வீட்டுக்கு நடந்து போக முயல்கையில், எதிரே பள்ளிக் கூடம் விட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் வந்து கொண்டிருந்தனர். நகரப் புறத்து மாணவர்கள் என்றாலே 'பளிச் சென்று இருந்தனர். கூட்டமாக ஏழெட்டு ஆசிரியைகள். நோக்கமின்றி அந்தக் கூட்டத்தைப் பார்க்கையில் - விழி மேட்டில் ஒரு அதிர்ச்சி. இந்தி டீச்சர். அவளும் அவனைப் பார்த்தாள். ஒரு ஆச்சரியம். பிறகு ஒரு புன்னகை. கூச்சத்துடன் எதிரே போய் வணங்கினான்.

“என்னப்பா சொடலையாண்டி, இப்பம் என்ன செய்யே?”

“பி.எஸ்ஸி.ஃ பைனல் இயர் படிக்கேன் டீச்சர்...”

“என்ன மேஜர்?”

“மேத்ஸ்...”

“நல்லா கவனமா படிப்பா.”

இந்தி டீச்சர் போய்விட்டாலும், மேற்கொண்டு தாத்தாவோடு நடக்கையில் பழைய ஞாபகங்கள். இந்தியில் தேறுவது அப்போது கட்டாயமாக இல்லை. தேர்வில் உட்கார்ந்தால் போதும். எனவே, சிரத்தை எடுத்துக்கொண்டு அதிகமாக யாரும் அதைப் படிப்பதில்லை. ஆனால், அதில் மட்டும் தோற்பது. என்பதில் சுடலையாண்டிக்கு உடன்பாடில்லை. தேறித்தான் ஆகவேண்டும். மற்ற பாடங்களைப் போல் கொள்ளையாக மதிப் பெண்கள் வாங்காவிட்டாலும், சுமாராகவேனும் வாங்க வேண்டும். மொத்த மார்க்கில் இந்திப் பாடம் சேராது. என்றாலும் சர்டிஃபி கேட்டை யாராவது பார்த்தால்

வழக்கமான ஐம்பது சதவீதம் சுடலையாண்டிக்கு வரும். ஆனால் பதினொன்றாம் வகுப்பில், காலாண்டுத் தேர்வுக்குப் பிறகு...

அந்தத் தேர்வில் அவன் ஏது காரணத்தாலோ இந்திப் பாடம் நன்றாகச் செய்யவில்லை. விடைத்தாள்கள் காட்டப் பட்ட போது சுடலையாண்டிக்குப் பகீரென்றது. நூற்றுக்கு முப்பத்து நான்கு. மற்ற எல்லாப் பாடங்களிலும் முதல் மார்க் வாங்கியும், பிராக்ரஸ் கார்டில் இந்தி மட்டும் சிவப்பில் அடிக்கோடிடப்படும் என்று உணர, ஒரு வகை ஆற்றாமை. அதற்கு உரமேற்றுவது போல ஆவுடையம்மாளுக்கு எழுபத்து மூன்று.

சுடலையாண்டிக்கு உடல் சுட்டது. வகுப்பில் ஆவுடையம் மாளைத் தவிர இரண்டு மூன்று பெண்களும் தேறியிருந்தனர். விடைத்தாளைத் தரும் போது இந்தி டீச்சரின் கீழுதட்டில் பூத்திருந்த ஏளனம்.

“மற்ற பாடத்திலெல்லாம் குதிரைக் குட்டி... இந்தியிலே களுதைக் குட்டி’

சுடலையாண்டிக்குச் சுள்ளென்று உறைத்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு இருக்கையில் அமர்ந்தான். விடைத் தாளை "படபடவென்று புரட்டிப் பார்த்தான். எங்கும் சிவப்பு வரைகள். என்றாலும் முப்பத்து நான்கு மதிப்பெண்கள் வாங்கிய தன்னை ஒரு மார்க் போட்டு டீச்சர் பாசாக்கி இருக்கலாம். வேண்டுமேன்றே அவள் பழிவாங்குவதாகத் தோன்றியது. தலையைத் தூக்கி வகுப்பைப் பார்த்தான். யாரும் இதைப்பற்றி கவலை கொண்டதாகத் தெரியவில்லை. அந்தோணி முத்து வாங்கிய சைபரை ஏதோ குடியரசுத் தலைவர் விருது போல் பாவித்து மயங்கிக் கொண்டிருந்தான்.

இராமலிங்கம் கேள்விகளைத் திருப்பித் திருப்பி எழுதிய தனக்கு எப்படிப் பதினாலு கிடைத்தது என்று மாய்ந்து போனான்.

மீதிப்பேர் அவரவர் கதையைப் பேசியவாறிருந்தனர்.

சுடலையாண்டிக்கு இருப்புக் கொள்ளவில்லை.

ஆவுடையம்மாளின் இரண்டு கண்கள் -

தன்னை நோக்கிச் சிரிப்பதாக,

எள்ளி இகழ்வதாக...

பக்கத்தில் இருந்த இராமச்சந்திரனின் விடைத்தாளைப் பார்த்தான், சுடலையாண்டி. அவன் நூற்றுக்கு இருபத்தெட்டுத் தான் வாங்கியிருந்தான். திலகரைப் பற்றிய அவன் கட்டுரைக்கு ஏழு மார்க் போட்டிருந்தது. தன்னை விடப் பெரிதாக எதுவும் எழுதியிருப்பதாகச் சுடலையாண்டிக்குத் தோன்றவில்லை. இரண்டு தாள்களையும் எடுத்துக்கொண்டு இந்தி டீச்சர் முன்னால் போய் நின்றான்.

“ராமச்சந்திரனுக்கு ஏழு மார்க்கு போட்டிருக்கு. எனக்கு ஏன் அஞ்சு?”

அவனை அசட்டையாகப் பார்த்தாள் டீச்சர்.

“அவன் நல்லா எளுதீருக்கான்...”

“நான் அதைவிட மோசமாகவா எளுதீருக்கேன்... ?”

“நீ எனக்கு எப்பிடி மார்க் போடணும்னு படிப்பிச்சுத் தராண்டாம்... போயி எடத்திலே இரி...”

வகுப்பில் தனது முதன்மையைக் கூட இவள் மதிக்கவில்லையே என்று ஒரு வெறி. தனக்கிருந்த ஸ்தானம் இதனால் மாசுறுவதாக ஒரு கோபம்.

தனது விடைத்தாளைக் கையில் தூக்கிப் பிடித்து, “பர்ர்…’ என்று இரண்டாக நான்காகக் கிழித்து டீச்சர் முன்னால் போட்டு விட்டு இடத்தில் வந்து அமர்ந்தான்.

நெஞ்சக் கூரை இடிவது போல் ஒரு படபடப்பு.

வகுப்பில் இரைச்சல் அடங்கி மௌனம் சுடர் விட்டு எரிந்தது. எந்தச் சட்டம்பியும் செய்ய அஞ்சும் செயல்…

சில விநாடிகள் அதிர்ந்து மௌனம் சூடிய வகுப்பில், கசமுசப்பு. மெலிய குரலில் பேச்சொலிகள். சுடலையாண்டி கரும் பலகையை வெறித்தான். உதிர்ந்து கிடந்த தாள்களை மௌனமாகப் பொறுக்கிய இந்தி டீச்சர் தலைமையாசிரியர் அறைக்குப் போனாள். ஆசிரியர் இல்லாத வகுப்பின் கொந்தளம் குலுங்கியது. பெரியதொரு மழையின் சத்தம். அடுத்த வகுப்பு ஆசிரியர் எட்டிப் பார்த்தார்.

விளைவுகளைப் பற்றிய யோசனையோடு சுடலையாண்டி உட்கவிந்தான். முகத்தில் இறுக்கத்தோடு டீச்சர் வந்தாள்.

“சுடலையாண்டி எட்மாஸ்டர் கூப்பிடுகாரு...”

தலைமையாசிரியர் அறைக்குச் சுடலையாண்டி போவது இது முதல் முறை அல்ல.

நோட்டோ புத்தகமோ வாங்காதிருந்து இறுதி எச்சரிக்கைக்காக-

வகுப்பாசிரியர் வரவில்லை என்று சொல்வதற்காக - ஆசிரியர் இல்லாத வகுப்பில் பேசியவரின் பெயர் எழுதிக் கொண்டு.

ஆனால் இப்போது –

தலைமையாசிரியர் அறைக்குள் நுழையும் போதே, ஒரு மாதிரியாக இருந்தது. ஏதோ குனிந்து எழுதிக் கொண்டிருந்தவர் இவன் நிழல் கண்டு நிமிர்ந்தார்.

“என்னா சொடலையாண்டி? நீயும் சீமத்தனம் பண்ண ஆரம்பிச்சாச்சா..? உன்னை நல்ல பிள்ளைண்ணுலாடே நினைச்சேன்.”

“…”

“ம்...நீ இப்படிச் செய்யலாமா? நீ மானிட்டரில்லா டே... டிசிப்பிளின் வேண்டாமா? இல்லே இந்த வருஷத்தோட போப்போறமேண்ணு சட்டம்பித்தனம் காட்டுகியா?”

“எனக்கு மட்டும் மார்க்கு...”

“ டீச்சருக்கென்ன பயித்தியமா புடிச்சிருக்கு... உனக்கு மட்டும் குறைச்சுப் போட? மார்க் கிடைக்கல்லேன்னா அடுத்த முறை நல்லா படிக்கணும். பேப்பரைக் கிழிச்சுப் போட்டா... ம்..?

“சரி, கையை நீட்டு...”

“ சார், இனிமே செய்யலே...”

“ சரி, இப்ப செய்ததுக்கு மூணு வாங்கிக்கோ... மறந்து போகப்பிடாது

பாரு...”

நீட்டிப் பிடித்த வலது கை வெடவெடத்தது. விரல் நுனியில் தீயாக வந்து விழுந்த முதல் பிரம்படி. சுடலையாண்டி வாய் விட்டு அழவில்லை. ‘உஸ்’ என்று ஒரு ஓசை, மறுமுறையும் கை நீட்டி...

கை விரல்கள் ‘கண கண’வெனத் தீக்கங்காய் கனன்றன.

“சரி, போ... இனிமேல் ஒர்மை இருக்கும்...”

இடது கையால் வலது கை விரல்களைத் தேய்த்த வண்ணம் கண்ணீரைத் துடைத்து அழித்து, பொங்கும் அழுகையைப் பிடித்து இழுத்து நிறுத்தி -

வகுப்பின் வாயிலில் போய் நின்றான் சுடலையாண்டி. இடத்திலே போய் இரி...”

உட்கார்ந்ததும் கல்லானான். வகுப்பு பூராவும் அவனை வைத்த கண் பிடுங்காமல் பார்த்தது. கரும்பலகையை வெறித்த வாறிருந்தவனின் முகத்தைக் குழி பறித்த கண்கள். இலக்கின்றி வெறித்திருந்த சுடலையாண்டி கண்ணைப் பெயர்த்தபோது, அவனையே பார்த்தவாறிருந்த டீச்சரின் கண்கள் இலக்கு நீங்கின.

அடிக்கொரு தரம் மூக்கை உறிஞ்சிக்கொண்டு, கண்களின் சரத்தைத் துடைத்துக் கொண்டு –

நெஞ்சுள் ஒரு வஞ்சம் திரண்டது.

"ஆவுடையம்மாள் ஒவ்வொரு கேள்வியாய் படிச்சு அதுக்கு நீ எழுதியிருக்கும் விடையையும் படி.”

ஒரு தனிப் பெருமை வந்ததே போன்ற மிடுக்குடன் ஆவுடையம்மாள் குரல் ஒலித்தது.

"அவரவர் ஆன்சரைச் சரி பாருங்க...”

பேப்பர்கள் சலசலத்தன. அநேகருக்குச் சரி பார்க்க ஏதுயீல்லை. எனவே வாசிக்கும் ஆவுடையம்மாளையும், டீச்சரையும், ஞாபகம் வந்த போது சுடலையாண்டியையும் வெறித்தனர்.

விடைகளை வாய்விட்டு ஆவுடையம்மாள் படித்துக் கொண்டிருக்கையில், ஒரு தாழ்வு உணர்ச்சி சுடலையாண்டியினுள் விளைத்தது. மகத்துவம் மாசுண்டது போல்...தாழ்மையும், குற்றமும், பங்கப்பட்ட பெருமையுமான கலவை முகத்தில் குழம்பியது. இடையிடையே நிறுத்தச் சொல்லி, ஏதோ விளக்கிய வாறு இருந்தாள் டீச்சர்.

டீச்சரின் கண்கள் அவனைக் கவனித்தன. அவனால் அதை உணர முடிந்துது. மனதுள் கறுவிக் கொண்டான். அவமானப் படுத்தியவள், தலைமையாசிரியிடம் இருந்து அடி வாங்கித் தந்தவள். கடுமையை எல்லாம் திரட்டி முகத்தில் பரப்பினான்.

மறுநாள் மாலை இரண்டே முக்காலுக்கு இந்தி வகுப்பு. உடலை மூடிப் பொதிந்தவாறு, கையில் புத்தகத்துடன் வகுப்பில் நுழைந்தாள்.

“நமஸ்தே!”

எழுந்து நின்ற வகுப்பு எதிரொலித்தது.

சுடலையாண்டி டீச்சரைப் பார்த்தான். அழகாக இருந்தாள். வழக்கமாக அவள் சிரிப்பது அவனுக்குப் பிடிக்கும். நேற்றைய இறுக்கம் இன்னும் அவனிடம் மீதமிருந்தது.

பாட புத்தகத்தை விரித்தனர். ஏற்கனவே நடத்தியிருந்த பாதிப் பாடம். வீண்மீன்கள் பற்றிய ஒரு பாட்டு.

“ஜில்மில் ஜில்மில் சுந்தர் தாரா.”

ஒரு முறை நடத்தியிருந்த பாதியைப் படித்தாள் டீச்சர்.

“சுடலையாண்டி, வாசி...”

சுடலையாண்டிக்கு அந்தப் பாதிப் பாட்டு மனப்பாடம் ஆகியிருந்தது. பெரும்பாலோர் வரிகளின் இடையில் தமிழில் எழுதி வைத்த மனப்பாடம் செய்திருந்தனர்.

இந்திப் பாடத்தில் இது வழக்கம். திடீரென்று வாசிக்ககச் சொல்லுகையில் படிக்கத் தெரிய வேண்டுமே!

டீச்சர் பெயர் சொன்னவுடன் எழுந்து நின்றான். கையில் தூக்கிப் பிடித்த புஸ்தகம். வாயிலிருந்து சொல் ஏதும் பெயரவில்லை.

“ம்… வாசி…”

“…”

“சும்மா நிண்ணா எப்பிடி? வாசி..”

சுடலையாண்டி மனதுள் ஒரு தீர்மானம். இவளை ஒரு கை பார்த்து விடுவது.

“தெரியல்லே...”

“தெரியல்லேண்ணா எப்பிடி?”

“தெரியாட்டா எப்பிடி வாசிக்கது?”

வகுப்பு முழுதும் நிமிர்ந்து சுடலையாண்டியைப் பார்த்தது. இவன் ஒரு போருக்குத் தயாராகி இருக்கிறான் என்பதை உணர்ந்த இந்தி டீச்சரின் முகம் சிவந்தது. இவனை என்ன செய்வது?

“சரி. இன்னொருக்க படிக்கேன்... கெவுனி... இல்லே... ஆவுடையம்மை படி. நல்ல ஒறச்சுப் படி. தெரியாதவாளுக்கெல்லாம் கேக்கட்டும். சுடலையாண்டி, பாடத்தைப் பாரு...”

தலையை ஒரு வெட்டு வெட்டி, இரட்டைச் சடையைக் குலுக்கி, நிமிர்ந்து படிக்கத் தொடங்கினாள், ஆவுடையம்மாள். கவனிப்பது போல் சுடலையாண்டி பாவனை செய்தான்.

படித்து முடித்துவிட்டு மிகுந்த கௌரவத்துடன் உட்கார்தாள்.

“சரி... இப்பம் படி சுடலையாண்டி...

”சுடலையாண்டி எழுந்து நின்றான், நெடுமரம் போல்.

அவன் அடம் டீச்சரை முகம் சிவக்கச் செய்தது. கண்களில் நீர் சுரந்தது. சற்று நேரம் நாற்காலியில் அமர்ந்து பராக்குப் பார்த்தாள். தன்னுள் ஒரு இரக்கம் சுரப்பதைச் சுடலையாண்டியால் உணர முடிந்தது. வேண்டும்

உனக்கு. நன்றாக வேண்டும். வகுப்பு திகைத்து உட்கார்ந்திருந்தது. சுடலையாண்டியிடம் எதிர்பார்க்காத ஒன்று. அவனைப் பார்த்து முகத்தை வலிப்புக்காட்டி, பக்கத்தில் இருந்த பாலாம்பாளிடம் கிசு கிசுத்தாள் ஆவுடையம்மாள்.

மறுபடி தொடர்ந்த இந்தக் கதை காரணமாக இவனைப்பார்த்ததும் இந்தி டீச்சருக்கு ஒரு அலட்சியம். மற்ற மாணவர்களைப் போல் இவனும் வினாக்களையே திரும்பவும் விடைத்தாளில் வரைய ஆரம்பித்தான். மாதத் தேர்வுகளில் சைபர்கள் கிடைத்தன. ஆனால் அரசாங்கத் தேர்வு எழுதி, சான்றுப் புத்தகம் வந்த போது, டீச்சருக்கே ஆச்சரியமாக இருந்தது. அறுபத்தெட்டு மதிப்பெண்கள் வந்திருந்தது. எல்லா ஆசிரியர்களிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டது போல், இறுதியில் இந்தி டீச்சரையும் பார்த்தபோது, சுடலையாண்டிக்கு வெட்கமாக இருந்தது.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு நேர்ந்த அந்தச் சந்திப்பின் முடுக்கத்தில் பழைய ஞாபக அலைகளிடையில் சுடலையாண்டி தாத்தாவுடன் நடந்தான். மனையை விற்றது சம்பந்தமாகத் தாத்தா ஏதோ சொல்லிக் கொண்டே வந்தார்.

“இதை பத்திரம் முடிக்கச்சிலே எனக்கு முப்பது வயசு. ஒனக்க அப்பன் பொறந்து ஒரு சீட்டு கெட்ட ஆரம்பிச்சேன். பூச்சீட்டு, பூவுக்கு ஒரு கோட்டை நெல்லு. பத்துப் பூவு அஞ்சு வருசம்... அதைப் புடிக்காம விட்டு, கரை நெல்லு போக ஒம்பதரைக் கோட்டை நெல்லு. அப்பம் நெல்லுக்கு வெலை யேது? இப்பத்தைப் போலையா? நெல்லு வித்து உமையம்மை கிட்டே இருந்து நாலு சென்று மனையை வாங்கினேன். அதுலே கொஞ்சம் கடம். அதைத் தீக்கவே அஞ்சு வருசம் ஆச்சு... பொறகுதாலா இந்த மேலத் திண்ணையும் அரங்கும் வச்சது. பொறவாசல்லே ஒரு கருகப்பிலை நிண்ணு. உனக்குத் தெரியாது. பொறவு மாடு புடிச்சதும் மாடு கெட்ட தொளுவு வக்கணும்னு ஒனக்க அப்பன்தான் கருகப்பிலையை மொறிச்சான் பாத்துக்கோ...”

பேச்சை 'உம்' கொட்டிக் கேட்டவாறு, தன் நினைவுகளில் அலைக்கழிந்து சுடலையாண்டி நடந்தான்.

***

# பதின்மூன்று

அரையாண்டுத் தேர்வு முடிந்து ஜனவரியில் கல்லூரி திறந்தது. பாடங்கள் வேகமாகக் கரைந்தன. தேர்வுக்கு முன் தங்கள் பகுதிகளைத் தீர்த்துக் கட்டி விட வேண்டும் என்ற வேகம், சம்பந்தப்பட்ட எல்லாப் பேராசிரியர்களிடமும் தீவிரமாய் இருந்தது. கணக்கிட்டுப் பார்த்தால் இன்னும் முழுதாய் இரண்டு மாதங்கள். பிறகு பதினைந்து நாட்கள் படிப்புக்கான விடுமுறை.

அரையாண்டுத் தேர்வு முடிந்தவுடனேயே படிப்புக்கான அட்டவணையைப் போட்டு வைத்துக் கொண்டான் சுடலையாண்டி. பிரதானமான பகுதிகள் இனிமேல் தான் வர இருக்கின்றன. ஏற்கனவே இரண்டரை ஆண்டுகளாக நடத்தியிருந்த பாடங்களைத் திருப்பிப் பார்க்க வேண்டும். புதிதாகப் படிக்க வேண்டும்.

நல்ல காலமாக இந்த ஆண்டில் என். சி.சி பயிற்சி இல்லை. ஒரு கும்பிடு. பசித்த வயிற்றுடன் “சாவ்தான் விஸ்ராம்” அடித்தது போதும். “ஸம் ஜவான் ஏக் கதம் ஆகே. விஸம் ஜவான் ஏக் கதம் பீச்சே சல்” என்றதும், நாம் சொன்னது ஒற்றைப் படையா இரட்டைப் படையா என்று மயங்கி, ஐயுற்றுத் தப்பான வரிசையில் போய் நின்று இளித்து, " நான் என்ன சொல்லுது? நீ என்ன செய்யுது?” என்று பயிற்சியாளர் பேசும் இலக்கணச் சுத்தமான தமிழில் அல்லலுற வேண்டாம்.

ஆனால், அதற்குப் பதிலாகச் சிறப்பு வகுப்புகள். தினமும் காலையில் ஒன்பது முதல் பத்துவரை தேவைப்பட்டால் மாலையில் ஐந்து முதல் ஆறு வரை. வானவியல் பயிற்றும் சுந்தரமூர்த்தி கட்டித் தோல்யோக சித்திக்காரர். எவன் பொண்டாட்டி எவனுடன் போனாலும் லெப்பைக்கு எட்டுப் பணம் என்ற மனோ நிலை.

கணிதப் பிரிவின் பேராசிரியர்களின் ஆங்கிலம் உலகப் புகழ் பெற்றது. “தேர்ஃபோர்”, “ஈஸ் ஈக்வல் டு” என்பது போல் குறைந்த பட்சத் தேவைகள். இடையே தாய்மொழி புகுந்து விளையாடும். சுந்தரமூர்த்தியானால் சொல்லவே வேண்டாம்.

“தோஸ் ஹகு ஆர் ஹோம் ஒர்க் செய்யலே வெளில போங்கோ...” என்று விளாசுவார். இவர் எக்ஸ்ட்ராகிளாஸ் வைத்து உறங்குபவர். என்றாலும் பெரும்பாலான மாணவர்களுக்கு இவரிடம் ஒரு பயம். மரியாதை கெட்ட

பயம். மனிதனிடம் குசும்பு அதிகம். தலைமைப் பேராசிரியரிடம் போய் வேலைத்தனங்களைக் காட்டி விடுவார்.

இதெல்லாம் இருந்தாலும், சிறப்பு வகுப்புகள் கட்டாயம் கொண்டதில்லை. ஆகையால் வகுப்பறை மெலிந்திருக்கும். ஆன்சிலரி பிஸிக்ஸில் சவுண்ட் நடத்தும் செந்தாமரைக்கு ரெகுலர் வகுப்பே கிடையாது. வாரத்தில் ஒரு தனி வகுப்பு. தன் மாணவர்களில் பலரின் முகமே தெரியாது என்பது அவரின் மனக்குறை.

காலையில் சீக்கிரமே புறப்பட்டு வருவது சிரமமாக இருந்தது சுடலையாண்டிக்கு. அது போலவே சாயங்காலமும். கல்லூரியில் இருந்து புறப்படும் போதே பொழுது அடைந்து விடும். பிறகு நடை - வாழ் நாளையே நடந்து அளக்க முயல்வது பொல் -

நடையாவது பராவாயில்லை.

பசி -

ஒழுகினசேரிப் பக்கம் வருகையில், மூலையில் இருக்கும் 'சத்தியானந்தா விலாஸ்'… எப்போதாவது தாத்தாவுடன் நாகர் கோயிலுக்கு வரும்போது, தாத்தா வாங்கித் தருவார். மூன்று தோசை, ஒரு ரசவடை, ஒரு சுக்குக் காப்பி. மாலையில் எக்ஸ்ட்ரா கிளாஸும் முடிந்து, ஆறே முக்கால் மணிவாக்கில் அந்த மூலையைக் கடக்கும் போது...

மத்தியானம் சாப்பிட்ட சில பிடிப் பழையது சாம்பல் ஆகிய பின் தொடர்ந்து வயிற்றில் எரியும் தீ...

கல்லில் முறுகும் புளித்த மாத் தோசை...

சுக்குக் காப்பிகூட வேண்டாம்.

மூன்று தோசையும் ஒரு ரசவடையும் தின்ன நாற்பது காசுகள் இருந்தால் போதும். நிரந்தரக் காப்பீடாகச் சட்டைப் பையில் கிடக்கும் எட்டணாத் துட்டைக் கை விரல்கள் ஆசையுடன் தடவிப் பார்க்கும்.

ஒரு சலனம்...

ஒரு சபலம்...

மனக்கதவை மறுபடியும் தாழிடுகையில், தீச்சுவாலை கண்களின் வழியாக வெளிப்பாய யத்தனிக்கும்.

தை மாதப் பருவமழை நாலைந்து நாட்களாகவே தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. அடையடையாக விழுந்து அறைந்தது. ஏற்கனவே குளங்கள் "கெத்துக் கெத்தெ' ன்று நிரம்பி இருந்தன. உறைத்துக் காற்றடித்தால் சாலை மீது தண்ணீர் வாரி அடித்தது. பழையாற்றில் செம்மை புரண்டு மறிந்தது. பாலத்திலிருந்து சில அடிகள் கீழே வாழையை அடித்துக் கொண்டு, தாழையை முறித்துக் கொண்டு, பாறை மீது 'பளார் பளார்' என்று அலைகள் மோத-

இரவு வீட்டில் படுத்து உறங்கும்போதுகூடப் பாறையாற்றில் நீர் பாயும் இரைச்சல். 'கும்' மென்று சீரான ஓசை. பாறையாற்றுப் பாலத்தின் மேல் நின்று, ஓடுகின்ற தண்ணீரைப் பார்த்தால், பல மைல் வேகத்தில் பாலம் பின்னோக்கி விரைவது போல் ஒரு மயக்கம். வெகு நேரம் பார்த்தால் தலை சுற்றும்.

காற்று நீருண்டு சுழித்தது.

தேரேகாலில் இரு கரையும் தொட்டு, வெண்ணுரை கொழித்து. ஆற்றின் குறுக்கே இறங்கி வயலுக்குப் போக முடியாது. நெஞ்சுக்கு ஆழம். குளிக்கும் போது கூட மனதார சூரங்குளத்தில் யாரும் துணி நனைப்பது கிடையாது. எனவே கிழக்கே தாழக்குடி பாலம் சுற்றிக்கொண்டோ, மேற்கே பழையாற்றின் - பாறையாற்றுச் சீப்பு வழியாகவோ வடபத்துக்குப் போக வேண்டியிருந்தது.

குளிப்பதற்கு மட்டும் சிறு வயது வாலிபர்களுக்கு ஒரு ஆனந்தம். 'புதுத் தண்ணீ புடிக்காதுலே!' என்று எல்லாப் பெற்றோரும் எச்சரிக்கை செய்தாலும், குளிப்பது மட்டுமே தொழிலாகக் கொண்டு ஒரு கூட்டம். பன்னிரண்டு மணி இளம் சூட்டில் வெயில் காய்ந்தவாறு தண்ணீரில் இறங்கினால், கண்கள் சேவற் கொண்டை போல் சிவந்து விடும். கை விரல்கள் சுருக்கம் கண்டு, உடம்பு குளிர, பற்கள் தாளமடிக்க.

முன் தினமும் இரவு விடாத மழை.

“சவம் இப்பிடிக் கொட்டித் தீக்கே? இனியும் வெள்ளம் வந்தா என்னத்துக்கு ஆகும்?

இரவு ஆத்தா முனகினாள்.

காலையில் கல்லூரிக்குப் புறப்படு முன்குளிக்கப் போகையில் தண்ணீர் படித் துறையின் கடைசிப்படியைத் தொட்டு ஓடியது. வடகிழக்கு மூலைகளில் மேகம் சூலிழந்து கொண்டிருந்தது. எதிரே தென்பட்ட முகங்களில் திகைப்பின் வரிகள். புத்தகங்களை எடுத்துக் கொண்டு, கீழ் படித்துறை வழியாகக் கல்லூரிக்கு நடக்கையில், கூடிக் கூடிக் பேசிக் கொண்டிருந்தனர்.

“இப்பிடிப் பெய்துண்ணா ஒடப்புத்தான்... செவத்தியான் வீட்டுக்கரை எவ்வளவு நேரம் தாங்கும்?” என்று யாரோ சொன்னார்கள். நீர் மட்டம் காலையை விட உயர்ந்திருந்தது. மனதில் பயம் மூண்டாலும் வழித்து வெளியே வீசிவிட்டு அவன் கல்லூரிக்கு நடந்தான்.

புத்தகங்கள் நனையாமல் பாலிதீன் உறைக்குள் போட்டு சுடலையாண்டி கட்டியிருந்தான். உரச் சாக்கினுள் வரும் பெரிய தொரு பாலிதீன் உறையை மடித்துத் தலைக்குக் கொங்காணியாய் போட்டிருந்தான். காற்று சுள்ளென்று அறைந்ததால் உடல் கிடுங்கியது. பொடிப் பொடியாய் வானம் சிணுங்கியது. முழுதும் நனையாமல் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்ததே பெரும்பாடு.

நல்ல காலமாக அன்று மாலையில் தனி வகுப்பு இல்லை. ஐந்து மணிக்குக் கல்லூரி விட்டுப் புறப்பட்டதும் வெள்ளம் மீண்டும் கவலையாயிற்று. சீக்கிரம் வீடு போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்ற துடிப்பில் நடையை எட்டிப் போட்டான், சுடலையாண்டி. மீனாட்சிபுரம் வந்திருக்க மாட்டான். தூறிக் கொண்டிருந்த மழை இருளாக அடைத்தது, பேரிருள் கவிந்தது. இரவு ஏழரை மணி போல் ஒரு இருட்டு. பஸ்கள், கார்கள் எல்லாம் விளக்குப் பூத்தன.

“ஊய் ஊய்’ என விசிலடித்தது காற்று. மழைச்சிணுங்கலைப் பொருட்படுத்தாது ஒழுகினசேரிப் பாலத்துக்கு வந்தான்.

இது என்ன?

பாலத்தின் கீழே பாய்வது ஆறா? கடலா?

ஒரு இரைச்சலோடு பாயும் பெரு வெள்ளம். நெஞ்சு பயம்தின்றது. பாலத்தைக் கடந்ததும், வீசிய வாடைக் காற்றோடு பிணம் கருகும்

நாற்றம். ஓட்டமும் நடையுமாக, மழையில் உடை நனைவதையும் பொருட்படுத்தாமல், புத்தங்களை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு

பாதி தூரம் வந்த பிறகுதான் ரோடு மறிந்து முட்டளவு வெள்ளம் பாய்வதைக் கண்டான்.

ஒழுகினசேரிப் பாலம் தாண்டியதும், சாலை குத்தற இறக்கம். இரண்டு புறமும் வயற் காடுகள். சாலை இறங்கி தணிந்து மறபடியும் மேலேறும். சாய்வானதொரு சப்பாறு போல் - தண்ணீர் சத்தமின்றிப் பாய்ந்தது. தண்ணீரை விலக்கிக் கொண்டு லாரி யொன்று வந்தது. இரு புறமும் அலை எழும்பியது. கடந்து போய் விடலாம். இல்லை, திரும்பி விடலாமா? திரும்பினால் எங்கே போவது? மழை எப்போது நிற்குமோ? வீட்டில் ஆத்தாவும் தாத்தாவும் தேட மாட்டார்களா? தாத்தா வீட்டில்தான் இருக்கிறாரோ? இல்லை எங்காவது வேலைக்குப் போயிருப்பாரோ?

போயிருக்க மாட்டார்; இந்த மழையில் எங்கே போவார்? என்ன வேலை வைத்திருப்பான்?

அறுவடை இன்னும் சரியாகத் தொடங்கி யிருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக வாசறு மிண்டான் அறுவடை யாகப் பத்துப் பதினைந்து நாள் செல்லும்.

வேலையேதும் வெளியே இல்லாவிட்டாலும், பெரு வெள்ளக் காலங்களில் தாத்தா சும்மா இருக்கமாட்டார். வெள்ளத்தில் மிதந்து வரும் புன்னைக் கிளைகள், தென்னை மடல்கள், தேங்காய்க் கதம்பைகள், பாளைகள், காட்டுச் செடிகள் என்று மூன்று மாதத்துக்குத் தேவையான விறகு சேர்த்து விடுவார். காயப் போட்டுக் காயப்போட்டு ஆத்தாவுக்கு எரிக்க வேண்டிய வேலை. "கள்ளி அஞ்சாறு பாத்தாலே மக்கா’ என்று கொஞ்ச நாள் சத்தம் கேட்காது.

தண்ணீர் முழங்காலில் ஓடியது. பின்னால் ‘கள கள’ என்று ஒலி யெழுப்பிக் கொண்டு வில் வண்டி,முன் திரையை விலக்கிக் கொண்டு ஆவுடையம்மாள் தண்ணீரைப் பார்த்து “உஸ்” ஸென்று வியப்பதைக் கண்டான் சுடலையாண்டி. புருவங்கள் நெரிந்து கூடிநின்றன. நெற்றியில், கண்ணில், உதடுகளில் வியப்பு பேசியது. வண்டி சுடலையாண்டியைத் தாண்டிக் கொண்டு ஓடியது. கொஞ்சு தூரம் இடைவெளி விட்ட பிறகு அவன் ஓட ஆரம்பித்தான் தலையில்

கொங்காணியோடு ஓடுவது சிரமமாக இருந்தது. சினிமா நடிகையின் மார்த்துணி போல் இடம் மாறி இடம் பெயர்ந்து அவனை அலைக்கழித்தது. அயர்ந்த நேரத்தில் கதாநாயகன் கரம் போல் காற்று அதைப் பறித்துக் கொண் டோடியது. கொங்காணிபோட்டிருந்தாலும் முக்கால் வாசி நனைந்திருந்தான் சுடலையாண்டி. தலை மட்டும் பாக்கி. இப்போது அதுவும் போயிற்று. ஊசியாகக் குத்திய மழைத் துளிகள் தோலைத் துளைத்து எலும்பைச் சுரண்டின.

ஓட ஓட உடலில் கிளர்ந்தது வெப்பம். தலைவழியாக முகத்தில் வழிந்து வாயுள் தெறிக்கும் மழை நீர் வழிந்த நீரைத் துப்பிக்கொண்டு, புத்தகத்தை மட்டும் நெஞ்சோடு இறுக்கி...

புத்தங்களையாவது முருகேசன் வீட்டில் போட்டு விட்டு வந்திருக்கலாம். பத்திரமாக இருக்கும். ஓடுவதற்கு ஏதுவாக இருக்கும். ஆனால் இப்படி ஆகும் என்று யார் கண்டது.

ஆவுடையம்மாளின் வண்டிக்காரன் தானியேல் காளையை விரட்டிக் கொண்டு போனான். என்னதான் பின்னால் ஓடினாலும் வண்டி ஓடுவது கண்ணுக்குத் தெரியவில்லை. சத்தம் மட்டும் தொலைவில் கேட்டது. வண்டியின் பின்னாலேயே ஓடி ஊரைச் சேர்ந்துவிட வேண்டும் என்ற நினைப்பில் ஓடினான் சுடலையாண்டி

தார் ரோடுதான் என்றாலும் சதசதவென்றிருந்தது. அதிகமாக நாலைந்து நாளாக மழை பெய்வதால் சேற்றுக் கலங்கல் இல்லை. பத்துக் காட்டிலிருந்து ரோட்டுக்கு ஏறிய நத்தை, சிப்பி, தவளைக் கூட்டங்கள். நத்தையானாலும் சிப்பியானாலும் மிதித்தால் போச்சு 'சத்தக்" என்று பொடிந்தாலும் பொடியும். நறுக் கென்று பாதத்தின் உப்புக்குத்தியிலோ படத்திலோ தைத்தாலும் தைக்கும். கால் பாதங்கள் தண்ணீரில் நடந்து நடந்து நுங்கு போல் மெத்திட்டு வெளியோரங்களில் வெண்மை தோன்ற ஆரம்பித்தன. சந்தேகம் தோன்றும் இடங்களில் காலைப் பொத்திப் பொத்தி வைத்து ஓடுவது சிரமமாக இருந்தது. சாலையின் குழிகளிலெல்லாம் தண்ணீர் நிரம்பித் துளும்பியது. மழைத் துளிகள் பட்டுச் சிதறின.

ஓட்டுப்புரை விலக்கில் திரும்பி வடக்கு நோக்கி ஓடுகையில் - ரோடெங்கும் ஆற்றிலிருந்து கரையேற்றிப் போட்டிருந்த பதவல்கள் தாழை மரங்கள், வாழைத் தோகை, ஈச்சமூடு என்று குத்தி குத்தியாகக்கிடந்தன. இந்தப் புத்தகங்கள் இல்லையானால் கொஞ்சம்

வேகமாக ஓடலாம். ஒரு கையை வீச முடியவில்லை. சுடலையாண்டி இயல்பிலேயே விளையாட்டில் சூரப் புலி இல்லை. பள்ளி விட்ட பின்பு கால் பந்தோ, ரிங் டென்னிஸோ விளையாட வயிறு அனுமதித்ததில்லை.

பள்ளி இல்லாத நாட்களிலும் கிளியாந்தட்டு, குச்சிப்பிள்ளை அடி, கவிட்டான் கம்பு வீச்சு, சடுகுடு என்று அவனால் போக முடியவில்லை. ஏதாவது ஒரு தேவை, ஒரு அவசியம் கட்டிப் போடும். விளையாடப் போனாலும் சோபிதங்கள் ஏற்பட்டதில்லை.

ஒரு முறை பொங்கல் விழாவில், சடுகுடுப் போட்டிக்குக் கட்சி பிரிக்கையில், எதாலோ உந்தப்பட்டுச் சுடலையாண்டியும் ஆளோடு ஆளாகப் போய் நின்றான்.

இரண்டு அணித் தலைவர்களும், வரிசையில் நின்றவர்களிடமிருந்து தலைக்கு ஒவ்வொருவராகத் தெரிந்து எடுத்தனர். பெரிய அடிக்காரன் கோழி" களுக்குக் கடுமையான போட்டி. கட்சிக்குப் போதுமானவர்களை எடுத்துக் கொண்டு மீதி நின்ற மூவரில் அவனும் ஒருவன்.

போதும் என்று நிறுத்திய பின் உள்ளம் சிறுத்து வெளியே வந்தது... அப்போதெல்லாம், விளையாடுபவர்களைப் பார்க்கச் சுடலையாண்டிக்குப் பொறாமையாக இருக்கும். உயர்நிலைப்பள்ளிகளின் வகுப்புகளில் மும்மூன்று முறை தங்கிய அவர்களின் விளையாட்டுத்திறமை. முறுக்கிய வடம் போல் தசைநார்கள் நெறிக்க, அடர்வான நிறங்களில் பட்டை வைத்துத் தைத்த அன்டர்வேர்களை இறுக்கமாக அணிந்து, முண்டா பனியன் போட்டு - விளையாட்டு முடிந்த பிறகு, ஒரு சதுர அடி டர்க்கித் துண்டுகளால் வியர்வையைத் துடைத்துக் கொண்டு, கலைந்திருந்த தலைமுடியினுள் விரல் விட்டு ஒதுக்கிக் கொண்டு அவர்கள் வரும்போது தோன்றும் கம்பீரம்... கல்லூரியிலும், என்.சி.சி அணிவகுப்புகளில் கடனே என்று பசியில் துவண்டு நிற்கையில், குஞ்சம் வைத்த தொப்பியும், திருநீற்றுக் கோடு போல் சட்டைக் கையில் பட்டைகளும், தோளிலிருந்து தொங்கும் மணிக்கயிறும், விசிலும், பிற சின்னங்களுமாக நடக்கும் மாணவ கமாண்டர்கள். நெடி துயர்ந்த உருவத்துடன் கூடைப்பந்து ஆடும் கடற்புறத்து இளைஞர்கள். கைப்பந்து ஆடும் கரைக்காட்டு வாலிபர்கள்.

இப்போது வேகமாக ஓடுகையில் இரைத்தது சுடலையாண்டிக்கு. மூச்சு முட்டியது . கொஞ்சம் பொடி நடையாக நடந்தான். களைப்பாறி மீண்டும்

அஞ்சல் ஒட்டமாக ஓடும்போது, வழியில் குடையைப் பிடித்துக் கொண்டு ஓரிருவர் ஆற்றின் பெருக்கை அளவிட வந்தனர். இருட்டில் குடை மறைந்தது. மழையின் வேகம் குடையைத் துரந்தது.

தண்ணீரில் நனைந்து சாலை கொவர்ந்திருந்ததாலோ, இல்லை வண்டியின் விளக்கு காற்றில் அணைந்து போனதாலோ, ஆவுடையம்மாளின் வண்டி மெல்ல மெல்ல உருண்டது. காளைகளின் உருண்டை மணிகளின் ஓசை அண்மையில் கேட்டது. பேச் சொலியும்கூட. ஓட்டத்தை நிறுத்தி மெல்ல நடந்தான் சுடலையாண்டி, திரைச்சீலைகள் நனைந்து போனதாலும், வண்டிக்குள் இருட்டாக இருந்ததாலும், திரைகள் ஒதுக்கப்பட்டு - கறுப்பு மொத்தை உருவாக ஆவுடையம்மாள், பாவநாசம்.

ஆவுடையம்மாள் முன்னால் எதையோ பார்ப்பது போல் தெரிந்தது. காற்றை வாய்வழி உறிஞ்சி உமிழ்ந்தவாறு சுடலையாண்டி நடந்தான். மழை உறைத்துப் பெய்தாலும் உடம்பில் தெரியவில்லை. குளிர் மட்டுப்பட்டிருந்தது . சிலுசிலு’ என்று காற்று. ஈரச்சட்டை உடம்பில் ஒட்டும் போது ஒரு சங்கடம். காற்றையும் மழையையும், ஆற்றில் பாயும் நீரையும் பார்த்துக் கொண்டே போனான். வானம் கரி பூசிக் கொண்டு விண்மீன்களை மறைத்தது.

கரும் போத்துக்களாக ரோட்டின் மறுகரை வேலியின் கொடுக்கள்ளிக் கூட்டம். காட்டாமணக்குப் புதர்கள். கருஞ்சாந்து அப்பிக் கொண்ட தென்னைக் கொண்டை... இரவு எத்தனை மணி இருக்கும்? ஏழு இருக்கும். ஆனால் நள்ளிரவு ஆனது போல் ஒரு மயக்கம். காற்றின் வீச்சும் தண்ணீரின் பாய்ச்சலும் மழையின் கூச்சலும்தான் ஓசைகள். இப்போது வீட்டில் இருந்தால்

தலையை உலர்ந்த துவர்த்தால் துவட்டி, வேட்டி சட்டையை மாற்றி, கொறிப்பதற்கு வறுத்த காணமோ, பயிறோ வைத்துக் கொண்டு... எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்? இன்று வழக்கத்துக்கு அதிகமாகப் பசிக்கிறது . குளிரடித்தால் பசியும் கூடுமோ?

நடந்தவன் முன்னால் வண்டி நின்று கொண்டிருந்தது. சாலையின் குறுக்கே சில தலைகள் தெரிந்தன. சில பேச்சொலிகள். வேகமாக நடந்து கும்பலைச் சமீபித்தான். ரோட்டைக் கரைத்துக் கொண்டு, உடைப்பு விழுந்து, தேரேகாலின் வெள்ளம் மேற்கே திருப்பதிசாரம் பத்தில் பாய்ந்து கொண்டிருந்தது. ஆற்றின் வெள்ள மட்டத்திலிருந்து வயற்காடு

பத்தடி பள்ளம். ஓங்காரப் பேரொலியோடு குதித்து விழுந்தது பெரு வெள்ளம். அலை மோதிப் பாய்ந்த ஆற்று நீருக்குக் கிடைத்த வடிகால்.

உடைப்பின் நீளம் முப்பதடி இருக்கும். மறு முனையிலும் சில இருள் முகங்கள். பேசிய ஒலி காதில் விழவில்லை. இரண்டு டார்ச்சுகள் இக்கரையை நோக்கி ஒளியைப் பாய்ச்சின. ஏதோ சைகை செய்தன.

வண்டியிலிருந்து தானியேல் கீழே இறங்கிப் பார்த்தான். பாவநாசமும் குதித்தான். கோசுப் பெட்டியின் விளிம்பில் அமர்ந்து எட்டிப் பார்த்தாள் ஆவுடையம்மாள். நனைந்து சொட்டியவாறு சுடலையாண்டியும் நின்றான். திருப்பதிசாரத்துக்காரர்கள் ஏழெட்டுப் பேர் கும்பலாக வண்டியையும் தானியேலையும் பார்த்துவிட்டு ஒருவர் சொன்னார்:

“தானியேலு... வண்டியிலே யாருலே? பல வேசம் பிள்ளைக்க மகளா?”

''ஆமா நயினாரே'

“எப்பிடிப் போகப் போறே? பூதப்பாண்டிக்குத் தெக்கே பழையாறு உடைச்சு இறச்சகுளம் ரோட்டிலே நெஞ்சளவு வெள்ளம்... புத்தனாறு உடைச்சு தாழக்குடி ரோடு மறிஞ்சு பாயி... வண்டியைத் திருப்பி நம்ம வீட்டுக்கு முன்னே கொண்டு அவுரு... வெள்ளம் வடிஞ்சதுக்குப் பொறவு விடிஞ்சு போலாம். யாராவது ஆள்கிட்ட பலவேசம் பிள்ளைக்கு சொல்லி அனுப்பீருகேன்...”

“சரி பண்ணையாரே...”

வண்டிக்குள்லிருந்து தானியேலைக் கூப்பிடும் சத்தம்.“நயினாரே... சின்ன நாச்சியாரு சொல்லுதாவ தேராப்பூர்லே அவ்வ அத்தை இருக்காவள்ளா? அங்க போலாம்ணு...”

“அதுஞ்சரிதான்... சொன்னால உமையம்ம இருக்காளே... சரி. நீ சட்டுணு வண்டியை அடி. வேற எங்கயாம் உடைச்சிராம... பாத்து கொண்டு போலே. கண்டமானம் அருவிலே ஒதுக்கிராதே... கரையெல்லாம் பொதுபொதுண்ணு கொவந்து நிக்கி... சரி நீ போ...”

காளையின் தலைக் கயிற்றைப் பிடித்து மெதுவாக வண்டியைத் திருப்பினான் தானியேல். பாவநாசம் பின்னால் படியில் கால் வைத்துத் தாவி ஏறினான். ஏறிவிட்டானா என்பதைத் திரும்பிப்பார்த்த

சுடலையாண்டி மீது சில கணங்கள் ஆவுடையம்மாளின் கண்கள் தாமதித்தன. காளைகளைச் சத்தங்காட்டி அடித்துக் கொண்டு போனான் தானியேல்.

வண்டி திரும்பிய சாலையின் மண் பகுதியில் பதிந்த வண்டிச் சக்கரத்தைச் சில கணங்கள் பார்த்தான் சுடலையாண்டி.

உடைப்பின் வாய் கொஞ்சங் கொஞ்சமாகப் பெரியதாகிவந்தது. "பொதீர் பொதீர்" என்று மண்பிளந்து நீரில் சரியும் ஓசை. எந்த வழியிலும் இப்போது வீட்டுக்குத் திரும்ப முடியாது. சூரங்குளம் நாலு பக்கமும் நீர் சூழ்ந்ததோர் தீவு போலிருக்கும். இப்போது என்ன செய்வது? என்ன செய்ய முடியும்? தாத்தா தன்னைத் தேடி வராமல் இருக்க வேண்டுமே என்று கவலையாக இருந்தது.

மங்கிய வெளிச்சத்தில் ஆற்றில் நாலைந்து கலப்பைகளும் நுகமும் மிதந்து வருவது தெரிந்தது. எந்தக் குடிசையிலிருந்து அடித்துக் கொண்டு வருகிறதோ? பூவரச மரமொன்று புரண்டு புரண்டு உடைப்பு வழியாக வயற்காட்டில் பிரயாணம் துவங்கியது. தென்னங்கன்றுகள் சில போயின... பயிரெல்லாம் என்னத்துக்கு ஆகும்? தலை பழுத்துச் சாய்ந்து கிடக்கும் வயல்கள். அறுவடைக்கு முன் சில நாட்கள் காய்ச்சலுக்காகக் கிடப்பவை. கர்ப்பிணி வயிற்றில் எருமை மிதித்ததுபோல் இந்த வெள்ளம். உடைப்பு விழுந்த இடத்தில் பதினைந்து ஏக்கருக்காவது மணல் பாயும். வெள்ளம் கட்டி நின்றால் பயிர்கள் அழுகத்துவங்கும். நெல் மணிகள் முளைக்கும். உதிரும்.

எதிர்பாராத சேதம்...

இதனால் எனக்கு என்ன ஆயிற்று?

எவன் வயலில், வாயில்மண் பாய்ந்தால் என்ன? வேலை செய்தால் கூலி. இவர்கள் ஒண்ணரை மேனி அறுத்துச் சேர்த்தாலும் கூலி வேலைக்காரனுக்கு என்ன லாபம்? காவிரியாறு கஞ்சியாகப் போனாலும் நாய்க்கு நக்கித்தானே குடிக்க முடியும்? ஆற்று மணல் வயலில் பாய்ந்தால் மணல் வாரும் வேலை. ஆனால் எவ்வளவு பொருள் சேதம் ? நாட்டின் உற்பத்தி இழப்பு எவ்வளவு? ஒவ்வொரு தனி மனிதனின் நட்டம் தேசீய நட்டமும் அல்லவா?

'பெரீய்ய மயிரு தேசீய நஷ்டம்!' எவனுக்குக் கவலை? இதோ மழை

பெய்து கொண்டிருக்கிறது. வழியெங்கும் உடைப்பு. பெருவெள்ளம். ஆவுடையம்மாளுக்குப் போவதற்கு ஒரு வண்டியும், தேரேகால்புதூரும், அத்தை வீட்டில் புகலும் உண்டு. அத்தை வீடு இல்லாமற் போனாலும் தெருவிலா நிற்கப்போகிறாள் பண்ணையார் பலவேசம் பிள்ளையின் மகள்? திருப்பதிசாரத்தின் பண்ணையார் ஒருவரின் வீட்டில் சூடான சாப்பாடும் சொகுசான கட்டிலும் மெத்தையும் போட்டுப் பணிவிடை செய்வார்கள். இதோ நிற்கும் இத்தனை பேரில் எவன் என்னைக் கேட்டான்? 'தம்பி யாரு? எந்த ஊருக்குப் போனும்? என்ன செய்யப் போறே?' என்று. இவர்களின் வயல்களில் மணல் பாய்ந்தால் என்ன? வீட்டின் கூரை திப்பிடித்து எரிந்தால் என்ன? என்னைப் பற்றிய அக்கறையில்லாத நாடு இருந்தால் என்ன? இடிந்து சமுத்திரத்தில் ஆழ்ந்தால் என்ன? மார் யாருக்குப் பாதுகாப்பு? மக்களுக்காக மக்களே செய்யும் மக்களாட்சி... மயிரைப் பிடுங்குகிறான்கள் மக்களாட்சித் தலைவன்கள்-

***

# பதினான்கு

இரவு கணக்கின்றி நீண்டு போயிற்று. ஆஸ்துமாக்காரனின் இரவு போல். உறக்கமும் விழிப்புமாய் சாய்ந்திருந்தான் சுடலையாண்டி. குளிர்ந்தது, ஒருவகை பாதுகாப்பின்மை மனதை அலைக்கழித்தது. குளிரிலேயே உறங்கி, விழித்து, உறங்கி...

திடீரெனக் கேட்ட பேச்சொலி, காலடிகள், யாரோ வருகிறார்கள்.

அவனை உற்றுப் பார்த்துவிட்டு நகர்ந்தது போல் ஒரு உணர்ச்சி. திடுக்கிடக் கண்விழித்தான். மறு மூலையில் இருவர் நின்றதை உணர்ந்தான். யாரோ வகை அற்றவர்கள். அல்லது வகை இருந்தும் வழி அற்றுப் போனவர்கள். இரவின் குளிர்ந்த நிசப்தத்தில் துல்லியமாய் காதில் விழுந்த பேச்சொலியில் பெண் குரல் புரிந்தது.

“ஒரே ஈரமால்லா இருக்கு...”

மணி என்ன இருக்கும்?

பன்னிரண்டு? இரண்டு? ஒன்றும் நிச்சயமாய் தெரியவில்லை. கண்டிப்பாக விடிவு சேண்மையில் தான். இன்னும் எத்தனை மணி நேரமோ?

தீப்பெட்டியில் குச்சை உரசும் ஒலி. இரண்டு மூன்று சாபம் கொண்டு பாழாயின.

“சவம் மளையிலே எல்லாங் கொவந்து போய் இருக்கு.” பளிச்சென்று தீக்குச்சி பற்றியது. கொஞ்சம் ஒளி. பீடியின் புகை.

“பக் பக்” கென்று பீடி நுனியில் நெருப்பு சிவந்தது. ஒற்றையாக...

மன்மதனை எரித்த மூன்றாம் கண்ணாக...

“நீ ரெண்டு இளுப்பு இளுக்கியா...”

“ம்க்கும்... ஒனக்கும் கூடித்தான் போச்சு...”

“அட குளுருக்கு எதமா இருக்கும்...”

கொஞ்ச நேரமாக மௌனம்.

உறக்கம் கலைந்து போனதால், கண்ணை நன்றாக விழித்துப்பக்கவாட்டில் மேலே தெரிந்த வானைப் பார்த்தான் சுடலை பாண்டி. மழை தூறிக் கொண்டுதான் இருந்தது. அத்தனை கடுமையாக இல்லை. வெறிப்பதற்குண்டான ஒரு கோள் இருந்தது.

முன்னிரவில், ஆவுடையம்மாளின் வண்டி திரும்பிப்போன பின்பு, கொஞ்ச நேரம் நின்றான் சுடலையாண்டி. மழை கொஞ்சம் வெளிவாங்கி, பூந்தூற்றல் விழுந்தது. எங்கே போவது? எங்கும் போக முடியாது. திருப்பதிசாரத்திலோ, தேரேகால்புதூரிலோ, விமநகரியிலோ சொந்தக்காரர்கள் கிடையாது. வீட்டுக்குப் போக முடியாது. இப்படியே நின்று கொண்டும் இருக்க முடியாது.

வந்த வழியில் திரும்பி நடந்தான். கிருஷிப்பால மதகுகள் எல்லாம் வாய் பிளந்து, தண்ணீர் கேட்பார் கேள்வியின்றிப் புகுந்து போயிற்று. ஒரு வகை மெத்தனத்துடன் திருப்பதிசாரத்தை நோக்கி நடந்தான்.

யார் வீட்டுப் படிப்புரையிலாவது ஒதுங்கலாமா? என்ன ஏது என்று கண்டவனுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும். ஏதோ அவன் வீட்டு ஒழுக்கறைப் பெட்டி உடைக்க வந்திருப்பது போன்ற சந்தேகம், காணும் கண்களில் கூத்தாடும்.

கொட்டாரத்தின் முன் படிப்புரையில் ஒதுங்கினால்? கொட்டாரத்தை அடைந்தான். தெற்குப் பார்த்திருந்த அந்த வாசலின் கதவு எப்போதாவது திறக்கும். முன்பு ஏதோ ஒரு காலத்தில் சித்திரைத் திருநாள் வந்து தங்குவாராம். மன்னர்கள் தங்கிய இடங்களில் வௌவால்கள் தலைகீழாய் தொங்குகின்றன. மக்களாட்சி வௌவால்கள்

திருப்பதிசாரம் பூரா விளக்கில்லை. எந்த மரம் இடையில் விழுந்து கிடக்கிறதோ இல்லை பாதுகாப்புக்காகத் தடை செய்து வைத்திருக்கிறார்களோ!

தெருவில் ஆள் நடமாட்டமில்லை. தூரத்தில் சில திறந்த வாசல்களில் இருந்து தீனமான மண்ணெண்ணெய் விளக்கின் ஒளிச்சோகை.

எட்டு மணி இருக்கும் போலிருக்கிறது. சத்திரத்தின் முகப்புப் படிப்புரையில் யாரும் இல்லை. வாசலில் எங்கும் தண்ணீர், குட்டை

குட்டையாக, சாரல்படாத மூலைகளில் காய்ந்த திட்டுகள்.

மார்போடிருந்த புத்தகக் கட்டை, வாசலைத் தாண்டி உள்ளே போவதற்காக இருந்த வரிக்கல் படி மீது வைத்தான். கையை உதறி நொம்பலம் தவிர்த்தான். பாலிதீன் பையை நீக்கிப் புத்தகங்கள் நனைந்திருக்கிறதா என்று கவனித்தான். நனைய வில்லை. கொஞ்சம் ஆறுதல். காய்வாக இருக்கும் இடத்தை நனைத்து விடக் கூடாது என்னும் எச்சரிக்கை உணர்வோடு ஈரத்தில் நின்று சட்டையைக் கழற்றினான். தெப்பமாக நனைந்திருந்தது. பிழிந்து உதறினான். கதவின் நிலை மீது உயரத்தில் அறைந்திருந்த ஆணியைத் தடவி உணர்ந்து சட்டையைத் தொங்க விட்டான். வேட்டியை அவிழ்த்துப் பிழிந்து தலை துவட்டினான். மீண்டும் பிழிந்தான். உதறிய வேட்டியை அரையில் கட்டிக் கொண்டு, அண்டர் வேரைக் கழற்றிக் கையில் எடுத்தான். நனையாத இடமே இல்லை. பிழிந்து உதறி உடுத்துக் கொண்டு, வேட்டியைப் பட்டம் போல் தூக்கிப் பிடித்தான். இலேசான தூற்றல். காற்று படபடத்தது. இப்படிக் காற்றடித்தால் மழை வெறித்து விடும். வெறிப்புக்கான அறி குறிகள் இருந்தன. காற்றின் வேகத்தில் வேட்டி நுனிகள் துடித்தன. இப்படிக் காற்றடித்தால் கொஞ்ச நேரத்தில் வேட்டியும் காய்ந்து விடும். இப்படியே இரவு நின்றே கழியுமோ?

வயிறு ‘மடமட வென்று இரைந்தது. பசி ஏப்பம் ஒன்று பறிந்தது. வாயில் ஒரு புளித்த வாடை ஏதாவது தின்னக் கிடைத்தால்

வழக்கமாகச் சட்டைப் பையில் கிடக்கும் எட்டணாவுக்கு முந்தாநாள் ஒரு நோட்டு வாங்கியாயிற்று. திரும்பத் தாத்தாவிடம் கேட்டு வாங்கவில்லை. இப்போது அது இருந்தால்-இங்கு ஏதாவது கடை திறந்திருக்கிறதா என்று பார்க்கலாம். கோயிலுக்குப் பக்கத்தில் ஏதாவது சுக்குக் காப்பிக் கடை திறந்திருக்கும். இல்லாவிட்டால் இரண்டு பேயன் பழமாவது வாங்கித் தின்று தண்ணீர் குடிக்கலாம். மனப் பாயசத்தை நாக்கு தேடி ஏமாந்தது.

நின்று நின்று கால்கள் கடுத்தன. வேட்டி கொஞ்சம் உலர்ந் திருப்பது போல் தோன்றியது. உடம்பின் சூட்டில் அண்டர் வேரும் காய்ந்து கொண்டிருந்தது. மழை அறவே நின்று போயிருந்தது. தெருவில் இறங்கி ரோட்டுக்கு வந்தான். பாலத்தின் அடி வயிற்றைத் தொட்டுக் கொண்டு தண்ணீர். இருளின் மங்கலான ஒளியில் வெள்ளத்தின் ஏழு குதிரைப் பாய்ச்சல். பார்க்கப் பார்க்க ஆனந்தம்.

திடீரென்று வீட்டு நினைவு, தாத்தாவும் ஆத்தாவும் தேடிக்கொண்டிருப்பார்கள்.

“பய எங்க நிக்கானோ? ஆத்திலே கீத்திலே எறங்கீரப்பிடாதே... ஒரே பெரு வெள்ளமால்லா இருக்கு. ராத்திரி ஒண்ணும் குடிச்சிருக்கக் கூட மாட்டான். நீரு வேணும்னா போய்ப் பாத்துக்கிட்டு வாருமேன்.” என்றெல்லாம் ஆத்தா முணுமுணுப்பாள். தாத்தா தேடிக் கொண்டு புறப்பட்டு விடக்கூடாதே என்று சுடலையாண்டியின் மனம் தவித்தது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை வெள்ளக் காடு, கரையோர மரங்கள் தண்ணீரில் முளைத்து வந்தது போல்..

பொடிப் பொடியாகத் தூற்றல் விழுந்தது. மீண்டும் நனைந்துவிடாமல் இருக்க சத்திரத்துப் படிப்புரைக்கு வந்தான். வடமேற்கு மூலையில் ஈரம் இல்லாத இடத்தில் உட்காரலாம். படிப்புரைக்கு மூன்றடி உயரக் கைப்பிடிச் சுவர் இருப்பது ஒரு சௌகரியம். குளிருக்கு அடக்கமாகப் புத்தகக் கட்டையும் கொண்டு பக்கத்தில் வைத்துக் கொண்டு சுவரோரம் சாய்ந்து அமர்ந்தான். மழைத் துளி மேலே தெறிக்கவில்லை. குளிர்காற்று தெறித்தது. ஆவுடையம் மாளுக்குக் கவலை இல்லை.

குளிருக்கு அடக்கமாகப் போர்த்திக் கொண்டு படுத்திருப்பாள். யாது கவலையும் இல்லாமல் உறங்குவாள். ஏன், கனவுகள் கூடக் காண்பாள். வண்டிக்காரத் தானியேல் கூட கிடைத்த சோற்றைத் தின்று விட்டு படிப்புரையிலோ வண்டிப் புரையிலோ முடங்கித் தூங்குவான். அல்லது ஆனந்தமாகப் பீடி புகைத்துக்கொண்டு சாய்ந்திருப்பான்.

கண்ணை மூடிக் கொண்டு நினைவில் ஏதாவது காட்சி தெரிகிறதா என்று தேடலுற்றான் சுடலையாண்டி.

கொஞ்ச நேர அமைதிக்குப் பின் பேச்சொலி கேட்டுக்கவனம் கலைந்தான்.

“ரொம்ப வெறைக்கு இல்லே...”

“ஆமாமா... வெறைக்கும் வெறைக்கும்...”

“கொஞ்சம் கிட்ட வந்து இரியேன்...”

“பேசாம இரி குத்தாலம்... அன்னா அந்த மூலைலே யாரோ இருக்கா...”

“அதா..? ஒரு சின்னப் பயல்லா... ராத்திரி வழி தெரியாம கெடக்கான்.”

“சின்னப் பயண்ணா..?”

“பஸ் ஸ்டாண்டிலே என்னைப் பாக்கல்லேண்ணா என்ன செய்வே ?

“வேற என்ன செய்யது? பேசாம ஒரு மூலையிலே குத்தவச்சு இருந்திருப்பேன், விடியது வரை. இப்பிடி ஆகும்னு கண்டனா? ஒசரவெளையிலிருந்து பொறப்பிடச்சிலே எட்டு மணி அடிச்சாச்சு... ஒம்பது மணிக்கு மீனாட்சிபுரம் பஸ்டாண்டு வந்தாச்சு. ஒம்பதரை மணிக்குத்தாலா தாளக்குடி கடைசிக் காரு. சவம் இன்னா வந்திரும் போயிரலாம்னு நெனைச்சேன். இப்பிடி ஆகும்ணு கண்டனா? மளைண்ணா ஊத்து ஊத்துண்ணு ஊத்துகு. காருக்கு நிண்ணு நிண்ணு பார்த்தா காரையும் காணோம் மோரையும் காணோம். சூரங்குளம் ரோட்டிலே உடைப்பு, காரு போகாதுங்கான். இறச்சகுளம் பஸ்ஸிலே ஏறி அங்கேருந்து நடந்து ஒரு பொட்டச்சி எப்பிடி வாறது இந்த வெள்ளத்திலே?”

“நானும் கடைசிக் காருக்குத்தாலா வந்தேன். நம்மூரு ஆளுயாரையும் காணல்லியேண்ணு பாத்தா, நீ ஒரு மூலையிலே மூடிக்கிட்டு நிக்கே...”

“சரி, ஒண்ணாப் பேசிக்கிட்டே திருப்பதிசாரம் பாதைக் நடந்திண்ணாலும் போயிரலாம்னு பார்த்தேன். இப்படியாகும்னு கண்டனா? வீட்டிலே தேடிக்கிட்டு இருப்பாரு..."

இப்பம் என்னா? பல பலா விடியச்சிலே நடந்து வீமநேரிப்பாதைக்குப் போனாப் போச்சு. குத்தாலம் கூட நடந்து வந்தேன்ணு சொல்லு. அண்ணன் ஒண்ணும் சொல்ல மாட்டாரு...

"ஆமா உனக்க அண்ணனை நீதான் மெச்சிக்கிடணும். பெரிய நசுநாறி.”

“நான் வேணும்னா வீட்டிலே கொண்டாந்து விட்டுக்கிட்டு சொல்லீட்டுப் போறேன். போருமா?”

“வேற வெனையே வேண்டாம்... பஸ்டான்டுலே ராத்திரி இருந்துக்கிட்டு காலம்பற நாக்காமடம் வரை பஸ்ஸிலே வந்து நடந்து வாறம்னு

சொல்லணும். எனக்கு என்ன எளவுக்கு செறை? அங்க யாம்போனே? எங்க தங்கினேண்ணு பிராணனை வாங்கிருவாரு…”

சற்று நேரம் அடர்ந்த மௌனம். ஆற்றில் நீர் பாயும் சீரான இரைச்சல். மழை விட்டு விட்டுத் தூற்றியது. ஒருபாட்டம் கனமாக விழுந்தது. படபட வெனக் கூரை ஒட்டின் மீது நீர்த்துளி விழுந்து தூவானம் பனிப்பூவாய்த் தெறித்தது. அரை வேட்டியைக் கால்வரை இழுத்து மூடிக் கொண்டான் சுடலையாண்டி. எழுந்து உட்கார்ந்து இவர்களுடன் பேசிக் கொண்டிருக்கலாமா என்று யோசித்தான். அது ஒரு உபத்திரவமாகப் போகும். தூரத்தில் கூர்மையான ஒரு அழுகை ஒலி. குழந்தை அழும் ஓசை முலைக் காம்பால் தடைப்பட்டுத் தேய்ந்த சிற்றழுகை.

"நீ வேணும்னா கொஞ்சம் படுத்துக்கோ. செவுரு கிட்டே ஈரமில்லை.”

அவன் குரலின் கரகரப்பைத் தொடர்ந்து அவள் தொண்டையைச் செருமும் ஓசை.

“இப்பிடி குத்தவச்சு இருக்கணும்னு தெரிஞ்சா கொஞ்சம் கடலை வாங்கீட்டு வந்திருக்கலாம். கொறிச்சுக்கிட்டாவது இருக்கலாம். நல்ல காலமா பீடி இருக்கு.”

பீடி பற்ற வைக்கும் ஓசையும் அந்தரத்தில் சிவப்புப் பொட்டும்

“சும்மா படுத்துக்கோ. நான் முளிச்சுக்கிட்டுத்தாலா இருக்கேன்.”

சுடலையாண்டி கண்களை மூடிக் கொண்டு உறங்கப்பார்த்தான். உறக்கம் வரவில்லை. ஏதேதோ நினைவுகள், பகுத்து ஐந்தொகை போட முடியாத சிக்கல்பட்ட முரண்கள்…

“உஸ்” என்று அதிருப்தியைச் சூல் கொண்ட சிணுங்கல்.

“அட சும்மாரு” என்றொரு ஆட்சேபம்.

இருளில் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் பொருளற்ற சில முனகல்கள். மூச்சொலிகள்.

உடல் முழுவதும் ஒரு பரபரப்பு ஊடுருவி அலைக்கழிப்பதைச் சுடலையாண்டி அறிந்தான்.

***

# பதினைந்து

பா லுணர்வு முதலாவது எப்போது ஏற்பட்டது?

உறக்கம் கொள்ளாமல் சுடலையாண்டி யோசிக்க ஆரம்பித்தான். அறிந்து கொள்ள வேண்டும் என்ற குறுகுறுப்பு நெஞ்சில் முதலில் என்று குடி கொண்டது? ஒன்றும் நிச்சயமாகத் தெரிய வில்லை. ஆனால் அதிகாலைகளில் குறி விறைத்து நிற்பது ஆச்சரியமாகத் தோன்றியது. மூத்திரப் புரையில் எவனாவது கரியால் தனது சித்திர நிபுணத்துவத்தையோ உடற்கூறு அறிவையோ காட்டப் படம் வரைந்து பாகங்களை விவரித்துக் காட்டி இருப்பதைக் காண்கையில் உடலில் ஒரு கூச்சம். கள்ளத்தனமானதொரு இச்சை உணர்ச்சி. கார்த்திகை மாதங்களில் எதிர் முனைகளில் முகம் வைத்துக் கொண்டு கொழுவிப் பிணைந்து நிற்கும் நாய்களைக் காண்கையில், பார்க்காதே என்று மனமும், பார்ப்பேன் என்று கண்களும் பிடிவாதம் கொண்டு, வெற்றி பல சமயங்களிலும் கண்களுக்கே கிட்டி வந்திருக்கின்றது.

பங்குனி, சித்திரை கோடை விடுமுறைகளில், விறகுக்கோ சுள்ளிக்கோ தலையில் கடவத்தோடு நடக்கையில் பிராமணந் தோப்பில் எருமை மேல் கிடாக்கன்றை ஏறவிட்டு ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் மாடு மேய்ச்சிப் பையன்களோடு சில மணித்துளிகளாவது நிற்கத் தோன்றியிருக்கிறது.

வீட்டுப் படியில் உட்கார்ந்து காலையில் வேடிக்கை பார்க்கையில், எதிர்த்த களத்தில் பெடையை விரட்டிக் கொண்டோடும் முத்துச் சேவல், இரத்தம் குபிரிட்டுச் சிவந்து அலையும் கொண்டைப்பூ இரண்டுமாய் ஓடியோடிக் களைத்து ஏதாவது ஒரு மூலையில் வளைத்துப் பிடித்து, பெட்டையின் சிறு கொண்டை முனையைக் கவ்விச் சிறகின் மேல் தாவியேறி, வாலை வளைத்துத் தூக்கி-நொடிகளுக்குள் இவை என்ன தான் செய்யும்?

பத்தாவது படிக்கும் போது-

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை, ஆவணி மாதத்து ஞாயிறு. ஆவணியின் நாகரம்மன் கோயில் திருவிழா. காலையில் புறப்பட்டுப் போய், கோயில் வாசலில் தெப்பக்குளத்தில் காலலம்பி, பனையோலைப் பெட்டியில் உப்பும் நல்ல மிளகும் சூடனும் வாங்கிக் கொண்டு கோயிலுக்குள்

நுழைந்து -

எங்கும் பாம்புகள். கல்லில், மரத்தில், நிலத்தில், சுவரில்... படத்தை விரித்துக் கொண்டு நல்ல பாம்புகள். முத்திரையைக் காட்டிக் கொண்டு, நெளிந்து, உயர்ந்து, ஒயிலாக அசைந்து, ஓடுங்கி. உயிருள்ளவைதாமோ என்ற மன மயக்கம். கையால் தொட்டுப் பார்க்கவும் கூச்சம். பயம். கூட்டமாய் பெண்கள், கன்னிகள், சிறுமிகள், சிறுவர்கள். இவர்கள் காரணமாய் துணைக்கு வரும் ஆண்கள், துணைக்கு அலையும் விடலைகள்...

கோயிலில் பெரிய கொப்பரை. நாகரம்மனுக்கும் நாகராஜாவுக்கும் கொண்டுவந்த பாலை கொட்டி வைக்க உப்பு மிளகுப் பொதிகளைப் போட வேறொரு கொப்பரை. கல்லெல்லாம் பாம்பாகி, பாம்பின் தலையிலிருந்து வடிந்த பால் சொட்டுகள். பால் விழுந்து காய்ந்து வீசும் கொச்சை. பிராகாரங்களைச் சுற்றி வந்து மூலக் கருவறை முன் நின்று வணங்கி...

கருவறை மட்டும் ஓலைப்புரை, ஐந்து தலை நாகங்கள் கருவறைக்குப் பின்னால் இருக்கும் புற்றுகளில் வாழ்வதாய் நம்பிக்கை. பார்த்துவிட வேண்டும் என்ற துணிச்சலில் சென்ற நம்பியாரின் கண்ணவிந்த கதை.

கோயிலில் பிரசாதம் புற்றுமண், நெய் மண், தினமும் புதிதாகப் புற்றின் வாசலில் குவியும் ஈர மண். வாயிலே நாகரம்மன் கோயில் பிரசாதம் தான் என்பது அங்கே வழக்கு.

வழக்கம் போல் அந்த ஆண்டும் சூரங்குள்த்தில் இருந்து நாகரம்மன் கோயிலுக்கு மாணவர் பட்டாளம் புறப்பட்டது. சுடலையாண்டிக்கும் பயணம் சித்தியானது. நாகரம்மன் கோயிலுக்குப் போய்விட்டு, மத்தியானம் சினிமா பார்த்து வீட்டுக்குத் திரும்புவது திட்டம். காலையில் பத்து மணிக்கே புறப்பாடாயிற்று. குறுக்குப் பாதையில் போனால், சூரங்குளத்திலிருந்து நாகரம்மன் கோயில் மூன்றுமைல். நாகர்கோயில் நகரின் இதயப் பகுதி.

வழியில் 'எசலி'க்கொண்டு, குளத்தில் இறங்கி ஆம்பல் பறித்து மாலையாகப் பிளந்து கழுத்தில் போட்டுக் கொண்டு

சர்.சி.பி. ராமசாமி ஐயர் போட்ட சிமன்ட் ரோடு சாரி சாரியாகப் போகும் டி.எம்.பி.எஸ்: பயோனீர் பஸ்கள். கோயிலுக்குப் போகும் கூட்டம்.

கையில் பால் வாளியுடன் சிறுமிகள்.

அழுத்திச்சீவிப் பின்னலிட்டு, செவந்திப் பூவும் கொழுந்தும் சூடிய கன்னிகள்.

புதிதாக மணமாகி, சரிகை வேட்டிக் கணவனுடன் தோளிடித்து நடக்கும் பெண்கள்.

உடல் கனம் நடையில் அழுந்த மூச்சிரைக்கும் கிழவிகள்.

மனம் கொள்ளாமல் உற்சாகம் பொங்கியது. கோயிலின் கிழக்கு வாசல் வழியாக உள்ளே நுழைந்தார்கள். வியர்வை, கசகசப்பு, நெருக்கமான மக்கள் கூட்டம், வெளிச் சுற்று எங்கும் வியாபாரிகள். கொய்யாப் பழம், பேரிக்காய், பொரிகடலை, விளாங்காய், கொல்லாம் பழம், பால் ஐஸ், சேமியா ஐஸ், கலர் தண்ணீர். இஞ்சி கறிவேப்பிலை பச்சை மிளகாய் போட்டுக் வைக்கிய மோர். விளையாட்டுச் சாமான்கள். எதை எடுத்தாலும் ஓரனா, ஒண்ணரையணா, சிவப்புச் சவ்வு மிட்டாய்கள், மூங்கில் வழியில் சுற்றிக் கொண்டு வரும் துப்பினி மிட்டாய். மிட்டாயி வேயே ஓரணாவுக்குக் கழுத்தில் அட்டியல், அரையாணாவுக்குக் கையில் வாச்சு, காலணாவுக்கு மோதிரம். 'ஊத்தாம் பொட்டியனை நாரில் கிலுக்காம் பொட்டி’.

அழுகின்ற பிள்ளை மார்த் துணியை விலக்க முயல்கையில், கையில் விழுந்த அறை. நெற்றியில் கரைந்த சந்தனக் கீற்று, மூக்குத் தண்டில் ஊறும் குங்குமக் குழம்பு. ஜெம்பருக்கு வெளியே தெரிந்த முதுகில் முடிக் கற்றையின் வியர்வையாடல், பட்டைக்கரை தெரிய மடித்துக் கட்டிய இரட்டை வேட்டிகள், மார்பைக் காட்டவோ, காற்றுக்காகவோ திறந்திருந்த பொத்தான்கள். முடிபற்றிய அல்லது மழுங்கலாய் இருந்த நெஞ்சுகள்.

கோயிலை விட்டு வெளியே, மேற்குப்புறம் தெருவுக்கு வந்தால் - குடைராட்டு, மீனுடலும் பெண் தலையும் கொண்ட மச்ச கன்னி, மின்சார மனிதன் மரணக் கிணறு...

சுடலையாண்டியைக் கொண்ட பட்டாளம் ஒரு மணிக்கு நகரசபைப் பூங்காவுக்கு வந்தது. நடை, அலைச்சல், களைப்பு. அசோகு, பன்றிவாகை, கொன்றை, வாதுமைக் கூட்டங்கள். புல்வெளியில் புரண்டு மறியல்.

நகரமெல்லாம் தீப்பற்றி எரிந்தாலும் இங்கே குளிர் கொஞ்சும். கொஞ்ச நேரம் இருந்தும், படுத்தும், புரண்டும், பொழுது போக்கி, அவரவர் பொட்டலத்தைப் பிரித்துத் தின்று, பைப்பு மூட்டில் போய் நின்று வயிறு முட்டத் தண்ணீர் குடித்து…

அடுத்த அயிட்டம் மாட்னி ஷோ சினிமா. மீனாட்சிபுரம் இலட்சுமி டாக்கீஸில் பூரீசபரிமலை ஐயப்பன். இரண்டு மாத ஓட்டம், கூட்டத்தைக் குறைக்கவில்லை. நாகரம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டுத் தினசரி ஐந்து காட்சிகள். கொளுத்தும் வெயிலில் வரிசை. காலைக் காட்சி முடிந்து வெள்ளமாய் பாய்ந்த தலைகள்.

இரண்டே கால் மணிக்கு, டிக்கட் கொடுக்க மணி அடித்ததும் சொன்னார்கள், ஆண் தரை திடையாது. வேண்டு மானால் பெஞ்சு டிக்கட்டுக்குப் போகலாம். ஆண் தரையும் பெண் தரையும் ஒன்று சேர்ந்தாயிற்று.

சுடலையாண்டிக்குத் திகைப்பு, தரையானால் முப்பதுகாசு, பெஞ்சு நாற்பத்திரண்டு காசு, மனதில் வாத எதிர் வாதங்கள்…

யாரோ சொன்னார்கள்… “சின்னப் பயக்க பொம்பிளைத் தரைக்குப் போங்கலே…”

இது ஒரு அபூர்வமான சலுகை, வரிசையிலிருந்து ஒரு பின்வாங்கல். பெண்கள் பகுதிக்கு ஒரு சாட்டம்.

பெண்கள் சமுத்திரமாக இருந்தது. ஒரே கூச்சலும் இரைச்சலும்.

“கைப்பிள்ளைதானே… இதுக்கும் டிக்கட் வாங்கணுமா? கொள்ளாங் கூத்து, மூணு வயசுதாலா ஆச்சு…”

இடுப்பில் வைத்துக் கொண்டால் டிக்கட் கேட்க மாட்டார்கள் என்று பன்னிரண்டு வயசுப் பையனை இடுப்பில் வைத்துக் கொண்டிருந்த தாய்.

கால் முட்டை வளைத்துக் குறுகி நடந்த பையன்…

டிக்கட் கவுண்டரில் ஒரே கும்பல், கைகள் மயம். கசங்கிய நோட்டுகள் திணிந்தன. சில்லறை வாங்கும் இரைச்சல்.

“முப்பது பைசாண்ணா ரெண்டு முளுசு… அஞ்சும் அஞ்சும் பத்தணா… மீதி ஆறணயா…” என்று விழுந்த கணக்கு. சிலருக்குக் கணக்கு தவறியது. கவுண்டரில் சண்டை. பித்தளைவாளிகள் பெண்களின் தொண்டையோடு போட்டி போட்டுக் கத்தின.

சுடலையாண்டியின் கூட வந்தவர்கள் முண்டி அடித்துப் போய்க் கொண்டிருந்தனர். இந்த வியர்வைப் புழுக்கமும் கூட்டமும் இரைச்சலும் அருவருப்பாக இருந்தது. ஒதுங்கி யொதுங்கி நின்று பார்த்தான்.

ஒதுங்கி நின்றால் வழியில்லை. சினிமா பார்க்காமல் வீட்டுக்குப் போக வேண்டியதிருக்கும். தீர்மானம் செய்து கொண்டது போல், ஒரு முண்டு முண்டிக் கூட்டத்தில் முன்னேறினான்.

“ஸ்ஸ்… காலனாப் போவான். மாடு கெணக்கயில்லா சமுண்டுகாம்மா..” என்று யாரோ ஏசினார்கள். இதையெல்லாம் காதில் வாங்கிக் கொண்டு நின்றால் கதை நடக்காது.

வியர்வையையும், பெண் உடல்கள் மேலே பட்டு நெரிவதையும் பொருட்படுத்தாது, கவுண்டரில் கைவிட்டு, முப்பது காசைக் கொடுத்து, மஞ்சள் நிறத் தரைடிக்கட்டை வாங்கியதும் நெஞ்சில் பேருவகை பளபளத்து ஒளி துலங்கியது.

கேட்டில் நின்றவனிடம் ஒரு பாதியைக் கிழித்துக் கொடுத்து, மறு பாதியைப் பத்திரப்படுத்தி

பெண்கள் டிக்கட்டானாலும் அந்தப் பகுதியில் ஒன்றுக்குப் போக முடியாது. சுற்றிக் கொண்டு மறு பக்கம் வந்து, நிக்கரைத் தூக்கி 'விர்ரென்று மூத்திரம் பெய்தான் சுடலையாண்டி. நாற்றம் பொறுக்க முடியவில்லை. வெள்ளையாக ஏதோ பொடி தூவியிருந்தார்கள். ஆனாலும் வெக்கை வீசும் நாற்றம். எத்தனை நேரம் மூச்சை அடக்கிக் கொண்டு நிற்பது?

வெளியே வந்து, மண் பானையிலிருந்து அலுமினியக் தவளையில் தண்ணீர் கோரிக் குடித்து, வாசலில் நின்றவனிடம் டிக்கட்டைக் காட்டி அதை அவன் வயிற்றில் கீறிக் கொடுத்ததும் உள்ளே நுழைந்து.

ஒரே அனல் வீசியது உள்ளே. புழுக்கம், வெப்பம், காற்று அனங்கவில்லை. அழுந்தி நின்ற இருட்டும் அமுங்கி நின்ற காற்றும். ஒரு

வாடை, எங்கும் நிறைந்திருந்த தலைகள். முன் தினமே வந்து உட்கார்ந்து விட்டதைப் போல் தரை மீது வட்டச் சம்மணம். புடவைத் தலைப்பால் “உஸ் உஸ்” என்று வீச்சு. கண்கள் இருட்டுக்குப் பழகின. நண்பர்கள் யாரும் தட்டுப்படக் காணோம். எங்கும் போய்விடமாட்டார்கள். இடைவேளையில் பார்க்கலாம். அல்லது படம் விட்ட பிறகு தியேட்டர் வாசலில் நிற்பார்கள்.

கால் வைக்க இடம் இல்லாமல் கூட்டம் பரந்திருந்தது. முன்னால் வந்தவர்கள் துடையைக் கொஞ்சம் அகலப் பரத்திப் பெரிய சம்மணமாகப் போட்டுக் கொண்டு ஆற்றலாக இருந்தனர். தெரிந்தவர்களைக் கூவி அழைத்தும் இடம் கொடுத்தனர்.

சுடலையாண்டிக்கு எங்கு போய் இருப்பது என்று தெரியவில்லை. வழியெல்லாம் கூட உட்கார்ந்து. இப்படியே எவ்வளவு நேரம் நிற்பது? அவனை முந்திக் கொண்டு இரண்டு பெண்கள் போயினர். அவனும் பின்னாலேயே போனான். கால்களை மிதித்து விடாமல், நூல் மேல் நடையாக, தடுக்கினால் கிடைத்த தோளில் கையூன்றி...

சிறிய திட்டாக, இரண்டு காலைப் பரத்தி நிற்கும் அளவுக்கு இடம் இருப்பது போல் தோன்றியது. பளிச்சென்று தாவி அதில் உட்கார்ந்தான்.

“அட? இங்கிண எங்க எடமிருக்கு?”

சொன்னவள் முகம் பார்த்தான் சுடலையாண்டி, அவனுக்கு இப்புறம் இருந்தவள் சொன்னாள் -“சரி இருந்திட்டுப் போகட்டும்...

”திரை முழுதாகத் தெரியாது போலிருந்தது. முன்னால் ஒரு பிச்சிப்பூ சுமந்திருந்த தலை மறைத்தது. "படம் தொடங்கட்டும் பாத்துக்கிடலாம் என்று எண்ணிக் கொண்டு சும்மா இருந்தான்.

ஒரு விதமாக மனமும் உடலும் கூசியது. இன்று சினிமாவுக்கு வந்திருக்க வேண்டாமோ என்று தோன்றியது. இனி நினைத்துப் பயனில்லை.

"கணகணகண’ வென முதல் மணி முழக்கம். தேய்ந்து அணையத் துவங்கிய விளக்குகள். தலைக்கு மேல் விசிறி சுழல ஆரம்பித்தது. இலேசாக முடியைச் சிலுப்ப ஆரம்பித்த காற்று, கொஞ்சம் இதம் நுகரக் கிட்டியது. முழுதாக இருள் பரவலுற்றது. திரைக்கு மேல் வண்ணங்களில்

‘வெல்கம் தொடர்ந்து ‘தியேட் டரினுள் புகை பிடிக்காதீர், "தீ" என்ற அறிவிப்பு ஸ்லைடுகள். சென்சார் போர்டு சான்றிதழ் —- ‘யூ’ -- 21 ரீல்கள் - ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபது நவம்பர் முதல் எழுபது அக்டோபர் முடிய! பெரிய எழுத்தில் ‘ஸ்ரீ சபரிமலை ஐயப்பன், எல்லாத் தலைகளும் தூக்கி நின்றதால் சரிவரத் தெரியவில்லை. உடம்பை விரைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்க்கத் துவங்கி. சில தலைகள் அங்குமிங்குமாக ஆடின. சரிந்தன. சாய்ந்தன. திரும்பின. அவஸ்தையாக இருந்தது.

எழுத்துக்களெல்லாம் ஓடி, டைரஷன் என்ற பெயர் தாமதித்து நின்றது. படத்தின் காட்சிகள் பளிச்சிட ஆரம்பித்தன. தியேட்டர் முழுவதும் சலசலப்பு நீங்கி ஒரு அமைதி கவிழ்ந்தது. நேரே முன்னால் இருக்கும் தலை கொஞ்சம் இடம் மாறினால் படம் நன்றாகத் தெரியும் என்று சுடலையாண்டி எண்ணினான். இடமும் வலமுமாக நிலையை மாற்றிப் பார்த்தான். ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. இடப்புறம் இருந்த பெண் சுடலையாண்டியின் காதருகே சற்றுக் குனிந்து சொன்னாள் - “படம் மறைக்காப்போ?”

“ஆமா…”

“இன்னா இங்கிண தள்ளி இரி...”

அவள் கொஞ்சம் நரங்கி, நகர்ந்து, ஓடுங்கி, அவனுக்கு இடம் செய்து தந்தாள். படம் நன்றாகத் தெரிந்தது. சுற்றுப்புறம் ஒன்றும் நினைவில் இல்லை. புழுக்கம், வியர்வை தெரியவில்லை. இட நெருக்கடி உறைக்கவில்லை. நிஜத்தில் வேறொரு உலகம் இருக்கிறது என்பது உணர்வில் இல்லை.

பளீரென்று இடைவேளை வந்தது. கண்கள் கூசின. வியர்வையில் சட்டைநனைந்திருப்பது தெரிந்தது. எள் இருக்க இடமின்றி அடையடையாகப் பெண்களும், சிறுவர் சிறுமிகளும் குழுமியிருந்தார்கள். வாயிலில் வெளிச் சாடும் மக்கள் தெரிந்தனர். சோடா, கலர், முறுக்கு, சுண்டல் வியாபாரம் நெரிபட்டது. அக்கம் பக்கத்தில் திரும்பிப் பார்த்தான் சுடலையாண்டி. வலப்புறம் ஒரு வயதான கிழவி. காதில் பாம்படங்கள் தொங்கித் தோளில் உராய்ந்தன. இடதுபுறம் ஒதுங்கி இடம் தந்த அந்தப் பெண். முப்பது வயது இருக்கும். இவனைப் பார்த்துச் சிரித்தாள். இவனும் சிரித்தான்.

“வெளில போகப் போறியா?...”

சுடலையாண்டி யோசித்தான்.

“போனால் இடம் போயிரும்...”

வெளியில் போய் ஆகப்போவது ஒன்றும் இல்லை. இத்தனை பேரைத் தாண்டிப் போய், திரும்ப வந்து, இடம் தேடிப் பிடித்து, அதற்குள் படம் தொடங்கி விட்டால்...

“உனக்கு எந்த ஊருப்போ?”

“சூரங்குளம்.”

“ஒத்தையிலா வந்தே?”

“இல்லே. கூட வந்தவனெல்லாம் இங்க எங்கயாம் இருப்பான்...”

அருகிலிருந்த துணிப்பையில் கைவிட்டாள். இரண்டு கொய்யாப் பழங்களை எடுத்தாள். வலதுபுறம் இருந்த கிழவியிடம் நீட்டினாள்.

“எத்தே இன்னாருங்கோ...”

“எனக்கு என்னத்துக்கு செல்லம்மா?”

“நல்ல பளுத்திருக்கு... தொண்டை வறண்டு போயிருக்குமே...!”

வேறொரு பழத்தைச் சுடலையாண்டியிடம் கொடுத்தாள்.

“இன்னா?”

“எனக்கு வேண்டாம்...”

“சும்மா வாங்கிக்கடே! வெக்கப் படாதே...”

கொய்யாப் பழத்தைக் கையில் வாங்கிக் கொண்டான். காம்புப் பகுதியையும் பூ இருந்த பாகத்தையும் நகத்தால் சுரண்டி விட்டுக் கடித்தான். இளம் சிவப்பில் சதைப் பகுதி. விதைக் கூட்டம். மஞ்சள் தோலால் பிடித்து நிறுத்த முடியாத மணம் பரந்தது.

விளக்குகள் மங்கலாயின. திரையில் “வருகிறது” என்று ஒரு படம். வாயில் வாளைக் கவ்விக் கொண்டு தொங்கும் நடிகர். கைதட்டல், விசில், தொடர்ந்து சில பீடி, சோப்பு விளம்பரங்கள்.

கொட்டைகையில் இருள் கவிந்து படம் நீண்டது. செல்லம்மாள் சுடலையாண்டியின் பக்கமாக நகர்ந்து அமர்ந்தாள். "படம் மறைக்கு. என்று தனக்குள்ளாக ஒரு முணுமுணுப்பு. தோளோடு உரசிக் கொண்டு அவள் உட்கார்ந்து இருந்தது என்னவோ போலிருந்தது.

"படம் நல்லாருக்கு என்னா?”

சுடலையாண்டியின் கையைக் கையில் எடுத்துக் கொண்டாள். கையைத் தடவிக் கொடுத்தவள் துடை மீது நிலை நின்றாள். அவனுக்குக் கூச்சமாக இருந்தது. முருங்கை மரத்தின் மூட்டில் அடையடையாக மசுக்குட்டி அடைந்திருப்பதைக் கண்டால் மேனியோடு பரபரக்கும் அருவருப்பு உணர்ச்சி போல், அனிச்சையாக இவன் கை அவள் கையை நீக்கியது. மௌனம். அவள் மூச்சு இவன் கன்னத்தில் பட்டுப் பரந்தது. காதருகே கிசுகிசுப்பது போல் கன்னம் இவன் கன்னத்தில் பட்டுப்பிரிந்தது.

அவன் கையை எடுத்து மடி மீது போட்டுக் கொண்டாள் செல்லம்மாள். ‘ஓ’ வென்று கூச்சலிடும் அளவுக்கு ஒரு சூடும் வெறியும் பரவி உடலை நடுக்கியது. தியேட்டரை விட்டு வெளி வரும்போது உடம்பெல்லாம் காய்ச்சல் அடிப்பது போல் உணர்ச்சி. உதடுகள் காய்ந்து வறண்டன. மனதுள் படபடவென ஒரு ஒலி. ஒரு மிரட்சி. கண்கள் கனன்று அலைந்தன.

திரும்பத் திரும்ப மனம் அதையே நெருடியது.

பெருவிரல் பாதச் சந்தியில் அராவும் செருப்பாணி போல், பல்லிடுக்கில் சிக்கிக் கொண்ட துரும்பைத் தேடும் நாக்கு போல்.

இது என்னது?

மனத்தைச் சுழித்த எண்ணப் பாய்ச்சல்.

வேகம் தாளாமல் முகம் அடிக்கடி சுளித்தது. மனம் சிணுங்கிக் கொண்டது.

மனதினுள் போட்டு அழுத்திப் புதைத்துச் சதைத்து... அறுக்க அறுக்கக் குருத்தது.

இந்த வாதனை சில நாட்களாக...

நினைத்து நினைத்து நிகழ்ச்சியின் ஈரம் வறண்டது.

திறந்து வைத்திருந்த மூக்குப் பொடியாய் சம்பவம் காரம் குன்றியது.

ஆனாலும் -

இரவுகளில் எண்ணங்கள் அலை பாய்ந்தன. கட்டுப்பாடற்ற மனம் அந்தச் சம்பவத்தைப் புதுக்க முயன்றது.

இதுவே ஒரு சுகமாகி... வேதனைகள் மாறி மனம் சுகங்காண ஆரம்பித்தது.

மனத்தில் நடக்கும் மைதுனம்... மூண்டெழுந்த ஆற்றாமை...

தீராத பசி...

அன்று செல்லம்மைக்கு ஏற்பட்டது போல் -

யானை, பொரி தின்று பசியாற முனைந்தது போல் எப்படிப்பட்ட அலைகளை உள்ளத்தில் ஏற்படுத்தி விட்டாள்? அது சமனுற எத்தனை காலம் பிடித்தது? எங்கு பார்த்தாலும் மனத்தில் ஒரு கபடும் சூதும் கவ்விக் கொண்டது போல்...

பெண்ணுடல்களை உறுத்து உறுத்துப் பார்க்கத் துவங்கிய அந்தத் தொடக்க காலம். பெண்களின் படித்துறை ஓரமாக ஆற்றைக் கடக்கையில் கண்களின் கயவாளித்தனம். புற்கட்டுப் நெற்கட்டும், நாற்றுக் கட்டும் சுமந்து வரும் பெண்களை காண்கையில், முட்டுக்கு மேல் ஆற்றில் தண்ணீர் பாய்கையில் நடு ஆற்றில் வந்து கலங்கல் இல்லாமல் நீர் பிடிக்கும் பெண்களின் தூக்கிய சேலையின் வெளிகளில்.

உடலில் மாறுதல்கள் ஏற்பட்ட காலத்தில் -

கட்கங்களிலும் முகத்திலும் மயிர் குருக்க ஆரம்பிக்கயி; தொண்டை உடைந்து கனக்கையில்,வியர்வை நாறத் தொடங்குகையில்,

இந்த வியாதியின் தீவிரம்.

எதையோ தேடுவதாக ஒரு தாகம்...

வானம் வெளிகண்டது. முதற் சேவல் தொண்டை கிழித்தது. தொடர்ந்தாற்போல் தூரத்தில் சேவல்கள் கூவும் ஓசை. மெதுவாக ஊர் உயிர்க்கும் சந்தடிகள். எழுந்து நின்று, மங்கிய தன் வெளிச்சத்தில் படிப்புரையின் மறு ஒரத்தைப் பார்த்தான் சுடலையாண்டி. யாரும் இல்லை. சில நினைவுகள் கனவு போல் ஆகிவிடுவதை எண்ணிக் கொண்டான்.

***

# பதினாறு

வழக்கமாகவே தேர்வு சமயத்தில்தான் சாஸ்தா கோயிலில் நம்பிரான் விளையாட்டு வரும். பங்குனி உத்தரத்தன்று கொடியேறி, ஆறாம் நாள் நம்பிரான் விளையாட்டு. சூரங்குளத்தில் ஆண்டுதோறும் வரும் திருவிழா. மொத்தமாக ஆறாட்டு முடிய ஏழு நாள் திருநாளுக்கும் தேவஸ்வம் போர்டு அனுமதித்திருந்த தொகை ரூபாய் நூற்று எண்பது மட்டும். சாஸ்தா கோயிலுக்கு என்று இரண்டு தலைமுறைகளுக்கு முன்பிருந்த பண்ணையார்கள் ஆளுக்குக் கொஞ்சம் நிலம் அறக் கொடையாக எழுதி வைத்திருந்தனர். அதிலிருந்து நெல், பூ தோறும் வரும். சாஸ்தா கோயில் பூஜை செய்யும் நம்பியார் தின்று கொழுத்துவிட்டு, சாஸ்தாவுக்கு ஒரு நேரப் பச்சரிசிச் சோறும் இரண்டு மூன்று அரளிப் பூக்களும்தான் மிச்சம். மாதத்தில் பத்து நாள் அவரும் வெளியூர் போய்விடுவார். அவர் மகன் வசம்பு மணம் மாறாத பாலகன். அம்மாவுடன் வந்து வீட்டிலேயே பொங்கிக் கொண்டு வந்த சோற்றைச் சாமியின் மூக்குக்கு நேரே காட்டிவிட்டு, வாளியுடன் போய் விடுவான். சாமியின் மூக்கில் காட்டுவது வடித்த பச்சரிசிச் சோறா அல்லது முன்தினத்துப் பழையதா என்பதில் அங்கு பலருக்குச் சந்தேகம் உண்டு.

எனவே இதை ஒரு வாய்ப்பாக வைத்துக் கொண்டு, நெல் அளந்துவந்த அந்தத் தலைமுறை ஒரேயடியாகச் சாஸ்தா வயிற்றிலும் நம்பியார் வயிற்றிலும் மண் அடித்து விட்டது. நிலைமை சகிக்க முடியாமல்போன போது அறுவடைக் காலங்களில் கோணிச் சாக்கை எடுத்துக் கொண்டு நம்பியார் அறுத்தடிப்புக் களங்கள் தோறும் போக ஆரம்பித்தார். குறுணி, பதக்கு, முக்குறுணி என்று வசூலித்து, ஆழாக்கு அரிசிச் சோறு அல்லது இரண்டு பாளையங்கோட்டன் பழம் என்று சாஸ்தா பாடு அரையும் குறையுமாகக் கழிந்தது.

நித்தியப் படி இப்படி இருந்தாலும் - சூரங்குளத்தில் வரும் திருவிழாக்கள் இரண்டு. ஒன்று அம்மன் கோயில் கொடை. அம்மன் பசை உடையவள். தர்மகர்த்தா சுரண்டல் போகக் கணிச மாக மீதமாகும். கொடை ஆண்டுக்கு ஒருமுறை, மூன்றாண்டுக்கு ஒரு முறை அல்லது ஏழாண்டுக்கு ஒரு முறை என்று நிச்சய மில்லாமல் வரும். ஊர் முதலடி பலவேசம் பிள்ளையின் சௌகரி யங்களை உத்தேசித்து. அவர் தங்கைக்குப் பேறு காலம் என்றால் அந்த ஆண்டு கொடை இருக்காது. அம்மனின் மிச்ச வாரத்தைத் தற்காலிகக் கைமாற்றாக எடுத்து அரைக் கோட்டை

விதைப்பாடு தன் பெயருக்கு வாங்கியிருந்தால் அந்த ஆண்டு கொடை இருக்காது.

அவ்வூர் ஆண்பிள்ளைகளில் பாதிப் பேர் பெண்டாட்டி பிள்ளை பெறுவதால், அவர்கள் ஆண்களாக மதிக்கப்படுகிறவர்கள். முதுகெலும்புகளை உருவிக் கூரைமேல் காயப்போட்டுப் பெட்டியுள் பத்திரமாக வைத்திருப்பவர்கள். மீதிப் பேர் பலவேசம் பிள்ளையின் காலடி தடவிகள். எனவே அம்மன் கோயில் கொடை என்பதோர் கால நிச்சய மற்ற விவகாரம். ஆனால் சாஸ்தா கோயில் திருவிழா ஆண்டுதோறும் வந்தாக வேண்டும். நிறுத்த முடியாது. நிறுத்தினால் மானியம் போகும் என்பது சின்ன விஷயம். சட்ட சபையில் எதிர்க் கட்சி கேள்வி கேட்கும்.

ஆறுநாள் திருவிழா என்றாலும் முதல் ஐந்து நாள் திருவிழாக்களுக்குச் செலவேதும் கிடையாது. காலையில் ஒரு முறை வாகனம் எடுப்பு. மாலையில் ஒருமுறை வாகனம் எடுப்பு. நேர நிர்ணயம் ஏதும் கிடையாது. ஒன்பது கோயிலும் ஒரு ஒச்சனும் என்பது போல், தேவஸ்தானம் ஒரு தவிலையும் ஒரு நாதஸ்வரத்தையும் திருவிழாவுக்கு என்று அருளும். அந்த இரண்டு பேரும் தாழக்குடி, திருப்பதிசாரம், வெள்ளமடம், இறைச்சகுளம் கோயில்களில் வாசித்து விட்டு, காலை பத்தரை மணிக்கு மேல் பன்னிரண்டுக்கு அகம் சூரங்குளம் வருவார்கள்.

தவில் நாதசுரக்காரர்களை எதிர்பார்த்து, சிறியதோர் யானை வாகனத்தின் பீடத்தில், வெண்கலச் சட்டத்தினுள் சாஸ்தா செவ்வரளி மாலை பூண்டு, அரையிலோர் சிவப்புத் துண்டு கட்டி, ஊதுபத்தி வாசனையில் தயாராக இருப்பார்.

வாகனத்துக்கு ஆள் சேர்ப்பார்கள். இரண்டு தண்டயங்கள். மூலைக்கு ஒருவராய் நான்கு பேர்கள் வேண்டும். தூக்கி ஊரை ஒரு முறை சுற்றிக் கொண்டு வந்து இறக்க இரண்டணா கூலி. இந்த வாகனம் தூக்கி இறக்கும் பணிக்குப் பலவேசம் பிள்ளையின் சொந்தக்காரன் ஒருவன் பொறுப்பு.

“ஏ சம்முகம்... தூரமா போறே?”

“நான் இப்பம் வர முடியாது. மேலப்பத்திலே வெள்ளம் வெலவிப் போட்டிருக்கேன்.”

“அட ஒரு சுத்துத்தாலா... அஞ்சு நிமிசம் ஆகும்...”

“என்னால முடியாது. வேற யாரையாம் பாரும்...”

மூன்று பேர்கள் திகைந்து நாலாவது ஆளுக்காக சாஸ்தா காத்து நிற்பார்.

“அன்னா தூரத்துலே வாறது யாருலே?”

“அவனா? செவனாண்டி... அவன் என்ன எளவுக்கு? வாகனத்தை வழியிலே கொண்டு போடதுக்கா?”

“ஆங்... தெக்குத் தெருவிலேருந்து யாரோ வாறாடே...!”

“உமக்கென்னா கண்ணவிஞ்சா போச்சு? அவன் பேரின்ப ராஜில்லா...”

“ஓகோ...”

எப்படியோ சுத்த சுயம்பு இந்துவான ஒரு நாலாவது ஆளும் அகப்பட்டு, கட்டையும் நெட்டையுமாக, தோதின்றி, வாகனம் தோளில் ஏறும். பிறகு கேட்க வேண்டாம். தர்மக் கஞ்சிக்கு ஓடுவது போல் வாகனம் ஒரே ஓட்டம்தான். “பீப்பீ.. பீப்பீ..." என்று இரண்டு மூன்று சத்தம் கேட்கும். “திடும்... டும்... டும்.. திடும்...” என்று தவிலடி. வாகனம் ஊர் முதலடி பலவேசம் பிள்ளை வீட்டின் முன் நிற்கும். எல்லா திருவிழாவுக்கும் இரண்டு நேரமும் பலவேசம் பிள்ளை வீட்டில் திருக்கம் சாத்துவார்கள். சூடம் கொளுத்தித் தீபாராதனை காட்ட நம்பியார் கூடவே போவார், தீபத்தட்டு திருநீற்றுக் கொப்பரை சகிதம்.

வாகனம் வரும் நேரம் நிச்சயமில்லாததால் அந்த இடத்தில் வாகனம் வந்து நின்ற பின்தான் பலவேசம் பிள்ளை வீட்டில் திருக்கம் சாத்த யத்தனங்கள் நடக்கும்

இந்த இடத்தில் மட்டுமே நாதசுர வித்துவானுக்குத் தனது திறமையைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். ‘வாராய் நீ வாராய்!’ என்று ஒரு பாட்டைத் துவங்குவார். திருக்கம் சாத்தி, பிரசாதம் வழங்கி, பொரி விளம்பிய பின் வாகனம் ஒட்டமான ஓட்டம். தீயணைப்பு வண்டிக்கு வழிவிட மணி அடிப்பது போல், தவில் நாதசுரங்களின் நாய்ப் பாய்ச்சல். தவிலையும் தூக்கிக் கொண்டு ஓடுவது பெரிய பாடு... சாமி பார்க்க என்று பெண்கள் தெருவுக்கு வருமுன், சாமி தெரு முக்கில் திரும்பி

விடுவார். ‘எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்’ என்பது போலொரு வேகம்.

சாமி சுற்றி வந்து நின்றதும் சாஸ்தா கோயில் சந்நிதியில் ஒரு தீபாராதனை. பொரி விளம்பல். ஆயிற்று நாலாம் நாள் திருவிழா. இரவு வாகனம் எடுப்பு என்பது காலையைவிட அதிக வித்தியாசம் கிடையாது. வெளிச்சத்துக்கு ஒரு தீவட்டி. பத்திருபது சிறுவர்களும் சாஸ்தாவுக்குத் துணை போவார்கள். இந்த ரீதியில் முதலைந்து திருநாட்களும் நடந்தாலும் ஆறாவது நாள் நம்பிரான் விளையாட்டன்று பெரிய பரபரப்பு.

நம்பிரான் விளையாட்டன்று ஆகிற செலவை அம்மன் கோயில் கணக்கில் செய்வார்கள். ஊர்ப் பெரிய மனிதர்கள் எல்லோரும் காலையிலேயே வந்து தானமானம் செய்வார்கள். ஊர் வகைச் செலவில் கஞ்சி வைப்பு. ஊரின் குஞ்சு குளுவான்கள் எல்லாம். விருந்தினர்கள் எல்லாம் –

இரண்டு சக்கடா வண்டி நிறையப் பனையோலைகள். வயதான பெரியவர்கள் நான்கு பேர் இருந்து ஓலையைக் கீறிப் பட்டை செய்து குவிப்பார்கள். கஞ்சிப்பட்டை, கறிப்பட்டை என்று இரு பிரிவு. ‘ஒன்றை விட மற்றது சிறியது. கறியென்றால் ஒரே கூட்டுக்கறி. பூசணி, வாழைக்காய், சேனை, கத்திரிக்காய், கடலைப் பருப்பு போட்டு, தேங்காய் அரைந்தும் அரையாமலும் மிதக்கும். பெரிய வார்ப்பில் கூட்டுக் கறியும், செம்புகளில் கஞ்சியும் வைத்து அண்டாவில் பகிர்ந்து...

அந்தக் கோயில் கஞ்சிக்கும் கறிக்கும் ஒரு மணம். கூட்டமாக உட்கார்ந்து குடிக்கும் மணம். பனையோலைப் பட்டையின் மணம். கோயிலின் உள்பிரகாரத்திலும், வெளிப் பிரகார நிழற் பந்தலிலும் உட்கார்ந்து குடிக்கும் மணம்.

பலவேசம் பிள்ளையின் அதிகாரந்தான் தூள் பறக்கும்.

“சொர்ணப்பா...! அங்க என்ன மயிரைப் பார்த்துக்கிட்டு நிக்கே... அந்த கஞ்சியை எடுத்தா.”

“முருகேசா! அணஞ்சிப்பிள்ளை அம்மானுக்கு என்ன வேணும்னு பாரு. கறியை எடுத்துக்கிட்டுப்போ...”

அங்குமிங்குமாக விளம்ப அலைந்தவர்கள். இது போன்ற பொது இடச் சேர்க்கைகளில் எல்லாம் சுடலையாண்டிக்கு ஒரு கூச்சம். பட்டையில் கஞ்சியோ கறியோ இல்லாவிட்டாலும் கூப்பிட்டுக் கேட்க ஒரு வெட்கம்.

காவல்காரத் தேவரும் மகனும் “ஊய் ஊய்” என்று வேப்ப மரக் கிளைகளில் அமர்ந்து தலையிலோ, பட்டையிலோ எச்சம் போடக் காத்திருக்கும் காக்கைக் கூட்டத்தை விரட்டும் ஓசை.

கோயிலின் பின்புற வாசலில் குவியும் எச்சில் பட்டைகள். எச்சில் பட்டையில் மிச்சப்பட்டதை வடித்துச் சேர்க்கும் கொச்சைப் பட்டவர்.

எங்குடி ஒரே ஒலி. பேரொலி. இரைச்சல். பல பேர் ஒரே நேரத்தில் பேசும் ஒலி. பிச்சைக்காரர்களை விரட்டும் ஓசை.

பண்ணையார்கள் கோயிலினுள் நுழையும்போது எழும் கலகலப்பு.

கஞ்சி குடித்த பிறகுதான் நம்பிரான் விளையாட்டு வேலைகள் உண்மையிலேயே ஆரம்பமாகும். ஒரு கூட்டம் பாத்திர பண்டங் களை ஒதுங்க வைத்து, கோயில் பிரகாரங்களைப் பெருக்கிக் கழுவி வெளிச்சுற்றைச் சுத்தப்படுத்தும். மறு கூட்டம் தெருவில் வாகனம் போக இடைஞ்சலாக நிற்கும் சக்கடா வண்டிகளை எல்லாம் வயற்காட்டில் இறக்கித்தள்ளி, தெருக்களில் கவிந்து நிற்கும் மரத்தின் கிளைகளைச் சீர் பார்க்கும். கோயிலின் பின்புறச் சுற்றிலும், பிள்ளையார் கோயில் சுற்றிலும் கிடக்கும் கள்ளி, கண்ணாடித்துண்டு, உடைந்த பானை, கந்தல் துணி, பீநாறிச் செடி, கொடுக்கள்ளி யாவற்றையும் அள்ளி மாற்றும். வேறொரு கூட்டம் வாகனப் புரையில், வெளவால் புழுக்கைகளின் மணத்துடன் வாழும் வாகனச் சட்டத்தையும், குதிரை வாகனத்தையும் கீழிறக்கி சாஸ்தா கோயில் முகப்பில் உயரமான தட்டுப் பந்தல் கீழ்க் கொண்டு நிறுத்தும்.

சோப்புப் போட்டு வாகனச் சட்டம், குதிரை இவற்றைக் கழுவி, குதிரையின் அடிவயிற்று பால்பேரிங்குகளில் எண்ணெய், கிரீஸ் போட்டுச் சீர் பார்த்து, போல்டின் நட்டுகளை முறுக்கி, வேகமாக ஏழெட்டு முறை சுழற்றிப் பார்த்து...

நாலு மணிக்கு வாகனத்தை அலங்கரிக்க ஆரம்பித்தார்கள். நம்பியாருக்கு உதவி செய்ய இரண்டு வெளியூர் பட்டர்கள். குதிரை முதுகில் இருக்கும் பீடத்தில் சாஸ்தாவின் வெண்கலச் சிலையை

வைத்துக் கட்டி, வாகனமும் சாஸ்தாவும் கிழக்குப் பார்த்து இருக்கும்படி நிறுத்தி, நான்கு வெளிச் சட்டங்களிலும் பொம்மைகள் பொருத்தி...

குதிரை வாகனத்துக்கு மூன்று தண்டயங்கள். இரண்டு பக்கத்திலும் நடுவிலும். சுருணை சுருணையாகக் கொச்சக் கயிறுகள். ஒன்பதங்குல விட்டமுள்ள பெரிய மூங்கில் தண்டயங்கள். இரு முனைகளிலும் இரும்புப்பூண். தோள் பட்டுப் பட்டு மழுமழுத் திருந்த தண்டயங்களைத் தொட்டால் ஒரு குளிர்ச்சி. மேலே குதிரைக்குச் சட்டம் அதற்கு மேல் குதிரை, நாக்கை ஒரு புறம் வழித்துக் கொண்டு. போன ஆண்டு புதுவர்ணம் அடித்தார்கள். கண்ணை வாங்கும் நிறங்கள். பக்கத்து ஊர்கள் - இறச்சகுளம், நாவற்காடு, புத்தேரி, ஆரல்வாய்மொழிக் குதிரைகளைவிட, சூரங்குளத்துக் குதிரைக்கு தனிக்களை உண்டு. உறுதியான, கனமற்ற மரத்தில் வடிவாக அமைந்த கடைசல். வயிறு பெருத்து விடாமல், முதுகு அதிகம் வளைந்து போகாமல், முகத்தில், கண்களில் உயிர் துடிக்க அது சுழலும் விதமே தனி. மற்ற ஊர்க்காரர்களுக்கு சூரங்குளத்துக் குதிரை மீது பொறாமை கூட உண்டு. சூரங்குளத்தைவிட மற்ற ஊர்களெல்லாம் பெரியவை. குதிரையின் பின்னங்கால் குளம்பைப் பற்றித் தள்ளிச் சுழற்றும் உடல் திறன் கொண்டவர்கள் சூரங்குளத்தில் அதிகம் பேர் இல்லை. ஆனாலும் இந்தக் குதிரை பறக்கும் வேகம்-

சாஸ்தாவுக்கும் குதிரைக்குமாகப் பெரியதோர் சிவந்திப் பூ ஆரம். சாஸ்தாவின் உச்சியிலிருந்து துவங்கிக் குதிரையின் இடுப் புக்குக் கீழ் நாலும் பெரியதொரு வாடாமல்லி மாலை. சாஸ்தாவுக்கு மட்டும் ரோஜா மாலை. பின்புறம் மூங்கில் பிளந்த நீண்ட துண்டுகளால் கட்டி, ஒரு சாய்மானத் திண்டு. போர்த்தி பெரிய சிவப்புப் பட்டு. சாஸ்தாவின் தோள் புறங்களில் வெட்டிவேர் விசிறிகள். தலை மேல் பூக்குடை. கிளி வைத்த குடை முகம் மட்டும் தெரிய மற்றெல்லாம் மாலைகள் மறைத்த சாஸ்தா. குதிரையின் தோளிலிருந்து கீழிறங்கும் பெரியதோர் கதம்ப ஆரம். முன்னங் கால்களில் தலை கீழாகக் கட்டிய கமுகம் பூக் குலைகள். பொம்மைகள் கழுத்தில் அரளிமாலை. கையில் தென்னங் குருத்தில் சாட்டை.

வாகனம் சோடித்து முடிக்கையில் ஆறு மணி.

சிறுவர் கூட்டம். பெரியவர் கும்பல். சாஸ்தா கோயிலுக்கு முன்பிருந்த திடலைச் சமன் செய்து, புல்வெட்டி, புழுதி அடங்கத் தண்ணீர் தெளித்து, குப்பை போகப் பெருக்கி... திருவிழா களை கொண்டது.

கோயில் முகப்பில் செண்டை மேளம். கழுத்தில் கயிறு கட்டி மாட்டிக் கொண்டு இடுப்புக்கு மேலிருக்கும் பக்கம் மட்டும் அடிக்கும் செண்டைகள். இரண்டு புறமும் அடிபடும் டிரம்கள். கிளாரினெட் பேன்ட் வாத்தியங்கள். தனியொரு பக்கம் ஆஸ்தான வித்துவான்கள். பொய்க் குதிரை, மயில் ஆட்டக் காரர்கள் வேஷம் கட்டப் போயிருந்தனர்.

மைதான ஒரங்களில் - கலர்த் தண்ணீ வியாபாரம், ஐஸ்ஃப்ரூட், பொரி உருண்டை, சவ்வு மிட்டாய், சுண்டல், முறுக்கு, மிளகாய்வடை, கடலை வகைகள். இரண்டு மிட்டாய்க் கடைகள். வடக்குத் தெரு இராமையாவின் தற்காலிக ஸ்பெஷல் திருவிழாக்கடை. பழங்கள், கலர், சோடா பாட்டில்கள், நுங்கு, பிருத்திச் சக்கை, பழம் போட்டு அடித்துக் கலக்கும் நன்னாரி ஷர்பத்...

ஊரெங்கும், வீடெல்லாம், விருந்தினர் கூட்டம். வெளியூர் சிறுவர் சிறுமியர்களைக் கூட்டிக் கொண்டு அலையும் உள்ளூர் சிறுவர் சிறுமிகள். கையிலும் பையிலும் சேர்ந்த சில்லறைகள்.

மணி ஆறரை கழிந்தது. செண்டை மேளம் முழங்கியது. வாகன எடுப்புக்கான நேரம் நெருங்கியதொரு துடிப்பு. ஊர்ப் பெரிய மனிதர்கள் எல்லாம் சாத்தா கோயில் முகப்பில். விளக்கு வைக்கும் நேரம். பெட்ரோமாக்ஸ் விளக்குகள் எழுப்பிய ஒளியும் ‘குபீர் குபிர், எனும் இரைச்சலும்...

***

# பதினேழு

ஊர் முதலடி பலவேசம் பிள்ளை வீட்டிலிருந்து இறங்கினார். கோவண நுனியின் தொங்கல் தெரியும் மெல்லிய இரட்டை வேட்டி. ஒரு தோளில் கவலையற்றுத் துவண்ட நேரியல். வாயில் வெற்றிலை கொலு. பக்கத்தில் வெளியூர் உறவினர் தொடர, ஒரு வேட்டி நுனியை இடது கை விரல் களால் பற்றியபடி நிதானமாக நடந்து வந்தார்.

செண்டை மேளம் 'டம டம டம' வென அதிர, தவில் நாதசுரம் முழங்க...

“நம்பியாரே. தீவார்ணை ஆகட்டும்...”

பெரிய பித்தளைப் போணியில் கரைத்து வைத்திருந்த சந்தனக் குழம்பை கோரிக் கோரி நீட்டிய கைகளில் ஊற்றினார் ஒருவர். வேட்டியை மடித்துக் கட்டி, அதன் மேல் துவர்த்தை இறுக்கி, மார்பிலும் தோளிலும் சந்தனம் பூசி, வாகனத்துக்குத் தோள் போடத் தயாராக நின்றவர்கள்...

தீபாராதனை ஆயிற்று. வாகனத்தின் முன் மைதானத்தில் பதிந்து கிடந்த வட்டக் கல்லில் தேங்காய்களைப் ‘படீர் படீர்’ என்று எறிந்து பலவேசம் பிள்ளை ‘விடல்’ போட்டார்.

சூடத் தட்டைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு –

“வாகனத்தைக் கைக்கு எடுங்கோ...”

கையில் வாகனத்தை எடுத்து, பந்தலை விட்டு வெளியே வந்ததும் -

“தோளுக்கு எடுங்கோ...”

வாகனம் தோள் மீது ஏறியது. “ணிங், ணிங், ணிங்” என்று பொம்மைகளின் மணிகள் கிலுங்கின. மேளம் முழங்கியது. செண்டை அதிர்ந்தது. ‘வெட்டுங்குதிரையாக, குதிரையின் பின் நின்று ஒருவன் மேலும் கீழும் அசைக்க, ஒரு கௌரவத்தோடு, ஒய்யாரத்தோடு, உற்சாகத்தோடு, நம்பிரான் வாகனம் கோயிலைச் சுற்றி வந்தது. நேராகப் பெரிய தெருவில் அஞ்சலோட்டமாக ஓடி, அம்மன் கோயில் சார்பாக வாகனத்துக்கு நீளமான ரோஜா மாலை. பன்னீர் குப்பி.

அம்மன் கோயிலிலிருந்து மேற்கே சாஸ்தா கோயில் திடலுக்கு ஒருஓட்டம். திடலில் ஜனத் திரள். ஆணும் பெண்ணும் குழந்தையும். வெள்ளை சொள்ளைகள். நிறக் குழம்புகள். நகை ஒளிப் பீறிடல். சிரிப்புக் குலுங்கல். உற்சாகக் கலவை...

சாஸ்தா கோயில் திடலுக்கு வந்த வாகனம் மத்தியில் நின்றது.

தோளிலிருந்து வாகனம் கையில் இறங்கியது. மூன்று தண்டயங்கிலும் இட நெருக்கடி. வாகனத்தின் வடக்குப் பாதி தண்டயத்தினர் கிழக்கு நோக்கி. தெற்குப் பாதியினர் மேற்குப் பார்த்து. வாகனச் சட்டத்தின் நான்கு மூலைச் சவுக்கங்களில், இரண்டில் எதிரும் புதிருமாகச் சட்டத்தில் சாய்ந்து, தலையை மல்லாத்திப் படுத்து, கையை உயர்த்திக் குதிரையின் பின்னங்கால் குளம்பைப் பிடித்து வேகமாகத் தள்ளத் தொடங்கிய இருவர். குதிரை "கிறு கிறு கிறு வெனச் சுழல, தண்டயத்தைத் தாங்கிப் பிடித்தவர்கள் சுழன்று ஒடத் துவங்கினர்.

இரு இலையுடைய காற்றாடி போல் வேகமானதோர் சுழற்சி. சுழன்று ஓடும் போதே “ஒவ். ஒவ்.” என்றொரு கூட்டுக் கூச்சல், சட்டத்தினுள் கிடந்து ஆசாகக் கால்களை மட்டும் மாற்றிக் கொண்டு, குதிரையைச் சுழற்றும் இருவரின் விளி - “பிடிச்சுக்கோ...”, “இன்னா...”, “பிடிடா...”,

“இன்னா...”, “இன்னா...”…

வானில் சுழலும் பம்பரமாக,

பறந்து கிறங்கும் பூப்பந்தாக,

சுழன்று திரியும் மின்மினியாக –

“எல்லோரும் ஒண்ணு போல உயர்த்துங்கோ...”

மாருக்கு நேர், கையில் இருந்த தண்டயம், தலைக்கு மேல் தூக்கி விரித்த விரல்களில் நின்றது. ஓட்டம் ஓய்ந்து வேகமான நடையில், வாகனம் சுற்றுபவர்கள். சுழற்றி விட்ட வேகத்தில் சுழலும் குதிரை. சட்ட சதுரத்தில் இருந்த இருவரும் களைத்து வெளியேற, புதிதாக இரு தடியர்கள் உள்ளே நுழைய -

“எல்லோரும் ஒண்ணு போல இறக்குங்கோ...”

மீண்டும் சுழற்சியும் ஒட்டமும்.

தலை தெறிக்க ஓடும் வேகத்தைக் கட்டுப்படுத்த, முள்ளின் இரு முனைகளிலும் வலுவான இருவர். வேகம் தடுக்க, கட்டளை முடுக்க, தண்டயத்தில் போதுமான ஆட்கள் இருக்கின்றனரா என்று கண்காணிக்க, சுழற்றும் இருவரின் களைப்பைக் கணக்கெடுக்க...

புழுதி பறந்தது.

வியர்வை வடிந்தது.

செண்டையும் மேளமும் வானை வளைத்தன.

நம்பிரான் ‘கற கற கற' வெனக் கறங்கியது.

சுடலையாண்டியின் மனதில் இரு வகை வாது. இன்றொரு நாள் மட்டும் புத்தகங்களை ஒதுக்கி வைத்து விட்டு நம்பிரான் விளையாட்டு பார்க்கலாமா? இன்னும் சில நாட்களில் தேர்வுகள் தொடங்க இருந்தன. இன்று ஒரு நாள்தானே என்றாலும் ஒரு நாள் அல்லவா? பிறகு திரும்பக் கிட்டாத ஒரு நாள். இதை மறந்துவிட்டு எப்படி நம்பிரான் சுற்றுவதைப் பார்ப்பது? ஆனாலும் -

ஒரு கட்டம் சுற்றி முடித்துவிட்டு நம்பிரான், ஆயக் கால்கள்மீது நின்றிருந்தது. இடைவேளையில் பொய்க்கால் குதிரை ஆட்டம். பொய்க் குதிரையின் துள்ளல். மயிலின் ஒய்யாரம். ஒன்றுமறியாத உருவங்களாக வளர்ந்து ஓங்கி நின்ற ஆண், பெண், ஆலிகள். மீண்டும் ஆயக் காலிலிருந்து வாகனம் தோளில் ஏறிற்று. மைதானத்துக்கு வந்தது. பலவேசம் பிள்ளை கை சைகை கண்டு பொய்க்குதிரை, மயில் எல்லாம் ஒதுங்கின.

“சண்டஞ் சண்டஞ்... சண்டஞ் சண்டஞ்...” என்று மீண்டும் செண்டை முழக்கு. தாங்கிய கைகளில் மாருக்கு நேராக நின்ற தண்டயங்கள். குதிரையின் சுழற்சியும் ஓட்டமும்.

சுடலையாண்டியின் ரத்தத்திலும் ஒரு துடிப்பு. ஒரு முறுக்கு. அந்த வேகமும், இரைச்சலும், கூப்பாடுகளும். தன்னையொத்த வயதுடைய வாலிபர்கள் எல்லாம் தண்டயங்களில், சட்டத்தினுள் வாகனம் சுழற்றும் இளைஞர்கள். இதில் தான் மட்டும் ஒட்டாமல் எப்படித் தனியாக நின்று

வேடிக்கை பார்ப்பது?

முன்பெல்லாம் நம்பிரான் சுற்றும் பெரியவர்களைப் பார்த்து, இது தனக்கு என்று கிட்டும் என்ற ஏக்கம் பொடிக்க நின்றதுண்டு. இன்று மனமும் உடலும் பர பரக்கின்றது.

சுற்றி நின்று வேடிக்கை பார்க்கும் பெண்களும், குழந்தைகளும் முதியவர்களும். மாரிலும் முகத்திலும் வியர்வை பொங்கி வழிய ஓடும் இந்த ஆடவர்கள்... ஓடியோடி ஓய்ந்து மற்றவர்க்கு இடம் விட்டு வெளியில் ஒதுங்கி நின்ற வாலிபர்கள்-

பெண்கள் கூட்டத்தில், தலையைச் சுற்றிய ஒளி வட்டத்துடன் ஆவுடையம்மாள். வெளியூரிலிருந்து வந்த உறவுக்காரப் பெண்களுடன், எதையோ காட்டிச் சிரித்தவாறு...

புல்லழுக்குப் படாமல் ஒதுங்கி நிற்பது என்னவோபோல் இருந்தது அவனுக்கு.

மாரணைப்பில்... சுழன்ற தண்டயங்கள் உயரத் தூக்கியகைகளில்... வேகமாகச் சுழன்ற குதிரை. களைத்துப்போன சிலர் வெளியே ஓடி வர, வெளியே இருந்து சிலர் தண்டயத்துக்கு ஓட-

பிடர் பிடித்து உந்திய வேகத்தில், காலியாகக் கிடந்த தண்டயம் ஒன்றில் போய் நின்று தாங்கினான் சுடலையாண்டி,

தண்டயம் தலைக்கு மேலிருந்து மாருக்கு நேராக - “ஓவ்...” என்ற ஒலியோடு தொடங்கிய சுற்றல். வேறுபாடற்ற வெறி ஆட்கொண்ட நிலை. உடல் வலு ஒன்று மட்டுமே ஆட்சி செய்த பரவச நிலை. மாரோடு தண்டயத்தைச் சேர்த்து அணைத்து ஓடிக் கொண்டிருக்கும் போதே, வியர்வை கசிந்து, தண்டயம் நனைந்து வழுக்குவது போல்... முதுகிலும், நெற்றியிலும், கழுத்திலும் ஊற்றுக் கண் திறந்த நீர்ச்சுனைபோல் - நெற்றியிலிருந்து புறப்பட்ட துளியொன்று மூக்குத் தண்டில் வழிந்து, மீசை மயிரைக் கடந்து, வாயுள் இறங்கி - துப்பத் தெரியாத ஒரு பரவசம். மூச்சு இரைக்கலுற்றது. ‘வாகனத்தைத் தூக்கிக் கெட்டு...”

ஓய்வெடுத்துவிட்டுத் திரும்பி வரலாம் என்று தோன்றியது சுடலையாண்டிக்கு. வாகனம் தலைக்கு மேல் உயர்த்திய கைகளில் நின்று தானாகச் சுழன்றது. வட்டத்தோடு ஓடி வெளியே வந்து விலகி

நின்றான் சுடலையாண்டி. அவனோடு வெளியே வந்தவர் சிலர். காலி இடம் நிரம்ப உள்ளே புகுந்தவர் சிலர்.

‘சள சள வென வியர்த்து வழிந்தது. முதுகின் ஒடையில் உருண்டு இறங்கும் துளிகள். இடுப்பில் மடித்துக் கட்டிய வேட்டியின் மேல் முறுக்கிக் கட்டிய துவர்த்து ‘சொத சொத’ என ஈரம் கொவர்ந்தது. நெற்றி வியர்வையை விரலால் வழித்து வீசினான். மேற்கே சாஸ்தா கோயில் வடக்கு மதிலுக்கும் தோப்புத் தொடருக்கும் இடைப்பட்டிருந்த தொண்டின் வழி, மடத்தாம் பத்திலிருந்து அலையெழும்பித் தாவி வந்த காற்று மார்பைத் தொட்டு ஓடியது. முகத்தைத் தடவிக் கலைந்தது.

முறுக்காகத் திருவிழாக் கூட்டம் சிலம்பியது. முதுகுக்குப் பின் பேச்சும் இரைச்சலும்...

“ஏட்டி சொர்ணம்... உங்க அக்கா வரல்லியா?”

“வந்திருக்கா. அவுளுக்கு தொடப்பிடாது.”

ஆவலைக் கட்ட முடியாமல் திரும்பிப் பார்த்தான் சுடலையாண்டி.

ஊர் முதலடியின் மகள் என்ற தோரணை துலங்கிய ஆடைகள் - மூன்றாண்டுக்கு முன்னால் கல்யாணமாகிக் கடுக் கரைக்குப் போய்விட்ட பள்ளித் தோழி கனகத்தை விசாரிக்கிறாள் போலி ருக்கிறது. சுடலையாண்டி திரும்பிப் பார்ப்பதை அவளும் பார்த்தாள்.

நான்கு நாட்கள் பொறுத்துத் தொடங்க இருக்கும் தேர்வுகள் பற்றிய நினைவு திடீரென இடைபுகுந்தது. உடனே வீட்டுக்குப் போக வேண்டும் போல் ஒரு எண்ணம். இப்போது போனால், ஊர் சுற்றிவாகனம் வீட்டுமுன் வரும்போது கால்குலஸின் ஒரு பகுதியைப் பார்த்து முடித்த ஆனந்தம் இருக்கும். காலையில் மீதியைப் படிக்க வசதியாக இருக்கும்.

“ஏ தண்டயத்திலே ஆளில்லே...”

குதிரை தலைக்கு மேல் சுழன்று கொண்டிருந்தது. தண்டயங்களில் ஆள் இல்லாமல் வெளி வெளியாகத் தெரிந்தது. அரைத் துண்டை இறுக்கிக் கொண்டு வாகனத்துக்கு ஓடியவர் களோடு சுடலையாண்டியும் ஓடினான். பின் கொம்பில் இடம் பிடித்தான்.

“எல்லோரும் தாத்துக் கெட்டு...”

தண்டயம் கைகளில் - மாரோடு அணைந்தது. சுமந்து ஓடும் போது சுடலையாண்டிக்குத் தெரிந்தது - இடது பக்கத்தில் ஓடு பவன் பாவநாசம். அவன் வலது கையோடு சுடலையாண்டியின் இடது கை உராய்$$$$$

அருவருப்பில் கையை நகர்த்தினான் சுடலையாண்டி.

“தூக்கிக் கெட்டு.”

ஓட்டமும் நடையுமாக, அக்குள் மயிர் தெரிய, தலைக்கு மேல் கைகளை உயர்த்தி, தண்டயத்தைத் தாங்கி –

“இறக்கிக் கெட்டு.”

புதியதோர் ஆவேசம் வந்ததுபோல் ஒரு ஓட்டம். தலையை முன் தள்ளிக் குனிந்து, கால்களை வேகத்தோடு முன்னால் எட்டிப் போட்டு - வேகமான ஒட்டமும் குதிரையின் கிறக்கமும்...

கால்களில் புழுதி அளைய ஓடிக்கொண்டிருக்கையில் –

சுடலையாண்டியின் இடது காலில், பெருவிரல் மடிந்து, மடங்கி - மளுக்கென்று ஒரு சத்தம். தடுமாறிக் கீழே விழப் போய். கையூன்றி எழுந்து யாரோ ஓடிவந்து கையைப் பற்றி இழுத்து வட்டத்தின் வெளியே கொண்டு வந்து விட்டபோது, மூச்சு வாங்கியது.

காலடிகள் மிதிக்காமல் தப்பிய அதிர்ச்சி –

மனப்பறை பேயடி பட்டு அதிர்ந்தது.

இடது கால் பெருவிரலில் வலி சுரம் பேசியது.

ஓரிருவர் விசாரித்தனர்

“என்னாச்சுலே... ?

“காலு உளுக்கீட்டா?”

“பாத்து ஒடப்பிடாது!”

இனிமேலும் இங்கிருந்தால் அனுதாபப் பூச்சொரியல் செந்தட்டி இலையாய் உடம்பில் அரிப்பு ஏற்படுத்தும். மெல்ல நடந்தான் சுடலையாண்டி. பெருவிரலில் மட்டும் வேதனை. பச்சைத் தண்ணீரைத் தொட்டுத் தடவினால்? வலியால் இடது கால் கிந்தியது. கிந்துவதைப் பிறர் காணாமல் சாமர்த்தியமாக மறைக்க முயன்று, மெல்ல மெல்ல நடந்து, ஊருணிப் படித் துறையில் இறங்கினான். தண்ணீரைத் தொட்டு இடது கால் பெருவிரலில் நீவினான். பாதத்தோடு விரல் சேரும் கணுவில் விரல் பட்டால் வலித்தது. இலேசாக வீக்கம் கண்டிருப்பதாகத் தோன்றியது. பதமாக அழுத்திப் பார்த்தான். அழுந்தியது. ஏதாவது முறிவு கிறிவு இருக்குமோ? இருப்பதுபோல் தெரியவில்லை.

அதுவரைக்கும் நல்ல காலம்.

மெதுவாக வீட்டுக்குப் போய்விட வேண்டும். ஏதாவது எண்ணெய் போட்டுத் தடவிப் பார்க்கலாம். வென்னீர் வைத்து ஒத்திப் பார்க்கலாம்.

நடக்க நடக்க வலி துரித கதியில் பேசியது. தனி ஆவர்த்தன கதியில் மோர்சிங் சுண்டுவது போல், விண் விண்’ என்றொரு தெறிப்பு. ஆறு மணி நேரம் மூத்திரம் பெய்யாமல், பஸ்ஸின் பின் சீட்டில் அமர்ந்து, நொடிகளும் குண்டு குழிகளும் நிறைந்த பாதையில் பயணம் போகையில் தெறிப்பது போல்... தெருக் களின் வழியாகச் சுற்றாமல், முடுக்குகளின்வழியாகக் குறுக்குப் பாதையில் நடந்தான். வழக்கமாக, ஒலியற்று, இருள் படர்ந்து கிடக்கும் முடுக்குகளில் இன்று வெளிச்சம். சாஸ்தாவுக்கு வந்த விடிவின் சில துளிச் சிதறல். நம்பிரான் விளையாட்டு மும்முரமாக இருந்ததால், ஆள் நடமாட்டமில்லை. வீடுகளில் கிழவிகளின் காவல் இரைச்சலற்று நடந்தது.

ஆத்தா, வீட்டில் இருக்கிறாளோ இல்லையோ? தாத்தா கோயில் முகப்பில் யாரோடாவது பேசிக் கொண்டிருப்பார் . யாரும் வீட்டில் இல்லாவிட்டால் மாடக் குழியில் சாவி இருக்கும். யார் வந்தாலும் கதவைத் திறந்து கொள்ளலாம். கள்ளர் பயமில்லை. திருடு கொடுக்க எதுவும் இல்லாத காந்தி நாடு.

வீட்டை நெருங்க நெருங்கக் கால் வேதனை கூடிற்று. வீட்டில் போய்ப் படுத்துக் கொண்டால் போதும். நடப்பது சங்கடமாக இருக்கிறது. சரியாக இருக்கும்போது பெரு விரலின் இருப்பு கூடத் தெரிவதில்லை.

கோளாறு வந்து விட்டால் அதுவே உடம்பாகி விட்டதுபோல்.

நல்ல காலத்துக்கு ஆத்தா வீட்டிலிருந்தாள்.

“என்னலே சீக்கிரம் வந்திட்டே...?”

“காலு சுளுக்கீட்டு”

“என்னது? எங்கிணெ?”

“இடது கால்லே பெரு வெரலு. வாகனத்தோட ஒடச்சிலே பெசகிட்டு-”

“ஆங்? விழுந்திட்டியா?”

“விழப்பாத்தேன். அடி படல்லே...”

“காலைக் கொண்டா பாப்பம் - அய்யய்யோ. வீங்கிப் போயில்லா இருக்கு! நீ என்ன எளவுக்கு நம்பிரான் சுத்தப் போனே? பேசாம ஒரு கரையிலே நிண்ணு பாத்துக்கிட்டுதாலா வரணும் இப்பம் பரிச்ச சமயத்திலே வாங்கிப் புடிச்சுக்கிட்டு வந்திருக்கியே.”

“சரி சரி... ராமாயணம் பாடாதே. எண்ணை என்னமாங் கொண்டா...”

“செத்த இரி... வேலம்மை இருக்காளாண்ணு பார்த்துக்கிட்டு வாறேன். அவ கையாலே கொஞ்சம் எண்ணை போட்டுத் தடவினா கேக்கும்.”

வேலம்மைப் பெரியம்மை இரண்டு வீடுகள் தள்ளி இருந்தாள். இரட்டைப் பிள்ளை பெற்றவள். இரட்டைப் பிள்ளை பெற்றவள் தடவினால் சுளுக்கு உடனே சரியாகிப் போகும். வலி ஆளைத்தின்னுகையில் எந்த நம்பிக்கையையேனும் பிடித்துத் தொங்கத்தான் வேண்டியதிருக்கிறது.

ஆத்தா ஓடி வந்தாள். “வீட்டிலேதான் இருக்கா... பய்ய எந்திருச்சு வா. நான் புடிக்கட்டா...”ச்

“வேண்டாம் நீ போ... நான் வாறேன்...”

மெல்ல மெல்லப் பஞ்சடி வைத்து, வேலம்மைப் பெரியம்மை வீட்டுப் படியேறிப் படிப்புரை கடந்து, திண்ணையில் கிடந்த பெஞ்சில், மடித்துக்

கட்டியிருந்த வேட்டியை அவிழ்த்து நாலப்போட்ட பிறகு, உட்கார்ந்தான்.

வேலம்மைப் பெரியம்மை அப்பாவை விட மூத்தவள். சிறு வயது முதலே பெரியம்மா என்று கூப்பிட்டுப் பழக்கம். ஏழெட்டு வயதில், தாயின் பராமரிப்பு இல்லாமல், பறட்டைத் தலையுடன் பங்கறைபோல் சுடலையாண்டி அலைகையில், எப்போதாவது கூப்பிட்டு வைத்துப் பேசுவாள்.

“ஏலே. இங்க வா.”

பேசாமல் போய்ப் படிப்புரையில் இருப்பான் சுடலையாண்டி.

“உங்க ஆத்தா என்னலே செய்யா?”

“சோறு பொங்குகா?”

“உங்க அப்பன் எங்க போயிருக்கான்?”

“வெறகுக்கு...”

“மத்தியானம் என்னலே திண்ணே?”

“கஞ்சி...”

“கஞ்சியா? கறி என்னது?”

“தொவையலு...”

“ம்... பாவிக்குக் குடுத்து வக்கல்லே... ஏட்டி! ஏ பார்வதி!இந்தப் பயலுக்கு ஒரு முறுக்கு கொண்டாந்து குடு...”

முறுக்கைத் தின்று கொண்டே பாடு பேசுகையில், சுடலை யாண்டியின் முதுகைத் தடவிக் கொடுப்பாள்.

வறுமையின் நீலக் குளிரில் வீட்டில் அடுப்புப் புகை நண்ணிடுகையில், கையில் பித்தளைப் போணியோடு, சோறு வடித்த கஞ்சித் தண்ணீருக்காக, வேலம்மைப் பெரியம்மை விட்டின் வாசலில் நாணி நின்ற நினைவு. வீட்டில் வந்து, இரண்டு உப்புப் பரல் போட்டு ஆற்றி,

தேங்காய்ச் சிரட்டையில் விட்டுக் குடிக்கையில் வயிற்றில் உயிர் பாய்ந்தது. போணியின் அடி பட்டத்தில் வண்டலிட்டிருக்கும் ஒரகப்பைச் சோற்றுப் பருக்கைகள்.

சில சமயம். நாள் கிழமைகளில், ஒரு கிண்ணத்தில் சோறு, மும்பு, கறிகள் வைத்து, வாழை இலைத்துண்டு போட்டு டிக்கொண்டு வந்து -

"ஏலே... ஏ சொள்ளையாண்டி. இன்னா... இதைத் ன்னு." என்று நீட்டுகையில், விபரம் புரியாத அந்த முதிரா மதிலும் தொண்டையைத் தடுக்கும் கண்ணீர் குழம்பு.

யாருக்கெல்லாமோ இந்த உடம்பு கடன் பட்டிருப்பதை எண்ணுகையில் நெஞ்சில் நன்றி சுரந்தது.

பெஞ்சில் அமர்ந்து, ஒரு அறைப்பு உணர்வுடன், சுவரில் தொங்கிய படங்களை மேய்ந்தான் சுடலையாண்டி.

“என்னடே சொள்ளையாண்டி? விளுந்திட்டியா?”

“ஆமா பெரியம்மா...”

“கொண்டா பாப்போம்... ஹ் ஹோ... சரியா உளுக்கீருக்கும் போல்ருக்கே. ஏட்டீ! அந்த ஆலம்பால் எண்ணைக் குப்பியை எடுத்தா...”

பெஞ்சிலிருந்து கீழே இறங்கித் திண்ணையில் இருந்த சுடலையாண்டியின் காலை நீட்டச் சொல்லி, மடிமேல் அள்ளிப் போட்டு, கிண்ணத்தில் விட்டு வைத்திருந்த ஆலம்பால் எண்ணையைத் தொட்டுத் தொட்டுப் பெரு விரல்மீது தடவி, இலேசாக நீவி. கைவிரல் கணுவால் நரம்பை வழிக்கையில், மிதமானதொரு வலி. தாயின் பரிவுடன், தடம் பெயர்ந்த நரம்பைத் தேடும் அனுபவப் பட்ட விரல்கள். நரம்போடு பேசும் விரல்கள். பெருவிரல் மேல் கணுவில் விரல் படுகையில் ஒரு சுறீல்... “ஹ் ஹா...”

“இங்கிணதானா?”

“அங்கிணதான்.”

மெல்ல மெல்லத் தடவுகையில், எண்ணெய் ஊறி, தசைகளை இளக்கி, வலி மட்டுப் பட்டது போல் குளிரக் குளிரத் தடவிய எண்ணெயை

வழித்து…

“ம். சரியாப் போகும்.”

சொல்லிக் கொண்டே, கைப் பெருவிரலாலும், ஆட்காட்டி விரலாலும் சுடலையாண்டியின் கால் பெருவிரலின் மண்டையைப் பிடித்து இடமும் வலமும் அசைத்து, வெடுக்கென்று வெட்டி இழுத்ததும் "மடக் கென்று சுடக்குச் சத்தம். மண்டையில் பாய்ந்த கூர்வலியின் அதிர்ச்சி. கண்கள் இருண்டு அரை போதத்தில், திண்ணையில் மல்லாந்து படுத்தான்.

சில விநாடிகள் பொறுத்துக் கண் விழிக்கையில் -

“என்னலே போதமில்லாம ஆயிட்டே? இந்த வலிக்கு இந்தப் பாடா? நல்ல ஆம்பிளைதான் போ... ஏட்டி... ஒரு கப்பு காப்பி ஆத்திட்டு வா...”

மேலெல்லாம் சளசளத்து வடிந்த வியர்வை. வெட்கம் கொண்டு, துண்டால் உடல் துடைத்து, எழுந்து, பெஞ்சு மீது உட்கார்ந்தான் சுடலையாண்டி. கால்வலி கணிசமாகக் குறைந் திருந்தது. விரலை மேலும் கீழும் அசைக்க முடிந்தது. தரையில் பெரு விரலை நன்றாக ஊன்ற முடிந்தது. வீக்கம் காரணமாக ரேகை போல் ஒரு வேதனை மட்டும்.

“என்னா வலி சரியாயிட்டா?”

கேட்ட அந்த முதிய முகத்தில் பரிவின் வரைகள். பொல் லென்று நரைத்த தலை முடியும், புன்னகை இலங்கும் முகமும்...

“ஆத்தாட்டச் சொல்லி கொஞ்சம் வென்னி வச்சு ஒத்து... காலம்பற சரியாப் போகும். இன்னா இந்தக் காப்பியைக் குடி...”

கருப்பட்டிக் காப்பிக்கென்றே ஒரு மணம். மிளகும், கொத்து மல்லியும், சுக்கும், சீரகமும் தட்டிப்போட்டு, கருப்பட்டி சேர்த்து, கொதித்த பின் பாலூற்றி ஆற்றி...

ஆத்தா காப்பி போட்டால் இவ்வளவு வெளுப்பாக இராது. வேலம்மைப் பெரியம்மை வீட்டில் எருமை கறக்கிறது. கொழுப் புக்குக் கேட்பதென்ன?

படிக்க வேண்டும் என்று நினைத்தும் அன்று படிக்க முடியவில்லை.

உடல் அசதி, மனம் வேறு கலைந்து கிடந்தது. சாப்பிட்டுப் படுத்தான்.

படிப்புரையில் படுத்தால், மேற்கே கூரைக்கு மேலே, முற்றத்து இடைவெளியில், தெரியும் வானம். நிலவொளியில் நீலம் ஒளிர்ந்தது. நீலத்தில் நீந்திய மேக எருமைகள். புல் வெளியில் பூத்திருந்த வெள்ளி மலர்கள்...

கண்ணயர்ந்தது எப்போது என்று தெரியவில்லை. விழித்த போது அண்மையில் மேள ஓசை. வாகனம் ஊர்சுற்றிக் கொண்டு வருகிறது. முகத்தைத் துடைத்துக் கொண்டு தெருவுக்கு வந்தான் நடைலையாண்டி. வேலம்மைப் பெரியம்மை வீட்டில் திருக்கம் சாத்திக் கொண்டிருந்தார்கள். பெட்ரோமாக்ஸ் விளக்குகள் சுமந்த தலைகள்.

தீவட்டி பிடித்த கரங்கள்.

இந்த விளக்கொளியில், மேலும் கீழுமாகக் குதிரை அசைகையில், மரத்தில் உயிர் பெய்தது போல் ஒரு மயக்கம். பன்னீர் தெளித்துத் தெளித்து மாலைகளின் மலர் இதழ்கள் எல்லாம் விடைத்துச் சிலிர்த்து நின்றன. சாஸ்தா முகம் மட்டும்தான் தெரிந்தது. வாகனச் சட்டத்தில் ஏறி நின்று நம்பியார் தீபாராதனை காட்டினார். தேங்காய் உடைக்கும் சத்தம். வாகனம் அடுத்த வீட்டுக்கு நகர்ந்தது.

வாகனத்துக்கு முன்னால் ஊர்ப் பெரிய மனிதர்கள். பலவேசம்பிள்ளை வகையறா. அடக்கமாக வரிந்து இடுப்பில் கட்டிய துவர்த்துகள். கரிய வெற்றுடம்பில் சந்தனச் சாயம். முகடு தொண்ட தொந்தியின் மயிர்ச் செறிவு.

அவர்களுக்கு முன்னால் வாலிபர்கள். அந்தந்த வீட்டு முன் நிற்கும் குமரிகளைக் கண்டு, மனதுள் சிக்கென்று சிறையிடத் தோதான இடங்களில்.

கூட்டத்தைச் சுடலையாண்டியின் கண்கள் தடவியபோது, பலரோடும் சேர்ந்து பாவநாசம் நின்றதைக் கண்டான்.

மனதுள் ஒரு சந்தேகம்.

ஒருவேளை அவன்தான் காலை இடறியிருப்பானோ?

***

# பதினெட்டு

மாலை அழகாக இருந்தது. செம்பட்டை மயிர்போல் வயலெங்கும் குத்தி குத்தியாக அறுத்த தாள்கள். அறுவடை முடிந்து காய்ச்சலுக்குக் கிடந்த நிலங்கள். ஆற்றில் தண்ணீர் வள்ளிசாக இல்லை. கொஞ்சம் ஊற்று மட்டும் சுரந்து கொண்டிருந்தது. ஆற்றின் குறுக்கே, ஆங்காங்கே மீன் பிடிப்பதற் கான தெவக்கங்கள். சாதாரணமாகவே சூரங்குளத் திற்குக் கீழே ஆறு அசிங்கப் பட்டுக் கிடக்கும். கோரையும், சுடக்கும், சேம்பும் மண்டி - மணலே காணக் கிடைக்காது. ஊர்களில் போரிங் பம்புகள் காரணமாக, ஆற்றின் இந்த அசிங்கம் யாரையும் பாதிக்கவில்லையோ? மானிப்பாரற்றுப் போய், ஆற்றின் தேங்கிய குட்டைகள் நாறின. செத்த மீனின் ‘உலும்பு வாடை. பன்றிகள் புரண்டு சேற்றுக் குட்டையாக அருவருப்பாகக் கிடந்தது ஆறு.

சுடலையாண்டிக்குத் தண்ணீரையே பார்த்துக் கொண்டிருப்பது பிடிக்கும். எந்தத் தண்ணீரா னாலும் பார்த்துக் கொண்டே நிற்பான். நேரம் போவது தெரியாது. நீர் முள்ளியையும், கோரை யையும் இடுப்பில் தடவி, கொண்டையைக் குலுக்கி, புல்லை அசைத்து ஓடும் ஓடை நீர் - கலங்கல் இல்லாமல், தரை தெரியும்படியாக, தரையின் களிமண் தெரியும் படியாக, பதுங்கி யோடும் தண்ணீர்ப் பாம்பும், சாரைப் பாம்பும், அலையலையாக வளையும் அவற்றின் உடலும். மீசை வைத்த கெளிறு, கெழுத்தி, தி லேபியாக் கெண்டை; துள்ளிச் சாடும் சள்ளை...

ஆற்றிலானால் அடி வயிற்று மடிப்பு மணல், தொட்டுத் தொட்டுத் தடவும் தண்ணீர். நின்றால், உள்ளங்காலின் கீழ், மணல் உருவும்போது, உடலெல்லாம் பரவும் கூச்சம். கரண்டையளவு தண்ணீரில் நிற்கும் சுகம். அதிலும் பக்கச் சுவரில் உட்கார்ந்து, புன்னை நிழலில் லயித்துக் காலைத் தொங்கப் போட்டுத் தண்ணீரையே பார்த்துக் கொண்டு இருக்கையில்...

பள்ளியில் படிக்கும்போது, போகையிலும் வருகையிலும், புதுக்குளத்துத் தண்ணீரையே பார்த்து நிற்கையில் ஏற்படும் நட்பு உணர்வு.

மனிதர்களோடு இல்லாத நேயம், ஆற்றையோ, குளத் தையோ, வானத்தையோ பார்த்துக் கொண்டிருக்கும்போது ஏற்படு வானேன்? மனம் அவற்றோடு குறை இரந்து அழுவானேன்?

தாங்க முடியாத துன்பம் ஏற்படுகையில், மனம் உளைந்து துவளுகையில்,

தொய்கையில் ஆற்றின் மணல் மேட்டில் துண்டை விரித்துப் படுத்துக் கொண்டு கண் கூசாத திசையில் வானத்தைப் பார்த்துக் கொண்டு கிடப்பதில் ஒரு ஆறுதல் ஏற்பட்டு மனம் அமைதியாவதைச் சுடலையாண்டி உணர்ந்திருக்கிறான்.

தேர்வு நெருங்க நெருங்க ஒருவகைப் பதட்டம் அலைக் கழிப்பதை அவன் அறிந்தான்.

ஆயிற்று. இன்று போய் நுழைவுச் சீட்டை வாங்கிக் கொண்டு வந்துவிட்டால், புதன் கிழமை முதல் ஆரம்பமாகும் தேர்வுக்கு ஆயத்தம் என்று பொருள். காலை இளம் வெயிலில் கல்லூரிக்கு நடக்கும்போதும் வீட்டு ஞாபகம் முற்றும் விலகிவிடவில்லை.

தாத்தா ஏதாவது வேலைக்குப் போனாரோ இல்லையோ? முன்பெல்லாம் அறுப்பு சமயங்களில் கொஞ்சம் தாராளமாக நெல் நடமாடும். ஒரு அலுமினியப் புத்திளிப்பு. ஆனால் சூரங்குளத்தில் அறுவடை முடிந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன.

தாத்தாவால் இப்போதெல்லாம் அதிகமாக வேலை செய்ய முடியவில்லை. முதுமை காரணமாகக் கூறுவடிபதவி போயிற்று. ஆளுக்கு ஒப்பம்கூட அறுத்துக்கட்ட முடியாமல் ஆயிற்று. முழு ஆள் கூறு அறுக்க முடியவில்லை. முக்கால் ஆளே தள்ளம் பாடிற்று. ஒரு வைராக்கியம் காரணமாக, அறுத்து, வாரிக் கட்டிச் சுமந்து கொண்டிருந்தார்.

முழுதாக அறுப்பு வைக்காத நாளானால், வயல்களைக் காயப்போட, வெள்ளம் வடிய வைக்க, ஊத்தாங்கால் வைக்கப் போவார். அல்லது அது போல் சில வேலைகள். நிலமெல்லாம் சித்திரைமாத மழைக்குத்தாகம் கொள்கையில், வயலில் என்ன வேலை ? ஒரு வேளை மலைக்கு விறகுக்கோ, புல்லுக்கோ போவார். அப்பா மட்டும் செத்துப் போகாமல் இருந்தால் -

சாகும்போது அவருக்கு முப்பத்தெட்டு வயது. இப்போது இருந்தால், நாற்பத்து நான்கு ஆகும். முக்கால் ஆளுக்குத் தாத்தாவும், முழு ஆளுக்கு அப்பாவும் அறுத்துக் கட்டினால், தினமும் பதக்கு நெல் வீட்டுக்கு வரும். இரண்டு மாதம் ஆத்தா பொத்திப் பொத்தி வைத்துக் கொள்வாள். காலையில் கட்டியாக ஏதாவது சாப்பிடக் கிடைக்கும். இன்னும் ஒரு சட்டை வேட்டி வைத்துக் கொள்ளலாம். ஒருவேளை கல்லூரிக்குப்

பஸ்ஸிலேயே போய்வந்திருக்கலாம். வாரத்தில் இரண்டொரு நாள் மீன்கறி சாப்பிடலாம். பள்ளிக்கூடம் காலம் தொட்டே தன்பால் பிறருக்கு இருந்து வந்திருக்கும் இளக்காரம் இல்லாமலாகி இருக்கும். வீட்டின் வடபாதி காலி மனையை விற்றிருக்க வேண்டிய திருக்காது.

இந்தத் தேர்வுகள் எப்போது முடியும் என்றிருந்தது, சுடலையாண்டிக்கு. பாடச் சுமையை இறக்கி வைத்துவிட்டு வீட்டுச் சுமையை ஏற்றுக் கொள்ளலாம். படிப்பில் ஒரு வெறி கொண்ட நிலை. இரண்டு மாதங்களாகவே, எப்போது பார்த்தாலும் படித்தம். மானசீகமாக எதிரியோடு இட்ட சண்டை. சண்டையின் வெற்றி நினைவு மனதில் மதுவாக ஊறிப் போதை ஏற்றியது.

தேற்றங்கள், மறுதலைகள், கிளைத்தேற்றங்கள்...

பயிற்சிகள், விதிகள், சோதனைகள், செய்முறைகள் வரைபடங்கள்...

செய்து பார்த்துப் பார்த்துத் தாள்கள் குவிந்தன. இதைப் படிக்கவா? அதைப் படிக்கவா? இது முக்கியமா? அது முக்கியமா? இது வருமா? அது வருமா? எல்லாம் முக்கியம். எல்லாம் வரும். எங்கு சுண்டினாலும் பதில் கணிரிட வேண்டும்.

சுடலையாண்டி கல்லூரியில் நிற்கையில் மணி பத்தரை, ஒரே கும்பல்.

தனித் தனிப் பிரிவு மாணவர்கள். சுடலையாண்டி வகுப்பு மாணவர்கள் கூட்டங் கூட்டமாய் நின்றனர். மாமரத்து மூடுகளில் வராந்தாவில்...

“அது படிச்சியா?”

“இது வருமா?”

“இது செப்டம்பர்லே கேட்டாச்சு...”

“கேட்டா என்னா? செப்டம்பர்லே கேட்டாலும் மார்ச்சிலே கேப்பான்!”

“சவுண்டு படிச்சியா? சவம் எனக்கு ஒரு எளவும் மனசிலாகல்லே...”

“நீ சிவபாதசுந்தரம் கிளாசுக்கு வந்தால்லா? உன் முகமே தெரியாதே அவருக்கு பின்னே மயிரா சவுண்டு மனசிலாகும்?”

“அன்னா சேதுராமலிங்கம் என்னவோ சொல்லுகாரு கேளு...”

“தியரி ஆஃப் ஈக்வேஷன்லே ரெண்டு கேள்வியாவது கெடைச்சாப் போரும்...”

“எளவு நீலகண்டனைச் சுத்தி ஒரே சுட்டமால்லா இருக்கு!”

“பின்னே நீ என்னடே சொல்லுகே? புரபசருக்கு மச்சினம்லா... என்னமாம் லீக் ஆயிருக்குமாண்ணு பாக்கானுக...$$$$$$$”

“அவனா? நல்லாச் சொன்னான். பெரிய சிமிளம்லா?”

இந்த உரையாடல்களின் ஊடே தடம் பெயர்ந்து, நுழைவுச் சீட்டு வாங்கும் வரிசையில் நின்றான் சுடலையாண்டி.

இலந்தையடிவிளை சிவப்பிரகாசம் பக்கத்தில் வந்தான்.

“என்னவே சொடலை? எல்லாம் படிச்சிட்டீரா?”

“ஆங்... ஏதோ ஒரு மாதிரியா. நீரு எப்பிடி?”

“என்ன எளவைப் போட்டு படிக்க ? உம்ம மாரியாவே? எல்லாம் உருத்தட்டிருப்பீரே...”

உருவேற்றும் பழக்கம் சுடலையாண்டியிடம் இருந்ததில்லை.

“ஒரு கண்ணாடிக் குடுவையை எடுத்துக் கொண்டு. ஒரு கண்ணாடிக் குடுவையை எடுத்துக் கொண்டு. ஒரு கண்ணாடிக் குடுவையை எடுத்துக் கொண்டு... ம்... அதை நன்றாகக் கழுவவும். அதை நன்றாகக் கழுவவும்... ம்ம்...” என்ற முறையில் எப்போதும் மனப்பாடம் செய்ததில்லை. ஊன்றிப் படிப்பதும் கோர்வையாக நினைத்துப் பார்ப்பதுமே போதுமான தாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், வகுப்பில் ஒருவன் நன்றாக மார்க் வாங்குகிறான் என்றால் அவன் உருவேற்றுவதில் சிறந்த வனாக இருந்தால்தான் முடியும் என்பதுவே பரவலாக எல்லோரும் எண்ணுவது.

மறு வரிசையில் பெண்ணினம் நின்றிருந்தது. எல்லாம் கிட்டத்தட்ட இருபது நாட்கள் பாராத முகங்கள். நிழலிலேயே இருந்ததால் சில வெளிறித் தெரிந்தன. தம்முள்ளான நல உசாவல்கள். தாவணியை,

பாவாடையைத் தொட்டுப் பார்த்து -

“ஏட்டி ராசம்? இது எப்பம் வாங்கினது?”

சில கர்ம சிரத்தையோடு, வரிசையில் நிற்கும்போதுகூட, நோட்டை விரிப்பதும், எதையோ படிப்பதும், மூடுவதும், முணு முணுப்பதுமாய்...

ஆவுடைம்மாளும் அவளுடனே சுற்றித் திரியும் சிவகாமியும்...

சுடலையாண்டியைப் பார்த்துச் சிவகாமி புன்னகைத்தாள்.

சுடலையாண்டியின் முறை வந்தது. கையெழுத்துப் போட்டு, சீட்டை வாங்கினான். எண் 1268. மனதுக்குள் கூட்டிப் பார்த்தான். "ஒண்ணும் ரெண்டும் மூணு மூணும் ஆறும் ஒம்பது ஒன்பதும் எட்டும் பதினேழு. பதினேழு. ஒண்ணும் ஏழும் எட்டு. சீ... எட்டா?

எதானால் என்ன? எழுதுவது நானா? என் எண்ணா?

நினைப்பதற்கும் நேரம் இல்லாத நாளோட்டம். தேர்வு களின் மும்முரம்.

நாட்கள் மின்னலாய்க் கரைந்தன.

படிப்பில் ஒரு தீவிரம்.

நெஞ்செங்கும் நிலைத்து நின்ற பாடங்கள்.

உடலிலும் உள்ளத்திலும் ஒரு பரவசம்.

எங்கு போனாலும் எங்கு வந்தாலும் பாடப் பகுதிகள் கண்ணில் நின்றன. வாய் ஓயாமல் முணு முணுத்தது.

எப்படியும் இதை வெற்றியுடன் முடித்தாக வேண்டும் என்கிற வெறி. வேகம். சிறப்பான முதல் வகுப்பில் தேற வேண்டும் என்று மனதில் ஒரு கண்திறந்து திறந்து விழித்தது. இதை விட்டால் போயிற்று. பட்ட துன்பங்களுக்கெல்லாம் மொத்தமான முடிவு.

இரண்டு மாதங்கள் ஓடிவிட்டால், ஒரு பட்டதாரி ஆகி விடலாம். ஊரில் முதல் பட்டதாரி அவனாக இருப்பான். ஆவுடையம் மாளும்தான். இதற்கு முன்னாலும் அவன் ஊரிலிருந்து சிலபேர் கல்லூரிக்குப் படிக்கப்

போயிருக்கிறார்கள். ஆனால் அவர் களுக்குக் கொல்லா மரக் கவிகையினுள் பொழுது போக்கவும், நகராட்சிப் பூங்காவில் எவருக்கும் தெரியாமல் 'வாழு வாழவிடு' படிக்கவுமே நேரமிருந்தது. பாடத்தில் சிரத்தையில்லை.

புகுமுக வகுப்பில் ஆவுடையம்மாளுக்கும் முதல் வகுப்பு கிடைத்தது. அவளை விடச் சுடலையாண்டிக்கு மதிப்பெண்கள் அதிகம். அவனுள் அதற்காக ஒரு ஆனந்தம். அவனுடன் படித்த சிலர் பொறியியல் கல்லூரிக்குப் போனார்கள். சுடலையாண்டிக்கும் ஆசைகள் இருந்தன. ஆனால் - கல்லூரிக் கட்டணம்,

புத்தகங்கள், உடை, விடுதிச் செலவு...

ஆசைகள் முளைத்துக் கருகியது பாதி.

முளைக்காமற் போனது மீதி

உயர்நிலைப்பள்ளி தொட்டே கருகல் வாடை.

தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் புத்தகங்கள் வாங்கி முடியு முன் காலாண்டு நெருங்கி விடும். கணக்கு, விஞ்ஞானம், பொது அறிவுக்குப் புத்தகமே வாங்கியதாக நினைவில்லை. குயர் பேப்பர் வாங்கித் தைத்த நோட்டுகள்.

உயர்நிலைப் பள்ளியில், மதிய உணவு விளம்பும் சதா சிவத்தை நினைத்தால் கண்கள் நிறையும். காலையில் சாப்பிட வீட்டில் ஏதாவது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் மதிய உணவு நிச்சயம். மூன்று அகப்பை உளுந்தங் கஞ்சி அல்லது அமெரிக்க வள்ளல்கள் அனுப்பிய மக்காச் சோள ரவை உப்புமா. கஞ்சியானால் தொட்டுக் கொள்ள ஒரு கூட்டுக் கறி. பூசணிக்காய் கூட்டுக் கறி, தேங்காய் போடாமல், கடலைப் பருப்பு போடாமல்...

அரசாங்கம் படியளந்ததென்றாலும், வைத்து விளம்பும் அவருக்கு ஒரு பரிவு. விளம்பும்போதே அந்த வகையற்ற ஏழை மாணவர்கள் மீது ஒரு கனிவு. ஆனால் மற்ற மாணவர்களுக் கெல்லாம், மத்தியானம் பள்ளியில் கஞ்சி குடிக்கும் இவர்கள் மீது ஒரு இளக்காரம். கஞ்சி குடித்து, தட்டுக்களைக் கழுவி அடுக்கிக் கொடுத்து விட்டு வருவதைக் கண்டு ஒரு பரிகாசச் சிரிப்பு.

தேர்வுகள் முடிந்த பிறகு, சுடலையாண்டிக்கு முதல் வகுப்பு நிச்சயம் கிடைக்கும் என்று தோன்றியது. தன் மீது ஒரு நம்பிக்கை.

நீண்ட நெடுந்தவம் ஒரு முடிவுக்கு வந்ததுபோல், ஆறுதலாக இருந்தது. குளிர் சோலையைத் தேடும் ஒரு பாலை வழிப் பயணம் - தலைக்கு மேல் குடை இல்லாமல், உட்கார ஒரு ஒட்டகம் இல்லாமல், தாகத்துக்கு நீர் கிடைக்காமல், காலில் செருப்புக்கூட இல்லாமல் -

சாப்பிட்ட பிறகு, படிக்க எதுவும் இல்லாததால், உறக்கமும் கொள்ளாததால், இருளைக் கண்களால் மென்று கொண்டு படுத்துக் கிடப்பது சுகமாக இருந்தது சுடலையாண்டிக்கு.

சிந்தனை, சொல் கேளாமல், சில கற்பனைகளை வரைந்து பார்த்தது.

இன்னும் சில நாட்கள் போனால்...

தேர்வு முடிவுகள் வந்து ஒரு வேலையும் கிடைத்தால்...

மீசையுடன் சேர்ந்தே துளிர்த்திருந்த ஆசைகள். ஒரு ஒழுங்கில்லாத, தீர்மானமான வடிவில்லாத, தயங்கித் தயங்கி முளைத்த செம்பட்டை ஆசைகள்... ஆசைகளை மீறிக் கிடைத்த தோர் உறுதி.

எப்படியும் ஆளாகி விட வேண்டும். ஆத்தாவையும், தாத்தாவையும் உட்கார வைத்துச் சாப்பாடு போடவேண்டும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த வீட்டை இடித்துப் புதுப்பித்து, எளிமையாக, அழகாக ஒரு வீடு கட்டிக் கொள்ள வேண்டும். தனக்கென்று ஒரு அறை. புத்தகங்கள வைத்துக் கொள்ள ஒரு அலமாரி. சட்டை, துணி வைக்க ஒரு அலமாரி. உட்கார்ந்து எழுத ஒரு மேசை. ஒரு நாற்காலி. ஒரு அலாரம் டைம்பீஸ், கையில் ஒரு ஃபேவர் லூபா கடிகாரம்...

கொஞ்சம் பணம் சேர்த்து, சாப்பாட்டுக்கு நெல்லுக்காக ஒரு கோட்டை விதைப்பாடு நிலம் வாங்க வேண்டும் - ஆற்றுப் புரவாக, மேலப் பத்தில். வீட்டின் வடபுறம் சிறிய தொழுவம். ஓரிணை ஏர் மாடு, பால் மாடு, ஒரு நல்ல ராலிஸ் சைக்கிள், மில்லர் டைனமோவுடன் வைத்துக் கொள்ள வேண்டும். தன்னை ‘வெம்பொறுக்கி’ என்றும் ‘இரு சாதிப் பயல்’ என்றும் 'அலவலாதி’ என்றும் ‘அப்பன் பெயர் தெரியாதவன்’ என்றும் இகழ்ந்த மானிடப் பூச்சிகள் முன்னால் செருப்புப் போட்டுக் கொண்டு நடந்து காட்ட வேண்டும்.

ஒரு... ஒரு கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்.

கல்யாணம்?

மனைவியாகப் போகிறவள் யார்?

சுடலையாண்டியின் மனதுள் ஆவுடையம்மாளின் சிரிக் கின்ற முகம் உதயமாகியது. எண்ணிப் பார்த்தபோது வெட்கமாக இருந்தது. சரியான பைத்தியக்காரத்தனம் என்று தோன்றியது.

வானரக் குட்டி நிலாப் பழம் பறிக்க எண்ணியது போல் –

இது என்ன வேடிக்கை?

நமக்கு இப்படியொரு எண்ணம் வருவானேன்?

அதுவும் யார்பால்?

தனக்கும் ஆவுடையம்மாளுக்குமான ஒரு தாரதம்யம்...

வாரியல் கொண்டைக்குப் பட்டுக் குஞ்சலம்.

வாழ்கின்ற வாழ்வுக்கு ஆவுடையம்மாள்போல் ஒரு பெண் கேட்கிறதோ?

பின் யாரைப் போல வேண்டும்?

மீண்டும் அவள் முகம்...

பல படிகளாக மாறி மாறித் தோன்றிய முகம்

பல படிகமாக வளர்ந்து வளர்ந்து வந்த உடல்...

இருள் அவனை முழுமையாக மூடிக் கொண்டது.

இரவு நனைந்து கழிந்தது.

***

# பத்தொன்பது

தேர்வு முடிவுகள் வந்தன.

கனமின்றி மனம் அசைந்தது.

மூக்கின் கீழ் குருத்திருந்த ரோமப்பந்தியை முதலாவது, வள்ளிசாக வழித்தெறிந்தால், காற்று மேலுதட்டில் உராய்கையில் ஏற்படுகின்ற உணர்ச்சி போல், உடல் எங்கும் ஒரு பரவசம்.

முதல் வகுப்புக்குப் பழுது வரவில்லை. அறுபத்து நான்கு பேர் கொண்ட கணிதப் பிரிவில், பதினான்கு முதல் வகுப்புகள், ஆவுடையம்மாளும் ஒருத்தி. பதினெட்டு இரண்டாம் வகுப்புகள். இருபது மூன்றாம் வகுப்புகள். சான்றிதழ் வாங்கக் கல்லூரிக்குப் போன அன்று ஒரே கும்மாளி போட்டது மனது. மார்க்லிஸ்ட் வாங்கிப் பார்த்து விட்டு, பேராசிரியர்களிடம் சொல்லி விட்டு வரலாம் என்று கணிதப் பிரிவில் போனபோது அங்கு ஏற்கனவே ஆவுடையம்மாளும் சிவகாமியும் இருந்தனர். வகுப்பில் ‘அக்கா’ குடியிருக்கும் முகம் காட்டும் பேராசிரியர் முகத்தில்கூடகளை இருந்தது அன்று.

“சுடலையாண்டி வா... என்ன கிரேடு?”

“ஏ பிளஸ் ஸார்...”

“குட்... உங்க ஊர்க்காரி ஆவுடையம்மாளும் ஏ வாங்கீருக்கா. சிவகாமி கொஞ்சம் மோசமாப் போயிட்டா. மேல் கொண்டு என்ன செய்யப் போறடே?”

“ஏதாம் வேலை தேடணும் சார்...

“ம்... ஆவுடையம்மை என்ன செய்யப் போறே?”

“அப்பாட்டதான் கேக்கணும் சார்...”

“நான் சொன்னம்னு சொல்லு பலவேசம் பிள்ளைட்ட... மதுரையிலே புதுசா எக்கனாமெட்ரிக்ஸ் எம்.எஸ்சி. ஆரம்பிச் சிருக்கான். உங்க அண்ணனுக்கு மாமனாரு வீடு மதுரைதாலா. பின்ன என்னா? ஒரு அப்ளிகேஷன் போடு.” கணிதத் துறையை விட்டு வெளியே

இறங்குகையில், ஆவுடையம்மாள் மெதுவான குரலில் சுடலையாண்டியிடம் கேட்டாள்.

“ஏன்? எம்.எஸ்சிக்குப் போல்லியா?”

“இல்லே.” சொல்லும் போதே சுடலையாண்டிக்குக் கூச்சமாக இருந்தது. அந்தரங்கத்தில் ரகசியமாகச் சுகம் கிடைக்கிற உணர்வு. இவள் முகதரிசனம் காணப் புதிய முகம் ஒன்று கிளைத்து வெளிவருவது போல். வெளியில் இவள் மேல் வெறுப்பு நிலவுவது ஒரு பொய்ப் பூச்சுதானோ?

சுடலையாண்டிக்குத் தன்னுணர்வு வந்தபோது, ஆவுடையம் மாள் சிவகாமி இவர்களுடன் தொய்ந்த நடையில் பின்னலிட்டு நடப்பது தெரிந்தது. இவர்களுக்கென்ன? பஸ் ஏறித் தத்தம் வீடு போய் விடுவார்கள். நமக்கானால் குறுக்குப் பாதையில் நடக்க வேண்டும். இங்கேயே கத்தரித்துக் கொள்வது நல்லது.

“அப்பம் நான் வாறேன்... இப்பிடி லைப்ரரிக்குப் போயிட்டு பொறவு வீட்டுக்குப் போவேன்...”

“ஆங். கொள்ளாம்... ஓடுகதைப் பாரேன். ஒரு ஸ்வீட்டாவது வாங்கித் தரப்பிடாதாக்கும்...”

சிவகாமியை ஆவுடையம்மாள் குறுக்கு வெட்டினாள். “சும்மாருடி...”

“நீ சும்மாரு... ஊருக்காரங்கண்ணு சப்போட்டு ஒண்ணும் வேண்டாம்.”

செயற்கையாக ஒரு தரம் சிரித்துவிட்டுச் சுடலையாண்டி படிப்பகத்துக்குப் போனான்.

இனிமேல் வேலைக்குக் காவடி எடுக்க வேண்டும். வேலை கிடைக்கும் வரை அலைந்து திரியவும் முடியாது. தாத்தாவின் பளுவை இனியும் தாங்கா விட்டால், இற்றுப்போன அந்த உத்திரம் முறிந்து வீழும். இப்போதெல்லாம் இருட்டிவிட்டால் கண் மங்கலாக, பட்டுப் போட்டு மறைத்ததுபோல் இருக்கிறதாம். முன்னால் வரும் ஆள் தெரியவில்லை. எங்காவது பக்கத்து ஊருக்குப் போய்விட்டுத் திரும்பி வர இரவு ஏழு மணிக்கும் தாண்டிவிட்டால் பயம் அடிவயிற்றில் புளி கரைக்கிறது. அவர் வர நேரமாகி விட்டால் எதிரே போய்ப் பார்த்து விட்டு வர வேண்டியதிருக்கிறது. இறச்சகுளத்துக்குப் போனால் நாவல் மூட்டு

விலக்கு வரை. தாழக்குடிக்குப் போனால் மீன் சந்தை வரை. இந்த ஊர்களாவது மோசமில்லை. நேரே ரோடு உண்டு. புத்தேரிக்குப் போயிருந்தாரானால். ரோட்டு வழி வந்தால் சுற்று. குளத்தங்கரைப் பாதைகிட்ட தாத்தாவுக்குக் குளத்தங்கரைப் பாதை தான் பழக்கம். திடமாயிருந்தால் பயமில்லை. எந்தச் சாமமா னாலும் தனியாக வந்துவிடுவார். இப்படித் தள்ளாட்டம் தொடங்கிய பிறகு, கண் மங்க ஆரம்பித்த பிறகு... குண்டும் குழியும் நொடியும் உள்ள பாதையில் எங்காவது காலிடறி விழுந்து விட்டால்...

குளத்தங்கரைப் பாதையின் ஒரு புறம் அடர்த்தியான மரச் சோலை. புன்னை, வாகை, மஞ்சணத்தி, பூவரசு, புங்கு... குளத்தங் கரை யோரம், பாதையின் மறுபுறம் தாழை, நொச்சி, நாணற் புதர்கள். கீரிப் பிள்ளைகள் பகலில் பயமின்றி நடமாடும். தாழம் புதரில் எப்போதும் “சர சர சர...”

கருக்கல் நேரத்தில் உளுந்து வறுப்பது போல் புதரண்டை களில் வாசனை. நல்ல பாம்பு கிடந்தால் அப்படித்தான் வாசனை வருமாம். இரண்டு பாகம் நீளமும் முழங்கால் பருமனும் கொண்ட பெரிய சாரைப் பாம்புகள், மாக்கிறித் தவளைகளைப் பிடித்து முழுதாக விழுங்குவதும், தவளையின் “ஆதிமூலமே, ஆதி மூலமே” என்ற அபயக் குரலும் நித்திய தரிசனம். ஆதிமூலம் வராவிட்டாலும் பாம்புகளிடம் இருந்து தவளைகளைக் களப்பாற்றத் தவளை பிடிக்காரர்கள் வந்தார்கள். அதுவும் நடு நிசியில். பெரிய பெரிய கோணிப் பைகளும், மூன்று கட்டை, ஐந்து கட்டை பாட்டரி விளக்குகளுமாக. இரவுகளில் நெற்றிக் கண்கள் நீண்டு பாய்ந்தன; தவளை பிடிக்காரர்கள் அதிகமாக ஆகத் தேங்காய்த் தோப்புகளில் வெட்டு சமயங்களில் குலைகள் காணாமற் போயின. இளநீர்க் கதம்பைகள் குளத்தில் மிதந்தன. ஒரு நாள் காலை, இளநீர்க் கதம்பைகளோடு குளத்தில் விழுந்து படுத்தாற் போல் ஒரு பிணமும் மிதந்தது. பிறகு கொஞ்ச நாள் குளத்தங் கரையில் தவளை பிடிப்பு நின்றது. இரவில் அந்த வழிதில் தனி வழி வர அஞ்சினர். இரண்டாம் காட்சி படம் பார்த்துவிட்டு வந்தவர்கள் ஒன்றில் செங்கல் சூளை, மோர்மடம் சுற்றி இறச்ச குளம் பாதையில் வந்தனர். அல்லது திருப்பதிசாரம் வழியில் வந்தனர்.

தாத்தா எந்தக் காயமும் இல்லாமல், பூச்சி கட்டை கடி படாமல் பத்திரமாக வீட்டுக்கு வந்து சேர வேண்டுமே என்று தினமும் கவலை. அவரைக் கேட்டால் எடுத்து எறிந்து பேசி விடுவார்.

“என்னை ஏண்டா பாம்பு கடிக்கப் போகு? எவதாலியை அறுத்தேன்?

எவன் பத்தயப் பெரையை முறிச்சு கொள்ள போட்டேன்?”

வீட்டுக்கு வந்ததும், இது காரணம் கொண்டே பெரிய சண்டை விழும்.

இரவு எட்டு மணி தாண்டியும் தாத்தாவைக் காணாமல் சில சமயம் இறச்சகுளம் விலக்குக்கோ, தாழக்குடி விலக்குக்கோ போவான் சுடலையாண்டி. அவனைக் கண்டால் தாத்தா முகத்தில் ஒரு பூச்சொரிவு. பிறகு மெனக்கெட்டு ஒரு கோபம் வரவழைத்து,

“நீ என்ன எளவுக்கு வந்து காத்துக் கெடக்கே? நான் வரமாட்டம்னா?”

“இல்லே... சும்மா அப்பிடி நடந்து வந்தேன்...”

“சோறு திண்ணயா?”

இல்லை என்பது அவருக்கே தெரியும். பெரும்பாலும் இரவு வடியலுக்கான அரிசி அவர் தலை முண்டிலேயே தோளின் பின்புறம் தொங்கும். வரவுக்குத் தகுந்த வதங்கலோ பிதுங்கலோ இருக்கும்.

“சரி வா. ஒரு சுக்குக் காப்பி குடி. வயிறு பசிச்சுக் கெடப்பியே!”

சுடலையாண்டியைக் கூட்டிக் கொண்டு போய் ஓரணாவுக்குக் காரச் சேவோ, ஓமப்பொடியோ வாங்கிக் கொடுத்து, ஒரு சுக்குக் காப்பிக்கும் சொல்லி –

“நீ குடியேந் தாத்தா...”

“நான் இப்பந்தான் குடிச்சேன்...”

பொய்யென்று தெரிந்தாலும் மெய்யாக நம்பி –

அந்த உத்தரத்துக்கு உடனே ஒரு முட்டுக் கொடுத்தாக வேண்டும்.

வேறேதும் பாடமாகக் கொண்டு படித்திருந்தால் டெமான்ஸ்ட் ரேட்டர் வேலைக்கு முயலலாம். அதற்கும் கூட மூவாயிரம், ஐயாயிரம் என்று கேட்கிறார்களாம். எங்காவது பள்ளிக் கூடங்களில் முயற்சி செய்யலாம். வடஆற்காடு. தென்ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம் மாவட்டங்களில் கணக்கு வாத்தியார் களுக்குத் தட்டுப்பாடு. அந்தப் பக்கம் போனால் எளிதாக வேலை கிடைக்கும். ஆனால் அங்கு போய், ஒரு மாதமாவது

தங்கி முயற்சி செய்ய வேண்டும். அதற்கான சில நூறு ரூபாய்கள்?

நாகர்கோயிலில் நாலைந்து பயிற்சி நிலையங்கள் உண்டு. தோற்றுப் போன மாணவர்களைக் கரையேற்ற முயலும் யாக சாலைகள். கேட்டுப் பார்க்க வேண்டும். நூறு, நூற்றிருபது கிடைத்தால் கூட ஒரு ஏந்தல் உண்டு. அதுவும் நான்கு மாத வேலை. பிறகு இரண்டு மாத இடைவெளி என்ற கதியில். உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சிலருக்குத் தனி வகுப்பு எடுக்கலாம். ஆனால் சூரங்குளத்தில் முடியாது. தன்னை ஒரு வாத்தியாராக இவர்கள் பாவிப்பதேது? மட்டுமல்லாமல் பள்ளிகளில் பயிற்றும் ஆசிரியர்களிடம் படிப்பதால் கிடைக்கும் சில அனுகூலங்கள் தன்னிடம் படித்தால் கிடையாது. எனவே அங்கும் பலமான போட்டியின் ஊடேதான் முயல வேண்டும். எங்காவது புத்தகக் கடையிலோ, ஜெனரல் ஸ்டோர்ஸிலோ கணக்கு எழுத்து போன்ற வேலை கிடைத்தால்-

அந்தக் கணக்கு யாருக்குத் தெரியும்?

எனக்கென்ன கிரெடிட் தெரியுமா? டெபிட் தெரியுமா?

மூன்று டைமென்ஷனில் ஒரு அல்ஜிபிரெய்க் ஈக்வேஷனைக் கொடுத்தால் சால்வ் பண்ணத் தெரியும்.

எல்லாத் திசைகளிலும் வேலைக்கு முயல வேண்டும். புரந்தரனின் பெருந்தவமாய்த் தவம் செய்ய வேண்டும். தினசர் இந்துவும் எக்ஸ்பிரஸும் பார்க்க வேண்டும். சூரங்குளத்தில் எவர் வீட்டுக்கும் இவை வருவதல்ல. தினத்தந்தி வரும், தினமலர் வரும், தினமணி வரும். நாகர்கோயிலில் வேலை கிடைத்தால் வேலை முடிந்த பிறகு நகராண்மை படிப்பகத்தில் போய்ப் பார்க்கலாம். தினமும் சொந்தமாக வாங்கினால்? பன்னிரண்டு ரூபாய் மாதம் செலவாகும்.

சூரங்குளத்தின் மையத்தில் ஒரு படிப்பகமும் நூலகமும் உண்டு. அங்கு தமிழ் நாளிதழ்கள், வாராந்தரிகள் கிடைக்கும். ஆனால் ஆங்கிலத் தினசரி? திருப்பதிசாரம், புத்தேரி, இறச்சகுளம், தாழக்குடி படிப்பகங்களில் வாங்குகிறார்களா என்று பார்க்க வேண்டும்.

வேலை ஏதும் பார்க்காமல் அலைந்தால்தான் இதெல்லாம் சாத்தியம்.

எங்காவது கூலி வேலைக்குப் போனால், எப்போது வீட்டுக்கு வந்து,

எங்கு பேப்பர் படிப்பது?

தேர்வு முடிவு தெரிந்த பிறகு, வேலை ஒன்றும் இல்லாததால், தாத்தாவிடம் கேட்டான் –

“நீ போகச்சிலே வேலை இருக்கும்ணா என்னையுங் கூட்டிட்டுப் போ தாத்தா!”

“நீ என்ன எளவுக்கு? வேற எதாம் வேலை கிடைக்காண்ணு பாரு... செயிச்ச பொறகும் கூலி வேலைக்குப் போகதுக்கா இவ்வளவு கஷ்டப்பட்டேன்?”

“எதாங் கெடைக்கது வரைக்கும் சும்மா இருக்காண்டாம்லா... ?”

“வேற எதாம் பாக்கலாம்... ஊருகாரன் சொக்களில்லா பேகவான். அன்னா பாரு... மனையை வித்து பேரனை பிஏ படிக்க வச்சான். இப்பம் தாத்தாவும் பேரனுமா மண்ணு செமக்கானுகண்ணு...”

தாத்தா அப்படித்தான் சொல்வார். எழுதிப் போட வேண்டுமானாலும் - போஸ்டல் ஆர்டர், ஸ்டாம்ப், பதிவுத் தபால் செலவுகளுக்கு –

நேர்முகத் தேர்வுக்குக் கூப்பிட்டால் போட்டுக் கொள்ள நல்ல வேட்டி சட்டை வேண்டாமா?

***

# இருபது

சித்திரை பத்தாம் உதயத்துக்குப் பெய்த மழை, குளிரக் குளிரப் பெய்தது. நான்கு உழவு உழுது, கட்டி கட்டியாக மறிந்து கிடந்த நன்செய் நிலங்கள், புட்டமுதாய் பொங்கி உதிர்ந்தன. பருவம் தவறாமல் எங்கும் சம்பா பொடி விதை ஆயிற்று. நாஞ்சில் நாட்டு வட்டத்தில் பத்துப் பதினைந்து நாட்கள் நெரிபிரியான வேலை. பருவம் போய்விடக் கூடாதே என்ற கவலையில் பண ஏரும், மாற்றேரும் கொண்டு வித்தை மண்ணுக்குள் போட்டு மூடியாயிற்று.

அதிகாலை நான்கு மணிக்கு ஏர் கட்டி, பன்னிரண்டுக்கு அவிழ்த்து, இரண்டு மணி பிற் பகல் வெயிலில் மறுபடியும் ஏர் கட்டி ஆறரைக்கு அவிழ்த்து... வண்டிக் காளைகள் தலையை இரு புறமும் அசைத்து, 'சல் சல்' என்று மணி ஒலித்து மரம் இழுத்தன. கிடாக்கள் வாய்க்கடையில் நுரை பறித்துத் துவண்டன. பத்தெல்லாம் கொம்பு மரம் அடித்த புழுதிப்படலம்.

ஏறத்தாழப் பத்து விதைபட்டு ஒதுங்கி விட்டது. ஐந்தாங் கொம்புக்குப் பிறகு காலையில் பத்தைப் பார்த்தால் வெளிர் பச்சை முளை தெரிந்தது. பதினைந்து நாட்கள் சுடலையாண்டிக்குச் சில்லறை வேலை இருந்தது. தாத்தாவும் யாருக்கோ வேலைக்குப் போனார்,

இனிமேல் இந்தப் பூவில் விவசாய வேலைகள் பெரிதாக ஏதும் கிடையாது. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டு பழையாற்று பாலத்தின் கலுங்கில் படுத்துக் கிடந்தான் சுடலையாண்டி. இரவு மனதில் இனம் புரியா கலவரங்களை ஏற்படுத்தியது. குளித்து விட்டு வீட்டுக்குப் போய் உண்டானதைத் தின்று விட்டுப் படுக்கலாம் என்று எழுந்து உட்கார்ந்தான்.

சாலையின் மேட்டிலிருந்து திரும்பி, பாலத்து இடை வெளியில் யாரோ கம்பூன்றி நடந்து வருவது தெரிந்தது. வந்தவர் ஆள் இருப்பதைக் கண்டு நின்றார்.

"யாருடே அது அங்க? சவம் கண்ணு எளவும் தெரியல்லியே..."

சத்தமும், அண்மையும், வந்தவர் குற்றாலம் பணிக்கர் என்பது புரிந்தது.

“நான்தான் பாட்டா - சொடலையாண்டி.”

“சுப்பையா பேரனா? இங்க என்னடே செய்யே?”

“சும்மா குளிக்க வந்தேன். கொஞ்சம் படுத்திருந்தேன்.”

“குளிக்கவா? எங்கிண குளிக்கப் போறே? பின்னை மூட்டு ஆத்துக்கா-? நானும் வாறேன். எனக்கும் வெளிக்கு இருந்துக் கிட்டு மேலைக் களுவணும்-”

இருவரும் நடந்தனர். ஒருபுறம் ஆற்றின் கரைக்கு அணைப்பாகக் கட்டிய கற்சுவர். கீழே, மேற்குப் புறத்தில் பரந்து கிடந்த மணல் வெளி. நடுவில் ஓடிய நீர்க்கோடு. கிழக்குப்புறம் வயல்வெளிக் காவலான வேலி. கொடுக்கள்ளி, காட்டாமணக்கு, திருகுக் கள்ளி, நொச்சி, காரா முள் புதர்கள். தன் வெளிச்சம் கொண்ட இரவு. மங்கலான காலடித் தடம்.

வேலி தாண்டி புதரினுள் ‘சரசர’...

“பரிச்சை எல்லாம் முடிஞ்சிட்டாடே...?”

“ஆமா பாட்டா.”

“ரெசல்ட் எப்பண்டே வருகு?”

“வந்தாச்சு...”

"செயிச்சிட்டயா?”

“ஆமா.”

“பலவேசம்பிள்ளைக்கு மகளும் உங்கூடதாலா படிச்சா?”

“ஆமா... எங் கிளாஸ்தான்.”

"செயிச்சிட்டாளா?”

“செயிச்சிட்டா...”

“போட்டும். அப்பம் இனி வேலைக்குத்தான் பாக்கணும். எங்கயாம்

எளுதிப் போட்டிருக்கியா?”

“போட்டுக்கிட்டு வாறேன்...”

“ம்... கெடைக்கும் கெடைக்கும். ஆமா சோலி ஒண்ணு இருக்கு. நாளைக்கு வந்து பாரு...”

குற்றாலம் பணிக்கரின் தோப்பு, பலவேசம்பிள்ளை வீட்டின் தென்புறம். வீட்டையும் தோப்பையும் இடையில் கற்கட்டுச் சுவர் பிரித்தது. முன்பெல்லாம் கைமண் சுவர்தான் இருந்தது. அவயான் பொந்துகள் மண்ணின் வேர்களைத் துரந்து, தென்னம்பிள்ளைத் தோப்புக்கும் பலவேசம்பிள்ளை வீட்டுக்கும் பலவழிப் பாதைகள் ஏற்படுத்தி விட்டதால், மண்ணை இடித்து விட்டுக் கல்லால் சுவர் கட்டிவிட்டார்கள். பலவேசம் பிள்ளையின் வீட்டு அடுக்களை மிகவும் மேடாக இருந்ததால், ஐந்தடி உயரக் காம்பவுண்டுச் சுவரை மீறி, அடுக்களை வாசற்படியில் நின்று பார்த்தால் தோட்டம் பூராவும் தெரியும். தோட்டத்தின் தெற்கு வேலிக்கு அப்பால் கண்ட மூட்டுப்பத்து வயல்களுக்குக் கீழ்க்கரையாக ஓடும் திருப்பதிசாரம் சாலை.

தோட்டத்தை ஆறு மாதத்துக்கு ஒருமுறை கொத்திக் கொடுத்து, தென்னம்பிள்ளைத் தூர்களில் பண்ணை பிடித்து, மாட்டுச் சாணியின் செமித்த உரம், மட்கிய இலை தழைகள், சாம்பல், உப்பு, உமி என்று மூட்டில் இட்டு, மண் பொதிந்து - கொண்டைகள் கறுத்துக் கவிழ்ந்திருந்தன. பாரம் தாங்காமல் குலைகள் மட்டை மேல் ஓய்வு கொண்டன. பிள்ளையின் கொண்டையில், ஆறு மாதத்துக்கு ஒரு தரம், சேர்ந்திருந்த பதவல்களை நீக்கி, முற்றிய ஓலை மடல்களைக் கழித்து, கவிந்து வரும் பச்சை மடல்களைச் ‘சமுண்டி’ விட்டு, உப்புப் பரல்களை இடுக்குகளில் தூவி, கரிச்சான் பாய்ந்து விடாமல் காபந்து செய்து-

மறுநாள் காலை -

சுடலையாண்டியும் குற்றாலம் பணிக்கருமாகத் தோப்பில் நுழைந்ததும், தோள் முண்டினை எடுத்துத் தலையில் வட்டக் கட்டாக இறுக்கிக் கட்டி விட்டு, வேட்டியைத் தார் பாய்ச்சிக் கொண்டு, மண்வெட்டியைக் கையில் எடுத்தான்.

“எங்கேருந்து வெட்டப் போறே?”

தெக்குப் பக்கம் கிழக்கு மூலை லேருந்து ஆரம்பிக்கட்டா?”

“வேண்டாம். வடக்கு மூலைலேருந்து ஆரம்பிச்சு மேக்குப்பாத்து வெட்டு...”

புதிதாகச் சேர்த்த கோடி மண்வெட்டி. வெட்டுக்குத் தோதாக, கைக்கு இலேசாக இருந்தது. பிடிக்கும் இடத்தில் வர் வேப்பந்தாங்கியின் குழைவு. அவனுக்காகவே சேர்த்தது போல், அதிகம் குனியத் தேவையில்லாத, கைக்குத் தொங்கலான உயரம். மணலும், ஆற்று வண்டலும், சாம்பலும், உமியும் கலந்த மண். கோடை மழையில் குளிர்ந்திருந்த மண். மண்வெட்டி “சொரு சொரு” வென்று இறங்கியது.

ஒரு சாண் இடைவெளி விட்டு, எட்டங்குல அகலத்தில், அரையடி ஆழத்தில், மண்ணை வெட்டி சின்னஞ் சிறு குப்பங் களாக, நாலு மண்வெட்டி மண் வீதம் குவித்துக் கணிசமாக ஒரு is நிரை வெட்டிய பின் நிமிர்கையில் சுடலையாண்டியின் மார்பில், முதுகில், வியர்வை வழிந்தது. மதியம் கனன்றது.

“போருண்டே சுடலையாண்டி. இனி சாப்பிட்டுட்டு வெட்டு...

“ இன்னா இந்த கெணறுவரை வெட்டிருகேன்...”

இலக்குவரை வெட்டி முடித்த சுடலையாண்டி, மண் வெட்டியை ஒரத்தில் வைத்து விட்டு, நிமிர்ந்து கைகளை நீட்டி மடக்கினான். கிணற்றடிக்குப் போய், ஒரு வாளித் தண்ணீர் இறைத்து, கை, கால், முகம், மார்பு, முதுகு என்று வாரி விட்டுக் கழவினான். இரண்டு கை தண்ணீர் கோரிக் குடித்தான். தலையில் கட்டியிருந்த துவர்த்தை அவிழ்த்து உதறி, மேல் துடைத்தான். மாங்கிளையில் தொங்கிய வெட்டுக் கத்தியை எடுத்து, கிணற்ற டியில் நின்ற பக்க வாழைக்கன்று ஒன்றிலிருந்து துண்டு இலை யறுத்தான். இலையைத் தண்ணீர் விட்டுக் கழுவி, வாளியில் தண்ணீர் இறைத்துவைத்து விட்டுச் சாப்பிட வந்தான்.

கொய்யா மர மூட்டில், மண் உறைந்து, குப்பைகூளங்கள் அற்று, துப்புரவாக இருந்தது.

தரை மீது துண்டைப் போட்டு, அதன் மீது உட்கார்ந்து, சோற்று வாளியைத் தன் பக்கம் நகர்த்தினான்.

வாழை இலைத் துண்டை நிலத்தில் விரித்து, வாளியைத் திறந்தான். ஒராளம் சோறு கொள்ளும் வாளியின் கழுத்து வரை பிழிந்து வைத்திருந்த பழையது. அதன் மேல் இரண்டு அகப்பை பழைய கறி. நாலைந்து உப்புப் பரல்கள். இரண்டு பச்சை மிளகாய். பழங்கறியைக் கையால் எடுத்து வாழை இலை மீது வைத்தான். உப்புப் பரல்களைப் பொடித்துத் தூவி, பச்சை மிளகாயை விரல் நகத்தால் பிய்த்துப் போட்டுப் பிசைந்தான். முதல் கை பருக்கையை வாயில் போட்டதும், உமிழ்நீர் சுரந்து தாடை நரம்புகள் சுருக்கென்று வெட்டி இழுத்தன.

“சோறு போருமாடே...”

“போரும் பாட்டா.”

“நல்ல திருப்தியா சாப்பிட்டையா?”

“ஆமா…”

“சரி... கொஞ்சம் இருந்துக்கிட்டு, காரு மேக்கே திரும்பச்சிலே போய் வெட்டு என்னா? நான் இந்த வாளியைக் கொண்டு வச்சுக்கிட்டு ஒரு தரத்து வெத்திலை போட்டுக் கிட்டு வாறேன்...”

தொடர்ச்சியாக வெட்டியதில் குறுக்கு கடுத்தது. துண்டைச் கிழமேற்காக விரித்து, நீளமாகக் கால்களை நீட்டிப் படுத்தான். கொய்யா இலைகளின் ஊடாக வானின் நீலமும் சூரியக் குழல்களும். இலைகள் அசைந்து அதிர்வதால் ஒரு மெல்லிய சரசரப்பு. மண்ணைப் பறத்தாமல் காற்று அமர்ந்து வீசியது. உள்ளங்கைகளைத் தலைக்கு வைத்து வான் நோக்கிப் படுத்திருந்த வனின் கவனம் “சொத்” தென்றதோர் ஒலியில் திரிந்தது. ஒலி வந்த திக்கில் கண்கள் சென்றன. சாப்பிட்டு மீந்த எச்சில் இலைகளின் பத்தையை அடுக்களை மதிலெட்டித் தோப்பில் எறிந்தபடி ஆவுடையம்மாள். இவன் படுத்திருப்பதைக் கண்டு வியப்பு விரவிய முகம்.

ஒரு கண் வெட்டில் தோட்டம் கொத்துவதையும், மண் வெட்டி இருப்பதையும் கண்டு கொண்டு வெடுக்கெனத் திருப்பிப்போனாள்.

அந்த முகம் மட்டும் மனதில் முள்ளாக -

சாப்பிட்ட காரணத்தால் வியர்த்திருந்த முகம். வியர்வையில்

ஒட்டியிருந்த ஒன்றிரண்டு தலை முடிகள். எச்சில் கொண்டு விலகி உயர்ந்து நின்ற கரம். மார்புக்கு மேல் தெரிந்த உடம்பில் அலைந்த தாவணித் தலைப்பு.

சுடலையாண்டி முகத்தைத் திருப்பிக் கொண்டு மறுபடியும் கொய்யா இலை ஊடாக வானத்தைப் பருக முனைந்தான்.

அவளுக்கென்ன?

கனத்ததோர் காற்று மூக்கின் முழையிலிருந்து பறிந்தது. ஒரு வேளை மேலே படிப்பாள். சொந்தக்காரர் வீட்டிலோ, விடுதி யிலோ தங்கிப் படிக்கும் வசதி உண்டு. இல்லை இங்கேயே தமிழ் எம்.ஏ. சேருவாள். அல்லது கல்யாணம் செய்து கொண்டு பிள்ளை பெறுவாள்!

வசதியிருந்தால் நமக்கும் மேலே படிக்கலாம். வசதிக்கு எங்கே போவது ? வயிற்றுப் பாடே பெரும்பாடு. உடனடியாகக் கொஞ்சம் பணம் வேண்டும். எங்காவது வெளியூர் போய் வேலை தேட வேண்டுமானால் பணம் இல்லாமல் ஆகாது. ஒரு சட்டையும் வேட்டியும் நல்லதாக வேண்டும்.

தாழக்குடியிலிருந்து பஸ் திரும்பிப் பாலத்து ஏற்றத்தில் ஏறும் இரைச்சல் கேட்டது.

சடக்கென்று எழுந்து துண்டை உதறித் தலையில் கட்டிவிட்டுத் தோப்பு வெட்டத் துவங்கினான். மண்வெட்டியை வீசி, ஆசாக இழுத்து, மண்ணை மறித்து, குப்பம் குவித்து என்று வேலை பறந்தது. அந்த நிரையை வெட்டி முடிக்கையில் மாலை சாய்ந்து விட்டது. மண் வேட்டியைக் கழுவி, வெட்டுக் குத்தி யையும் சேர்த்தான். தலை முண்டை அவிழ்த்து உதறினான். பொடிப் பொடியாக மண் உதிர்ந்தது. வீட்டுக்குப் போய் எண்ணைய் தேய்த்து விட்டு, குளிக்கப் போக வேண்டும்.

முன்னால் குற்றாலம் பணிக்கரை நடக்க விட்டு, பின்னால் தோட்டத்து வாசலுக்காக நடக்கையில், பல வேசம் பிள்ளை விட்டுப் புறக்கடையைக் கண்கள் திரும்பிப் பார்த்தன. புறக்கடை நடையில் நின்று தலை சீவிக் கொண்டு ஆவுடையம்மாள்.

கூந்தலை வளைத்து முன்னால் போட்டு, கத்தையாக இடது கையில் பற்றிக் கொண்டு, வலது கையில் கொம்புச் சீப்பைப் பிடித்து, முகத்தை

ஒரு பக்கம் சரித்து, சீப்பின் இழப்புக்கு வாகாக வெட்டி - சுடலையாண்டி திரும்பிப் பார்ப்பதைக் கண்டு ஆவுடையம்மாள் கண்ணை விலக்கினாள்.

மனதில் வண்டலாகக் கள்ளம் திரளுவதை உணர்ந்தபடியே சுடலையாண்டி தோப்பின் வெளியே போனான்.

***

# இருபத்தொன்று

நாலைந்து நாட்களாகவே ஏதும் வேலை இல்லை. தாத்தா குழிவித்து வைத்த வயலில் களை பறண்டப் போய் வந்தார். உடல் கடினமுள்ள வேலையல்ல. ஆனால் கைகளில் நிதானம் வேண்டும். நெளிவு சுளிவு தெரிய வேண்டும். களைக்குப் பதில் பயிரைப் பறண்டிவிடக் கூடாது. மழை, மண் குளிரப் பெய்திருந்ததால் வேலை எளிதாக இருக்கும். இன்னும் ஒரு நாள் உறைத்து ஒரு பாட்டம் பெய்தால் பெரும்பாலும் வயல் களில் காய்ச்சல் வெள்ளம் விட்டுவிடுவார்கள். வெள்ளம் நிறுத்தி விட்டால், சன்னஞ் சன்னமாகச் சில்லறை வேலைகள் இருக்கும்.

வரப்புக் கொத்தி வைக்க, தளை கட்ட, ஊடு கோரிப் போட... ஊடு போடுவதில் தாத்தாவுக்கு இருக்கும் நுட்பம் ஊராருக்குத் தெரியும். களையும் பறித்து ஊடு கோரிப் போட்டு விட்டார்களானால், சம்பாப் பயிரில் பிறகு வேலை இல்லை. அறுவடை வரும் வரை. இரண்டு மாதங்கள் ஒறுவினைக் காலம்.

நெல் மட்டும் பயிராகும் நஞ்சை நிலங்கள். எனவே கன்னிப் பூவில் இரண்டு மாதம், கும்பப் பூவில் இரண்டு மாதம் ஒறு வினை நாட்கள். மரச்சீனிக் கிழங்கின் பிரவேசம் வறுமைப்பட்ட வீடுகளிலெல்லாம் நடக்கும். இந்த மாதங் களில்தான் குடம், குத்து விளக்கு, செம்புப்பானை எல்லாம் பணயம் போகும். ரூபாய்க்கு ஓரணா வட்டி. புதுக் காசுகள் வந்து பல ஆண்டுகள் சென்று விட்டாலும் வட்டிக் கணக்கு அணாவில் தான். மாதம் ரூபாய்க்கு ஓரணா வட்டி என்றால நூறு ரூபாய்க்கு நூறு அணா. ஆண்டுக்கு - எழுபத்தைந்து ரூபாய். எழுபத்தைந்து சதமானம் வட்டி. பணயப் பாத்திரங்கள் பல மீளுவதில்லை. நாஞ்சில் நாட்டுப் பண்ணையார் பெண்டுகளுக்கு இப்படிப் பணயம் பிடிக்கும் வழக்கம் உண்டு. பெரிய குத்துப் போணி, செம்பு, அண்டா, பானை, உருளி என்றால் கொண் டாட்டம். பணயம் வைத்துத் திருப்பக் கூடாது என்பதற்காக, பாத்திரத்தை அடுப்பை மூன்று தரம் சுற்றி வைப்பதும் உண்டு. அல்லது திரும்பி விடும் என்று தெரிந்தால் சொந்தப் பாத்திரத்தைக் கழுவிக் கவிழ்த்து விட்டுப் பணயப் பாத்திரத்தைப் புழங்கப் போடுவார்கள். வட்டியோடு, தனது பாத்திரம் தேய்மானம் இல்லாமல் கிடக்கும் லாபம். தேய்மானம் பணயப் பாத்திரத்துக்கு இருந்து விட்டுப் போகட்டும் என்ற நல்லெண்ணம். அடுப்பை மூன்று முறை சுற்றிய பிறகு வைத்த பணயப் பாத்திரம் என்றாலும், வசக்

கேடாக எவரும் நெடுநாட்களுக்குப் பிறகு பாத்திரம் திருப்ப வந்தால் - வட்டிக் கணக்கைக் கூட்டிக் குழப்பி, இரண்டு மூன்று நாட்கள் அலைய வைப்பார்கள். அதற்கும் மசியா விட்டால், பாத்திரத்தின் தூரில், இரும்பு ஆணியால் ஒட்டை போட்டுக் கொடுக்கும் புண்ணியாட்டிகளும் அங்கு உண்டு. திசை மறந்து, திருப்பாமல் தம் வசம் சிக்கிக் கொண்ட பாத்திரங்களைப் புதுப்பித்தது, காவி பூசி, மகள் திருமணம் ஆகிப் போனதும், பொங்கல் படி கொண்டு செல்கையில் சக்கடா வண்டியில் ஏற்றி அனுப்புவார்கள். அடி வயிற்றில் தீப்பிடிக்கும் இந்த ஒறுவினைக் கால வறட்சிக்காகத் தன்னைக் கட்டிக் கொள்ள எத்தனை தரம் முயன்றாலும் அவர்களால் முடிவதில்லை. அதற்கு முன் ஏதாவது ஒரு வரும்படிக்கான வழி செய்து கொள்ள வேண்டும் என்ற அவசரம் சுடலையாண்டிக்கு இருந்தது. உடனடியாக ஒரு அற்புதம் நிகழ வாய்ப்பேதும் இல்லை என்பதை அவன் அறிவான். ஆனால் பாதுகாப்புள்ள ஒய்வினை ஆத்தாவுக்கும் தாத்தாவுக்கும் அளிக்க மனம் தவித்தது.

நாகர்கோயிலில் நாலைந்து பெரிய ஷாப்புகளில் கேட்டுப் பார்த்தாயிற்று.

“இவ்வளவு படிச்ச பையன் இதுக்கெல்லாம் ஏண்டே வாறே? வேற எதாங் கெடைக்குமா பாரு,” என்று தட்டிக் கழித்து விட்டார்கள்.

சூரங்குளத்தில் பால் பண்ணையில் கணக்கு எழுத ஒருவர் தேவை இருந்தது. கறவைக்காரருடன் காலையில் மூன்று மணிக்கு எழுந்து வீடு வீடாக ஏறி இறங்கும் வேலை. கையில் பால் கேனும், அரிக்கேன் விளக்குமாகக் கறவைக்காரர். கறவை வாளி லிட்டர் முகவைகள், கணக்குப் பதிவேடு இவற்றுடன் கணக்கர். வீடு வீடாகக் கதவைத் தட்டி, மாடு கறந்து, கணக்குப் பார்த்து, பாலை அளந்து கேனில் ஊற்றி, தேவையான பாலை வீட்டுக்குக் கொடுத்து, வீட்டுக்காரர் நோட்டிலும், பண்ணை நோட்டிலும் குறித்துக் கொண்டு - பிறகு அடுத்த வீடு.

பால் பண்ணை நடக்கும் முறிக்கு வந்து சேரக் காலை ஆறு மணி ஆகும். சில்லறைப் பதிவுக்காரர்களுக்குக் கொடுத்தது போக மீதியை இரண்டு பெரிய பித்தளைக் கேன்களில் ஊற்றி, அரக்கு உருக்கி முத்திரை வைத்து, ஆறரை மணிக்குப் பால் அடிக்கும் ஆள் சைக்கிளில் வைத்துக் கட்டிக் கொண்டு நாகர்கோயிலுக்கு மிதிப்பான். மீண்டும் ஒரு முறை மதியம் இரண்டு மணிக்குத் துவங்கி இந்த ஊர்வலம் நடக்கும். இது தவிர மாதா மாதம் கணக்கு வழக்குகளைத் தீர்த்துப் பணம் பட்டுவாடா

செய்வது, வசூலிப்பது போன்ற வேலைகள் உண்டு.

ஏற்கனவே இந்த வேலையை வீரபத்திரன்தான் பார்த்து வந்தான். நாலைந்து ஆண்டுகளாக அந்த வேலையில் இருந்து வந்த அவன் மீது ஊர் முழுவதுமே ஒரு கிசுகிசுப்பு உண்டு. பால் பண்ணை வேலைகளில் சேர்ந்த பிறகு அவன் கழுத்தில் மைனர் செயின் ஏறியது. கையில் சீக்கோ கடிகாரம். உடையில் வெள்ளை சொள்ளை. உடலில் ஒரு எண்ணெய்மினுக்கு. மேலப்பத்தில் ஒரு கோட்டை விதைப்பாடும், வடக்குத் தெருவில் நாலு செண்டு புரையிடமும் வாங்கியாயிற்று. தொண்ணூறு ரூபாய் சம்பளத்தில் இந்தச் சுதாரிப்பு சாத்தியமில்லை. அப்படிச் சிறப்பான வரும் படிக்கு நிலபுலன்கள் என்று அதிகம் கிடையாது. சோற்றுக்கு ஏதோ வழியுண்டு. சேமிதம் பால் கேனின் விளிம்பு சொட்டல் என்ற சேதி புரிந்தாலும் கேட்க நாதி கிடையாது. பல வேசம் பிள்ளைக்கு வீரபத்திரன் சொந்தக்காரன். ஆனாலும் - ஒரு நாள் அதிகாலையில் பெண் பிள்ளை ஒருத்தியிடம் அத்து மீறியதால் வீரபத்திரன் ஜாதகம் கிழிந்தது.

கறவைத் தேவரும் அவர் மகனுமாக இரண்டு மூன்று பொழுதுகள் சமாளித்து வந்தார்கள். எப்படியும் ஒரு ஆள் எடுப்பார்கள் என்று சுடலையாண்டிக்குத் தோன்றியது.

யாரிடம் கேட்கலாம் என்று எண்ணினான் சுடலையாண்டி. வசதிகளின் பலம் கொண்டு, அவ்வூரின் பொறுப்பான பதவிகளான - கோயில் முதலடி, கோழிப் பண்ணை, பால் பண்ணை, ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகள் பலவேசம் பிள்ளையிடம் இருந்தன. மீந்து போன துணைத் தலைவர், பொருளாளர், செயலாளர் பதவிகளை அவருக்கு வேண்டிய சில பண்ணையார்கள் பங்கு போட்டுக் கொண்டிருந்தார்கள். எனவே வேறு யாரைச் சென்று பார்ப்பதை விடவும், பலவேசம் பிள்ளையைப் போய்ப் பார்த்தால் தான் காரியம் ஆகும். நினைத்த உடனேயே உள்ளத்தில் குளிர் சுண்டியது. ஆறு ஆண்டுகள் ஆகி விட்டாலும் புதிதாக இருந்த சூடு. கன்றை நக்கும் தாய்ப்பசுவின் நாவாக, தினம் தினம் நக்கிக் கொடுக்கும் புண். அவருக்கு அது நினைவிருக்குமா?

ஒரு கள்ளனாகவே அவர் கண்ணுக்கு வளர்ந்து வந்திருப் பேனோ? சேச்சே! அவர்களுக்கெல்லாம் இது ஒன்றா கவலை?

ஆனால் இத்தனை காலம் மனதில் தேக்கி இருக்கும் வெறுப்பை அவமதித்து, பலவேசம் பிள்ளையைக் கண்டு, முட்டைச் சொறிந்து,

முண்டைத் தாழ்த்திக்கட்டி. மறுபுறம் - தொண்ணூறு ரூபாயானால் தொண்ணூறு... அதை விட்டு விட முடியுமா?

மாலை ஐந்து மணிவாக்கில், பலவேசம் பிள்ளை வீட்டில் இருக்கும் நேரம் பார்த்துச் சுடலையாண்டி படிப்புரையில் ஏறி நின்றான். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு வந்து பார்க்கும் போது, வீட்டில் சில மாற்றங்கள் தெரிந்தன. "டிக், டிக்' என்ற ஓசை சுவர்க் கடிகாரத்தின் இருப்பைத் தெரிவித்தது. படிப்புரையில் தரையில் அமர்ந்து ராஜாங்கம் பார்ப்பது மாறி, சூரல் சாய்வு நாற்காலி. சுற்றிலும் நாலைந்து தேக்கு நாற்காலிகள். நடுவில் முக்காலி மீது வைத்திருந்த வெற்றிலைத் தட்டு. வீட்டுக்குள்ளிருந்து வானொலிப் பெட்டியின் சத்தம். இதெல்லாம் புதிதாக இருந்தாலும் - பளிச் சென்று ஒரு பரபரப்பு தெரிகின்ற சூழ்நிலை துலங்கி நின்றது. வெள்ளை வெளேர் என்று இரட்டை வேட்டியும், தேங்காய்ப் பூத்துண்டும் போட்டுக் கொண்டு பலவேசம் பிள்ளை. முற்றத்துக் கொடியில் கிடந்த துண்டுகளை உருவிச் சுருட்டி வீட்டுக்குள் கொண்டு போகும் பாவநாசம். வீட்டுக்குள்ளும் கதிமாறிய ஒரு நடமாட்டம். அங்கும் இங்கும் இறைந்து கிடக்கும் சாமான்கள் எல்லாம் ஒரு ஒழுங்கில் நின்றது போல்...

அடுக்களையிலிருந்து அரங்குக்குப் போன ஆவுடையம் மாளைப் பட்டுப் புடவையில் அடையாளம் தெரியவில்லை.

“நாலணாக்கு எம்புட்டு போல பூ தந்திருக்கா?” ஆவுடையம் மாளின் அம்மா குறைப்படுவது கேட்டது.

யாராவது விருந்தாளிகள் வர இருக்கிறார்களோ?

வந்த வேலையை முடித்துக் கொண்டு விரைவில் போய் விட வேண்டும் என்று சுடலையாண்டிக்குத் தோன்றியது.

புருவக் கோடு உயர்த்திக் கேள்வி கேட்ட பலவேசம் பிள்ளையிடம் வந்த காரியத்தைச் சொன்னான் சுடலையாண்டி.

“ஓ அதா? ஆமா... ஒரு ஆளு பார்க்கணும். அது ஒனக்குச் சரிப்பட்டு வருமா? இவ்வளவு படிச்சவன் இதிலே எங்க நிலைச்சு நிக்கப் போறே? மூணுமாசம் களிச்சு வேற வேலை கெடைச்சா நீ பொறப்பிட்டுப் போயிருவே... நாங்க வேற ஆளு தேடணும்...”

“வேலை இப்பம் எங்க கிடைக்கப் போகு? ரெண்டு வருசமோ? மூணு வருசமோ?”

"அது சரிடே, ஆனாலும் நாலு பேருகிட்டே யோசிக்க வேண்டியதிருக்கு பாரு. நீ நல்ல கெட்டிக்காரப் பையன்தான். எனக்குத் தெரியும். ஆனா அவுனுக நாலு விதமாச் சொல்லு வானுக. நாலு வீட்டுக்கு ஏறி இறங்குக சோலியில்லா? பொம் பளையோ இருப்பா. சமைஞ்ச பொட்டைப் பிள்ளையோ இருக்கும். அதுக்காகச் சுட்டித்தான் வீரபத்திரனை நீக்கினோம். இப்பம் ஒன்னைக் கொண்டு அதிலே வச்சா - அவன் எங்க யோக்கியமா இருக்கப் போறான்? அவ்வோ அம்மை இப்பிடி. அப்பா இப்பிடிண்ணு குத்தம்லாடே சொல்லுவான். ? உன்னை வைக்கதிலே எனக்கு ஒண்ணும் இல்லே... நம்ம ஊருக்காரன் சீரு எப்பிடிண்ணு உனக்கே தெரியும்லா? என்னை என்ன செய்யச் சொல்லுகே?”

தயங்கியவாறு சுடலையாண்டி நிற்கும் போது ‘தட தட’ வென நாலைந்து பேர் ஆணும் பெண்ணுமாக வீடேறி வந்தார்கள்.

“வாருங்கோ... வாருங்கோ... எங்கே கார் கெடக்கல்லி யோண்ணு நெனைச்சேன்... ஏவுள்ளா! இங்க யாரு வந்திருக் காண்ணு பாரு...”

ஆரவாரமாகப் பலவேசம் பிள்ளையால் வரவேற்கப்பட்ட அந்தப் புதியவர்களைப் பார்த்துக் கொண்டு சில நொடி நேரம் நின்று, சுடலையாண்டி வெளியே வந்தான். கால்கள் தம்மை உணராமல் புன்னை மர மூட்டுக் கலுங்கில் கொண்டு சேர்த்தன. மனதில் ஒன்றும் தெளிவாகத் தோன்றவில்லை. ஒரு நிழல் படிவது போல் - உனக்கு வேலை இல்லை என்று சொல்லி விட்டுப் போயிருக்கலாம். ஆனால்... இவர்களுக்கெல்லாம் என்னைப் பார்க்கும் போது இது ஒன்றுதான் ஞாபகமோ? மௌனமாக, புன்னை மர இலைகளின் ஊடே வானத்தைப் பார்த்தான் சுடலையாண்டி. இந்த அகன்று விரிந்த வானக் கூரையின் கீழ் ஒரேயொரு பூச்சியாக ஊர்வது போல் - ஒவ்வொரு முகமாக நினைவில் ஊர்ந்தது...

பங்கொண்டையும், அழுக்குக் கண்டாங்கியும், பல்லற்ற வாயுமாக அதிருப்தியைச் சாயல் கொள்ளும் ஆத்தா...

எப்போதும் இறுகிக் கிடக்கும் முகமும், முதுமை பாரித்த உடலுமாகத் தாத்தா... என்னை நம்பிக் கொண்டு...

என்னை எதிர்ப்பார்த்துக் கொண்டு...

அணில் ஒன்று வாலுயர்த்திக் குதித்தது.

புன்னைக்காய்ப் பிஞ்சில் என்ன சுவை இருக்கும் என்று கொறிக்கிறது?

சுவைக்காகக் கொறிக்கிறதா ? இல்லை, வேறு வேலை ஏதும் இல்லாததால் கொறிக்கிறதா?

மனம் கொறிப்பது போல்...

நேரம் போனது தெரியவில்லை. வெயில் மேற்கே சாய்ந்து விட்டது. துரத்தில் கரும்பச்சையாகத் தெரிந்த சம்பாப் பயிர். வீட்டுக்குப் போகலாம் என்று தோன்றியது. ஆட்டுக்குக் குழை இல்லை என்பதும் ஞாபகம் வந்தது. காலையில் கொண்டு போட்ட மீதத்தை மத்தியானம் போட்டாயிற்று. இப்போது பசித்து, தான் வரும் வழி பார்த்து விழித்து நிற்கும்.

தலை முண்டைக் கழுத்தில் போட்டுக் கொண்டு ஆற்றின் மேற்குக் கரைக்குப் போனான் சுடலையாண்டி, மேலக் கரையில், சுடுகாட்டுக்கு வடக்கே, வேலியோரம் அடர்த்தியாக நாலைந்து முள் முருங்கை மரங்கள். குழை நன்றாகத் தழைத்து நின்றது. வேட்டியைத் தார்பாய்ச்சிக் கட்டி, மரத்தில் ஏறினான். உடலெல் லாம் முள் படர்ந்து நின்றது மரம். மனத்து முட்களை வெளித்தள்ள முயலும் மனிதர்கள் போல் புது முட்களும். பதனமாகக் காலையும் கையையும் வைத்து, நாலைந்து குழைகளை ஓடித்துக் கீழே எறிந்து விட்டு மரத்திலிருந்து கீழே இறங்கினான்.

தெற்குப் புறம் இருந்த சுடுகாட்டுக் குழியைச் சுற்றிலுமாகக் குழைகள் விழுந்திருந்தன. அம்மாவையும் இங்கேதான் எரித்திருப் பார்கள். நிறைவேறாத ஆசைகளோடு அகாலமாகப் போன உயிர். ஒரு வேளை அந்த ஆவி இன்னும் அலைந்து திரிந்து கொண்டிருக்குமோ? ஒரு வயதாகு முன் விட்டுவிட்டுப் போன மகனைத் தேடியும் அலையுமோ? போகுமிடம் வருமிடம் எல்லாம் தொட்டுக் கொண்டு அந்த ஆவியும் நடக்குமோ?

இப்போது பக்கத்தில் நின்று கொண்டிருக்குமோ?

கண்ணீரைத் துடைக்க வகை அற்று மனம் அழிந்து தவித்து நிற்குமோ?

கண்களின் ஓரங்களில் கனமான உள்ளம் கசிந்தது. பெரிது பெரிதாக மூச்சுகள் கழன்றன. புதிதாக இனி எந்தச் சுமையும் மனம் தாங்காது போலிருக்கிறது. குழைகளைப் பொறுக்கி, துவர்த்தால் முறுக்கிப் பிடித்து, வீடு நோக்கி நடந்தான் சுடலையாண்டி. புறவாசலில் அவனைக் கண்டதும் ஆடு கத்தியது. குழைக் காகக் கயிற்றை இழுத்தது. கடித்துத் தின்னத் தோதாக, கூரையில் தொங்கிய கயிற்றில் குழையைக் கட்டினான். ஆசையோடு “மொறுக் மொறுக்” என்று ஆடு குழை கடிப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

***

# இருபத்திரண்டு

ஆனிமாதம் தொடங்கக் காத்திருந்தது போல், நிலைமை மிக மோசமாகிக் கொண்டு வந்தது. ஆட்டை விற்று விடலாம் என்று ஆத்தா ஆவோசனை சொன்ன போது, தாத்தாவுக்குச் சண்டாளத் தனமாகக் கோபம் வந்தது. சுடலை யாண்டிக்குக் கூட அதை விற்று விடலாம் என்றே தோன்றியது.

“தை மாதம் வரை பொறுலே மக்கா... எவனும் கோயிலுக்கு வெட்டதுக்கு கேட்டு வருவான். நல்ல விலை கிடைக்கும். வித்திரலாம்.”

ஆத்தா குறுக்கிட்டாள்.

“ஆமா, அதுவரைக்கும் சாப்பிடாண்டாம்...”

“நீ சும்மா கெட செறுக்கி. உங்கிட்ட எவன் கேட்டான்?”

“இல்லே தாத்தா, வித்திரலாம்...”

"நீயும் அந்தத் தேவ்டியா கூடச் சேந்தாச்சா? உருப்பட்ட மாதிரிதான். என்னுண்ணாங் கெட் டொழிஞ்சு போங்கோ... எனக்கென்ன மயிரு...”

ஆத்தாள் கண்ணைச் சிமிட்டிச் சிரித்தாள்.

மறுநாளே ஆடு பெரியதொரு வினையைக் கொண்டு வந்தது. அன்று காலை குளிக்கப் போகும் போது ஆட்டுக் கிடாவையும் அவிழ்த்துக் கொண்டு போனான் சுடலையாண்டி, தென்னங் குழி மடை இருக்கும் ஆற்றுப் படித்துறையில் ஒரே கூட்டம். எல்லாம் குளிக்க வந்தவர்கள். படித் துறைக்குக் கீழே ஆலமரத்து மூட்டின் பக்கம் இருந்த வழித்தடத்தில் கிடாவை இறக்கி ஆலமர வேரில் கழுத்துக் கயிற்றைக் கட்டிவிட்டு, கிடாவின் மேல் தண்ணீரை வாரி இறைத்தான். கொஞ்ச நேரம் உடலைச் சிலிர்த்து, “ம்மே. ம்மே.” என்று இரண்டு முறை கத்தியது ஆடு. அங்கும் மிங்கும் திரும்பியது. வேறு வழியின்றிப் பேசாமல் நின்றது. தண்ணீரை இறைத்து, வைக்கோல் கற்றையால் தேய்த்துக் கழுவிவிட்டுக் குளிக்கப் போனான் சுடலையாண்டி. இரண்டு முங்கு போட்டுவிட்டுக் கையால் மேல் தேய்த்துக் கொண்டிருற்தான்.

“ஆ...எம்மா” என்றொரு சத்தம். திரும்பிப் பார்த்தான். சிறுவன் ஒருவன்

தண்ணீரில் விழுந்தான். ஆடு மண்டையை மேலும் கீழுமாக ஆட்டிக் கொண்டு நின்றது. தண்ணீரில் விழுந்து கிடந்தவன் பக்கம் ஓடினான் சுடலையாண்டி, தூக்கி நிறுத்தினான். நல்ல வேளையாக அடி ஒன்றும் இல்லை. விளையாட்டாக ஆடு முட்டியிருக்கும் போலிருக்கிறது. பயல் பயந்து போயிருந்தான். பையன் யாரென்று தெரியவில்லை. ஊருக்குப் புதியவன்.

குளித்துக் கொண்டிருந்த கும்பல் ஒன்று கூடியது. அழகிய நம்பி ஓடி வந்து அந்த பையனைப் பிடித்துக் கொண்டு கேட்டான்.

“எங்கலே பட்டு...? எங்க பட்டு. ?”

“நெஞ்சிலே முட்டீட்டு.”

அழகிய நம்பியின் சொந்தக்காரன் போலிருக்கிறது. அவனைச் சமாதானப் படுத்துபவன் போல் சுடலையாண்டி சொன்னான்.

“போட்டுண்டே... நீ அதுக்குக் கிட்ட ஏன் போனே? சும்ம விளையாட்டுக்கு முட்ட வந்திருக்கு...”

அழகிய நம்பி சுடலையாண்டியை வன்மத்தோடு பார்த்தான்.

“நீ என்ன மயிருக்கு குளிக்க எடத்திலே ஆட்டைக் கொண்டாந்து கெட்டுகலே...”

சுடலையாண்டிக்குச் சுரீலென்றது. தன்னை விட இரண்டு வயது சின்னவன். “லே” என்று அதட்டுகிறான். இவனோடு ஒரு சண்டையை வளர்த்துக் கொண்டு நிற்பதில் அர்த்தமில்லை.

“போட்டுண்டே அந்தால..ஆட்டுக்குத் தெரியுமா?”

“என்ன அந்தால விடுங்கே? அவன் தள்ளி நிண்ணதுனாலே இந்தால போச்சு. கிட்ட போயிருந்தா ஆளைவேக்காடு ஆக்கீருக்குமே! ஊரான் தோட்டத்தை திண்ணு கொழுத்துப் போச்சுல்லா...முட்டாம என்ன செய்யும்?”

சுடலையாண்டிக்குக் கோபம் வந்தது. இங்கே குளிக்க வந்திருக்கும் பத்துப் பன்னிரண்டு பேரில் எவனும் தனக்காக ஒரு வார்த்தை சொல்ல மாட்டான். சாதுப் பிள்ளை போல் நின்ற பாவநாசம் முகத்தில் ஒரு

பகைச் சுழிப்பு. இவர்களிடம் வம்பு வளர்ப்பதில் தனக்கு அவமானம் உண்டு. நட்டாற்றில், மீதிக் குளியலை முடிக்கப் போனான்.

இரண்டு முங்கு போட்டான்.

“ம்மே...ம்மே...” ஆட்டின் கதறல்.

கை நிறைய வெட்டாங் கற்களை வைத்துக் கொண்டு. வேரில் கட்டியிருந்த ஆட்டின் மீது வேகமாக வீசிக் கொண்டி ருந்தான், அழகிய நம்பி. சுடலையாண்டியின் அடிவயிறு கலங்கியது. வெறி வந்தது போல் ஓடிப் போய் ஆட்டின் முன்னால் நின்றான்.

“அழகிய நம்பி... வேண்டாம். ஆட்டைக் கல்லை விட்டு எறியாதே. பாவம் வாயில்லாச் சீவன்...”

“வாயில்லாச் சீவனுக்கு முட்ட தெரியில்லா?”

“அது வேணும்ணாடே முட்டிச்சு...?”

“சரித்தான் தெரியும்லே உன்னை... தேங்காக்களவாணி... பெரிய மயிரு, காலேஜிலே படிச்சிட்டோம்னு தெம்பு பேசுகான் தெம்பு... எரப்பாளிப்பய...”

கூடி நின்ற கூட்டம் இளித்தது. எல்லா முகத்திலும் ஈரம் காய்ந்த பகை. பொறாமைக் குப்பைகள் தீப்பிடித்து எரிந்தன.

“விடுண்ணா அந்தால விடுப்பா. சும்மாச் சும்மா பேசீட்டு நிக்காதே. தெரியாம முட்டீட்டு. போருமா?”

“தெரியாம முட்டுமாலே அப்பிடி?”

“ஏய்....மரியாதையாய்ப் பேசு...”

“இல்லேண்ணா என்னலே செய்வே? செரைச்சுப் புடுங்கீருவியா?”

ஏசிக் கொண்டு கையிலிருந்த கல்லால் ஆட்டை எறிந்தான். ஆட்டின் கையை நீட்டி நின்று கொண்டிருந்த சுடலையாண்டியின் விலாவில் விழுந்தது ஒருகல்.

பாய்ந்து அழகியநம்பியின் கையை எட்டிப் பிடித்து, முறுக்கி, பின்புறம் வளைத்து, படார்' என்று ஒரு அறை வைத்தான். எல்லோருமாய்ப் பாய்ந்து சுடலையாண்டியைப் பிடித்துக் கொண்டார்கள். ஆங்காரத்தில் அவனுக்கு "மூசு மூசு" என்று மூச்சுப் பறிந்தது. விலக்கிப் பிடித்து நிறுத்தியிருந்த சுடலையாண்டியின் நெஞ்சில் ஓங்கியோங்கிக் குத்தினான் அழகிய நம்பி.

"லே... என்னை விடுங்கலே. என்னை விடுங்கலே... அவன் அடிக்கதைப் பாக்கட்டும்..."

ஏழெட்டுப் பேராகப் பிடித்து அமுக்கிய இறுக்கத்தில் சுடலையாண்டியின் திமிறல் செல்லவில்லை.

"லே... ஒத்தைக்கு ஒத்தை வாருங்கலே... எவம்னாலும் வாருங்கலே..."

"தேவ்டியா மகன் பேசுகதைப் பாரேன். பல்லை உடைச்சிருவேன், என்னமாம் பொலம்பினேண்ணா. பேசாமப் போ அந்தால கொண்டுக்கிட்டு..."

அடியின் நோவை விட, சுடலையாண்டிக்கு அவமானக் குறுகல் வலித்தது.

இங்கே எதன் ஆட்சி பேசுகிறது?

எல்லாம் வயதில் சின்னவன்களின் கூட்டம். தெரியாமல் நடந்த ஒரு பிழைக்கான பழி வாங்கல். இத்தனை பேர் சேர்ந்து கொண்டு...

தொண்டைக்குள் அழுகை உடைந்தது –

மௌனமாகத் தண்ணீரில் முங்கிக் குளித்தான். நீருக்குள் அமிழ்ந்திருக்கையில் அழுதான். தண்ணீரா கண்ணீரா என்று பேதம் தெரியாத நீர். பொங்கிப் பொங்கி அழத் தோன்றியது.

வழக்கத்தை விடவும் நீண்ட நேரக் குளிப்பு.

தண்ணீரிலிருந்து வெளிவர மனது வரவில்லை. இப்படியே இந்த ஆற்றோடு கரைந்து போனால் -

யார் இருக்கிறார்கள் நமக்கு?

உலகமெங்கும் மனிதர்கள் நெரிந்து கிடந்தாலும், ஒற்றைத் தனியனாய் உயிர் துடித்தது. குளித்துக் கரையேறி, ஆட்டுக் கிடாவை அவிழ்த்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான். மனம் பேயறை பட்டு வெளிறிக் கிடந்தது. ஆத்தாவிடம் எதுவும் சொல்லாமல், கஞ்சி குடித்துவிட்டு, வெளியே வந்தான். திருப்பதிசாரம் ரோட்டில், கால் போன போக்கில் நடந்தான். வழியெங்கும் தன்னை எல்லோரும் கூர்ந்து பார்ப்பதாக ஒரு மயக்கம். இவர்கள் எல்லோரும் அறிந்திருப்பார்களோ? அறிந்திராவிட்டாலும், இன்னும் அரை மணி நேரத்திற்குள், "ஊசு ஊசு" என்ற அறிந்து கொள்வார்கள். நூறு வீடுகள் கொண்ட இச்சிறிய ஊரில், ஒரு சம்பவம் பரவ எத்தனை நேரமாகும்? காடெல்லாம் தீப்பிடித்துப் புகைவதுபோல் - இன்னும் ஒரு மணி நேரத்தினுள் எல்லாம் தெரிந்து போகும்.

அதுவும் யாரோடு சண்டை போட்டிருக்கிறான்?

தெங்கரை முத்துப் பிள்ளையின் மகனோடு!

"பயலுக்கு இல்லேண்ணாலும் கொளுப்பு கொஞ்சமா? காலேஜிலே படிச்சிட்டோம்னு பெரிய பவுறுல்லா... ஆளு கள்ப்டே முகங்குடுத்துப் பேசுவானாங்கும்? பெரிய தாசீல்தாரு கெணக்க இல்லா அவன் போக்கும் வரத்தும்?"

"அவன் ஒரு சீமைக் குரங்குல்லா... கூட ரெண்டு வச்சுத்தாலா விடணும் பெரிய கலைட்டர் வேலைக்குப் போப் போறாருல்லா? அதுதான் இவ்வளவு அதியாரம்"

"அந்தப் பய அளயிய நம்பியையா அடிச்சான்? அவன் பாவமே பாவமில்லா. மூதிக்கு பைத்தியம் புடிச்சிட்டோவ்?"

"ஆட்டை விட்டுல்லா முட்ட விட்டானாம். அந்தப்பய குமாரு சின்னப் பயல்லா? நல்ல காலம் ஒண்ணும் ஆகல்லே. இல்லேண்ணா அவருக்கு எவ்வளவு அவப்பேரு!"

"சவம், அவனைச் சொல்லி என்னத்துக்கு? அந்த ஆட்டை அடிச்சுக் கொல்லணும். இப்பிடியும் காசு உண்டாக்கணு மாங்கும்?" - என்று பெண்களில் மணிகளும் ஆடவ ரத்தினங்களும் தன்னை வாயாலேயே கொன்று குழி தோண்டி மூடப் பார்ப்பார்கள்.

அழகிய நம்பி, தெங்கரை முத்துப் பிள்ளையிடம் சொல்லியிருப்பான்.

தன் மகனை ஒருவன் அடிக்கலாச்சா என்று பெரு வேடம் எடுத்துக் குதிப்பாரோ? அல்லது தன் மகனின் வீர தீரப் பிரதாப வெற்றி கேட்டு, வாகு வலையங்கள் இற்று வீழத் தோள் பூரித்து, விறல் மகனைத் தோளோடு தழுவிக் கொள்வாரோ?

வெயில் பழுக்கத் துவங்கியது. தார் ரோடு காலில் சுட்டது. இளம் பயிரில் கதிர் பாய்ந்து பச்சை உருக்கியது. கண்ணை உயர்த் தினால் கூசச் செய்யும் வேனில். ஆற்றங் கரையில் வெயிலைச் சட்டை செய்யாமல் எருமைகள் மேய்ந்தன. ஆனியாடிச் சாரல் சூல் கொள்ளக் காத்திருந்த காற்று...

சூரங்குளத்துத் தெற்கெல்லைக் கலுங்கில் உட்கார்ந்து சிலர் பேசிக் கொண்டிருந்தனர். காலைச் சச்சரவுக்குச் சாட்சியாக நின்ற ஒன்றிரண்டு முகங்கள். ஒருவேளை பேச்சே அது பற்றித்தானோ? அவனைக் கண்டதும் கூசிய பேச்சொலி. எந்தக்குண பேதமும் முகத்தில் தூக்காதவாறு, அவன் அவர்களைத் தாண்டிச் சென்றான். எப்படியோ, இவனை அவமதித்து விட்டோம் அல்லது வஞ்சம் தீர்த்து விட்டோம் என்ற மகிழ்வில் இவர்கள் திளைத்துக் கொள்ளட்டும். ஆனால் நான் இவர்களைப் பழி வாங்கப் போவ தில்லை. என் வெற்றிகள் இவர்களைக் குனியச் செய்யட்டும். நான் உயர உயர, என்னை அண்ணாந்து பார்ப்பார்கள். அதுவரை இது பதுங்கிக் கொள்ளட்டும். தனக்குப் பின்னால் எத்தனை பேர் கல்லூரிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்த்தான் சுடலையாண்டி. இரண்டு மூன்று பேர் இருப்பார்கள். பெரும்பாலும் எல்லோரும் பதினொன்றில் தேறினாலும் கல்லூரியில் சேர்ந்த முதலாண்டில் - கணிதத்தில், ஆங்கிலத்தில் என்று நொண்டி, முட்டு வீங்கிக் கிடப்பவர்கள். பிறகு இருக்கவே இருக்கிறது. சம்பா அரிசிச் சோறும் சாளைப் புளி முழமும். போதாத குறைக்குக் கணியான் தோப்புக் கள்ளு, சிகரெட், அரசியல் ஆவேசங்கள், இளைஞர் மன்றங்கள்...

இந்த வீர இளைஞர்களை நம்பி இங்கோர் தேசம் காத்துக் கிடக்கிறதாம். சுதந்திர தினங்களில், குடியரசு தினங்களில் பெட்டைத் தனமாகப் புலம்புகிறார்கள். ஒரு வகை வெறுப்பில் உதடு சுழித்தது. கிருஷிப் பாலத்தின் வரிக் கற்கள் கொதிக்கத் துவங்கின. ஆற்றில் குறைவான நீர்க்கசிவு. தண்ணீரில் கொத்துக் கொத்தாய்ப்பச்சைப் பாசிகள். தண்ணீர் குடிக்கப் போனால் கண் முன் நூல் நூலாய் விரியும் பாசிகள். அருவருப்பின் கூச்சம். ஆனியாடிச் சாரல்வரை இந்தக் கதைதான்.

பாலத்திலிருந்து நேராக மேற்கே ஓடும் வாய்க்கால். பழையாற்றில் வடியும் வெள்ளம். வாய்க்காலின் திரட்டு வரப்பு. ஆள் நடமாட்டம் அதிகமாக இல்லாததால், முள்ளும், புதரும் மண்டிக் கிடந்தது.

பழையாற்றங் கரையில், ஆற்றுப் படுகை நிழலில், மணல் சேர்ந்த இடத்தில் உட்காரலாம் என்ற எண்ணத்தில் குறுக்கே நடந்தான் சுடலையாண்டி. வரப்பில் ஏராளமாகத் தொட்டாவாடிப் படர். உண்ணிச்செடி உயரமாய் வளர்ந்து சடைத்திருந்தது. பெரிய பெரிய கல்வைத்த கம்மல்கள்போல் உண்ணிப் பூக்கள். கடும் சிவப்பில்... அம்மனின் புடைவைச் சிவப்பில்... மாதுளம் பூச் சிவப்பில்... அன்று யாரோ சொன்னார்கள் கூட்டத்தில். அம்மன் உடல் மாதுளம் பூ நிறம்... மாதுளைப் பூ நிறத்தில் ஒரு மேனியா? ஐயோ! அது என்ன சிவப்பு? நினைக்கவே நெஞ்சக் குழியில் திகில்மண்டும் சிவப்பு. நாபிச் சுழியில் பயம் ஊட்டும் சிவப்புஉண்ணிச் செடியின் உடல் எங்கும் சொரசொரவென முட்கள். முட்கள் உடலைத் தேய்த்துவிடாமல், தொட்டாவாடிக் குப்பங்களைத் தாண்டி, அந்த வரப்போடு நடந்தான்.

நடந்து ஆற்றங்கரை மேட்டில் ஏறினான் சுடலையாண்டி. கரையில் அடைப்பாகப் பூவரசு, பன்றி வாகை மரங்கள். வெளி யாகக் கிடந்த இடங்களில் ஆவாரை, கொடுக்காரைக் கூட்டம், கடலாமணக்கு, காட்டாமணக்குச் செடிகள். ஆற்றின் கரை மேட்டிலிருந்து இறங்கினான். கோவணம் போல் ஒரு ஓரமாய் நீரூற்றின் ஒழுக்கு. மேற்குக் கரையில், சரிவான கல்லடுக்கு. கல்லடுக்கின் கீழிருந்து தொடங்கி வளர்ந்ததொரு புன்னைப் பந்தல்.

புன்னைப் பந்தலின் கீழ் மணல்வெளி. ஏகமாக, பழுப்பாகப் பருமணல் காடு. முழங்காலளவு தண்ணீரைத் தாண்டி, மணல் மேட்டில் ஏறிச் சுற்றுமுற்றும் பார்த்தான். எருமைகள் படுத்துப் புரண்டதன் அடையாளமாகச் சாணிப் பீச்சல்கள் பொருக்காடிக் கிடந்தன. மணல் மீது அமர்ந்தான். கைமணல் காற்றில் பரந்தது. தண்ணீரில் வீசிய மணல் எழுப்பிய “சொர்ர்...” என்ற ஓசை.

இந்த ஊரையே காலி செய்துவிட்டுப் போக வேண்டும். எங்கு வேலை கிடைக்கிறதோ அங்கு. தாத்தா இனிமேலும் வேலை செய்து சங்கடப் படாவண்ணம். ஒரு சிறிய வீடாகப் பார்த்து வாடகைக்கு எடுத்துக் கொண்டு, இந்த அல்லல் இல்லாமல், அத்துமீறல்களைச் சகித்துக் கொள்ளாமல்...

வெளியூருக்குப் போய் விட்டால்-இருசாதியானால் என்ன முச்சாதியானால் என்ன? இந்தக்கால்வேக்காடுகளின் சில்லறைப் புத்தி நீளாத மக்கள் நெரிந்த நகரச் சந்து ஒன்றில்...

எளிமையான, அமைதியான வாழ்வு கண்முன் கிளைத்தது.

ஆனால்...

இந்தச் சிற்றுாரின் மகரந்தம், மனிதர்களில் சிலர் அறியாமை காரணமாக ஏதோ பேசுகிறார்கள் என்றாலும், அந்தப் புண்களை எல்லாம் ஆற்றி விடுவதுபோல் இந்த இயற்கையின் குலவல்...

அதோ தூரத்துக் கல்மீது வெயில் காயும் ஓணான். அதன் மஞ்சள் உடலும், சிவப்புக் கழுத்தும், கருந்தலையும்... தூரத்து மஞ்சணத்தியில் பழம் பறிக்கும் மஞ்சள் மூக்கு மைனா, எட்டி எட்டிப் பார்க்கும் அணிற் பிள்ளை. கொத்தாகக் கரைந்து செல்லும் நாரைக் கூட்டம்...

சூரியன் வலுப்பெற்றுக் கொண்டிருந்தான். வெயிலின் செம்மை காற்றெங்கும் கரைந்து வீசியது. புன்னைக் கிளைகளில் மட்டும் சற்று நிழலும் தண்மையும். எங்கும் மனித நடமாட்டம் இல்லை. ஒரு அமைதி, ஒரு தெள்ளத் தெளிவு... இதெல்லாம் இன்னும் கொஞ்ச காலம்தான் என்று எண்ணுகையில் மனதில் ஒரு வெறுமையும் அதே நேரத்தில் ஆனந்தமும். பட்ட சிரமங் களுக்கெல்லாம் தீர்வு வரப்போகும் மகிழ்வு. பகலெல்லாம், இரவில்கூட, இப்படியே கிடந்தால் என்ன?

பறவைகளின் அனக்கங்கள்...

ஆற்றில் நைந்த நீரோட்டச் சலசலப்பு...

காற்று சத்தமின்றி இலைகளில் குதிக்கும் ஓசை...

மணி மூன்றுக்கு மேலிருக்கும். வயிற்றில் பசி இல்லை. நெஞ்சின் எரிச்சல் வயிற்றில் நிறைந்தது போல-

ஆத்தா தேடுவாள் என்பது நினைவுக்கு வந்தது. பொங்கிப் பொரித்து வைத்து விட்டுத் தேடும்படியாக வீட்டில் ஏதும் கிடையாது. இருந்தாலும் தேடவே செய்வாள். கொஞ்சம் பருக்கையும் தண்ணீருமோ, இரண்டு துண்டு மரச் சீனிக் கிழங்கோ, ஏதேனும் தங்கரியம் செய்து

வைத்திருப்பாள். தோல் பாய்ந்து கிடக்கும் அந்த உயிரை, தொய்ந்து தளர்ந்திருக்கும் உள்ளத்தைச் செப்பனிட்டு நிமிர்த்தி பசுமை பாய்ச்சுவது எக்காலம்? திரும்பி வீட்டுக்கு நடக்கும்போது காரணமற்ற ஒரு கவலை. என்ன ஆகுமோ? முகமும் கண்களும் களை இழந்ததுபோல். எதிரே வந்த ஒரிருவர் சுடலையாண்டியை உறுத்துப் பார்த்தனர். அவனைப் பார்க்கையில், அந்தச் சம்பவத்தின் நிழற் படங்கள் மாறி மாறி வந்தனவோ?

வாசலில் அரவம் கேட்டு ஆத்தா வெளியே எட்டிப் பார்த்தாள். சுடலையாண்டி படிப்புரையில் போய் அமர்ந்தான். அவன் முகத்தைக் குறுகுறுத்த ஆத்தா கேட்டாள்.

“என்ன சண்டைலே ஆத்திலே?”

“ஒண்ணுமில்லே...”

“என்ன ஒண்ணுமில்லே...? எல்லா செறுக்கி விள்ளைகளும் சேர்ந்து உன்னை அடி அடிண்ணு அடிச்சானாமே... நீ பாத்துக் கிட்டா நிண்ணே? செறுக்கி விள்ளைகளுக்கு ஒத்தைக் கையைக் காலை முறிக்க வேண்டியதுதானே? சவங்கோ திண்ணு கொளுத்துப் போச்சு...”

“ஒண்ணும் இல்லாத்தா... ஏன் இப்பம் அவயம் போடுக? சவத்தைத் தள்ளு...”

“சவத்தைத் தள்ளவா? நீயும் அந்த அப்பனைப் போலத்தான் வந்து வாச்சிருக்கே. எவனும் அடிச்சா பட்டுக்கிட்டு வருவ யாக்கும்? மாறி நாலு குடுக்கதுக்கு என்னா?”

“சரி, அந்தால விடு... போட்டு நூத்துக்கிட்டே இருக்காதே. திங்கதுக்கு என்னவாம் இருக்குண்ணா தா...”

"திங்கதுக்கு என்ன இருக்கு? காப்பக்கா குறுணை கடன் வாங்கி கஞ்சி வச்சிருக்கேன். உப்பு மொளகு நுணிக்கி வச்சிருக்கேன். தொட்டுக்கிட்டு குடி...”

இரண்டு அகப்பை குறுணைக் கஞ்சியைத் தட்டத்தில் விட்டுக் கொண்டு, உப்பு மிளகை விரலால் தொட்டுக் கொண்டு கஞ்சியைக் குடிக்கையில்- ஆத்தா ஏதாவது குடித்திருப்பாளா என்று தோன்றியது.

“நீ கஞ்சி குடிச்சியாத்தா?”

“இல்ல, குடிக்கணும்...”

“குடி குடி... எனக்குப் போரும்...”

“ஒரு ஆப்பைகூட ஊத்திக்கியாம்லே...”

“வேண்டாம் போரும்...”

“ம் பட்டினியும் பசியும் கெடக்கு பிள்ளை... பாவிமட்டை களுக்கு அவனைப் பாத்தா வயிறு எரியி... அதான் எல்லாவனும் சேந்து அடிச்சுக் கொண்ணுரலாம்ணு பாக்கானுக போலிருக்கு. ம். எல்லாத்துக்கும் கடவுள் இருக்காம்லே, கடவுள் இருக்கான்...”

ஆத்தாவின் தொண்டை கமறி, கண்கள் கலங்கி, கஞ்சித் தாலத்தில் உப்புச் சேர்ந்தது.

இனிமேல் தாத்தா வந்தால் ஒரு மூச்சு இருக்கிறது. வீணாகச் சண்டைக்குப் போகாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை தழைத்தது.

“தாத்தா வந்தா சண்டை கிண்டை போடப் போறாரு. சத்தம் போடாம இருக்கச் சொல்லாத்தா...”

“நான் சொன்னா கேட்டிருவாராக்கும்?”

“எல்லாங் கேப்பாரு... கையோட அந்த ஆட்டையும் வித்துத் தொலைக்கச் சொல்லு...”

மாலை கவிந்தது. இருள் பொடியாகக் கவிந்தது.

சுடலையாண்டியின் மனதுள் ஒரு சஞ்சலம்.

தாத்தா வந்து விஷயமறிந்தால்?

ஜீரணிப்பது என்பது அவருக்குப் பழக்கமில்லை. ஏகமாகக் குதிப்பார். ‘புவிப்பாவை பரம் கெட என்று வில் வளைத்து நிற்பார்.

ஏழரை மணிக்குத் தாத்தா வீட்டில் நுழைகையில் மனம் பதைக்கவே

செய்தது. முற்றத்துப் படிப்புரையில் அமர்ந்து, எதிர்த்த வாரிக்கு கூரைக்கு மேல் தெரிந்த தென்னங் கொண்டையை வெறித்தார். கண் பெயர்த்துச் சுடலையாண்டியைப் பார்த்தார். முகத்தில் ஒரு இறுக்கம். தாத்தாவை நிமிர்ந்து பார்க்கத் தைரிய மில்லை. என்றும் இல்லாத ஒரு கூச்சம். கீழ்க் கண்ணால் அவர் முகத்தைப் பார்த்தான். அவன் பார்ப்பதை அவரும் பார்த்தார். திடீரென்று கூச்சலிட்டார்.

"மாறி ரெண்டு குடுக்கதுக்கு என்னலே ? மாடு கெணக்க வளந்திருக்கியே? உப்புப் போட்டுத்தானா சோறு திங்கே? செறுக்கி விள்ளைகளுக்கு பல்லைப் பறிச்சுக்கிட்டுத்தாலா வரணும். அவுனுக புடிச்சு வச்சு அடிச்சானாம். இவன் பட்டுக்கிட்டு வந்தானாம்."

"……"

"சின்னப் பயக்க அடிச்சாம்னு பட்டுக்கிட்டு வந்திருக்கியே! உடம்பிலே உணறு இருக்காடா?"

பத்தாண்டு முன்பானால்-இன்று நடந்த கதையின் எதிரொலி வேறாக இருக்கும். இரத்தக் கோறை கண்டல்லாமல் அடங்காத சாதி இது. எவனுக்கும் பயப்படாத நெஞ்சுரம்.

ஆனால் இப்போது

வறுமை பறித்தது பாதி.

முதுமை கிழித்தது மீதி.

"வீட்டிலே யாரு?"

இருட்டில் முகம் தெரியவில்லை.

"நாந்தான் ஏசுவடியான்."

பொட்டென்று புரிந்தது. தெங்கரை முத்துப் பிள்ளையின் வண்டியடிக்காரன்.

"என்ன விசயம்?"

"பண்ணையாரு கூட்டியாரச் சொன்னாரு"

பேச்சுக்குரல் கேட்டுத் தாத்தா எழுந்து வந்தார்.

“யாருலே அது?”

“ஏசுவடியான் தாத்தா... தெங்கரை முத்துப் பிள்ளை கூட்டியாரச் சொன்னாராம்...”

“என்ன மயிருக்கிடா? திரும்பியும் அடிச்சுக் கொல்லு கதுக்கா? அவன் வரமாட்டாம்னு சொல்லு. ஆன மயிரு ஆகட்டு. வெட்டிச் சாச்சிருவேன் பலவட்ற தேவ்டியா விள்ளை களை. பெரிய மயிரு பணம்... பிள்ளையைப் புடிச்சு அடிச்சது மில்லாம கூட்டியாரச் சொன்னானாமே... தெங்கரை முத்துக்க சட்டம்பித்தனம் ஒண்ணும் எங்கிட்ட செல்லாது...”

“பொறு தாத்தா...”

“என்ன பொறுங்கே...? ஆட்டைக்கடிச்சு மாட்டைக் கடிச்சு மனசாளையும் கடிக்க ஆரம்பிச்சாச்சா? அவன் பணம் அவன் மட்டுக்கு...”

தெருவில் கொஞ்சம் பேர் எட்டிப் பார்க்க ஆரம்பித்தனர். இதுவே கூடப் போதும். ஒன்றுக்குப் பத்தாக தெங்கரை முத்துப் பிள்ளையிடம் ஒலிபரப்பாகி, ஒரு சண்டைக்கான ஏது குதிர்ந்து. வாழ்க்கையைப் பார்க்கவா? வழக்குக்கு நிற்கவா?

“கொஞ்சம் பொறு தாத்தா... நீ போப்பா ஏசுவடியான்... இன்னா வாறேண்ணு சொல்லு...”

ஏசுவடியான் போன பிறகும் தாத்தாவின் இரைச்சல் அடங்கவில்லை. கையைப் பிடித்து இழுத்து உட்கார வைக்க வேண்டியதிருந்தது.

“நீ சும்மா இரிலே... நான் ஒரு கை பாத்திருகேன்... நாலு பேரையாவது வெட்டதுக்குள்ள தெறம் இல்லாமலா போச்சு? நானும் கொஞ்ச நாளாட்டு பாக்கத்தான் செய்யேன்... பயக்களுக்கு எல்லாம் ஒரு இளக்காரம். அவனுக அம்மைக்கு ஆமக்கனுக்க மொதலை வித்தா படிக்க வக்கேன்... எரந்து குடிக்க பயக்களுக்குக்கூட ஒரு ஏளனம்...”

“தாத்தா கொஞ்சம் பேசாமத்தான் இரியேன்...”

"நீ என்னலே என்னைக் கார்வாறு பண்ணுகது? அந்த வெட்டுக்குத்தியை

எடு மூளி... செறுக்கி மகனுக்க குடலை வகுந்திருகேன்...”

“சும்மா இரிண்ணா அந்தால விடேன். சோத்துக்கு வழி பாக்கவா சண்டை போட்டுகிட்டுத் திரியவா? கொஞ்சம் சமாதானமா கேட்டாத் தெரிஞ்சு போகு... வேணும்ணாகூட ரெண்டு அடி அடிப்பாரு... அடிச்சுக்கிட்டுப் போகட்டும்...”

“அடிப்பானாலே அவன்? அவன் அடிச்சிருவானா? நான் உசிரோட இருக்கச்சிலே உன்னை அந்த தேவ்டியா விள்ளை அடிச்சிருவானா?”

“அட சொன்னாக் கேளேன். கொஞ்சம் சமாதானமா போனா என்ன குறைஞ்சி போகுங்கேன்... நீ பேசாம இரி... நான் போய் என்னாண்ணு கேட்டுக்கிட்டு வாறேன்...”

“நானுங்கூட வாறேன்...”

“நீ வராண்டாம்... வந்தா சும்மா இருக்க மாட்டே. அனாவசியமா சண்டைதான் போடுவே. நான் போயிட்டு ஒரு எட்டுலே வந்திருகேன்...”

“நீ ஒத்தையிலே போகப்பிடாது...”

“ஒத்தை என்ன ஒத்தை? அப்படி என்னமாம் ஆச்சுண்ணா பொறகு பாத்துக்கிடலாம். உங்கூட நானும் ஒரு வெட்டுக்குத்தி எடுத்துக்கிட்டு வாறேன். போருமா?”

துண்டை எடுத்துக் கழுத்தில் போட்டுக் கொண்டு புறப் பட்டான் சுடலையாண்டி.

தெங்கரை முத்துப்பிள்ளை வீட்டிலிருந்து மாவலி முன் எடுத்த வாமனனாய்க் குறுகி சுடலையாண்டி தெருவுக்கு வருகையில், இருள் மூட்டம் முழுதுமாய்க் கவிந்திருந்தது. சாத்தாங்கோயில் முகப்பில் வழக்கமான கூட்டம். தாண்டி நடக்கையில் பின்னால் காலடிச் சத்தம். பழக்கப்பட்ட ஓசை திரும்பிப் பார்த்தான். தாத்தா ஒன்றும் பேசாமல் பின்னால் நடந்து வந்தார்.

வீட்டுக்குள் நுழைந்து, சாப்பிட அமர்கையில்தான் தெரிந்ததுஒரு யுத்த சன்னத்தோடு தாத்தா வந்திருந்தது. முதுகின் ஓடை இடுக்கில், கொளுவிப் போட்டிருந்த வெட்டுக்குத்தியை மடித்துக் கட்டிய

வேட்டியால் மறைத்து -

பெரியதொரு இழவு விழ இருத்ததைத் தடுத்தது போல் கொஞ்சம் ஆறுதல். ஆனால் முள் கொத்தாய்க் குத்திய வசவுகள்…

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் தாத்தா கேட்டார்.

“தேவ்டியா மவன் என்னலே சொன்னான்?”

“கொஞ்சம் சத்தம் போட்டாரு…”

“கேட்டுக்கிட்டு வந்தியாக்கும்?”

“…. …. ….”

“ம்… எல்லாம் காலம்டே… ஏழையைக் கண்டா எரப்பாளிக்கும் பரியாசமா இருக்கு… எத்தனை நாள் இது செல்லும்னு பாக்கலாம்…?”

புளிக் கறியில் கிடந்த சக்கை மடல் கசந்தது.

“யாத்தா… சக்கா கசக்கயில்லா செய்யி…”

“அவரைக்கேளு… கெடச்சுப் போச்சுண்ணு அள்ளீட்டு வந்திருக்காரு. நாலு தண்ணீ இறுத்தாச்சு… இன்னும் கசப்பு போகல்லே…”

“சும்மா கிடக்கல்லியா மூளி…”

ஆத்தாவின் கேலிச் சிரிப்பில் மனத் துயரம் மங்கியது.

***

# இருபத்துமூன்று

இரண்டு பேர் கூடும் எந்த இடத்திலும் ஆவுடையம்மாள் கல்யாணம் பற்றிய பேச்சு வராமற் போகவில்லை. அம்மன் கோயில் முகப்பில், சாத்தா கோயில் பிரகாரத்தில், காப்பிக் கடை மூலையில், குளிக்கும் துறைகளில். நிச்சயதாம் பூலம் ஆன பிறகு சூரங்குளத்தில் பலருக்கும் செய்தி தெரிய வந்தது. ஆனி மாதம் இருபத்து நான்காம் நாள் திருமணம். மாப்பிள்ளை கல்லூரியில் துணைப் பேராசிரியர்...

கல்யாண நாள் நெருங்க நெருங்க ஏற் பாடுகள் தூக்கலாகத் தெரிய ஆரம்பித்தன. இரண்டு வண்டிகள் நிறையக் கூப்பு விறகுக் கட்டைகள் வந்தன. தெருவில் போட்டு கிடார அடுப்புக்குத் தோதான சிறாக்களாகக் கட்டைகளைப் பொளித்துக் காயப்போட்டு அடுக்கினர். காமணக் கட்டுக்காரன் மூங்கில் கால்கள், கழிகள், தென்னை ஒலைக் கட்டுகள் என்று பாரம் ஏற்றி வந்தான். வீட்டை எதிர்த்தாற் போலிருந்த களத்தில் பந்தல்.

பலவேசம் பிள்ளையின் களமும் வீட்டைப் போலவே பெரியது. இருபது கோட்டை விதைப் பாடு கட்டி அடிப்பவர் ஆதலால் பெரிய களமும், களத்தைத் தொட்ட சுற்றுக் கட்டுத் தொழுவமும்.

தெருவிலிருந்து தொழுவுக்கு வாசல் கிடையாது. களத்தில் நுழைந்துதான் போக வேண்டும். தொழுவை ஒட்டியபடி களத்தில் இரண்டு பிரம் மாண்டமான வைக்கோற் படப்புகள். முழுதாக ஒரு படப்பு. அறுப்பு வைத்துப் பிடுங்கிய ஒரு படப்பு. இரண்டு படப்புகளும் இணையாக, தாடகையின் வடிந்த முலைகளாக... களத்தின்

மையத்தில் இருபத்து நான்கு கோல் நீளத்தில் எட்டுக் கோல் அகலத்தில் மோட்டுக் காமணம் உயர்ந்தது. மோட்டுக் காமணத்தை ஒட்டி "டீ பார்ட்டி'க்காகச் சிறிய காமணம். அதைத் தொட்டுப் பொங்கிப் பொரிப்பதற்கான ஆக்குப்புரை. களத்தின் தரை யெல்லாம் தட்டி நிரப்பிச் சமன் செய்தாயிற்று. காமண நிரைகளை மாடு புகுந்து சீர் கெடுக்காமல் இருக்க, களத்தின் ஒரத்தில் தற்காலிகத் திறப்பு. ஆக்குப் புரையில் கிடார அடுப்புகள் ஐந்து வளைத்தாயிற்று.

வீட்டு வாசலில், தெருவைச் செறுத்துத் தட்டுப்பந்தல். அம்மன் கோயில்

பக்கம் போக நேர்கையில், எல்லோர் கவனத் தையும் நடக்க இருக்கும் திருமணத்தை நோக்கித் திருப்பிக் கொண்டு. வீட்டின் முற்றத்தில் காகித மணமேடை.

நாட்கள் நெருங்க நெருங்க வேலைகளின் மும்முரம். கோட்டாற்றுக் கம்போளத்திலிருந்து வெஞ்சனங்கள் வந்தன. வெஞ்சனம் இடிப்பு' ஆயிற்று. மஞ்சள் இடிக்கு முன் குரவை இட்ட பெண்டுகள். தொடர்ந்து கொத்துமல்லி, சீரகம், மிளகாய் வத்தல் என்று இடித்தனர்.

பார வண்டியில் புழுங்கல் நெல் குத்தி வந்தது. புடைத்து நாவி, கல் பார்த்து ஏழு மரக்கால் மூட்டைகளாகக் கட்டி அடுக்கியாயிற்று.

பல்வேறு சந்தைகளிலிருந்து காய்கறிகள் வந்தன. உறை போட்ட பழக் குலைகள் வந்தன. தேங்காய், பாக்கு, வெற்றிலை, இலைக்கட்டு வந்தன.

வடசேரியில் செட்டியார் கடையிலிருந்து வாடகைப் பாத்திரங்கள் வந்தன. அண்டா, போணி, செம்பு, வார்ப்பு, கோருவை, அடுக்கு, இரும்புச் சட்டுவம், குழைச் சட்டுவம், மூக்கன், இட்டலிக் கொப்பரை, உருளி, தம்ளர்கள்...

காலைக் காப்பிக்காக, ஊரிலிருந்து பெரும்பகுதி ஆட்டு உரல்களில் மாவு அரைபட்டது. அரிசி மாவும் உளுந்த மாவும். 'டீ பார்ட்டி'க்கு ஜாங்கிரி போட ஐயர் பரிவாரங்கள்...

திருமணத்துக்கு முன் தினம் மாலை-ஆறு மணிக்கு ஒலி பெருக்கி கட்டியாகி விட்டது. முதலில் ஒரு இசைத்தட்டு. காரு குறிச்சி அருணாசலம் நாதசுரம். அடுத்து "உள்ளமெனும் கோயிலிலே உறைகின்றாய் முருகா." என்ற ரீதியில் ஏழெட்டு இசைத் தட்டுகள். பக்தி வெள்ளம் பெருக்கும் பாடல்கள். பிறகு வழக்கமான "ஆம்பிளை பொம்பிளை ஓடியாடிக் காதல் புரிதல்கள்

ஊரெங்கும் கலகலப்பு. வைப்புக்காரர்களின் நடமாட்டம். தண்ணீர் கோரி நிறைப்பவர்கள், அரிவாள்மணை, திருவலைக் குத்தி சேகரிப்பு. பாத்திர பண்டங்கள் கொண்டு அலைபவர்கள்.

பந்தலின் உள்ளும் வெளியும் அரவம். இரைச்சல். அடுப்பில் பாத்திரங்களை இறக்க, ஏற்ற, வெட்டிய காய்களை மாற்ற, புதுக் காய்களைக் கொடுக்க, வாழைக்குலைகள் நாட்ட, நிரைவுகளில்

சளவோலை குத்த, வாசலில் கடல்மணல் விரிக்க, தேங்காய் திருவ, அரைக்க, வெற்றிலை போட, துப்ப, இரண்டு மணிக்கு சீட்டுக் களிக்கக் குழும, கிடைத்த இடங்களில் சுருண்டு முடங்க

காலையில் ஊரே புது விதமாகத் தெரிந்தது. மழைத் துளிகள் பட்டுக் குளிர்ந்து சிலிர்த்த வாழை மரம்போல்

எங்கும் ஆள் நடமாட்டம். உள்ளூர்க்காரர்கள், வெளியூர்க் காரர்கள், உறவினர்கள், தெரிந்தவர்கள். வெளுத்த ஆடைகளும், அடர்ந்த நிறங்களும். சூரங்குளத்துக்கே புதுப் பொலிவு வந்தது போல்

“எக்கா மூர்த்தம் பாக்க வரல்லியா?”

“இந்த மனுசன் குளிக்கப் போனவரை இன்னும் காணல்லி யேட்டி. எளவு ஆறு வெட்டித்தான் குளிக்காரோவ்? வந்து காப்பியைக் குடுத்துக்கிட்டு வரணும். எட்டரைக்குத்தாலா மூர்த்தம்?

“சித்தி ஒனக்க முத்து மாலையைக் கொஞ்சம் தாயேன். எனக்குத் தாலிச் செயினை பணயம்லா வச்சிருக்கு. வயிலு அறுத்துத்தான் திருப்பணும். சவம் வெறுங்கயத்தைக் களுத்திலே போட்டுக்கிட்டு எப்பிடியாங்கும் கலியாண வீட்டுக்குப் போக?”

இரவல் நகைகள். இரவல் புடவைகள்.

வீடு வீடாக ஏறி இறங்கி, தெரிந்தவர்களைத் தேடிக் கொண்டிருந்தவர்கள்.

கொட்டு மேளம் கேட்டுப் பந்தலுக்கு விரைந்தவர்கள்.

மேளம் ஒலி பெருக்கியில் விளம்பல் ஆயிற்று. அங்கு யாருக்கும் சங்கீத ராக பேதங்கள் புரியாது. அதைப் பற்றி நாதசுரக் “ என்பிலதனை வெயில் காயும் “

கலைஞனுக்குக் கவலை இல்லை. அவருக்கு சண்முகப்பிரியா, நாட்டை, செஞ்சுருட்டி. கல்யாணம் காண வந்திருப்பவர்களுக்குக் கொட்டு வாத்திய சத்தம்...

'திடும் திடும்’ என்று கெட்டிமேளம் முழங்கும்போது தெருக்கள் ஆளற்றுக் கிடந்தன. ‘தாலிகெட்டு’ முடிந்த பிறகு மணமக்கள் பந்தலுக்கு வந்தனர்.

குரங்குளத்தின் தமிழர் படிப்பகத்தாரின் வாழ்த்துப்பா வாசித்தளித்தல்.

நீர் வளமும் நில வளமும் கொண்டு, பழையாற்றின் கரை அமர்ந்த சூரங்குளத்தில், பலகலையும் வளர்க்கும் பலவேசம் பிள்ளையின் திருநிறை செல்வி, பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற நங்கை, அழகும் அறிவும் கொண்டு குலம் விளங்க வந்த பைங்கொடி ஆவுடையம்மாள். இந்த நன்னாளில் மேற்படி நங்கையை, பட்டம் பல பெற்றுப் பேராசிரியர் பணிபுரியும் இன்னார் திருமணம் பூண்டு ஒழுக முன்வந்தமை கண்டு இறும்பூது எய்து கின்றோம். இவர்கள் தமிழும் இனிமையும் போல், யாழும் பண்ணும் போல், குறளும் நயமும் போல் வாழ்க-ஆசிரியப் பாவை ஒருவர் வாசித்து வழங்கினார்.

மணமக்கள் சார்பாக-வாழ்த்துப்பா அச்சுக் கூலி ஆகிய சிரமங்களுக்காக-தமிழர் படிப்பகத்துக்கு கல்யாண வீட்டுக்காரர் பதினைந்து ரூபாய் நன்கொடை அளித்தார்.

ஒலிபெருக்கியை நிறுத்தி வைத்துவிட்டு, சாப்பாட்டு ஆர வாரங்கள் நடந்தன. முதல் பந்திக்குப் பந்தலில் இடம் பிடித்து நின்றவர்கள். இடம் கிடைக்காத ஆவலாதியை மறைத்துக் கொண்டு- “நமக்கென்னா அவசரமா? அவசரக்காரோ முதல்ல சாப்பிடட்டுமே! என்னா நான் சொல்லுகது?” என்று பொய்ப் பீற்றல் செய்பவர்கள். “அத்தான் வாறேரா? ஆத்தாங்கரை வரைக்கும் போயிட்டு வரலாம்” என்று நல்லதோர் கல்யாணச் சாப்பாட்டுக்கு ஆயத்தம் கொள்பவர்கள்.

“சவத்தை உண்டானதைத் திண்ணுக்கிட்டு வெள்ளமடம் வரை போயிட்டு வரணும். சொக்கநாதம் பிள்ளைக்கு மகளுக்கு மச்சினனுக்கு நம்ம மகள் ஜாதகத்தைக் கொடுக்கணும்.”

“ஆமா... எனக்கும் போக வேண்டியதுதான். அடுத்த பந்தியி லேயாவது இடம் கிடைக்குமோ என்னவோ? ஊருப்பட்ட சனம் வந்திருக்கு. ஆளைப்பாத்துக்கிட்டு பருப்பிலே தண்ணீயைப் பெருக்கீரப்பிடாது.”

இந்தக் கல்யாண ஆரவாரங்களில் எதிலும் கலந்து கொள்ளாமல், வீட்டுப் படிப்புரையில் படுத்துக் கொண்டு, கைகளைக் கோத்துத் தலைக்கு அண்டை வைத்து, இடக் காலை மடித்து ஊன்றியபடி வலது காலை அதன் மேல் போட்டு, பாதத்தை ஆட்டியவாறு மோட்டுக் கூரையைப் பார்த்துக் கொண்டி ருந்தான் சுடலையாண்டி.

ஆக ஆவுடையம்மாளும் கடைசியில் எம்.எஸ்.சி.க்குப் போகவில்லை போலிருக்கிறது என்று நினைத்தான். ஒரு வேளை திருமணமாகி, கணவனுடன் சென்னை போன பின்பு, மாப் பிள்ளைக்காரர் அனுமதித்தால் மேலே படிக்கலாம். அல்லது குழந்தை பெறலாம்.

கல்யாண ஆதாளிகள் கண்ணிலும் காதிலும் விழுவதைச் சுடலையாண்டியால் தவிர்க்க முடியவில்லை. ஒன்றும் புரிய வில்லை அவனுக்கு. ஒன்றும் பிடிக்கவில்லை. ஒரு கசப்பும் வெறுப்பும் சேர்ந்து நுரைத்துப் பொங்கியது.

கறிகாய் வெட்ட, ஊருக்கு ஒப்பம், இரவு தாத்தா போனார். போக வேண்டும் என்று சுடலையாண்டிக்குத் தோன்றவில்லை.

இத்தனை ஆண்டுகள் கூடவே படித்தாள். நீண்ட நாட்களுக்குப் பிறகு அன்று வாய் திறந்து பேசினாள்.

ஏமாற்றம் அடைந்ததுபோல் சுடலையாண்டிக்கு ஒரு உணர்வு. ஏதோ இழக்கக் கூடாததை இழந்ததுபோல். எதை இழக்கிறோம் என்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாமல்...

அதைப் பற்றி எண்ணவே உள்ளம் கலவரப் பட்டது. ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் தாண்ட முயன்று, முடியாது தவித்த மனம். இது வேண்டாம். இது சரியில்லை... எண்ணிப் பார்க்க மகிழ்ச்சியாக, துயரமாக, வெறுப்பாக, கசப்பாக...

கல்யாண அலங்கரிப்பில் ஆவுடையம்மாள் எப்படி இருப்பாள்?

சுடலையாண்டி நினைவில் வரைந்து பார்க்க முயன்றான்.

***

# இருபத்துநான்கு

ஏழெட்டு நாட்களாகத் தாத்தாவுக்கு வேலையில்லை. சுடலையாண்டியும் அங்கு மிங்கும் அலைந்து சோர்ந்து கிடந்தான். இனி யொரு வழி என்ன என்று மனம் குமைந்தது. சில்லறையான மிச்ச சொச்சங்களில் ஒரு வேளைக் கஞ்சியும் ஒரு வேளைச் சோறுமாகப் பொழுது ஓடியது. படித்து முடித்து விட்டால், தாத்தாவையும் ஆத்தாளையும் ஊஞ்சலில் இருத்தி ஆட்டலாம் என்ற கனவில் காளான் முளைவிட்டது. தாத்தா உடல் வலுவில் கொஞ்ச நாட்களாக சீனித்துப் போன தொய்வு தெரிந்தது. காய்ந்த கட்டை ஆனாலும் எத்தனை நாள் தாங்கும்? பல்லில்லாத பொக்கைவாய் ஆத்தாவிடம் சிரிப்பு புரளாமலே போய் விடுமோ? இப்படிச் சோம்பிக் கிடந்து எத்தனை நாள் பொழுது ஒட்டுவது?

படித்து முடித்த உடன் யாரும் தட்டில் பூ பழம், தேங்காயோடு வேலையையும் வைத்து நீட்டப் போவதில்லை என்று சுடலையாண்டிக்குத் தெரியும். சன்னல் கம்பிகளை வருடிக் கொண்டு, வானத்து நீலவெளியில் இருந்து இறங்கப் போகும் கணவன் வரவை எதிர் நோக்கும் குமருகளைப்போல், வேலைக்கான ஒரு ஒற்றைக்கால் தவம் வாலிபர்களுக்கு ஏற்பட்டு வருவதை அவன் உணர்ந்தான். ஆறு மாதம், ஒராண்டு, இரண்டாண்டு, அதற்கு மேலுமான ஏக்கநீட்சிகள். முதல் வகுப்பில் சிறப்புடன் தேறிய தனக்கு எப்படி யாயினும் ஒரு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை நையவில்லை. ஆனால் எப்போது?

தேர்வு முடிவுகள் வந்து இரண்டு மாதங்கள் கழிந்தாயிற்று. இதற்குள் ஏமாற்றம் கிளை விரியக் காரணம் இல்லை. ஆனால் தன்னால் இதுபோல எத்தனைக் காலம் தாக்குப்பிடிக்க முடியும்? தாத்தா கொண்டுவரும் வரும்படி இனிமேல் அப்படி இப்படித் தான். அவரால் முடியாது. உள்ளதைக் கொண்டு நிரவல் செய்யும் சாமர்த்தியம் ஆத்தாவுக்கு உண்டு. அந்த 'உள்ளதை எங்கிருந்து பெறுவது? இந்த வீடொன்று மீதி. வீடென்பது தனது பார்வையில். வெளியாள் பார்வையில் தட்டி நிரத்த வேண்டிய கூடு. கொஞ்சம் மண்ணும், ஒரு கட்டு விறகும் மிஞ்சும். அதையும் விற்றுத் தின்றால் ஆறேழு மாதம் ஓடும். புறம்போக்கில் ஒரு குடிசை கட்டிக் கொள்ளலாம்.

“எண்ணைக்கிண்ணாலும் பய ஆளாகி வர மாட்டானா? அவனுக்கு வீடு கட்டி இருக்க வெறும் மனையாட்டாவது கெடக்கட்டும்” என்ற

தாத்தாவின் சித்தாங்கம் காரணமாக அது இன்னும் கைமாறாமல் இருந்தது.

இந்தச் சுழல் நடுவிலிருந்து வெளியேற என்ன வழி?

திடீரென்று ஒரு யோசனை. கிழங்குக்குப் போகலாம். பத்து ரூபாய் கையில் இருந்தால் போதும். கிடார ஊற்று மலைக்கோ மஞ்சள் பாறை மலைக்கோ போய் மரச் சீனிக் கிழங்கு வாங்கி வந்து விற்றால் இரண்டு மூன்று ரூபாயும் வீட்டுக்கு அவிக்கக் கிழங்கும் கிடைக்கும். அதிகம் கடன் கொடுக்காமல், நியாயமான இலாபத்தில் விற்றால் அப்படியொன்றும் மோசமாகப் போய்விடாது.

சூரங்குளத்தில் இருந்து மூக்காண்டி வழக்கமாகக் கிழங்குக்குப் போவதுண்டு. அவனிடம் என்ன ஏது என்று விபரம் கேட்க வேண்டும். அரங்கு மூலையில் பழைய திராசும் படியும் கிடந்தது. சுத்தப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். கிழங்கு வாங்கிக் கட்டிக் கொண்டுவரக் குட்டிச் சாக்கு வேண்டும். எல்லாவற்றையும் விடவும் மேலாகப் பத்து ரூபாய் பணம் உடனடியாக வேண்டும்.

ஆத்தாவிடமோ தாத்தாவிடமோ கேட்டுப் பயனில்லை. வேறு யாரிடம் கேட்பது? குற்றாலம் பணிக்கரிடம் கேட்டுப் பார்க்கலாம். பத்து ரூபாய்க்குத் தன்னை நம்ப மாட்டாரா என்ன? இரண்டு மூன்று நாள் வேலை செய்து கூடத் தீர்த்து விடலாம்.

சோர்ந்து கிடந்த சுடலையாண்டி எழுந்தான்.

துண்டைக் கொடியிலிருந்து உருவித் தோளில் போட்டுக் கொண்டு குற்றாலம் பணிக்கர் வீட்டை நோக்கி நடந்தான். சாத்தாங்கோயிலில் சில சமயம் உட்கார்ந்திருப்பார். எனவே அங்கு பார்த்துவிட்டுப் பிறகு வீட்டுக்குப் போகலாம் என்று பெரிய தெரு வழியாக நடந்தான்.

ஆவுடையம்மாள் கல்யாணத்திற்குப் போட்ட பந்தல் இன்னும் பிரித்தாகவில்லை. தெருவை மறித்துக் கொண்டு கிடந்தது. கல்யாணம் முடிந்து நாலைந்து நாட்கள் ஆகிவிட்டாலும் வாழை மரங்களை உரித்த வதங்கல் நார்கள், பட்டைகள், சளவோலை மடல்கள். பரத்தியிருந்த நெய் மணல் கால நிர்ப்பந்தம் காரணமாகப் புழுதி மண்ணோடு கலப்புத் திருமணம் செய்து பரந்திருந்தது. பந்தலினுள் நுழைந்து மேலே நடந்தான் சுடலையாண்டி.

கடைசியில் ஆவுடையம்மாள் கல்யாணத்துக்குச் சுடலையாண்டி போகவேயில்லை. போகவில்லை என்று யாரும் குறைப்பட்டுக் கொள்ள மாட்டார்கள். ஊருக்கு ஒப்பம் தாத்தாவும் ஆத்தாவும் போய் வந்தார்கள்.

“நீ போயித் தலையைக் காட்டீட்டு வா… ஊரிலே ஒரு நல்லது கெட்டதை ஒதுக்கி வைக்கப்பிடாது. எங்க காலம் ஆயிப்போச்சு. நீ நாளைக்கும் இருக்கப் போறவன்.” என்று தாத்தா சொன்னார்.

எதற்குப் போகவேண்டும் என்று நினைத்தான் சுடலையாண்டி, ஊர் கூடி நின்று இளக்காரமாகப் பார்க்கும். சுணை கெட்ட தீவனம்.

ஓர் ஈழவ மலையாடிச்சிக்குப் பிறந்தவன்.

ஒரு வேலைக்குப் போக வழியில்லாமல், சாப்பிட வக்கில்லாமல், குட்டை மண் சுமக்கிறவன். ஒருவேளை சாப்பாடு கருதி வந்திருப்பவன்… …

ஊர்ப் பையன்கள் எல்லோரும் சேர்ந்து வேலைகளைச் செய்து திரிகையில் அவர்களோடு ஒன்ற முடிவதில்லை. விலகி வேறுபட்டு நிற்பதைச் சகிக்கவும் திராணி இல்லை. எதற்கு இந்த வதை? ஆனாலும் சுடலையாண்டி கல்யாணத்துக்கு வந்தானில்லையே என்று ஆவுடையம்மாள் முகங்கோணிக் கொள்ளப் போகிறாளா?

அன்றைய கல்யாண ஆரவாரங்களை, ஒலிபெருக்கி இரைச்சலை, வந்துபோன கார், டாக்ஸி, வில்வண்டி, சைக்கிள் களைத் தனியே இருந்து கவனிப்பதில் நாள் கழிந்தது.

முன்பு வேறு திருமணங்களில் கலந்து கொண்டபோது என்ன வேலைகள் தன் மீது ஏவப்பட்டன?

பத்துப் பையன்களோடு ஒட்டியும் ஒட்டாமலும் நிற்கின்ற போது, உடன் நிற்கும் யாவரையும் தவிர்த்து –

“ஏ சொள்ளையாண்டி! கொஞ்சம் இங்கிண வா. ஓடிப் போய் ரெண்டு கொடம் தண்ணீ கொண்டா…”

“லே சொடலையாண்டி! அங்கிண என்னடா வம்பளந்து கிட்டு நிக்கே? இன்னா இந்தச் சேனையைச் சொறண்டு…”

“ரெண்டாம் பந்தி வைக்காண்டாமாடே? ஒரு குட்டையை எடுத்து இந்த

எலையெல்லாம் எடு...”

வேலை செய்வதற்குக் கூசும் உடலோ மனமோ சுடலையாண்டியிடம் கிடையாது. ஆனால் தன்னை மட்டும் தனித்துப் பிரித்து யாரிடமும் சொல்ல முடியாத சில வேலைகளை ஏவுகையில் மனம் சோர்வு கண்டது.

இதுதான் தன்னுடைய இடம். இங்கு தன் படிப்போ சாமர்த்தியங்களோ காசு பெறாதவை. அவனவன் பொருளாதார நிலைகள்தான் தராசுத் தட்டில் வைத்துத் தூக்கப்படுகின்றன. இங்கு தனக்கு என்ன இருக்கிறது?

யார் இருக்கிறார்கள்?

இந்தக் கிழவனும் கிழவியும் போய்விட்டால்-

பந்தலைத் தாண்டி, சாத்தாங்கோயில் முகப்பில் திரும்பி, அங்கு யாரும் இல்லாததைக் கவனித்து, குற்றாலம் பணிக்கர் வீட்டுக்கு நடந்தான் சுடலையாண்டி. படியேறி வீட்டினுள் எட்டிப் பார்த்தான்.

“அது யாரு வந்திருக்கது?”

“யாத்தா நாந்தான். சுடலையாண்டி... பாட்டா இல்லையா?”

“கொஞ்சம் நில்லு. பொறவாசல்லே மாட்டைக் கெட்டு காரு. இன்னா வந்திருவாரு...”

சற்று நேரம் பொறுத்து வந்த குற்றாலம் பணிக்கர் கேட்டார்.

“என்னடே சொடலையாண்டி? என்ன விசேசம்? ஒரு நாளுமில்லாம வந்திருக்கே?”

“நாலைஞ்சு நாளா வேலை ஒண்ணும் இல்ல பாட்டா. தாத்தாக்கும் சோலி இல்லே...”

“நம்மகிட்டே இப்பம் ஒண்ணும் வேலை இல்லையடே...”

“வேலைக்கில்லே. கௌங்கு யாவாரத்துக்குப் போலாம்ணு பாக்கேன். பாட்டா, ஒரு பத்து ரூவா தந்தேருண்ணா ஏழெட்டு நாள்ளே தந்திருவேன்.”

“ரூவாயா? இங்க எங்கடே இருக்கு? இனி வயிலு அறுத்தாத்தான். சாப்பாட்டு மட்டுக்கு கொஞ்சம் நெல்லு கெடக்கு பாத்துக்கோ. சவம் இந்தப் பூ சின்னச் செலவா? தொழுத்துக் கூரைக்கு ஓடு மாத்தியிருக்கேன்... இசக்கியம்மைக்கு பிள்ளைப் பேறுச் செலவு. நம்ம கஷ்டத்தை யாருட்டச் சொல்ல?”

“நான் திருப்பித் தரமாட்டம்னு பாட்டா நினைக்கப்பிடாது. ரெம்ப புத்திமுட்டா இருக்கதினாலே கேக்கேன்...”

“நம்பிக்கை இல்லாம இல்லப்பா... கையிலே வேணும்லா? இல்லைண்ணா என்ன செய்யது? வேற எங்க யாம் கேட்டுப்பாரு...”

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு சுடலையாண்டி வந்தான். இதுவரை யாரிடமும் அவனாகப் பணம் கடன் கேட்டதில்லை. கொடுக்கல் வாங்கல் எல்லாம் தாத்தாதான்.

பத்து நாட்கள் தோட்டம் வெட்டிக் கொடுத்ததால் ஏற்பட்ட பரிச்சயம் காரணமாகவே அவரிடம் வந்தான்.

இரவு படுக்கும்போது இது பற்றி யோசித்தான். எண்ணம் ஒன்று மனதில் சில்லிட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால், பள்ளி இறுதி வகுப்பில், பள்ளியிலேயே முதல்வனாகத் தேறியதற்காக, அந்தப் புண்ணியவான் தாழக்குடி சின்னத்தம்பியா பிள்ளை அறக்கொடை காரணமாய் கிடைத்த தங்க மெடல் அலமாரியில் தாத்தாவின் பணப் பெட்டியாக முன்பொரு காலத்தில் பயன்பட்ட மரப்பெட்டியில் கிடந்தது. அறுந்த வெள்ளி அரைஞாண் கொடி,

நசுங்கிய தாயத்து, செல்லாத பழைய திருவிதாங்கூர் மகாராஜா நாணயங்கள் இவற்றுடன் சிவந்த சருகுத் துண்டுத் தாளில் பொதிந்து பத்திரப்படுத்தியிருந்த மெடல்.

இப்போது என்ன விலை பெறும்?

மறுநாள் காலை, தாத்தா எங்கோ வெளியே போயிருந்த போது, ஆத்தா அடுக்களையில் கஞ்சி வைத்துக் கொண்டிருக் கையில், கள்ளத்தனமாக, பூட்டில்லாத அந்த அலமாரியைத் திறந்து, பெட்டியைத் திறந்து மெடலை எடுத்துப் பத்திரப்படுத்தி, குளித்து, உடைமாற்றி, கஞ்சி குடித்து, யாரையோ அவசரமாய் பார்க்கப் போவதாகப் பாவனை ஏற்படுத்தி.

பல்கலைக்கழகப் பட்டங்களைக் கூடத் தாளில் அச்சிடாமல் தாமிரத் தகட்டில் பொறித்துத் தந்தால் உபயோகமாக இருக்குமோ?

மனம் ஒரு புறம் மறுக்கடி கொண்டாலும், ஒரு தற்காலிக ஆசுவாசம். நாற்பத்தாறு ரூபாய்-மரச்சீனிக் கிழங்கு வியாபாரத் துக்காகப் பத்து ரூபாய் வைத்துக் கொண்டு, மீதியை ஆத்தாவிடம் கொடுத்தான்.

மறுநாள் முதல் கிழங்குக்குப் போகும் விபரத்தைச் சொன்ன போது ஆத்தா ஒரு நிதானத்தோடு அங்கீகரித்ததையும், தாத்தா போட்ட கூச்சலும்...

“அதையும் வித்து நக்கப் பொறப்பிட்டாச்சா? இனி உருப்பட்ட மாதிரிதான்! சவங்க இதுக உருப்படவா போகு? அழிவு கருவுல்லா அருமாந்த மெடலுல்லா? அதுக்குள்ள மதிப்பு தெரிஞ்சுதானாலே வித்தே?”

இந்தப் புலம்பலையெல்லாம் பொருட்படுத்தினால் காரியம் ஆகாது என்று சுடலையாண்டி மூக்காண்டியைப் பார்க்கப் போனான்.

***

# இருபத்தைந்து

மலையிலிருந்து இறங்கும் போது இரண்டு மணி அடித்து விட்டது. மூக்காண்டியுடன்தான் கிழங்குக்குப் போவதென்றாலும், இன்று எந்தக் கூப்பிலும் கிழங்கு வாக்காக இல்லை. கிடார ஊற்றுக்கு வடக்குப் பொத்தையில் ஒரு விளை அழிந்தது. கூறு மலிவாக விழுந்தது. ஆனால் தோலை உரித்துப் பார்த்தால் வேக்காடு இருக் காதோ என்று சந்தேகம். ஒரு நாள் மாலை விற்கும் கிழங்கு வேகாமல் வரிக் கல்லாய்க் கிடந்தால் மறுநாள் தெருவில் இறங்க விடமாட்டார்கள் பெண்கள். விரட்டி விடுவார்கள். “நீ கொள் ளாண்டே. நாலு நாளியலு தீயைப் போட்டுக் கொளுத்தினாலும் வாளைத் தண்டால்லா கிடக்கு. பதிவா ஓங்கிட்ட வேங்குகதுக்கா இந்த வேலை செய்தே?”

“இல்லக்கா, இண்ணைக்கு நல்ல வெண்ணெயா வெந்து போகும் கிடார ஊத்துக் கெளங்கு.”

“ஆமாமா. நேத்துப் பாத்தம்லா.”

“வேணும்னா ஒரு கெளங்கை அடுப்புக் காந்தல்லே வச்சு சுட்டுப் பாரேன். பூவாப் போகல்லேண்ணா வாங்காண்டாம்.”

சுட்டுப் பார்த்து மாவாகக் கிழங்கு வெடித்து மலர்வதைக் கண்டு சமாதானம் ஆனால்தான் மறுபடியும் வாங்கத் துணிவார்கள்.

விற்பதற்குப் பெரும்பாடு படுகையில், வேகாதோ என்று சந்தேகம் தோன்றிய பிறகு அதைப் போய் வாங்குவானேன் என்று சுடலையாண்டி, மூக்காண்டியுடன் அலைந்து பார்த்தான். நல்ல கிழங்காக வாய்க்கப் பன்னிரண்டு மணி ஆயிற்று. பிறகு கூறு எடுத்து, பணம் எண்ணி, கிழங்கைச் சாக்கினுள் அடுக்கிக்கட்டி, கீழே இறங்க யத்தனிக்கையில் நேரம் கடந்து விட்டது?

மலையிலிருந்து, தலையில் சுமட்டோடு இறங்குவது என்பது வேடிக்கை அல்ல. இறங்கிப் பார்த்தால் தெரியும். அதிலும் கிடார ஊற்றிலிருந்து பாதை தலை குத்தற இறக்கம். முக்கூடல் மலையானால் பாதை கொஞ்சம் சாய்வும் சம தளமும் கொண்டது.

முதல் நாலைந்து நாட்கள் கல் கல்லாகத் தாவி இறங்கும்போது கால்கள்

வெடவெடத்து நடுங்கின. தலையில் பாறாங்கல் உறுத்தல். மலையிலிருந்து இறங்கி, அனந்தன் ஆற்றுப் பாலம் வரும்வரை சுமட்டைக் கீழே இறக்க முடியாது? இறக்கி வைத்தால் தூக்கிவிட நாதி கிடையாது. அவனவனுக்கு அவனவன் சுமை. நான்கு பேருக்கு முந்திப் போனால் நான்கு ராத்தல் கூடுதல் விற்கலாம். ஏற்றி இறக்கிக் கொண்டிருந்தால் பொழுது சாய்ந்து விடும். இரக்கப்பட நேரம் இல்லாத அவசரம் ஆட்களுக்கு.

வழக்கமாகத் தொட்டடுத்து முன்னால் போகும் மூக் காண்டிக்கும் இன்று அவசரம். இறங்கத் துவங்குகையில் இரண்டு பேரும் சேர்ந்துதான் இறங்கினார்கள். இப்போது அவன் இரண்டு வளைவுகள் கீழே இறங்கிக் கொண்டிருந்தான். மலையேறி ஏறிக் கால்களுக்கு ஒரு லாவகம், நிதானம். எந்தக் கல்லில் காலை அழுத்தி ஊன்றலாம்? எதில் பொய்க்கால் வைக்கலாம்? ஒரு மலை ஆட்டின் நிச்சயம் கொண்ட தாவல். பழக்கம் இல்லாத சுடலையாண்டியின் கால்கள் பயம் கொண்டன. விழுந்து வைக்கக் கூடாது. முதலுக்கே மோசம். முடங்கிப் போனால் தன்னோடு மூன்று வயிறுகள் காய்ந்து போகும். அரை மணி நேரம் பிந்தினாலும் பாதகமில்லை.

வயிறு வேறு கடுமையாகப் பசித்தது. காலை ஐந்து மணிக்குக் குடித்த பத்துந் தண்ணீரும். மற்ற நாட்களானால் இதற்குள் இறச்சகுளம் விலக்கில் இருக்கலாம். சுமையைக் காப்பிக் கடைப் படிப்புரையில் இறக்கி வைத்துவிட்டு, ஒர் ஆமவடை தின்று சுக்குக் காப்பி குடிக்கலாம். கொஞ்சம் தெம்பு கிடைக்கும். மலை மீது நிற்கையில், தினமும் இரண்டு பச்சைக் கிழங்கு தின்று சுனையில் தண்ணீர் குடிப்பதுண்டு. மலை மீது தின்னும் கிழங்குக்கு விலை இல்.ை விலை இல்லாததால் பச்சை

மரச்சீனியை நிறையத் தின்னவும் கூடாது. தலை சுற்றும். பித்தம் பெருகும். வாந்தி வரும். பிறகு மலையிலிருந்து இறங்கியது போல்தான்.

அவித்தோ, சுட்டோ தின்றால் அதுவேறு காரியம். பாறை மீது தீ மூட்டி, தீக்கங்கில் பச்சைக் கிழங்கை வாரிப்போட்டு, மேலே செத்தை, சருகுகளைப் போட்டுக் கொளுத்தி, தொட்டுக் கொள்ளப் பாறைமீது பச்சை மிளகும், உப்பும் நுணுக்கிக் கூப்புக்காரர்கள் மத்தியானம் சாப்பிடுவார்கள். கிழங்கு விலைக்கு வாங்கப் போகிறவனுக்கு அதற்கான நேரம் கிடையாது. சுட்ட கிழங்கு மீந்து போனால், வாங்க வந்தவர்கள் கூட்டம் குறைந்து போனபிறகு, கூப்புக்காரர்கள் கூப்பிட்டு இரண்டு துண்டு கிழங்கு தருவார்கள். அது தனி மணம். தனிச்சுவை.

உப்பு மிளகின் காரம் வாயில் தங்கி நிற்கையில், சுனையில் வாய் வைத்த நீர் பருகுகையில்-தண்ணீரா அது? பானகம். மலையிலிருந்து கீழே இறங்கும்போது வயிறு தண்ணீர் தளும்பிச் சத்தமிடும்.

இது தினமும் வாய்ப்பதில்லை. எனவே இறச்சகுளம் விலக்கு நோக்கி ஒரு ஓட்டம். வியர்வை வழிந்து வழிந்து, உடம்பு வெயிலில் கரிந்து கரிந்து, கால்கள் நிலத்தில் மிதந்து மிதந்து -

இந்தப் பாடு பட்டாலும் உழைப்பு வீணில்லை. தினமும் வீட்டுக்குப் போதுமான கிழங்கும், மூன்று ரூபாய் பணமும் பழுதில்லை. உண்டியலில் நாலைந்து ரூபாய் சேர்ந்திருக்கும். கடனாக வெளியில் ஐந்தாறு ரூபாய் நின்றது.

இந்த ஆடி மாதம் பூராவையும் இப்படியே ஒட்டிவிட்டால் - வயல்கள் அறுவடையாகும். ஒறுவினை ஓடுவதுதான் கடினம். அறுவடை நேரமானால், எவனிடமாவது பதிந்து தொழி உழவு உழலாம். இரண்டு மாத வேலைக்குக் குறைவிருக்காது. அதற்குள் வேறு வேலை ஏதும் அகப்படாதா?

ஒருபுறம் எழுதி எழுதி அனுப்பிக் கொண்டுதான் இருந்தான் சுடலையாண்டி. தினமும் மாலையில் வீட்டுக்குப் போகும் போது இன்று ஏதாவது ஆணை வந்திருக்காதா? பேட்டிக்கு அழைப்பு வந்திருக்காதா என்ற தேட்டம்.

ஞாயிறுகளில் கூப்பு விடுமுறை. எனவே மாலையில் நாகர்கோவிலுக்குப் போவதும் ஒரு வார இந்து, எக்ஸ்பிரஸை சேர்த்து வைத்துப் பார்ப்பதும் பழகிப் போயிற்று. வேலை சம்பந்தமாக எந்தத் துப்பு எங்கு கிடைத்தாலும் மூக்கு மோப்பம் பிடித்தது. கூடப்படித்தவர்கள் யாரேனும் ஞாயிறுகளில் நாகர் கோவிலில் தட்டுப்பட்டார்கள்.

“எதாந் துப்பு உண்டாடே?”

“ஒண்ணையுங் காணல்லியே... நீ ஆறாந் தேதி இந்து பாத்தியா? ரெயில்வே சர்வீஸ் கமிஷன் அட்வடைஸ்மென்ட் வந்திருந்தே...”

“பாத்தேன். எளுதிப் போட்டாச்சு.”

“நம்ம சிந்தாமணி மெட்ராஸ் போயாச்சு பாத்துக்கோ, போன

வெள்ளிக்கிளமை போனான். அவ்வ அத்தான் மெட்ராஸ்லே இருக்காருல்லா… …!”

நாளாக ஆக வேலை தேடும் இந்தக் கூட்டம் கொஞ்சமும் குறைவதைக் காணோம். கழித்தல், வகுத்தல் எதுவுமே கிடையாது இங்கே. எல்லாம் கூட்டல், பெருக்கல்.

மூக்காண்டியை அனந்தன் ஆற்றுப் பாலத்திலும் காணக் கிடைக்கவில்லை. குனிந்து, சுமையைத் தாழ்த்தி, பாலத்துச் சுவரில் இறக்கிச் சில நிமிடங்கள் நின்று இளைப்பாறினான் சுடலையாண்டி. ஆற்றில் இறங்கித் தண்ணீர் குடித்தான். தலையில் சும்மாட்டை மீண்டும் சுற்றிக் கொண்டு, குனிந்து, கிழங்குச் சாக்கை நகர்த்தி, தலையில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். அனந்தன் ஆற்றைத் தாண்டி விட்டால் சமதரை. ஓட்டமும் நடையுமாகப் போகலாம். ஆற்றங் கரையோடு சற்று தெற்கே ஓடி, நாவல்காட்டு நல்லதண்ணீர்க் குளத்தைக் கரையோரமாக நடந்து, ஊருக்குள் புகுந்து வெளியேறி, பத்துக்காட்டு வழியாக ஓடி, சுடலைமாடன் கோயில் அருகே, அசம்பு ரோட்டில் ஏறினான். இறச்சகுளம் விலக்கு வழியாகப் போனால் இன்னும் நேரமாகும் என்று கருதி, வடை சுக்குக் காப்பியை ஒதுக்கி விட்டு, இறச்சகுளம் ஊருக்குள் புகுந்து, கிராமத்து வாலைத் தாண்டி, சூரங்குளம் ரோட்டில் ஏறினான்.

நொண்டிப் பாலத்தின் மேட்டிலிருந்து பார்க்கையில் பாறையாற்றுப் பாலத்தின் மீது மூக்காண்டி நடப்பது தெரிந்தது. அதிகமாகப் பிந்திப் போகவில்லை. இனிமேல் அவரவர் வழிகள் தனித்தனி. மூக்காண்டி தாழக்குடி ஊருக்குள் நுழைந்து வியாபாரம் துவங்கி விடுவான். மாலை ஆறரை மணி வாக்கில் கைக் கிடையில் இடுக்கிய சாக்கோடும், தலை முண்டில் முடிந்து தொங்கும் அரிசியோடும், இடது கையில் சேம்பிலையில் பொதிந்த மீனோடும் சூரங்குளம் திரும்பும் போதுதான் பார்க்கலாம். திரும்பி நடக்கும்போது மட்டும்தான் தன்னடை, அல்லது விறீர் என்ற ஓட்டம் தான்.

சுடலையாண்டியின் விற்பனை வேறு ஊர்களில், தேரேகால் புதுரர், திருப்பதிசாரம், வீமநேரி என்று சுற்றுவான். இருவரும் சந்திப்பது, பெரும்பாலும், மறுநாள் காலையில்தான்.

பாறையாற்றைத் தாண்டி, தென்னங்குழி மடையின் பக்கம் ஓடி வருகையில், பள்ளிக்கூட முகப்பில், பஸ்சுக்காகச் சிறிய கூட்டம். தாழக்குடியிலிருந்து திரும்பும் மூன்றரை மணி பஸ்சுக்காகக் காத்து

நிற்பவர்கள். ஓட்டத்தைத் தளர்த்தி, அஞ்சல் நடையில் நடந்து கண்களைத் திருப்பி, சாதாரணமான ஒரு ஆர்வம் காரணமாய் சுடலையாண்டியின் கண்கள் கூட்டத்தைக் கவனித்தன.

ஏழெட்டுப்பேர் நின்றிருந்தனர். நாயகமாக, நீலப்பட்டில் ஆவுடையம்மாள். பத்தெட்டு நாள் தாம்பத்தியம் முகத்தில் ஊட்டியிருந்த பளபளப்பு. கண்களில் சதா அலைந்த துளிர். மிகப் பதவிசாக, அடக்கமாக. பக்கத்தில் அந்தச் சென்னைக் கல்லூரித் துணைப் பேராசிரியர். பேராசிரியர் என்ற சொல் மனதில் அழுத்தும் பொருள் தோற்றாத முகம்.

இருபத்தைந்து வயது இருக்குமா? சிறு பையன்போல் ஒல்லியான உடல். ஆங்கிலப் பிரிவு என்று கேள்விப் பட்டிருந்தான் சுடலையாண்டி. இந்த வயதில், பொருளை விடத் தொனிக்கு அழுத்தம் கொடுத்து இவர்கள் வகுப்பு நடத்துவார்கள். பதினொன்று தேறிப் புகுமுக வகுப்பு வரும் மாணவர்களை மிரட்டுவதற் கென்றே ஏற்பட்ட குரல், தொனி. ஒவ்வொரு சொல்லும், இங்கிலாந்தில் இருந்து நேரடியாக இறக்குமதி ஆனதுபோல்.

பக்கத்தில் ஓரிரு சிறு பெண்கள், பையன்கள். புது மாப்பிள்ளை, புதுப் பெண்ணை அதிசயம் போல் கண்டவாறு... எங்கோ விருந்து போகிறார்கள் போல. அல்லது நாகர் கோயிலுக்கு சினிமாப் பார்க்கப் போகலாம். புது மணத் தம்பதிகளுக்குத் திருமணம் முடிந்த இரண்டொரு நாட்களுக்குள் போக வேண்டிய அத்தியாவசியமான திருத்தலம் சினிமாக் கொட்டகை. நிச்சயதாம்பூலம், முகூர்த்தம், நாலாம் நீர், ஏழாம்நீர் போல், தவிர்க்க முடியாத சடங்கு. எந்தச் சினிமா ஆனாலும், இரண்டு முதல் வகுப்பு டிக்கெட்டுகள். இடைவேளையில் கலர், நிலக் கடலைப் பருப்பு...

சுமையோடு நடந்து வந்த சுடலையாண்டியின் உடல் களைப்பை மீறி, மனதில் முகடு கூட்டியதோர் சோர்வு...

நேரமாகிப் போனாலும்கூட, அன்றைய வியாபாரம் சுடலையாண்டிக்கு மோசமாக இல்லை. கரணை கரணையாகத் திரண்டு உருண்ட கிழங்கின் பொலிவும், பாளம் பாளமாய் உரிந்த தொலியும், முறித்துப் பார்த்தால் தெரிந்த மாச் செறிவும்-நொடிப் பொழுதில் கிழங்கு ஓடிவிட்டது. வீட்டுக்குத் திரும்புகையில், சாக்கில் ஒரு ராத்தல் கிழங்கு மீதம் இருந்தது. ஆத்தாவிடம் சொல்லிக் கிழங்குக் கறி வைக்கச் சொல்ல

வேண்டும். கூடவே கருவாட்டுக் குழம்பு. ஏனத்தில் இரண்டு அகப்பை கிழங்குக் கறி வைத்து, நடுவில் குழித்துப் பண்ணை பிடித்து, கருவாட்டுப் புளி முளம் ஊற்றி - நாக்குச் சுரந்தது. பசி தனது இருப்பைச் சத்தம் போட்டுக் காட்டியது. மத்தியானம் எதுவும் சாப்பிடாததும், அவசர அவசரமான ஓட்டமும் களைப்பைக் கூட்டியிருந்தன. தலையிலிருந்த தலைமுண்டை அவிழ்த்து உதறித் தோளில் போடக்கூடத் தெம்பின்றித் தேரேகால் ஆற்றின் கரையாக இருந்த சாலையில் நடந்தான். சம்பாப் பயிர்கள் 'பளிச் பளிச் என்று மாலைக் கதிர் பட்டு மின்னின. சம்பாப் பயிருக்கே ஒரு திடீர் வளர்ச்சி உண்டு. நாளுக்கு நாள் புதுப் பொலிவு. பூசணிக் கொடி நீள்வதுபோல், வாழைக்குருத்து விரிவதுபோல், பார்ப்பதற்கு ஒரு அழகு. தொட்டுத் தடவிப் பார்த்தால் ஒரு சுகம். ஏதோ தன்னிடம் மட்டும் ரகசியம் பேசுவது போல் இழைவு. காற்றோடு ஒரு அசைவு.

மலைமீது நின்றாலும் - ஓடைக் கரையோரம், பாறை இடுக்கில் இருந்து சாய்வாகக் கிளைத்திருந்த பெரணிகளின் அசைவு. கல்லிடுக்கில் சுருளும் ஆயிரம் கால் அட்டை. புதர்களின் ஓரம் உதிர்ந்துகிடக்கும் முள்ளம் பன்றியின் முட்கள். சிவப்பில், பழுப்பில், கருஞ்சிவப்பில், கறுப்பில் குலை குலையாய் காய்த்து நிற்கும் ஈந்து, பெயர் தெரியாத காட்டுச் செடிகள், கொடிகள், இலையின் ஐந்து வகிராலும் மொழி பேசும் மரச்சீனி. தூரத்தில் அடைத்திருக்கும் மூங்கில் பண்ணை. பார்த்து நின்றால், மனதின் வக்கிரங்கள் அனைத்தும் நீராக உருகி வடிந்து, மனம் காற்றில் அலைவது போல்... அளவிட முடியாத ஒரு ஆனந்தம் நெஞ்சில் நிறைந்து சங்கை அடைக்கத் துடிக்கும்.

ஆறரை மணிக்கு வீட்டில் நுழைந்து, சாக்கைப் பிரித்துக் கிழங்கை உதறி, மீண்டும் மடித்து, நாரில் சுருட்டிக் கட்டி, சில்லறையை எண்ணிச் சரிபார்த்து, செலவுக்கு ஆத்தா கையில் கொடுத்து -

“ஏன் மக்கா இவ்வளவு நேரமாயிட்டு?”

“மலையிலேருந்து எறங்கச்சிலே நேரமாயிட்டாத்தா!”

“கஞ்சித் தண்ணீ சூடா இருக்கு. ரெண்டு உப்புப் போட்டு ஆத்தித் தரட்டா?”

“கொண்டா...”

“ம்... பிள்ளை கும்பி கொதிச்சு வந்திருக்கு... எளவு இம்புட்டு படிச்சும் உச்சிக் செமைக்குதாலா போக வேண்டியிருக்கு...”

“தாத்தா எங்கே ஆத்தா?”

“காலம்பற கஞ்சி குடிச்சுக்கிட்டு எங்கேயே இறங்கிப் போனாரு...”

“என்ன எளவுக்கு இப்பம் வெளில கெடந்து அலையாரு? பேசாம வீட்டுக்குள்ளே கிடக்க வேண்டியதுதாலா? முடியாட்டாலும் சும்மா இருக்க மாட்டாரு மனுசன்...”

“இப்பம் வந்திருவாரு... எங்கே போயிரப் போறாரு? நீ தண்ணீயைக் குடிச்சுக்கிட்டுப் போய்க் குளி... வென்னி வேணும்ணா போடட்டாலே...”

“என்னத்துக்கு? கௌங்கை இண்ணைக்கு கறிவையி. நல்ல அவியும்...”

“சரி சரி... சீக்கிரம் வா. பாலத்திலே போய்ப் படுத்துக் கிடாதே...”

குளித்த பிறகு, எட்டு மணிவாக்கில் வீட்டுக்கு வரும்போது, தாத்தா படிப்புரையில் அமர்ந்திருந்தார். இழுத்துக் கட்டிய துணி காயப்போடும் கொடி, நாளாக ஆகத் தொய்வது போல், தாத்தாவிடம் ஒரு தொய்வு தெரிந்தது. நிரந்தரமாகக் களைப்புத் தங்கிய கண்கள்... அந்தக் களைப்பைத் துடைக்கத் தன் கைகளுக்கு நீளம் போதவில்லையே என்று எண்ணுகையில் ஆற்றாமை உருத் திரண்டது.

“சாப்பிடுகேளா?”

ஆத்தா கட்டளைக்கு அடிமை போல் கீழ்ப் படிந்து, தாலத்தின் முன் தாத்தா உட்கார்ந்தார். நல்ல வேளையாகச் சோற்றுக்குத் தட்டில்லை என்றாலும், தாத்தா முகத்தில் ஏனிந்தக் கலக்கம்? கலக்கமா? கலவரமா? எதையோ போட்டு மனத்துள் மறுகுவது போல், இவ்வளவு படிப்பித்தும் இவ்வளவு கஷ்டப்படுகிறானே என்றா? தள்ளாமை காரணமாய் தான் பார்த்துக் கொண்டு இருக்கும்படியானதே என்றா?

பாதிச் சோற்றைத் தின்ற பிறகு தாத்தா சொன்னார். “தாளக்குடியிலே பரமேசுவரன் பிள்ளை இருக்காருல்லா? அவரைத்தான் பாத்துக்கிட்டு வாறேன்...”

ஏன் என்பதுபோல் சுடலையாண்டி பார்த்தான்.

“அவருக்கு மகள் ராமலெச்சிமியை திருவந்தரத்திலே கெட்டிக் குடுத்திருக்கில்லா. அவகைத முக்கிலே இருக்காளாம். ராமலெச்சிமிக்கு வீட்டுக்கு அடுத்த வீட்டிலேதான் உனக்கு மாமன் இருக்கானாம்...”

மாமனா? எந்த மாமன்?

புரியாமல் சுடலையாண்டி விழிந்தான்.

“அதாண்டே... உனக்க அம்மைக்குத் தம்பி... அங்கதான் சர்க்கார் சோலியா இருக்கானாம்... பெரிய சோலியாம்...”

“நாளைக்குப் பரமேசுரன் பிள்ளை அட்ரஸ் தேடி எடுத்துக் குறிச்சுத் தாறேன்னு சொல்லியிருக்காரு. குறைச்சலைப்பாக்காம போயிப் பார்த்துகிட்டு வா...”

மீதிச் சாப்பாடு மௌனமாய் கழிந்தது.

***

# இருபத்தாறு

வழக்கத்திற்கு மாறாக இன்று சுடலையாண்டிக்கு கால்கள் கடுத்தன. நேற்று ஓடிய ஓட்டம் காரணமாய் இருக்கும் என்று எண்ணினான்.

காலையிலிருந்தே வானம் மப்புக் கொண்டிருந்தது. ‘எரு சிரிச்சான் மூலையில் மேகம் கூடிக் கலைந்தது. அழுக்காகிப்போன பஞ்சு மெத்தையைப் பிரித்து உதறியது போல், மேகங்களின் தூசுத் திட்டுகள். மழை வருவதற்கான சகல கோளும் காணக்கிடைத்தது. காற்று ஒரு குளிர்ச்சியோடு வீசியது. ஆனியாடிச் சாரல் பிந்திப் போயிற்று இம்முறை. மழை பெய்ய ஆரம்பிக்கு முன் கிழங்கோடு இன்று கீழிறங்கிவிட வேண்டும்.

மூக்காண்டியிடம் எப்போதுமே அதிகம் பேச்சு கிடையாது. ஓர் ஊமைக் குணம். அது பற்றியே அவனை ஊரில் ‘அமுக்கி அறுத்தான்’ என்பார். சிரிப்பு கூட மிகவும் கணக்காகத்தான். மலை ஏறும் போது, உற்சாகம் பொங்கினால் பாட்டுப் பாடுவான். தியாகராஜ பாகவதரின் சங்கீதக் காதல்கள்.

மூக்காண்டியோடு நடக்கையில் சுடலையாண்டிக்குள்ளும் ஒரு மௌனம் கூம்பும். அபூர்வமாக ஒரு பஞ்சவர்ணப் பறவையையோ, பாறை மேலிருந்து பல்லிளிக்கும் குரங்குகளையோ காணும் போது கண்கள் மட்டும் விரிந்து மலரும். இன்று சுற்றுப்புறத்தைக்கூடக் கவனிக்க முடியாத மௌனம் அவனிடம் செறிந்திருந்தது.

‘வண்டி மறிச்சானாக’ நடுத் தெருவை அடைத்துக் கொண்டு பிரச்சினை விழுந்து கிடக்கிறது. தானாக அது எழவும் செய்யாது. புரட்டித் தள்ளி விடவும் முடியாது. தாண்டிக் கொண்டு போயாக வேண்டும்.

இனிமேல் சாரல் தொடங்கிவிட்டால் இந்த வழுக்கும் பாறைகளில் ஏறி இறங்கிக் கிழங்கு கொண்டு வருவது எளிதான தில்லை. கிழங்கு அழிந்த பிறகு சக்கை வியாபாரம், புல்லுக்கட்டு

இதற்காகவா இந்தப் பாடுபட்டுப் படிப்பித்தோம் என்று தாத்தாவின் மனம் கொதிக்கிறதோ?

அதற்காக-

அம்மாவின் தம்பியாகவே இருக்கட்டும். தனக்கு அவன் எவனோ ஒருவன்தானே! இருபது வயதுவரை முகம் காணாத ஒரு உறவை, இப்போது தாரித்திரிய அவசியம் தள்ளுகிறது என்பதால், போய்ப் பார்த்து, சங்கடம் சொல்லி...

அம்மாவின் முகமே நினைவில் இல்லாதபோது, அவள் சொந்தக்காரர்களின் முகமெல்லாம் என்னுள் ஏன் திணிபட வேண்டும்?

அதுவும் எப்போது?

ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டு அவள் செத்துப்போன பிறகு...

இரண்டு கிழ ஜீவன்களின் ஆதரவில் விட்டுவிட்டு அப்பாவும் போய்ச் சேர்ந்த பிறகு... இத்தனை ஆண்டு இத்தனை பாடுபட்டு, ஒப்பேறுவதற்கான மேகம் கூடுகையில் - இருக்கிறார்களா செத்துப் போனார்களா என்ற நினைவின் சுவடே இல்லாமல் அழித்துவிட்ட மனிதர்களிடம் போய்...

படித்திருக்கிறேன், வேலை பார்த்துத் தர வேண்டும் என்று இரந்து நிற்பது எவ்வளவு அவமானகரமான விஷயம்!

தாத்தாவுக்குத் திடீரென்று பைத்தியம் பிடித்து விட்டதா? இல்லை, தள்ளாமை புத்தியையும் அசைத்துப் பார்க்கிறதா? இத்தனை காலம் வைராக்கியப் பூண் கட்டியிருந்த பிடிவாதங்கள் இன்று தெறித்து விழுவானேன்?

இதிலுள்ள அவமானம் புரியவில்லையா அவருக்கு?

அப்படி சொந்த சுகங்களுக்காக ஆசைப்படுபவர் இல்லையே? பின் ஏன் இப்படியோர் எண்ணம் இந்த நாளில் வந்தது?

எனக்கு வேலை கிடைக்கவில்லை என்றால் அது என் பிரச்சினை. தேடிக் கொள்வது என் நிர்ப்பந்தம். ஆனால் தாத்தா என்ன எண்ணிக் கொண்டு அந்தப் பக்கம் கையைக் காட்டுகிறார். பழைய பலமெல்லாம் தளர்ந்து போனதினால் மனம் சடைந்து போய் இப்படிச் சொல்கிறாரா?

மலையிலிருந்து இறங்கும் போதும் இதுவே யோசனை

சுடலையாண்டிக்கு.

இரவு சாப்பிட்ட பிறகு தாத்தா திரும்பவும் சொன்னார்.

“அட்ரஸ் வாங்கீட்டு வந்தாச்சு. நீ எண்ணைக்குப் போறே?”

“நான் போகல்லே.”

“மக்கா! உன்னைவிட நாப்பத்தஞ்சு வயசு நான் மூத்தவம் டே... சொணை, மானமெல்லாம் எனக்கும் உண்டு. எனக்கோ கௌவிக்கோ நல்ல தண்ணீ குடிக்கலாம்ங்க ஆசையிலே சொல்லல்லே. உனக்கு ஒரு வழி காணிச்சுக் குடுத்திட்டா நிம்மதியாச் சாவலாம்ணுதான்... அதனால நீ ஒண்ணையும் யோசிக்காம போயிப் பாத்துக்கிட்டு வா...”

“ஆனா எப்படி அந்த மனிசன் கிட்டே...”

“அதெல்லாம் யோசிச்சா கதை நடக்காது. உன்னை அங்க போயி கொளங் கொண்டாடச் சொல்லல்லே... அவன் நெனைச்சா ஒரு வேலை வாங்கித் தர முடியும்னு பரமேசுரன் பிள்ளை சொல்லுகாரு. அதையும் ஒண்ணு பாத்திருவமே... தந்தாத் தாறான். தரலேண்ணா போறான். இதில் என்ன அடிவிடிக் கட்டாயமா?”

‘போய்பாத்துக்கிட்டுத்தான் வாயேம்லே... பொண்ணு கிண்ணு இருந்தாலும் கெட்டிக்கிடலாம்”

இந்த ஆத்தாளுக்குக் கேலி பேசச் சமய சந்தர்ப்பமே கிடையாது. அடுக்களைச் சன்னல் ஊடாக ஆத்தாளை உறுத்துப் பார்த்தான் சுடலையாண்டி.

“ஒண்ணும் பேசாம இருந்தா எப்பிடிடே?”

“ஊரெல்லாம் எதுக்கு நம்மை இளிவாய்ப் பேசுகோ அதிலேயே போயி ஒட்டச் சொல்லுகியே?”

“இதிலே என்னடா கொறைச்சலு? அவ சொல்லுக மாதிரி பொண்ணா கேக்கப்போறே? இல்லே அஞ்சு பத்து இனாம் கேக்கப் போறையா? அவனால எதாம் ஆனா ஆச்சு. இல்லேண்ணா மயிரே போச்சு...”

அந்த எண்ணத்தையே சுடலையாண்டியால் விழுங்க முடியவில்லை.

ஆனால் விருப்பத்தை மீறி மனம் அவனை எங்கோ தள்ளிக் கொண்டு போயிற்று.

‘ஆராணு?’

‘நான்... நான் சுடலையாண்டி... சூரங்குளம்.’

'அறியாம் பாடில்லல்லோ?

‘தங்கம்மை எனக்கு அம்மை..."

‘ஓ... அவளுட செறுக்கனானோ? அது செரி. இப்பம் எந்தா வேணம்?’

‘பி. எஸ். ஸி., வரைக்கும் படிச்சிருக்கேன். ஃபர்ஸ்ட் கிளாஸ்லே ஜெயிச்சிருக்கேன்... ஏதாம் சோலி கிடைக்கு மாண்ணு...’

'ஜோலியா? அது அத்தற எளுப்பமாயிட்டு கிட்டுல்லல்லோ... வல்லிய பாடாணு... எனிக்கு ஆரும் அறிஞீடா... தான்... வேறு எவிடயெங்கிலும் அன்யேஷிச்சோ-எடீ! நீ ஒரு பத்து ருப்பியா எடுத்தோண்டு வா...'

ஒரு மௌன நாடகக் காட்சியாய்த் தெரிந்த நினைப்பி னுள்ளும், அந்த மாமா முறை மனிதரின் முகத்தில், அம்மாவின் சாயல் ஏதேனும் காணக் கிடைக்கிறதா என்று சுடலையாண்டி தேடினான்.

**(முற்றும்)**